# சிந்தனை

தொகுதி V | பங், ஆடி 1993 | இதழ் I, II

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

கலைப்பீட வெளியீடு,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி, இலங்கை.

1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தினால் ஆண்டுக்கு மும்முறை பங்குனி, ஆடி, கார்த்திகை மாதங்களில் வெளியிடப்படுகின்றது. ஆய்வுக் கட்டுரைகள் பொருளியல், அரசியல், வரலாறு, தொல்லியல், புவியியல், தமிழ், மெய்யியல், மொழியியல், சமூகவியல், கல்வியியல், வடமொழி, சமயம், நாகரீகம் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக இருக்கும்.

சிந்தனையில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரைகளில் இரு பிரதிகளைச் சிந்தனை ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அடிக்குறிப்புக்கள், உசாத்துணை நூல்கள், கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும். அனுப்பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச் சிக்கு ஆற்றும் பங்கினைச் சுருக்கமாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப் பிடுதல் வேண்டும்.

விமர்சனத்துக்குத் தரம் வாய்ந்த நூல்களை ஆசிரியர் குழு வரவேற் கின்றது.

சிந்தனை தொகுதி V இதழ் I, II 1993

ஆசிரியர்: ச. சத்தியசீலன், B. A. Hons. (Cey.) M. A. (Jaffna)

நிர்வாக ஆசிரியர்: சி. முருகவேள், B. A. Hons. (Cey.) Dip. in Lib. Sc. (Lond.)

ஆசிரியர் குழு: கா. குகபாலன், B. A. Hons. (Cey.) M. A. (Jaffna) D. P. S. (Madras)

ப. சிவநாதன், B. A. Hons. (Peradeniya) M. A. (Jaffna)

இ. கயிலைநாதன், B. A. Hons. (Colombo) M. A. (Jaffna)

நா. ஞானகுமாரன், B. A. Hons. (Kelaniya) M. A. (Jaffna) Ph. D. (Jabalpur)

மு. நவரெத்தினம், Sangeetha Bhusanam (Annam.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

தொகுதி V பங், ஆடி 1993 இதழ் I, II

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-2-11-1993
யாழ்ப்பாணம்

ஆசிரியர்
ச. சத்தியசீலன்

Poobalasingham Book Depot.
4A, HOSPITAL ROAD,
JAFFNA

கலைப்பீட வெளியீடு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, இலங்கை.
1993

பொதுசன நூலகம்,
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CINTANAI** is Published once in four Months in March, July and November every year.
Vol. V, No. I & II March, July 1993, PP. IV + 116 + III

Editor: **S. Sathiaseelan**

Managing Editor: **S. Murugavel**

© Faculty of Arts, University of Jaffna, Sri Lanka.

Annual Subscriptions.

| | |
|---|---|
| Sri Lanka | Rs. 300/- |
| India (Ind. Rs.) | Rs. 300/- |
| Other Countries | £ 14 or $ 20 |

*Published by:* Faculty of Arts,
University of Jaffna,
Thirunelvely,
Sri Lanka.

*Printed at:* A. B. Printers.
430, K. K. S. Road,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

தொகுதி V பங், ஆடி 1993 இதழ் I, II

## உள்ளுறை

1. *அடங்காப்பற்று வன்னிமைகள்* 01
**சி. பத்மநாதன்**

2. *சங்கரரின் உலகு பற்றிய நோக்கு* 13
**நா. ஞானகுமாரன்**

3. *யாழ்ப்பாண மாவட்டத்தில் இறப்புக்களின் போக்கினைத் தீர்மானிக்கும் காரணிகளும், விளைவுகளும்* 28
**கா. குகபாலன்**

4. *இலங்கையில் ஏற்றுமதி மேம்பாட்டுக்கைத்தொழிலாக்கம் - சாதனைகள், குறைபாடுகள், சவால்கள்* 50
**கா. கந்தையா**

5. *கிராமிய வறுமைத் தணிப்பு - உலக வங்கியின் அணுகுமுறை* 67
**சி. அம்பிகாதேவி**

6. *இலங்கையில் விஞ்ஞானக்கல்வியின் தேவையும், அதன் இன்றைய நிலையும்* 82
**சு. அருளானந்தம்**

7. *யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் இறந்த கால அமைப்பு* 91
**இ. கயிலைநாதன்**

8. *பிரித்தானியர் கால நல்லூர் — ஒரு நோக்கு* 95
**ச. சத்தியசீலன்**

9. *யாழ்ப்பாணக் குடாநாட்டின் நன்னீர் வளம் — ஒரு நோக்கு* 105
**செ. பாலச்சந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரையாசிரியர்கள்

| | |
|---|---|
| சி. பத்மநாதன் | B. A. Hons, ( Cey. ) Ph. D. ( Lond. )<br>வரலாற்றுப் பேராசிரியர்,<br>வரலாற்றுத்துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| நா. ஞானகுமாரன் | B. A. Hons. ( Kelaniya ) M. A, ( Jaffna )<br>Ph. D. ( Jabalpur )<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,<br>மெய்யியற் துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| கா. குகபாலன் | B. A. Hons. ( Cey. ), M. A. ( Jaffna ),<br>D. P. S. ( Madras )<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,<br>புவியியற் துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| கா. கந்தையா | B. A. Hons. ( Peradeniya ),<br>M. Sc. ( Peradeniya )<br>M. A. ( Thammsat )<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II,<br>பொருளியற் துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| சி. அம்பிகாதேவி | B. A. Hons. ( Jaffna ), M. A. (Jaffna),<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II,<br>பொருளியற்துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| சு. அருளானந்தம் | B. Sc. Hons, (Jaffna), Dip. in Ed. (Jaffna)<br>M. A. (Jaffna),<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் II,<br>கல்வியியற்துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| இ. கயிலைநாதன் | B. A. Hons. (Colombo), M. A. (Jaffna),<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,<br>மொழியியற் துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| ச. சத்தியசீலன் | B. A. Hons. ( Cey. ),<br>M. A. ( Jaffna ),<br>சிரேஷ்ட விரிவுரையாளர், தரம் I,<br>வரலாற்றுத்துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| செ. பாலச்சந்திரன் | B. A. Hons. ( Cey. ), M. Sc. (Birm.),<br>இணைப் பேராசிரியர், தலைவர்,<br>புவியியற் துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# அடங்காப்பற்று வன்னிமைகள்

— சி. பத்மநாதன் —

ஒல்லாந்தரின் மேலாட்சிக் காலத்திற்குரிய (1658 - 1796) அடங்காப்பற்று வன்னிமைகளின் வரலாற்றைப் பொறுத்த வரையிலே தேசாதிபதிகள், கொம்மாந்தர்கள் போன்ற உயரதிகாரிகள் எழுதிய அறிக்கைகளே பிரதான வரலாற்று மூலங்களாக அமைகின்றன. அவற்றில் அடங்காப்பற்றிலுள்ள வன்னிப்பிரிவுகள், அவற்றுக்குப் பொறுப்பாகவிருந்த வன்னியர்கள், வன்னியருக்கிடையில் நிலவிய உறவுகள் கொம்பனி அரசாங்கத்திற்கும் வன்னியர்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் போன்ற விடயங்களைப் பற்றி விரிவான குறிப்புகளும் அரிய சான்றுகளும் இடப்பெற்றுள்ளன.[1] ஆயினும் குறிப்பிட்ட சில காலப்பகுதிகளைப் பொறுத்த வரையில் இத்தகைய ஆவணங்கள் கிடைக்கவில்லை. கெந்திரிக்கு வெக்கர், (Hendrick Becker) 1709 - 1716, ஜான் சுரோய்டர், (Jan Schreuder) 1756 - 1762, ஆகியோரின் காலங்களுக்கு இடைப்பட்ட தேசாதிபதிகளின் அறிக்கைகளிலே வன்னிமைகளைப் பற்றிய விபரங்கள் இடப்பெறவில்லை. அதனாற் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியைச் சேர்ந்த வன்னிமைகளின் வரலாறு இதுவரை அறியப்படாதவொன்றாக இருந்து வந்துள்ளது.

வன்னிமைகளின் வரலாற்றிலிருந்த இந்த இடைவெளியை நிரப்புவதற்கான வாய்ப்புக்கள் இப்பொழுது ஏற்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள தேசிய ஆவணச்சுவடிகள் நிலையத்திற் கொம்பனியின் உயரதிகாரிகளோடு வன்னிபங்கள் ஏற்படுத்திய உடன்படிக்கைகளின் பிரதிகள் உள்ளன. இவற்றை இதுவரை எவரும் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. அவை டச்சு, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன. கெந்திரிக்கு வெக்கர், ஜான் சுரோய்டர் ஆகிய தேசாதிபதிகளின் பதவிக் காலங்களுக்கு இடைப்பட்ட அடங்காப்பற்று வரலாற்றைப் பொறுத்தவரையில் இவ்வுடன்படிக்கைகளே பிரதான வரலாற்றுமூலங்களாயுள்ளன. அவற்றுள் இரண்டு ஆவணங்கள் பனங்காமப்பற்றினைப் பற்றியனவாகும், இரு ஆவணங்கள் கரிக்கட்டுமூலை, கருநாவல்பத்து என்ற வன்னிமைகளைப் பற்றியவை. நான்கு ஆவணங்கள் தென்னமரவடிப் பற்று வன்னிபங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. மற்றையது மேல்பத்து - முள்ளியவளைக்குப் புதிய வன்னிபம் கற்பிக்கப்பட்டமை பற்றிய நியமனப்பத்திரமாகும். இதுவரை வெளியிடப்பெற்ற ஆவணங்களிலும், நூல்களிலும், ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் இடம்பெறாத பல செய்திகள் இவற்றிலே கிடைக்கின்றன. மேலும் இதுவரை தேடிப்பெறப் பெற்றுள்ள ஆவணங்களுள் இவற்றில் மட்டுமே வன்னிபங்களின் நியமனங்களைப் பற்றிய கட்டளைப் பத்திரங்கள் கிடைக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரிய அடங்காப்பற்று வன்னிபங்கள், வன்னிபங்களுக்கும் கொம்பனி அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்புகள் போன்ற விடயங்களை அறிந்து கொள்வதற்கு இவை பெரிதும் பயன்படுகின்றன.

இக் கட்டுரைக்கு ஆதாரமாகவுள்ள ஆவணங்களெல்லாம் கொம்பனி அரசாங்கத்திற்கும் வன்னிபங்களுக்குமிடையிலான உடன் படிக்கைகளாக உள்ளபொழுதிலும் அவையெல்லாம் ஒல்லாந்த அதிகாரிகளினாலே தயாரிக்கப்பட்டவை என்பது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரப்பினரும் சமநிலையிலிருந்து இவற்றை எழுதிக்கொள்ள வில்லை. இரு சாராரினதும் கருத்துக்கள், குறைபாடுகள், தேவைகள் போன்றவற்றை ஆராய்ந்தும் அவை எழுதப் படவில்லை. கொம்பனி அதிகாரிகளின் நிபந்தனைகளையே அவை பெருமளவிற்குப் பிரதிபலிக்கின்றன. இரு தரப்பினருக்கும் இடையிலான 'பொருத்தம்' 'ஒப்பந்தம்' என்று அவை வர்ணிக்கப்பட்டுள்ள பொழுதிலும் கொம்பனி அரசாங்கத்தின் கட்டளைகள் அல்லது பிரமாணங்கள் என்று கொள்ளத்தக்க பாணியில் அவை அமைந்துள்ளன.

மானிய முறையில் அமைந்த அரசியலமைப்பினைப் பற்றித் தமிழ்மொழியிலே எழுதப்பட்ட உடன்படிக்கைகள் என்ற வகையிலும் இவ்வாவணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழில் எழுதப்பட்ட இவற்றைப் போன்ற வேறு ஆவணங்கள் இலங்கையிற் கிடைக்கவில்லை. சிங்கள மொழியிலும் இத்தகைய ஆவணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. புத்தளத்து முக்குவ வன்னிபங்களுக்குச் சிங்கள மன்னர் கொடுத்த மூன்று ஆவணங்கள் கிடைத்துள்ளன.[2] ஆனால் அவை பதவியும் வரிசைகளுங் கொடுக்கப்பட்டமை பற்றிய நியமனப் பத்திரங்களாகும். அவற்றிலே வன்னிபங்கள் செலுத்தவேண்டிய கடமைகள், அவர்களின் பொறுப்புக்கள் என்பன பற்றிய குறிப்புக்களெதுவுமில்லை. அடங்காப்பற்று வன்னிபங்களைப் பற்றிய உடன்படிக்கைப் பத்திரங்களும் நியமனப்பத்திரங்களும் மேலாதிக்கஞ் செலுத்தும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வன்னிபங்கள் கொண்டிருந்த தொடர்புகளை மானியமுறைக் கோட்பாடுகளுக்கேற்ப வர்ணிக்கின்றன. இங்கு ஆதாரமாகக் கொள்ளப்படுகின்ற ஆவணங்களில் வரும் சான்றுகளின் துணை கொண்டு குறிப்பிட்ட காலத்திற்குரிய வன்னிபங்களைப்பற்றிய விபரங்களை மேல் வருமாறு அட்டவணைப் படுத்திக் கொள்ளலாம்.

| வன்னிப்பிரவு | வன்னிபம் |
|---|---|
| 1. பனங்கமாம் | தொம் பிலிப்பு நல்லமாப்பாணர். |
| | 1. தொம் தியோக புவிநல்லமாப்பாணர் (1697 – 1715, 1720 - 1747) |
| | 2. தொம் தியோக அகிலேசன் புவிநல்லமாப்பாணன் (1747 - 1766) |
| 2. கரிக்கட்டுமூலை<br>3. கருநாவல்பத்து | 1. தொங் கஸ்பார் இலங்கை நாரண முதலியார் (1715 - 1747) |
| | 2. தொங் கஸ்பார் இலங்கை காவல புவிநல்ல மாப்பாண வன்னியனார் (1747 - 1757) |
| 4. மேல்பத்து<br>5. முள்ளியவளை | 1. தொம். அதிரியலு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் (1722 - 1738) |
| | 2. தொம் பிறான்சிஸ்கோ சண்முகப் பெருமாள் சேதுகாவல. மாப்பாண வன்னியனார் (1739 - 1745) |
| 6. தென்னமரவடிப்பற்று | 3. தொம் யுவாம் சேதுகாவல மாப்பாண வன்னியனார். (1745 - 1765) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. பனங்காமப்பற்று வன்னிபம்: நல்லமாப்பாணர்

பனங்காமத்து வன்னிபங்களிற் சிலர் நல்லமாப்பாணர் என்ற பெயரைப் பெற்றிருந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொம் பிலிப்பு நல்லமாப்பாணர் என்பவர் பனங்காமத்திலே வன்னிபமாயிருந்தார்.[3] கயிலை வன்னியனின் பதவிக்கால முடிவிலே பனங்காமத்தில் இரண்டாவது வன்னிபமாயிருந்த நல்லமாப்பாணர் கயிலை வன்னியன் இறந்தபின்பு அப்பற்றிலே முதன்மை வன்னிபமானார். பதினேழாம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பெற்ற ஒல்லாந்தரின் குறிப்புக்கள் இவரை ஒரு வயோதிபர் என வர்ணிக்கின்றன. இவரின் பதவிக் காலத்தில் தொங் கஸ்பார் இலங்கை நாரண வன்னியனார் என்பவரும் பனங்காமத்திலே வன்னிபமாயிருந்தார். இவர்களிருவரும் மைத்துனராவர்.[4] பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவர்கள் மறைந்த பின்பு பனங்காமத்திலே நிச்செயச் சேனாதிராயன், குலசேகர முதலியார் என்னுமிருவரும் வன்னிபங்களாயினர்.[5] இவர்களுள் நிச்செயச் சேனாதிராயன் நல்லமாப்பாணரின் மகனாவார். இவர்களிருவரும் பதினெட்டாம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியிற் பனங்காமத்தில் அதிகாரஞ் செலுத்தினார்கள். இவர்களுக்குப் பின்பு நல்லமாப்பாணர் என்பவரே பனங்காமப்பற்றிலே வன்னிபமானார் என்பதை இவ்வாவணங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிற் பனங்காமத்தில் வன்னிபமாயிருந்த நல்லமாப்பாணர் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த நல்லமாப்பாண வன்னியனாரின் வழிமுறைச் சந்ததியினராதல் வேண்டும். கொம்பனியின் அரசாங்கம் நல்லமாப்பாணரோடு 1738, 1740 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்திய உடன்படிக்கைகளைக் குறிப்பிடுகின்ற ஆவணங்களிலே நல்லமாப்பாணர் எப்போது வன்னிபமாக நியமனம் பெற்றார் என்பதனைப் பற்றிய குறிப்பெதுவுங் காணப்படவில்லை. ஆயினும் அவற்றிலுள்ள விபரங்களிலிருந்து 1738 ஆம் ஆண்டுக்கு முற்படப் பலவாண்டுகளாகவே அவர் பதவியிலிருந்தார் என்பது தெளிவாகின்றது. பனங்காமப்பற்றோடு மேலதிகமாக ஆத்திமோட்டை, தியாத்து, புலோக்காடு, கரைச்சி தெற்கு போக்கறுப்பு, முள்ளியான் என்ற ஊர்களையும் நல்லமாப்பாணர் பெற்றிருந்தார்.[6] எனவே தொம் பிலிப்பு நல்லமாப்பாணர் தான் வன்னிபமாகிய காலப்பகுதியிற் கொம்பனியதிகாரிகளின் விசுவாசத்திற்குரியவராகவும் வன்னிப் பகுதியில் அதிக செல்வாக்குடையவராகவும் விளங்கினார் என்று கருத இடமுண்டு.

நல்லமாப்பாணர் நியமனம் பெற்ற காலத்தில் அவர் தன்பேரிலுள்ள பிரதேசங்களின் பொருட்டு 30 கடமை யானைகளைக் கொடுக்க வேண்டுமென்று உடன்பாடாகியிருந்தது. அதன் விபரம் மேல் வருமாறு அமைந்தது.

| | | |
|---|---|---|
| 1. | பனங்காமம் | - 16 யானைகள் |
| 2. | ஆத்திமோட்டை, தியாத்து | - 3 யானைகள் |
| 3. | போக்கறுப்பு, முள்ளியான் | - 2 யானைகள் |
| 4. | கரைச்சி தெற்கு, புலோக்காடு | - 9 யானைகள்.[7] |

வன்னிபங்கள் கடமையானைகளைக் கொம்பனியின் அரசாங்கத்திற்குச் சரிவரக் கொடுக்காதவிடத்து குறைபடுகின்ற யானைகளுக்கு அலியன் யானை ஒன்றுக்கு 1,000 பறை நெல்லு அல்லது 280 இறையால் என்ற பிரகாரமாகக் கப்பஞ் செலுத்துவதற்கு ஏற்பாடாகியிருந்ததென்பதை இவ்வுடன்படிக்கையின் மூலம் அறிய முடிகின்றது. நல்லமாப்பாணர் கடமையானைகளைச் சரிவரக் கொடுக்காத படியால் அவர் பேரில் நின்ற நிலுவை யானைகளின் தொகை பெரிதாக வளர்ந்தது. ஒல்லாந்தருக்குத் தேவையான யானைகளைப் பிடித்துக் கொடுப்பதில் வன்னியருக்குப் பல சிரமங்கள் ஏற்பட்டன. பணிக்கர், தலையர் முதலிய சமுதாயப் பிரிவினரே யானை வேட்டையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு வன்னிபங்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. யானைகளைப் பிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற காலங்களிலும் போதியளவு யானைகளைப் பிடிக்க முடியாதிருந்தது. வன்னிபங்களின் கட்டுப்பாட்டிற் கப்பாலுள்ள வடமத்திய பிரதேசங்களுக்கு யானைகள் ஓடிவிடுவது வழக்கம். அடங்காப்பற்றிலுள்ள வன்னியர் எல்லோரும் தாம் வருடாவருடம் கொம்பனியின் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய கடமை யானைகளைப் பிடித்துக் கொடுக்க முடியாத நிலையிலிருந்தனர். அதனால் அவர்களின் பேரில் நின்ற நிலுவை யானைகளின் தொகை வளர்ந்து சென்றது.

நல்லமாப்பாணர் பலவாண்டுகளாகவே கடமை யானைகளைச் சரிவரக் கொடுக்காதமையால் அவருக்கு மேலதிகமாகக் கொடுக்கப்பட்டிருந்த ஆத்திமோட்டை, தியாத்து, கரைச்சிதெற்கு, புலோக்காடு, போக்கறுப்பு, முள்ளியான் என்ற ஆறூர்களும் 1738 ஆம் ஆண்டுக்கு முன்பாகவே மீண்டும் கொம்பனியரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் விடப்பட்டன.[8] 1738 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே எழுதப்பட்ட உடன்படிக்கைப் பத்திரத்தில் நல்லமாப்பாணர் கொம்பனி அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய யானை திறையினைப் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. அப்போது அவரின் பேரில் நிலுவையாய் நின்ற யானைகளின் தொகை 104 3/4 ஆகும். அதன் விபரங்கள் மேல்வருமாறிருந்தன.

| | |
|---|---|
| பனங்காமம் போக்கறுப்பு, | – 45¼ யானைகள் |
| முள்ளியான் | – 8 யானைகள் |
| கரைச்சி தெற்கு, புலோக்காடு | – 51½ யானைகள்[9] |

நல்லமாப்பாணர் யானைகளுக்குப் பதிலாகப் 10,000 பறை நெல்லும் காசும் கொடுத்தபடியால் அவரின் பேரிலிருந்த நிலுவைத் தொகையிலிருந்து 22 யானைகள் கழிக்கப்பட்டன. மேலும் நல்லமாப்பாணர் மிகவும் பரிவாகக் கேட்டுக்கொண்ட படியாற் போக்கறுப்பு, முள்ளியான் ஆகிய ஊர்கள் மீண்டும் அவர் பொறுப்பிலே விடப்பட்டன. புதிய உடன்படிக்கையின் பிரகாரம் நல்லமாப்பாணர் தன் பொறுப்பிலுள்ள பனங்காமம் முதலிய பகுதிகளின் சார்பில்வருடந்தோறும் 18 கடமையானைகளைக் கொம்பனி அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும். மேலும், அவர்பேரில் நின்ற நிலுவைக் கடனைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆண்டுதோறும் மேலதிகமாக 11 யானைகளைக் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடாகியது.[10] எனவே நல்லமாப்பாணர் 1738 முதல் 1747 ஈறாக ஆண்டுதோறும் 29 யானைகளைக் கொம்பனிக்குக் கொடுப்பதாக உத்தரவாதமளிக்க நேரிட்டது. நல்லமாப்பாண வன்னியனாருடன் கொம்பனியதிகாரிகள் மீண்டும், 1740 இல், உடன்படிக்கையொன்றை எழுதினார்கள். அவ்வாண்டிலே அவர் பேரில் 82 யானைகள் நிலுவையாய் நின்றன. புதிய உடன்படிக்கையிலும் 1747 இல் நிலுவைக்கடன் முழுவதையுந் தீர்த்துக் கொள்வதென ஏற்பாடு செய்யப்பட்டது.[11]

தேசாதிபதி சுரோய்டரின் காலத்தில் (1757 – 1762) நல்லமாப்பாண வன்னியனார்மீது அரசாங்கம் பல குற்றங்களைச் சுமத்த நேரிட்டது. அரசாங்கத்திற்கு அவர் கீழ்ப்படியவில்லை என்றும் கொம்பனிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர் நிறைவேற்றாது ஒல்லாந்தரின் நலன்களுக்கு ஒவ்வாத செயல்களைப் புரிந்தார் என்றும் சுரோய்டர் எழுதியுள்ளார். இக் காரணங்களினாலே அரசாங்கம் அவரைப் பதவிநீக்கஞ் செய்தது.[12] கடமை யானைகளைச் சரிவரக் கொடுக்காதமையினாலேயே நல்லமாப்பாணருக்கு இக்கதி நேர்ந்திருத்தல் வேண்டும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பனங்காமத்திலே நல்லமாப்பாணர் வன்னிபமாயிருந்தார். இறுதியிலே அவர் அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகளை ஏற்படுத்தியதற்குச் சான்றில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே அடங்காப்பற்று வன்னியர் அரசாங்கத்திற்கெதிரான விடயங்களிலே கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கும் எந்தவிதமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுகளும் காணப்படவில்லை. கொம்பனியின் அதிகாரம் வன்னிமைகளைப் பொறுத்தவரையில் படிப்படியாக வலுவடைந்தது. சுரோய்டரின் ஆட்சிக்கால முடிவில், 1762 ஆம் ஆண்டில், பனங்காமப்பற்றில் எவரும் வன்னிபமாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அப்பற்று கரிக்கட்டு மூலை, கருநாவல்பத்து என்பவற்றின் வன்னிபமான அகிலேசன் புவிநல்ல மாப்பாண வன்னியனாரின் மேற்பார்வையின் கீழ் விடப்பட்டிருந்தது.[13]

## 2. கரிக்கட்டு மூலை - கருநாவல் பத்து

1. தொம் தியோக புவிநல்ல மாப்பாணர்.
2. அகிலேசன் புவிநல்ல மாப்பாணர்.

கரிக்கட்டுமூலை, கருநாவல்பத்து என்றவிரு வன்னிமைகளும் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே ஒரே வன்னிபத்தின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. அவ்விரு பற்றுக்களையுங் குறிப்பிடுகின்ற ஆவணங்களுள் ஒன்று தொம் தியோக புவிநல்ல மாப்பாண வன்னியனாருடன் ஒல்லாந்தர் ஏற்படுத்திய உடன்படிக்கை பற்றியதாகும். மற்றையது புவி நல்லமாப்பாணர் இறந்த பொழுது 1742 ஆம் ஆண்டிலே அகிலேசன் புவிநல்லமாப்பாணர் புதிய வன்னிபமாகக் கற்பிக்கப்பட்டமைபற்றிய நியமனப்பத்திரத்தின் பிரதியாகும். இவற்றுள் முதலாவது ஆவணத்திலுள்ள ஒரு பகுதி மேல் வருமாறு அமைந்துள்ளது.

> ".. இங்கே குறித்திருக்கிற வன்னியில் நிலுவை யானையின் தொகைகளாவது நான்தொம் தியோகபுவிநல்லமாப்பாண வன்னியனார் பிரசித்தமாகச் சொல்லுகிறேன். கருநாவல் பற்றில் இந்தத் திகதி அளவுக்கு 38½ யானையும் கரிக்கட்டு மூலைக்கணக்கு 54 யானையும் பன்றி சுட்டானில் இன்னும் நிலுவை நிற்கிற 12 யானையும் ஆகக் கொம்பஞீயவுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைக் கடன் 104½ அலியன் யானை. இதில் பன்றி சுட்டானில் நிலுவையாய் நின்ற யானையில் எனக்கு நன்மைப் பகுதியாக 10 யானை சகாயமாய்க் கழித்தபடியாலே முன்னாலே இருக்கிற இனிமேல் 94½ யானை கொடுக்க வேண்டியது......"[14]

புவிநல்லமாப்பாணரின் பேரில் 1738 ஆம் ஆண்டு ஆடி மாதமளவிலே கொம்பனிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கடனாகவிருந்த யானைகளின் தொகை 104½ என்பதும் அத்தொகையிலே பொத்தகக் கணக்கிலிருந்து பத்து யானைகள் கழிக்கப்பட்டன என்பதையும் இங்கு மேற்கோளாகக் காட்டப்பெற்ற உடன்படிக்கையின் பகுதியிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. மிகுதியான நிலுவை யானைகளை வருஷமொன்றுக்கு 9 வீதமாகப் பத்து வருஷங்களுக்குட் கொடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கரிக்கட்டு மூலை, கருநாவல்பத்து ஆகிய வன்னிப் பிரிவுகளுக்கு ஆண்டுதோறும் அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய யானைகள் 13 என்பது 'இன்னும் வருஷந்தோறும் கப்பத்துக்குக் கொடுக்க வேண்டிய 13 தவிர...' என்ற உடன்படிக்கையிலுள்ள சொற்றொடரினாலே தெளிவாகின்றது.[15]

கயிலைவன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையத்திலுள்ள காலக் குறிப்பினைப்பற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தேகமொன்றைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான சான்றும் இவ்வாவணத்திலே கிடைக்கின்றது. பன்றிசுட்டான் என்ற ஊரானது 1720 முதல் புவிநல்லமாப்பாணர் வசமாயிருந்ததென்பதை '.. இன்னமும் மிகுந்த மன்றாட்டத்துடனே கேட்டபடியால் பன்றி சுட்டான் என்கிற ஊரையும் (1)720 ஆண்டு கிடைத்தபடிக்கு இவனுடைய மரண பரியந்தம் கிடைக்கவும்' என்ற வாக்கியங்கள் நிரூபிக்கின்றன.[16] கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையம் 1722 ஆம் ஆண்டிலே எழுதப்பட்டதனாலும் 1720 ஆம் ஆண்டிற் புவிநல்ல மாப்பாணர் மீண்டும் வன்னிமைப் பதவியைப் பெற்றுக் கொண்டமைக்குச் சான்றிருப்பதனாலும் பட்டையத்திலே கூறப்பட்டுள்ள தானம் 1722 ஆம் ஆண்டிற்குப் பல வருடங்களுக்கு முன்பே கொடுக்கப்பட்டது என்று கொள்வது பொருத்தமற்றதாகும். புவிநல்லமாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணர் 1742 ஆம் ஆண்டு வரை கரிக்கட்டுமூலை, கருநாவல்பத்து ஆகிய வன்னிமைகளின் வன்னிபமாயிருந்தார். தொம் தியோக புவிநல்லமாப்பாணர் மறைந்தபின் அவரின் வழிமுறைச் சந்ததியினரான அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனார் புதிய வன்னிபமாக நியமனம் பெற்றார். புதிய வன்னிமை கற்பிக்கப்பட்ட நியமனப் பத்திரத்தின் பிரதியிலே மேல்வரும் பகுதி அடங்கியுள்ளது.

''... கருணவில் பத்துக்கும் கரிக்கட்டு மூலைக்கும் புதிய வன்னிமையாகக் கற்பிக்கப் பட்ட தொம் தியோக அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனாரவர்கள் சக்கடத்திரியவின் சத்தியம் பண்ணின தொலுக்கு நிக்கோலாசு பிறணாந்து முன்னாலே வெளியாங்கம் பண்ணுவித்துக் கடனாளியாக்கித் தன்னைக் கட்டுப்படுத்துகிறது. அதென்ன வென்றால் மேலாலே சொல்லப்பட்ட இரண்டு பற்றுக்களும் ஆட்சியில்லாமலே அநுபவிக்கிறதின் பேரிலே வருஷம் ஒன்றுக்குக் கொடுக்க வேண்டிய கடமை யானை 11 அல்லாமல் தன்னுடைய மூதோரான தொம் தியோகு புவிநல்லமாப்பாண வன்னியனார் பேரில் நிலுவைநின்ற அலியன் 75 தன் பேரில் சிமத்திக் கொண்ட படியால் இதிலே ஒன்பது யானையுமாகக் கூட்டி வருஷம் ஒன்றுக்கு இருபது யானை ஒப்புவிக்கத் தக்கதாகவும் அந்த இருபதில்க் குறைபட்ட யானை ஒன்றுக்கு இருநூற்றெண்பது இறையர்ல் அல்லது ஆயிரம்பறை நெல்லு ஒடுக்கலும் வேணும்.

''சொல்லப்பட்ட நிலுவை யானைகளுக்கும் கடமை யானைகளுக்கும் 1750 ஆண்டு ஆவணி மாதம் கடசியாய் உத்தம கொம்பஞீயவுக்கு யிவர் கொடுபட்டுப் போகவேணுமென்று அதற்காகவுமாக 1738 ஆண்டு இந்தப் புதிய வன்னியனாருடைய மூதோர்களுடனே பழைய கோவேறின தோராகிய இம்மோவு அவர்களாலே எளுதப்பட்ட உத்தம் கொம்பஞீயவின் ......... கட்டாயமுள்ள தொளிற் கடதாசிப்படிக்கு சொல்லுக்குச் சொல் தவறாமல் (இதுகளெல்லாம்) எழுதுப்பட்டிருக்கும் பேராலே நடக்கத் தக்கதாகச் சம்மதித்துப் பிறதானமாக தன்னையுந் தன்னுடைய இயங்குகிற இயங்காத ஆஸ்த்திகளையும் ........ கட்டுப்படுத்தி வைத்து இப்படி எழுதி முடித்தது.'' [17]

அகிலேசன் புவிநல்லமாப்பாணரின் நியமனப்பத்திரத்திலே பன்றிசுட்டானைப் பற்றிய குறிப்பெதுவும் வராமையால் அவ்வூரானது கொம்பனியின் நிர்வாகத்திலுள்ள பகுதிகளோடு சேர்த்துக் கொள்ளப்பட்டதென்று கருதலாம். அகிலேசன் புவிநல்லமாப்பாணர் தன்பொறுப்பிலிருந்த இரு பற்றுக்களின் பேரிலும் 11 கடமை யானைகளை ஆண்டுதோறுங் கொடுக்க வேண்டியிருந்தது என்பதையும் நிலுவைக் கடனைப் பொறுத்த வரையில் வருஷமொன்றுக்கு மேலதிகமாக ஒன்பது யானைகள் என்றபடிக்கு 1750 ஆம் ஆண்டுவரை கொடுப்பதற்கு அவர் உத்தரவாதமளித்தார் என்பதையும் இப்பத்திரம் தெளிவுறுத்துகின்றது.

1738 - 47 ஆகிய காலப்பகுதிக்குரிய ஆவணங்களிலே குறிப்பிட்ட வன்னிபங்களுள் அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனார் மட்டுமே 1766 ஆம் ஆண்டு வரை அதிகாரத்திலிருக்க முடிந்தது. ஒல்லாந்தரின் நம்பிக்கையினையும் நல்லெண்ணத்தையும் அவராற் பெற்றுக்கொள்ள முடிந்தது. நல்லமாப்பாண வன்னியனார் பதவியினையிழந்த பின் பனங்காமப்பற்று சில காலத்திற்கு அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனாரின் மேற்பார்வையின் கீழ் விடப்பட்டிருந்தது. பின்பு 1766 இல் மேல்பத்து முள்ளியவளை என்ற பிரிவும் இவரின் மேற்பார்வையின் கீழ் விடப்பட்டது. [18] அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனாரின் பதவிக்காலம் எப்போது முடிவுற்றதென்பதை 1766 க்குப் பின் ஒல்லாந்த அதிகாரிகள் எழுதிவைத்த ஆவணச் சுவடிகளை ஆராய்வதன் மூலமே அறிந்து கொள்ளலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மேல்பத்து – முள்ளியவளை

1. இலங்கை நாரண வன்னியனார் ( 1715 - 1747 )

2. இலங்கை காவல் புவிநல்லமாப் பாணவன்னியனார் (1747 - 1766? )

இலங்கை நாராயண முதலியார் மயி யாத்தை உடையார் என்னுமிருவரும் மேல்பத்து - முள்ளியவளை என்னும் பிரிவிலே வன்னிபங்களாயிருந்தனர் என்று கயிலை வன்னியனார் மட தர்ம சாதனப் பட்டையங் குறிப்பிடுகின்றது. அச்சாசனம் எழுதப்பட்ட காலத்தில் - 1722 ஆம் ஆண்டில் - இலங்கை நார ( ாய ) ணர் வன்னிப மாயிருந்தார் என்பது இதனாலே உறுதி யாகின்றது. 'கந்தப்பர்மைலாத்தை என்பரொருவர் 1615 ஆம் ஆண்டளவிலே வன்னிபமாயிருந்தார் என்பதை கெந்திரிக்கு வெக்கரின் அறிக்கை மூலம் அறிய முடிகின்றது.[19] அவரைச் சாசனங் குறிப்பிடுகின்ற மைலாத்தை உடையாரென அடையாளங் கொள்வோமாயின் மைலாத்தை உடையார் 1715 க்கு முன்பே வன்னிபமாக நியமனம் பெற்றிருக்க வேண்டும். சாசனத்திலே மைலாத்தை உடையாரின் பெயரானது இலங்கை நார ( ாய ) ணரின் பெயரை அடுத்து வருவதால் இருவருள்ளும் பின்னையவரே முதன்மை வன்னிபமாயிருத்தல் வேண்டும். அவ்வாறாகில் இலங்கை நார ( ாய ) ணரும் 1715 க்கு முன்பு நியமனம் பெற்றிருத்தல் வேண்டும். இலங்கை நார ( ாய ) ணர் நெடுங்காலமாக, ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக மேல்பத்து - முள்ளி வளையில் முதன்மை வன்னிபமாய் அமைந்திருத்தல் வேண்டும். அவர் 1747 வரை வன்னிபமாய் விளங்கினார் என்பதை அவ்வாண்டிலே எழுதப்பட்ட ஆவணமொன்றின் மூலமாக அறிய முடிகின்றது.

இலங்கை நார ( ாய ) ண வன்னியனார் இறந்தமையின் விளைவாக 1747 ஆம் வருடம் ஆனி மாதத்திலே கொம்பனியின் அரசாங்கம் புதிய வன்னிபமொரு வரை நியமித்தது. புதிய வன்னிமை பற்றிய நியமனப்பத்திரத்தின் பிரதியிலுள்ள வாசகம் மேல் வருமாறு அமைந்துள்ளது.

**1747 ( ஆம் ) வருஷம் ஆனி மாதம் 17 திகதி இலங்கையின் கோவேறினமேந்துவின் பெரிய சக்கடத்தாராகிய மரிபிலேலுடவெல்ட் ஆன நம்முடைய முகதாவிலே இதினி கீழே சொல்லப்படுகிற சாட்சிப் பேர்கள் முன்னிலையாக மேல்பற்றிலும் முள்ளியவளையிலும் பாதிக்குப் புதுசாய் வன்னிமை கற்பிக்கப்பட்ட தொங் கஸ்பார் இலங்கைகாவல் புவிநல்லமாப்பாண வன்னியனார் சக்கடத்திரியவின் சத்தியம் பண்ணின தொலுக்குவாகிய நீக்கொலஸ் பிறனாந்துவினாலே வெளியாக்கப் படுத்திச் சொல்லி மேலாலே சொல்லப்பட்ட பற்றுக்கள் ஆட்சியன்றியே அனுபவிக்கிறதின் பேரிலே வருஷாந்தங் கொடுக்க வேண்டிய கடமை யானைகளும் தன்னுடைய மூதோரான இலங்கை நாரண வன்னியனார் பேரிலே நிலுவை நின்ற யானைகள் சகலதும் கொடுத்துச் சரிவர நடப்பிக்கும் படிக்குப் பொருந்தி தன்னையும் தன்னுடைய இயங்குற இயங்காத ஆஸ்திகளையும் கீளே கட்டுப்படுத்தி எழுதிக்கொடுத்து கையெழுத்து வைத்தார்.**

இப்படிக்கு கந்தோரில் கணக்கராகிய யுவம் ஆர்ந்த் நோயேபும் ஏறாஸ்முஸ் அறு நோல்துஸ் கொயிக் பன் மெயிறொப்பு வாகிய இந்தச் சாட்சிப் பேர்கள் முன்னியலையாகக் கொழும்புக் கோட்டையிலே எழுதப்பட்டது.'' [20]

மேல்பற்றிலும் முள்ளியவளையிலும் பாதிக்குப் புதுசாய் வன்னிமை கற்பிக்கப் பட்ட இலங்கை காவல புவிநல்ல மாப்பாண வன்னியனார் என்ற வர்ணனையானது சொல்லப்பட்ட பற்றுக்களிலே இருவரை வன்னிபங்களாக நியமிக்கும் வழக்கம் இருந்தது என்ற கருத்திற்கு வலியூட்டுமாப் போல் அமைகின்றது. வன்னிப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் இருவர் வன்னிபங்களாயிருந்தனர் என்று கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையம் குறிப்பிடுகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கவொன்றாகும். மேல்பத்து, முள்ளியவளை என்பனவற்றின் வன்னிபமாக 1747 இல் நியமனம் பெற்ற இலங்கைகாவல முதலியார் எவ்வளவு காலத்திற்கு வன்னிபமாயிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார் என்பதனை அறிந்து கொள்ள முடியவில்லை. அவருக்குப் பின்பு இரணசூர இரணராஜ முதலியார் என்பவர் மேல்பத்து முள்ளியவளை ஆகியவற்றின் வன்னிபமாயிருந்தார் என்பதையும் அவரிறந்த பின் 1760 ஆம் ஆண்டிலே புதிய வன்னிபமாக அமரக்கோன் முதலியார் நியமனம் பெற்றார் என்பதையுந் தேசாதிபதி சுரோய்டரின் அறிக்கை மூலம் அறிய முடிகின்றது.[21] இலங்கை நாரண வன்னியனார் இலங்கை காவல் புவிநல்ல மாப்பாணரின் மூதோர் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளமையால் இலங்கை காவல புவிநல்ல மாப்பாணர் முன்னையவரின் வழிமுறைச் சந்ததியினர் என்பதும் தெளிவாகின்றது.

## 4. தென்ன மரவடிப் பற்று

1. இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார்.
2. சண்முகப் பெருமாள் வன்னியனார்.
3. சேதுகாவல மாப்பாண வன்னியனார்.

கொழும்பிலுள்ள ஆவணச்சுவடிகள் நிலையத்திற் கிடைக்கின்ற கொம்பனி அரசாங்கத்திற்கும் வன்னியர்களுக்குமிடையிலான உடன்படிக்கைகளிலே கூடுதலானவை தென்னமரவடிப்பற்று, திருகோணமலை ஆகிய வன்னிமைகளைப் பற்றியனவாகும். தென்னமரவடிப் பற்றைச் சேர்ந்த வன்னிபங்களான

1. தொம் அதிரியலு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார், (2) தொம் பிறான்சிஸ்கோ சண்முகப் பெருமாள் சேதுகாவல மாப்பாண வன்னியனார், (3) தொம் யுவாம் சேதுகாவல மாப்பாண வன்னியனார் ஆகிய மூவரைப் பற்றியும் இவற்றிலே குறிப்புக்கள் வருகின்றன. இதுவரை வெளியிடப்பெற்ற ஒல்லாந்தர் காலத்து ஆவணங்கள் எவற்றிலும் இவர்களின் பெயர்களும் இவர்களைப் பற்றிய எந்த விதமான வரலாற்றுக் குறிப்புக்களும் கிடைக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இவர்களுள் இருமரபுந்துய்ய மாப்பாணர் தேசாதிபதி ஒகஸ்ற்றீன் றம்பினாலே தென்னமரவடிப் பற்றுக்குரிய வன்னிபமாக 1722 இல் நியமிக்கப் பெற்றார் என்பதை அவரைப்பற்றிய ஆவணத்திலுள்ள மேல்வரும் பகுதியின் மூலமாக அறிந்து கொள்ளலாம்: ''இதின் கீளே கைய்யெழுத்து வைத்த தென்னமரவடிப்பற்று வன்னிபம் தொம் அதிரியலு இருமரபுந்துய்ய மாப்பாணராகிய என்னைக் காலஞ்சென்று போன கோவேர்ணதோர் றம்பு மகாராசா ஆண்டவர் அவர்கள் (1) 722 ஆண்டு அந்த இடத்துக்குக் கற்பிக்கப் பட்டதின் பிறகு ........ ''[22]

தென்ன மரவடிப்பற்றுக்குக் கடமையானைகளாக வருஷந்தோறும் இரு யானைகளைக் கொடுக்க வேண்டியிருந்தது. இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனாரின் பேரிலே 1738 ஆம் ஆண்டு கொம்பனியாரின் கணக்குப்படி நிலுவையாய் நின்ற யானைகளின் தொகை 19 ஆகும்.[23] எனவே அவர் தான் நியமனம் பெற்ற காலத்திலிருந்து வருடாந்தம் சராசரியாக ஒரு யானையினை மட்டுமே கொம்பனியதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அவர் தனது கடமை யானைகளைச் சரிவரக் கொடுக்காமையினாலே தனது பதவியை இழக்க நேர்ந்தது. அவர் கொம்பனியதிகாரிகளுக்கு முறையிட்டு நிலுவை யானைகளைக் கொடுப்பதாக உத்தரவாதமளித்து உடன்படிக்கை எழுதியதன் பயனாக மீண்டும் அவருக்கு வன்னிபம் என்ற பதவி கிடைத்தது. இதனை அவரின் நியமப்பனத்திரத்திலுள்ள மேல்வரும் பகுதி உறுதிப்படுத்துகின்றது.

> '' இங்கே மேலாலே எழுதப்பட்டிருக்கிற தென்னமரவடி வன்னியன் தன்னுடைய நம்பிக்கையாய் உத்தரித்துக் கொடுத்த பொருத்தத்தின் படிக்கு இவனுடைய பிளைகள் எடுக்கப்பட்டு மறுபடியும் இப்போ இவனுடைய பனிவிடையிலே தென்னமரவடிப்பற்று உடையார் தொம் அதிரியலு இருமரபுந்துய்ய மபப்பாண என்குற பட்டத்துடனேயும் இருக்கச் செய்குறோம். ''[24]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் 1738 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதியன்று நல்லூரிலே கையெழுத்திட்டுக் கொடுத்த உடன் படிக்கையிலே தான் வருஷந்தோறுங் கடமையானைகளையும் தன்பேரில் நிலுவைநின்ற யானைகளைக் குறித்து மேலதிகமான யானைகளையும் கொடுப்பதாக உத்தரவாதமளித்தார். 1738 ஆம் ஆண்டிலே தென்னமரவடி வன்னிபத்தின் பேரில் நிலுவையாய் நின்ற யானைகளின் தொகை 19 என்பதை முன்பு கவனித்தோம். அதில் ஒன்பது யானைகள் சொல்லப்பட்ட வன்னியனார் நியமனம் பெறுவதற்கு முன் - 1722 ஆம் ஆண்டிற்கு முன் - வன்னிபமாய் விளங்கியவரின் பேரில் நின்ற நிலுவை யானைகளாகும். தான் ஏற்படுத்திக் கொண்ட பொருத்தத்தின் படி இவ்வுடன் படிக்கை எழுதப்பட்ட காலம் முதலாக ஐந்தாண்டுகளுக்கு தனது கடமை யானைகளோடு மேலதிகமாக இரு யானைகளை வருடாந்தங் கொடுப்பதற்கு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் உத்தரவாதமளித்தார். அவரின் முன்னோர் பேரில் நிலுவையாயிருந்த ஒன்பது யானைகளைக் குறித்து 1753 ஆம் ஆண்டு முதலாக வருடமொன்றுக்கு ஒவ்வொரு யானையாகக் கொடுத்து ஒன்பது வருடங்களில் நிலுவைக் கடனைத் தீர்த்துக் கொள்வதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அவருக்கு தென்னமரவடிப் பற்று வன்னிபம் என்ற பதவியை மீண்டும் கொம்பனியின் அதிகாரிகள் கொடுத்தார்கள். ஆயினும் தான் மீண்டும் பெற்ற பதவியினையும் அதிகாரங்களையும் நெடுங் ாலத்திற்கு அவரால் அனுபவித்துக் கொள்ள முடியவில்லை.

தொம் பிறான்சிஸ்கோ சண்முகப் பெருமாள் சேதுகாவல மாப்பாண வன்னியனார் 1739 ஆம் ஆண்டிலே தென்னமரவடிப்பற்றுக்குப் புதிய வன்னிபமாக நியமிக்கப்பட்டார். [25] அதற்கு முன்பாக இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் மறைந்துவிட்டார் என்பது ..................... மரித்துப்போன தொம் அதிரியலு இருமரவிலுந்துய்ய மாப்பாண வன்னியனார் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கடனாளியாக்கி எழுதிக்கொடுத்தது' என உடன் படிக்கையொன்றிலே வரும் சொற்றொடர்களினாலே உறுதியாகின்றது. [26] கொம்பனியதிகாரிகள் 1739 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆம் திகதி சண்முகப் பெருமாள் வன்னியனாருக்கு எழுதிக்கொடுத்த நியமனப் பத்திரத்திலே 1730 ஆம் ஆண்டு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனாரிடம் கொடுத்த உடன்படிக்கையின் வாசகமும் இணைக்கப்பெற்றது. இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் தானும் நடந்து கொள்வதாகப் புதிய வன்னிபமான சண்முகப்பெருமாள் வன்னியனார் உத்தரவாதமளித்தார். ஆறு வருடங்களுக்கு மட்டுமே அவர் பதவியிலிருக்க முடிந்தது.

சண்முகப் பெருமாள் வன்னியனார் 1745 ஆம் ஆண்டளவில் இறந்தபடியால் தொம் யுவாம் சேதுகாவல் மாப்பாணர் தென்னமரவடிப்பற்றுக்கு வன்னிபமானார். இதனை '' தென்னமரவடிப்பற்றுக்கு இந் நாளையிலே வன்னிபமாயிருக்கிற தொம் யுவாம் சேது காவல மாப்பாண வன்னியனாரவர்கள் ... ............ .. தம்முடைய மூதோராகிய இந்தப்பற்றிலே வன்னிமையாயிருந்து சென்றுபோன தொம் பிறான்சிஸ்கோ சண்முகப்பெருமாள் சேதுகாவல் மாப்பாண வன்னியனாரவர்கள் பேரிலே நிலுவைமுழுதுங் கொடுத்து '' ............ என வரும் உடன்படிக்கைப் பிரதியின் பகுதியால் அறிந்துகொள்ளலாம். [27] தொம் யுவாம் சேதுகாவல மாப்பாணரின் பதவிக் காலம் எத்தனையாண்டுகளைக் கொண்டிருந்ததென்பதை அறிந்து கொள்ள முடியவில்லை தேசாதிபதி சுரோய்டரின் காலத்திலே (1755 - 1762) தொம் பிறான் சிஸ்க்கு சேது காவலமாப்பாணன் என்பவரே தென்னமரவடிப்பற்றில் வன்னிபமாயிருந்தார். [28]

பதினெட்டாம் நூற்றாண்டிலும் 'வன்னிபம்' என்னும் பதவியானது பரம்பரை உரிமையாயிருந்தது என்று கொள்வதற்கான சான்றுகள் இவ்வாவணங்களிலே காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. ஒல்லாந்த அதிகாரிகளும் வன்னிமைகளைப் பொறுத்த வரையிலே பரம்பரை உரிமைகளை முற்றாகப் புறக்கணிக்க முற்படவில்லை. கரிக்கட்டுமூலை சுருநாவற்பத்து வன்னிபமான அகிலேசன் புவிநல்ல மாப்பாணர் தனக்கு முன் வன்னிபமாயிருந்த 'தன்னுடைய மூதோரான ... புவிநல்ல மாப்பாண வன்னியனார்' என்று குறிப்பிடுவதால் அவர் பின்னவரின் வழிமுறைச் சந்ததியினர் என்பது தெளிவாகின்றது. அதுபோலவே 1747 ஆம் ஆண்டில் மேல்பத்து – முள்ளியவளை வன்னிபமாக நியமனம் பெற்ற இலங்கை காவல புவிநல்ல மாப்பாண வன்னியனாரும் தனக்கு முன் வன்னிபமாயிருந்தவரைத் 'தன்னுடைய மூதோரான இலங்கை நாரண வன்னியனார் எனக் குறிப்பிட்டுள்ளார்.' தென்னமரவடிப்பற்றிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே தலைமுறை தலைமுறையாக வன்னிபம் என்னும் பதவியைப் பெற்றார்கள் என்று கருதவிடமுண்டு. '...... தம்முடைய மூதோராகிய இந்தப்பற்றிலே வன்னிமையாயிருந்து சென்றுபோன தொம் பிறான்சிஸ்க்கு சண்முகப்பெருமாள் சேதுகாவல மாப்பாண வன்னியனாரவர்கள் பேரிலே நிலுவை முழுதுங் கொடுத்து ......' என தொம் யுவாம் சேதுகாவலமாப்பாண வன்னியனாரின் உடன்படிக்கையிலே வரும் சொற்றொடர்கள் குறிப்பிடத்தக்கவை. □

---

## அடிக்குறிப்புக்கள்

1. சி. பத்மநாதன், 'அடங்காப்பற்று வன்னிமைகள், 1658 – 1697' பண்டார வன்னியன் விழா மலர், வவுனியா, 1982 ஆடி, பக்கங்கள் 77 – 88
2. Simon Casie Chetty, **Ceylon Gazetteer**, Colombo, 1834, pp. 190 - 191. S. Pathmanathan, 'The Vanni Chieftaincies of the Eastern and Western littorals of Sri Lanka'. paper presented at the **IATR** national Seminar, Batticaloa, 1976.
3. **Memoir of Hendrick Zwaardecroon** Commandeur of Jaffnapatnam, 1697 trans. Sophia Pietersz Colombo, 1911, pp. 6,97
4. ibid p. 97
5. **Memoir of Hendrick Becker**, 1716, trans. Sophia Pietersz, Colmbo 1914, p. 15.
6. 1738 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே கையெழுத்திடப்பெற்ற உடன்படிக்கையின் பிரதி.
7. மேலது.
8. மேலது.
9. மேலது.
10. மேலது.
11. 1740 ஆம் வருஷம் புரட்டாதி மாதம் கொழும்பில் எழுதப்பட்ட உடன்படிக்கைப் பத்திரத்தின் கையெழுத்துப் பிரதி.
12. **Memoir of Jan Shreuder**, trans. E. Reimers, Colombo, 1964, p. 58
13. மேலது.
14. 1738 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதி கையெழுத்திடப்பட்ட (வெளியிடப்படாத) உடன்படிக்கைப் பத்திரத்திலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. மேலது.

16. மேலது.

17. 1742 ஆம் ஆண்டு மாசி மாதம் 21 ஆம் திகதி கொழும்புக் கோட்டையில் எழுதப்பட்ட (பிரசுரிக்கப்படாத) உடன்படிக்கைப் பத்திரத்திலுள்ள பகுதி.

18. **Memoir of Anthony Mooyart** (Commandeur of Jaffnapatnam) trans. Sophia Pieers, Colombo, 1910, p. 5.

19. **Memoir of Hendrick Becker** (1716, trans. Sophia Pietersz, p. 15.

20. ஆவணச் சுவடிகள் நிலயத்திலுள்ள மற்றுமோர் உடன்படிக்கைப் பத்திரம்.

21. **Memoir of Jan Schreuder**, p. 58.

22. 1738 ஆம் ஆண்டு ஆடி 22 ஆம் திகதி வன்னியனாரின் கையெழுத்திடப் பெற்ற (வெளியிடப்படாத) உடன்படிக்கைப் பத்திரம்.

23. மேலது.

24. மேலது.

25. 1739 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆம் திகதி சண்முகப் பெருமாள் வன்னியனார் கையெழுத்திட்ட (வெளியிடப்படாத) உடன்படிக்கையின் பிரதி, இதுவும் கொழும்பிலுள்ள ஆவணச் சுவடிகள் நிலையத்திலுள்ளது.

26. மேலது.

27. 1745 ஆம் ஆண்டு தொம் யுவாம் சேதுகாவலமாப்பாண வன்னியனாருடன் ஏற்படுத்தப்பட்ட (வெளியிடப்படாத) உடன்படிக்கையின் பிரதி.

28. **Memoir of Jan Shreuder**, p. 58.

## பிற்சேர்க்கை

### *கரிக்கட்டுமுலை - கருநாவல்பத்து வன்னிபம் புவிநல்லமாப்பாணர் யானைதிறைபற்றி ஒல்லாந்தரோடு ஏற்படுத்திய உடன்படிக்கை.*

இப்போது அவடத்திலே எழுந்தருளி இருக்கிற இந்தியாவுக்கு ச. த. ஒடுதினாரியலும் இத்தீவுகளுக்கு கோவேர்ணதோரு(ம்) ஆகிய குஸ்தாபு வெல்லம்பன் இம்மொபு அவர்களுடைய துடர்ந்து பிறகே வரப்பட்ட கட்டளைப்படிக்கு இங்கே குறித்திருக்கிற வன்னியில் நிலுவை யானையின் தொகைகளாவது நான் தொம் தியொக புவிநல்லமாப்பாண வன்னியனார் பிரசித்தமாகச் சொல்லுகிறென். கருனாவல் பற்றில் கணக்கு இந்த திகதி அளவுக்கு 38½ யானையும் கரிக்கட்டுமூலைக் கணக்கு 54 யானையும் பன்றிசுட்டானில் கணக்கு இன்று நிலுவை நிற்கிற 12 யானையும் ஆகக் கொம்பஞீயவுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைக்கடன் 104¼ அலியன் யானை. இதில் பன்றிசுட்டானில் நிலுவையாய் நின்ற யானையிலே எனக்கு நன்மைப் பகுதியாக 10 யானை சகாயமாய்க் களித்த படியால் முன்னாலே இருக்கிற இனிமேல் நான் 94½ அலியன் யானை கொடுக்க வேண்டியது. இன்னும் வருஷந்தோறும் கப்பத்துக்குக் கொடுக்க வேணடிய 13 தவிர இனிமேல் வரப்பட்ட வருஷக்கணக்கு புரட்டாதி மாதம் முதலாக (1)739 ஆவணி மாதம் (?) இருந்தே கொம்பஞீயவின் றொக்கக் கணக்குப்படி முதலே சொல்லப்பட்ட மேலதிகமான நிலுவையானை 9 ம் கொம்பஞீயவுக்கு உத்தரித்துக் கொடுப்பேன். அப்படியே இந்த 22 யானைகளிலே குறையக் கொடுக்க வந்தால் ஒவ்வொரு யானைக்கு (சமானமாக) திடபரமாக 250 இறையால் கொம்பஞீயவில் காசவிலே ஒடுக்குவேனாகவும். என்னுடைய நிலுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகள் கொடுத்துத் திருவுள்ளலும் இந்தப்பிரகாரம் ஆகக் கொம்பஞீயவுக்கு நடப்பித்துக் கொள்ளுவேனாகவும். எனக்குச் செய்திருக்கிற உபகாரத்திற்காக வேண்டிக் கணக்கிலே சேரும் 5,000 பறை நெல்லுக்குக் கொடுத்த 2,000 பறை நெல்லுப் போக மற்ற மூவாயிரம் பறை நெல்லும் (1)739 ஆண்டு ஆவணி மாதம் முதலே கொம்பஞீயவுக்குக் கொடுப்பேனாகவும். இதுகளிலே யாதொன்றுக்கு நான் பிறகே நின்று விட்டேன் ஆனால் பன்றிசுட்டானில் நாள்தோறும் பெற்று வருகிற உண்டான புரோசனங்கள் இறந்துபோகவும். இன்று என் மரணபரியந்தத்துக்கு இந்த ஊரை என் மகாராசா ஆண்டவர் அவர்கள் என்றே (?) இருக்க விட்டுவிட்ட படியால் நான் கொம்பஞீயவுக்கு இணங்க நடக்காத காலத்தில் மேல் ஈனத்துக்குடையவனுமாய் எனக்கு கிடைத்த ஊரு கொம்பஞீயவுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்குவேண்டி என்னுடைய ஆஸ்தி உடைமைகளையும் இதற்கீடாக்கினேன். யாட்பாணம் 1738 ஆண்டு ஆடி மாசம் 22 திகதி. இதின் மேல் தொம் தியொகு புவிநல்லமாப்பாண வன்னியனார் கையெழுத்து வைத்தது.

2. இந்தியாவுக்கு ஓடுதினாரியாலு செயிலோமுக்கும் அதற்குச் சேர்ந்த தலங்களுக்கு(ம்) கோவேர்ணதோரு திரெத்தோடு ஆகிய குஸ்தாவு வெல்லம்பன் இம்மொவு அவர்கள் நிருபித்த கட்டளையை(க்) காணப்பட்டவர்களுக்கும் ஆரோக்கிய முண்டாவதாக.

தொம் தியொக புவிநல்லமாப்பாண வன்னியனார் செய்யப்பட்ட பணிவிடைகளிலே மேலான பொதுவான அதிகவான கழுக்குச் செய்திருந்த மிகுந்த ஏற்பட்ட யானை நிலுவைப் பணிவிடைத்தாட்சிகளை எங்களுடைய பீசீத்தவிலே அறிய்ந்தும் உண்டான கோபதாபங்களுக்குளையும் மேலாலே சொல்லப்பட்ட பொருத்தமாக கரிக்கட்டுமூலையும் கருநாவல்பற்றையும் இவன் வசமாக்கி இன்னமும் மிகுந்த மன்றாட்டத்துடனே கேட்டபடியால் பன்றிசுட்டான் என்கிற ஊரையும் 720 ஆண்டு கிடைத்திருந்தபடிக்கு இவனுடைய மரணபரியந்தம் கிடைக்கவும் அதினுடைய புரோசனமும் பெற்றுக் கொள்ளலுமாம். அப்படி ஒரு திட்டமான பொருத்துடனே சொல்லப்பட்ட தொம் தியொகு புவிநல்லமாப்பாண வன்னியனாருடைய மரணத்தின் பிறகு உடனேதானே மற்றுங் கரைச்சி சம்பவித்த பிரகாரமாகப் பன்றிசுட்டானைக் கொம்பஞீயவுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். முன்னாலே சொல்லியிருக்கிற பிரகாரத்துக்கு வருஷத்துக்கு வருஷம் சொல்லப்பட்ட 22 யானை கொடாதிருந்தால் குறைந்த யானைகளுக்கு 250 இறையால் ரொக்கமாக கசாவிலே ஒடுக்கப்படும். அல்லது பணத்தினுடைய இடத்திற்கு 1,000 பறை நெல்லு கொடுக்கப்படும். (1)739 ஆண்டு ஆவணி மாதம் முதலே ஒரு நாளுந்தாமதம் இல்லை. அந்த வருஷத்தில் ஆவணி மாதம் மூவாயிரம் பறை நெல்லு தவிர முதற் கந்தாயத்துக்கு(க்) கொடுக்க வேண்டியது. இந்தக் காரியங்களிலே யாதொரு தாட்சிகளுள்ள தானல் சொல்லப்பட்ட பன்றிசுட்டானை உடனே தானே கொம்பஞீயவுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் அதிலே வரப்பட்ட சேதபாதங்களில் அவன் பேரிலே சுமதியாய் இருக்கப்படும். இதுதானே முன்னாலே சொல்லி இருக்கிற பிரியம். இதனாலே யாகச் சொல்லப்பட்ட பொருத்தம் ஆகியாலே எழுதப்பட்ட படிக்கு கொம்பஞீயவுக்காக வேண்டி நாங்கள் ஏற்றுக்கொண்டது.

யாட்பாணத்திலே

1738 ஆண்டிலே ஆடி 22 திகதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிந்தனை*
*தொகுதி V*
*இதழ் I, II - 1993*

# சங்கரரின் உலகு பற்றிய நோக்கு

— நா. ஞானகுமாரன் —

மனிதனானவன் தன்னைப்பற்றி அல்லது தான் வாழும் உலகினைப் பற்றி ஏதும் எடுகோள்களினை உருவாக்காது வாழவோ அன்றிச் சிந்திக்கவோ முடிவதில்லை. இவ்வெடுகோளினைப் பின்னணியாகக் கொண்டே இராதாகிருஷ்ணனும் மெய்யியலானது நாம் வாழும் உலகினைப் பற்றி விபரிக்க முயலுகின்றதெனச் சுட்டுகின்றார்.[1] மெய்யியலானது இவ்வுலகின் விடயங்கள் பற்றி ஆராய்வதில்லை. இந்நிலை விஞ்ஞானங்களுக்கே உரியதாகும். ஆனால் மெய்யியலானது வாழ்வின் நோக்கம், பயன்பாடு, பிரபஞ்சம், இருப்பு பற்றிய ஒரு காட்சியினை அளிக்கின்றது.

சங்கரரின் உலகு பற்றிய நோக்கானது சங்கரரின் அத்வைத வேதாந்தத்தினை அடிநிலையாகக் கொண்டு விளக்க முற்படுகின்றது. சங்கரர் போல சாங்கியர், துவைதிகள், விசிட்டாத்துவைதிகள், சைவசித்தாந்திகள், சமணர் போன்ற பல தத்துவவாதிகளும் பல்வேறான வகையில் உலகு பற்றிய எடுகோளினைக் கொண்டிருந்தனர். சங்கரர் வேத உபநிடதங்களினை ஏற்று வைதீக மரபுக்குரியவராக இருந்த நிலையில் அவரது சிந்தனைகள் வேத உபநிடத மரபுகள் என்ற எல்லைக் கோட்டுக்குள் அடங்கிய ஓர் எடுகோளாகவும் அமையவேண்டுமென்பது அடிப்படையானதாயிற்று. எனவே வேத உபநிடதம் கூறும் கருத்துக்களுக்கு முற்றும் முரணாகாத வகையிலும், பொதுமைச் சிந்தனைக்கும் குறிப்பாகத் தர்க்கச் சிந்தனைக்கும் பொருந்துவதான முறையிலும் சங்கரரது கருத்தளிப்பானது அமைய வேண்டியதாயிற்று. எனவே சங்கரர் சுட்டிய உலகு பற்றிய கருத்தினைத் தர்க்க ரீதியில் நோக்குகையில் அவர் நின்ற வட்டத்தின் பின்னணியையும் மனத்திடைக் கொண்டு நோக்குவது பயன் பயப்பதாகும்.

பெரும்பாலான இந்திய தரிசனங்கள் உலகு, உயிர், இறைவன் என்னும் மூன்று அம்சங்கள் பற்றிய கருத்துக்களினை எடுத்தாராய முயல்கின்றன. இவ் விளக்கங்களின் அடிப்படையிலேயே இவற்றிடையே நிலவும் வேறுபாடான தத்துவ நிலைப்பாடுகளினை இலகுவில் இனங்கண்டு கொள்ளலாம். சங்கர வேதாந்தமும் இதற்கு விதிவிலக்கல்ல. இம் மூன்றில் உயிரும், இறையும் நேரடியாகப் பிரத்தியட்சப் பிரமாணத்திற்குட்படாதன. அதாவது காணப்படமுடியாதவை. இவற்றைச் சிலர் ஏற்று நிற்பர். சிலர் மறுத்துரைப்பர். உலகத்தினை எல்லோரும் பொதுவாக ஏற்று நிற்பர். நேரடியாக நாம் உலகினைக் காண்கின்றோம்; அனுபவிக்கின்றோம். பலர் இதன் உண்மைத் தன்மை ஆதாரப்படுத்தப்பட்டதாக ஏற்கின்றனர்.

சங்கரரும் உலகு, உயிர், இறை ஆகிய மூன்று அம்சங்களையும் ஆராயும்போது சில வாக்குகளினை ஏற்கின்றார். அதே வேளை நியாயத்தின் மூலம் உட்பொருள் ஒன்றே என்பதனை நிலைநாட்ட முயல்கின்றார். வாக்கினை ஏற்கும் நிலையில் நியாயம், அனுபவம் ஆகியவற்றையும் இணைத்து நோக்கும் சங்கரரின் தன்மையானது பிரகதாரணிய உபநிடதம் சுட்டும் கருத்திற்கு அண்டிச் செல்கின்றது.[2] சங்கரர் நோக்கில் பிரமம், அதாவது இறை ஒன்றே உள்பொருளாகும்; உண்மைப்பொருளுமாகும். இதனாலேயே அவர் காட்டும் அத்வைதம் இரண்டற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பொருளை மையமாகக் கொண்டு விளங்குகின்றது. அதாவது அ-துவைதம் என்பது இரண்டற்றது எனும் பொருளைச் சுட்டுகின்றது. பிரமம் பற்றிய இக் கருத்தானது வேதாந்தத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. சங்கரர், எல்லோரும் பொதுவாக ஏற்கின்ற உலகினை ஏற்கின்றார். ஆனால் எந்த அடிப்படையில் ஏற்கின்றார் என்பதுதான் கேள்விக்குரியதாகும். பொதுவாக, பெரும்பாலான இந்திய தரிசனங்கள் உலகத்தின் உண்மைத்துவத்தினை ஏற்கின்ற வேளையில் சங்கர வேதாந்தமும் மகாயான பௌத்தமும் இவ்வுண்மைத்துவத்தினை வேறுபட்ட வகையில் விளக்கி நிற்றலினைக் காணலாம். சங்கரரின் கருத்துப்படி உலகானது உண்மையுமல்லாத, பொய்யுமல்லாத ஒன்றாக விளங்குகின்றது. உலகினை முற்றாக இல்லாத ஒன்றென நிராகரிக்கவில்லை. நாளாந்த அனுபவ நிலைக்குரிய உண்மைப் பொருளாக ஏற்பினும் அடிப்படையான உண்மைப் பொருள் என்ற நோக்கில் உண்மைத்துவத்தினை மறுக்கின்றார்.

உலகு பற்றிய நிலையினைத் தெளிவதற்குச் சங்கரர் உலகிற்கும் பிரமத்திற்கும் இடையிலான முரண்பாட்டு நிலையினைக் கவனத்திற் கொள்கின்றார். பிரமம் பூரணமானதும், மாறாததும், அழியாததும், தூயதும், சுதந்திரமானதும், ஆனந்தமானதும், எல்லையற்றதும், என்றுமுள்ளதும், ஒன்றானதும், குணங்களற்றதும், புத்தியுடையதும் எனப் பலவாறாக எடுத்தாளப்படலாம். மேலும் பிரமம் தனக்கெனப் பிறிதொரு காரணம் வேண்டாததும், உணர்வுக்குரியதும் எனவும் பலவாகச் சுட்டப்படுகின்றது. இதற்கு மாறாக உலகானது சடத்தன்மையதும், மாற்றத்திற்குரியதும், புத்தியற்றதும், பந்தத்திற்குட்பட்டதும், தூய்மையற்றதும், அழிவிற்குரியதும், பகுப்புக்குரியதும், எல்லையுடையதும் எனப் பலவாறு எடுத்துக்காட்டப்படுகின்றது. உலகானது பன்மைத்தன்மை வாய்ந்தது. பிரமம் ஒன்றுதான் மூலப்பொருள். இப்பிரமம் ஒருமைத்தன்மை வாய்ந்தது. இந்த ஒருமைத் தன்மையிலின்றும் எவ்வாறு பன்மைத் தன்மைவாய்ந்த உலகு உருவாகியிருக்க முடியுமென்பது கேள்விக்குரியது. அதுமட்டுமன்றி இந்தப் பிரமம் பன்மைத் தன்மையான உலகினை உருவாக்கியிருக்கமுடியாது. உலகானது தோன்றி மறையும் நிலையற்ற ஒன்று. ஆனால் மூலப்பொருளான பிரமம் அப்படிப்பட்டதல்ல. பிரமம் நிலையானது; அழியாதது, அழியாத ஒன்றினின்று அழிவுள்ள ஒன்று எவ்விதம் தோன்றியிருக்க முடியும். பிரமம் சித்துப்பொருள், உலகம் சடப்பொருள், எனவே சித்தினின்றும் சடம் தோன்றுவதென்பதுவும் பொருந்தாது.

உலகானது பிரமத்தின் ஒருபகுதி எனும் எண்ணக்கருத்தும் சங்கரரினால் நிராகரிக்கப்படுகின்றது. பகுதியை உடைய எதுவும் அழிவுடையது என்றும் நிலையானதல்ல என்றும் கொள்ளக்கிடப்பதனால் இக்கருத்தும் ஏற்புடைத்தன்றாகின்றது. உலகானது அழியக்கூடியது. ஆனால் பிரமம் அழிவிற்கு அப்பாற்பட்டதாகும். சுருதியானது பிரமம் பகுப்பிற்கு அப்பாற்பட்டவன் எனக் கொள்கின்றது. உலகு பிரமத்தின் ஒரு பகுதியானது எனும் கருத்தும் தர்க்கரீதிக்குப் பொருந்துவதன்று. எனவே பிரமமோ அல்லது பிரமத்தின் ஒரு பகுதியோ உலகாக மாறிற்று எனும் கருத்தும் உபநிடதச் சான்றுகளைக் கொண்டு சங்கரரினால் நிராகரிக்கப்படுகின்றது. சாந்தோக்கிய உபநிடதம் பிரமமே உலகத்தின் காரணமாகும்; பிரமம் தன்னிலோ அல்லது தன்னில் ஒருபகுதியோ உலகாக மாறியது அல்ல [3] எனச் சுட்டும் கருத்து இங்கு நோக்கற்பாலது.

உலகப் படைப்பு என்பது அதிசயிக்கத்தக்கதும் மறைபொருளானதும் எனவும் உலகப் படைப்பின் அடிப்படையினை மாயை பற்றிய கொள்கையின் உதவியுடனேயே திருப்திகரமாக விளங்கிக் கொள்ளலாம் எனவும் கருதும் சங்கரர், [4] பிரமத்திற்கும் உலகிற்குமிடையிலான தொடர்புகளிலே எழும் முரண்பாடுகளை நீக்குதற் பொருட்டு உலகம் வெறும் தோற்றமே எனும் கருத்தினை முன்வைத்துச் சடவுலகின் உண்மைத் தத்துவத்தினை மறுக்க முனைகின்றார். பிரமமே உலகின் தோற்றத்திற்குக் காரணம் எனக் கூறுகையில் எழும் சிக்கல்களினைப் போல உலக உற்பத்திக்குப் பிரமத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்து பிறிதொரு காரணத்தைத் தேடுவதும் சிக்கலுக்கு இடமளிப்பதால் சாத்தியமில்லை.[5] பிரமத்தை விட்டு வேறுகாரணம் வேண்டி நிற்பது பிரமத்தின் முழுமுதற்தன்மைக்கும், எல்லாம் வல்ல பூரண நிலைக்கும் இடர்பாட்டினை ஏற்படுத்தவல்லதென்பதால் பிரமமே சடவுலகின் காரணமென்பதும் தவிர்க்கப்பட முடியாத நிலைக்குரியதாகின்றது.[6] இந்நிலையில் சங்கரர் உலகு பொய்யானது அல்லது உலகு இல்லாத ஒன்று என்று குறிப்பிடாது அது வெறும் தோற்றமானது எனக் கூறுமுகத்தால் மேற்கூறப்பட்ட சிக்கலினை அவிழ்க்க முற்படுகின்றார்.

தோற்றம் எனும்போது அது உண்மையற்ற ஒன்று எனக் கொள்ள வேண்டியதில்லை. கானல் நீரை நாம் தோற்றப் பொருள் எனக்கொள்ளும் வகையில் சங்கரர் தோற்றத்திற்குப் பொருள்கொள்ளவில்லை என்பது உணரப்பட வேண்டியதொன்றாகும். உண்மை எது என்பதனை ஆராய முற்பட்ட சங்கரர் அது மாற்றமில்லாததும், என்றுமுள்ளதும், சுய முரண்பாடற்றதும் ஆக இருத்தல் வேண்டுமென்பதனை பெற்றுக்கொண்டார். இவ் விளக்கத்திற்குட்படும் வகையில் உண்மையானதென்பது பிரமத்திற்கே உரியதென்பதும் புலனாகும். எனவே பிரமம் உண்மையானபோது உதாரணமாக மேசை, கதிரை, வீடு போன்றவைகளும் பிரமத்தைப் போன்ற உண்மை என்பது தர்க்கரீதியில் பொருத்தமற்றதாகின்றது. அதேவேளை பிரமத்தின் உண்மை தரம் கூடிய உண்மை என்றும் ஏனைய குறைத்தர உண்மை என்றும் தரப்பகுப்பினை உண்மையில் ஏற்பதும் சாத்தியமற்றதொன்றே. என்றுமுள்ளதான, சுய முரண்பாடற்ற, மாற்றமில்லாத பிரமம் உண்மை என்னும் சொல்லுக்குப் பொருந்துகின்றவேளை இதர பொருட்கள் தோற்றப் பொருட்களாகச் சங்கரரால் எடுத்தியம்பப்பட்டதால் முரண்பாடெதுவுமிருக்க முடியாது. தோன்றி அழிகின்ற இப்பொருட்களைத் தோற்றப் பொருட்கள் எனச் சங்கரர் சுட்டுவதன்வழி அப்பொருட்கள் இல்லாத பொருட்கள் எனச் சுட்டவில்லை என்பது தெளிவாகும். இல்லாத பொருள் தோன்றாது; உள்ளதே தோன்றும் எனும் சற்காரிய வாதத்தின் அடிப்படையினை ஏற்றவர் சங்கரர் என்பது இவ்விடத்து நினைவு கூரத்தக்கதாகும். ஏலவே கூறிய கருத்தினின்றும் உலகினைச் சங்கரர் தோற்றம் என்பதன்வழி உலகம் இல்லாததொன்று என்றோ அல்லது பொய்யானதென்றோ சுட்ட முற்படவில்லை என்பது புலனாகும்.

வேதாந்திகள், உலகானது பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் எழுவ தென்னும் கருத்தினையும், உலகமும் அதன் பொருட்களும் புத்தி நுட்பமற்ற ஒரு முகவரின் பரிணாமத்தினின்று எழுந்தன வென்னும் கருத்தினையும் நிராகரித்துரைப்பர். கௌடபாதரின் அஜாதி வாதக்கருத்தின் உதவியுடன் சங்கரர் இதனை மேலும் தெளிவாக்குவர். அஜாதி வாதமானது பிரபஞ்சமானது உருவாக்கப்படவில்லை; ஆனால் பிரமத்தின் ஒரு தோற்றம் மாத்திரமே எனப் பொருள்படுகின்றது. பிரமம் தன்னில் முழுமையான இருப்புடையதாகும். இருமைத்தன்மை, பன்மைத்தன்மை என்பன பிரமத்தின் தோற்றம் மாத்திரமே. இரண்டற்றமையே சங்கரரைப் பொறுத்தவரை உட்பொருளியல் நிலையான உண்மையாகும். இருமைத்துவத்தினைச் சங்கரர் உபநிடதச் சான்றினைக் கொண்டு மறுத்துரைப்பார் சாங்கியர் அளிக்கும் உலக உற்பத்திக்குரிய விளக்கமும் சங்கரருக்கு ஏற்புடையதாகத் தெரியவில்லை. சாங்கியர் பிரகிருதியே உலகிற்குக் காரணம் என எடுத்தியம்புவர். இப் பிரக்கிருதியானது தனித்துவமான உண்மைப் பொருள் என்றும் அறிவற்றதும், ஆன்மீகமற்றதும் என்றும் விளக்குவார். அறிவுடைய ஒரு முகவரின் அறிவற்ற பிரகிருதியின் காரணமாக உலகு எழுந்ததெனும் கருத்து ஏற்க முடியாதெனச் சங்கரர் குறிப்பிட்டார். மண் தன்னில் ஒரு குயவனின் உதவியின்றி எவ்வாறு பானையாக மாட்டாதோ, அவ்வாறே உலகும் புத்தி நுட்பமற்ற பிரகிருதியினால் எழுவதென்பதும் பொருந்தாதெனக் கொண்டார்.

வைசேடிக தரிசனமானது அணுக் கொள்கையினை முன் வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று, நீர், நெருப்பு, பூமி எனும் விதமான அணுக்களின் பிரிக்க முடியாத அலகுகள் ஒன்றுக் கொன்று இணையுமாற்றலால் உலக உற்பத்திக்குக் காரணமாகின்ற தென்பர். அணுக்களின் சேர்க்கை உலகு உற்பத்தி என்றும் அணுக்களின் சிதைவு உலக அழிவு என்றும் குறிப்பிடுவர். பிர பஞ்சத்திற்குரிய சடக் காரணமாக இருப்பது அணுக்களே எனக் கொள்ளும் வைசேடிகர் கருத்தினைச் சங்கரர் ஏற்க மறுப்பர். உணர்வற்ற, புத்தி நுட்பமற்ற அணுக்களா னவை தம்மில் இணைந்து உலகிற்குக் காரணமாக இருத்தல் சாத்தியமில்லை எனக்குறிப்பிடுவர். உயிர்கள் வினைப்பயனை அனுபவிக்க உலகு படைக்கப்பட்டதெனச் செப்பும் சில தத்துவவாதிகள் கருத்தும் வினைப்பயனை நுகர்ந்து வீடு பேற்றைப் பெறும் ஒரு நிலையில் உலகின் நிலை கேள்விக்குரியதாகையால் பொருத்தமற்ற தாகின்றது. உலகு உண்மையென எடுப்ப தினாலேயே மேற்போந்த சிக்கல்களினை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகின்றது. எனவே சங்கரர் உலகு தோற்றப் பொருள் எனவும், பிரமமே உலகாகத் தோன்றுகின் றதென்றும் முடிவிற்கு வருகின்றார். உல கின் பன்மைத் தன்மையும் இதர அம்சங் களும் மாயையின் படைப்புகளாகும் என விளக்கி நிற்கின்றார். [8]

முழு உலகும் மாயையின் விளைவாகும். அறியாமையே இதற்குக் காரணமாகும். மாயையின் ஆவரண, விட்சேப எனும் இரு சக்திகளின் காரணமாக உள்ளபொருளை இல்லாத பொருளாகவும், இல்லாத பொருளை உள்ளபொருளாகவும் மாறுபடக் காண்கின்றோம் என்பர். உட்பொருளியல் நோக்கில் உலகானது உண்மையான தொன் றல்ல என சங்கரர் கூறுவர். உலகு பிரமத் தின் ஒரு தோற்றம் மட்டுமே. பிரமத்துக் கும் உலகத்திற்குமிடையிலான முரண்பாடு களினை மாயை எனும் எண்ணக்கருத்து வழி நீக்குவார். இங்கு மாயையானது தோற்றப்பண்பினை எடுக்கின்றது. உலகா னது உட்பொருளியல் நிலையில் உண்மை யற்றது எனச் சங்கரர் கூறுவதனால் அவ் உலகினை முற்றாக நிராகரித்துச் செல்கிறார் எனவாகாது.

சங்கரர் உலகின் அனுபவ ரீதியான இருப்பினை ஒரு போதும் மறுக்கவில்லை. சங்கரர் உலகினை மித்தியா எனக் குறிப் பிடும் போதும் அது உள் பொருளியல் நிலையில் உண்மைப் பொருளோ எனும் நோக்கம் கருதியே சுட்டப்பட்டதெனக் கொள்ளல் பொருத்தமுடையதே. அது நாம் சாதாரணமாகக் கொள்ளும் கருத்தில் உண் மையற்றது எனும் பொருளினைத்தருவ தில்லை. மாயை என்பதும் உலகு பூரண மாக இருப்பற்ற தொன்று என்பதனை உள்ளடக்கி நிற்கவில்லை. உலகானது அனுபவரீதியான நிலையில் பொய்யற்றதே யாகும்.

காற்றானது எவ்வாறு சூழலின் அசை வினின்று அனுமானித்தறியப்படுகின்றதோ அதுபோல மாயையானது அதன் விளைவு களினின்று அறியப்படுவதாகிறது. மாயை என்பதினிறு உலகு முழுமையான ஒரு பொய் யாகவோ அல்லது வெறும் திரிபுக்காட்சி யாகவோ சங்கரர்கருதவில்லை; ஆனால் மாயை எனும் எண்ணக்கருத்தினை முரண் பாடற்ற வகையில் தத்துவார்த்த ரீதியில் உலகினை விளக்குவதற்குப் பயன்படுத்தி னார். பிரமத்தினை உணர்ந்தவருக்கு மாத் திரமே உலகு உண்மையற்றதாக விளங்கு மெனக் கருதினார். தத்துவபோதத்தில் உலகானது வெறும் தோற்றம் மாத்திரமே என்றும் மாறுகின்ற உலகினை பிரமமானது மாறியோ அல்லது மாற்றத்திற்குட்பட்டுப் படைப்பது சாத்தியமில்லை என்றும் சுட் டப்படுதல் காணலாம்.

பிரமமே உயர்வான உண்மையாகும். இரண்டற்றபிரமமே உட்பொருளியல் நிலையிலும் மாறா நிலைக்குரியதாகும். எல்லாவற்றுக்கும் மேலானது பிரமமே, இப் பிரமம் மாயையின் சக்தியூடாக பன்மைத் தன்மை பொருந்திய உலகினைப் படைக் கவல்லதாகும். உலகானது முழுமையாகப் பிரமத்தில் தங்கியுள்ளதாகும். மாயை யானது சாங்கியர் காட்டும் பிரகிருதி போல் உலகிற்குக் காரணமாகின்றது. பிரமமானது மாயை காரணமாக மாற்ற மடைந்தது போல் தோன்றுகின்றது. [10]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரர் காரணகாரிய விளக்கத்தின் ஊடாகவும் தனது ஒருமைவாத தினை வளர்த்துச் செல்லவும், உலகு தோற்றத்திற் குரிய தொன்றென்பதை நிறுவவும் முயல்கின்றார். பராம்பரியமான கருத்தில் காரண காரியத் தத்துவமானது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் அடிப்படையானதென்றும் அக் காரணத்தினின்று விளைவான காரியம் அமைகின்றதெனவும் சுட்டி நிற்கின்றது. இக் காரணகாரிய விளக்கத்தில் ஒரு சாரார் காரியமானது காரணத்துள் அடங்கியிருப்பதென் றும் பிறிதொருசாரார் காரியமானது காரணத்துள் அடங்காது அதற்கப்பால் அமைவதென்றும் சுட்டுவர். இவர்கள் முறையே சத்காரிய வாதிகள் என்றும் அசத்காரிய வாதிகள் என்றும் அழைக்கப்படுவர். சாதாரண உலகில் காரணகாரியத்தை எடுத்தாளும்போது காரியமானது காரணத்துள் அடங்குமென்றும் அதாவது ஒரு விதை முளைக்கின்றது எனும் போது முளையான காரியம் விதையன காரணத்துள் அடங்கியுள்ளதே என்றும் சற்காரியவாதிகள் விளக்கி நிற்பர். இவ்வாதத்தினையே சங்கரரும் ஏற்பவராக விளக்குகின்றாரெனினும், இக்கருத்திலும் சிறிதான மாற்றத்தினைச் சுட்டுகின்றார். அதே வேளை காரியமானது காரணத்தில் தங்கியிருப்பதில்லை எனச் சுட்டும் நியாய வைசேடிகரின் கருத்தினையும் முற்றாக நிராகரிப்பார். ஒரு காரியமானது அதன் காரணத்துள் முன்னரே இல்லாதுவிடின் பின் அது புதிதாகத் தோன்றுவதென்பது இயலாததென்பார். எள்ளுக்குள் ஏலவே இருந்த எண்ணெயே பிற்பட பெறப்படுவதாயிற்று. அதனை விடுத்து எண்ணெயானது நிலத்தினைப் பிழிந்து பெறப்பட்டதாதல் சாத்தியமில்லை. எனவே எண்ணெய் ஏலவே எள்ளில் இருந்திருக்க வேண்டுமென்றாற் போல் காரியமானது அருவமாயினும் முற்படக் காரணத்தில் இருந்திருக்க வேண்டுமென்பது சத்காரிய வாதிகளின் வாதமாகும்.

சங்கரர் தனதாசிரியரின் ஆசிரியரான கௌடபாதரின் வாதத்தினை அடியொற்றிக் காரணம், காரியம் ஆகிய இரண்டும் ஒரே தன்மையதான அல்லது ஒத்த தன்மையதான தெனவும் மாற்றமும் காரண காரியமும் வெறும்தோற்றங்கள் மட்டுமே எனவும் கூறி நிற்பர். எந்தக் காரணமும் இன்றிக் காரிய உலகானது இருப்புடையதாக மாட்டாது. மாயையே உலகின் காரணமாகின்றதென சுட்டும் சங்கரர், உட்பொருளியல் நிலையில் இந்த உலகும் வெறும் தோற்றத்திற்குரியதே எனக்குறிப்பிடுவர். காரியமான உலகானது தத்துவமான அல்லது தனிப்பட்ட ஒரு பொருளாக இருப்புடையதாக மாட்டாதென வலியுறுத்துவார். காரண காரியமானது கட்டுக்கதை அல்லது இல்லாத ஒன்று எனக்கூறும் கௌடபாதர் கீழ்வரும் வாதங்களினை முன்வைக்கின்றார்.

1. தன்னில் ஒரு பொருள் உருவாகமாட்டாது அல்லது பிறிதொன்றினால் உருவாகமாட்டாது. அன்றேல் இருவழியாலும் உருவாகமாட்டாது.[11] ஒரு ஜாடியானது தன்னில் உருவாகமாட்டாது அல்லது பிறிதொன்றான ஒரு துணியினால் உருவாகமாட்டாது. அல்லது பிறிதொன்றான ஒரு துணியினதும் தன்னாலும் ஆகிய இரு நிலையாலும் உருவாதல் சாத்தியமற்றது.

2. களி மண்ணின்று ஒரு பானை உருவாக்கப்படவில்லையா? அல்லது ஒரு தந்தைக்கு ஒரு மகன் பிறப்பதில்லையா? என வினாவப்படலாம். இதற்குக் கௌடபாதர், இது சந்தேகத்திற்கிடமின்றிக் காணப்படுவதே என்றாலும் நியாயத்திற்குப் பொருந்துவதன்று என்கிறார். ஒரு பொருள் இருக்கின்றதோ அல்லது இல்லாததோ அல்லது இருக்கின்றதும் இல்லாததும் ஆன இரண்டு நிலைக்குரியதோ என இவர் வினவுவார். ஒரு பொருள் இருக்கின்றதென்றால் அது படைக்கப்பட முடியாது. ஏனெனில் அது அங்கு ஏலவே இருக்கின்றமையேயாகும். இரண்டாவதாக இல்லாதது எனின் அதன் இயல்பிற்கமைய அதாவது இல்லாதது எனும் தகமைக்கமைய படைக்கப்பட முடியாததாகிறது. மூன்றாவதாக இருக்கின்றதும் இல்லாததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன இரு நிலைக்குரியதென்பது சுய முரண்பாட்டிற்கு இட்டுச் செல்லுமென்பதால் சாத்தியமற்றதாகின்றது. எனவே உண்மையில் எதுவுமே படைக்கப்படவில்லை அல்லது உருவாக்கப்படவில்லை எனும் முடிவிற்கு வருகின்றார். [12]

3. காரண காரியமானது ஒரு கட்டுக்கதையாகும். ஏனெனில்.

அ) இல்லாத தொன்றுக்கு இல்லாத தொன்று காரணமாக இருக்க முடியாது. உதாரணமாக ஆகாயக் கோட்டைக்கு முயற்கொம்பு காரணமாக இருக்க முடியாது.

ஆ) இருக்கின்ற ஒன்றுக்கு இல்லாத தொன்று காரணமாக இருக்க முடியாது. அதாவது ஒரு ஜாடிக்கு முயற்கொம்பு காரணமாக இருக் முடியாது.

இ) இருக்கின்றதொன்று இருக்கின்ற தொன்றின் காரியமாகமாட்டாது. ஏனெனில் இருக்கின்றதானது ஏலவே இருப்பதேயாகும். அது ஏலவே இருப்பதெனின் அதற்கு ஒரு காரணம் வேண்டியதில்லை. உதாரணமாக ஒரு மேசையானது ஒரு பானையின் காரணமானதன்று.

ஈ) இருக்கின்றதொன்று இல்லாத தொன்றின் காரியமாகமாட்டாது. ஏனெனில் இல்லாததொன்று எதனையும் உருவாக்க மாட்டாது. [13]

கௌடபாதரின் வழியைப் பின்பற்றும் சங்கரர் காரணமும், காரியமும் ஒன்றை ஒன்று தொடர்ந்தமைவதேயாகும் என்றார். இக் காரணகாரியமானது உண்மையின் தன்மையல்ல. ஆனால் ஒரு நிபந்தனைப் படுத்திய அறிவு மட்டுமே என்பார். காரணமும், காரியமும் முற்றாக வேறுபட்ட இரு பொருட்கள் அல்ல. ஒன்று ஒன்றினைத் தொடர்வதாகும். காரணமும் காரியமும் நூறுவருடங்கள் சென்றாலும் வேறுபட்ட பொருட்களாக முடியாதென்பர். உண்மையில் காரணம் காரியம் ஆகிய இரண்டும் ஒன்றே. ஒரு நிலையில் அது காரணமாகத் தோன்றுகின்றது. பிறிதொரு நிலையில் காரியமாகத் தோன்றுகின்றது. எனவே காரண காரியத்திற்கிடையிலான உறவானது முரண்பாடுடையதாகின்றது எனச் சங்கரர் எடுத்தாள்வார். காரியமானது காரணத்தினின்று வேறுபட்டதன்று என்பதனைப் பிரம சூத்திரபாஷியத்தில் துணிபற்றிய உதாரணத் தூடாக விளக்குகின்றார். [14] சுற்றி வைக்கப்பட்ட துணியானது சுற்றியிருக்கும் வரை நாம் அது துணியோ அல்லது வேறு ஏதுமோ எனப் பார்க்க முடியாது. மேலும் அது பார்க்கப்படுமாயின் அதன் அகலம், நீளம் யாது என்பது அறியப்படாதது ஆகும். ஆனால் அது சுற்றப்படாத போது அது என்ன என்பதனையும் அதன் நீள அகலம் பற்றியும் பார்க்க முடியுமென வாதிக்கின்றார். இருந்த போதிலும் சுற்றப்பட்ட துணி சுற்றப்படாத துணி இரண்டும் வேறுபட்டவையல்ல. அதுபோல் காரணமும் காரியமும் வேறுபட்டவையல்ல. ஒரு பொருளானது மேலும் வேறுபட்ட ஒரு தோற்றத்தினால் வேறு ஒரு பொருளாக அது ஆகின்றது. நடப்பதெல்லாம் ஒரு வடிவ மாற்றமேயாகும். காரியமானது காரணத்தினைத் தொடர்ந்து பல்வேறான நிலைகளில் வேறுபட்ட நாம ரூபங்களினைப் பெறுகின்றது. உதாரணமாக நடிகனை எடுத்தாளும் போது நடிகனானவன் பல்வேறுபட்ட வேடங்களை, வடிவங்களை எடுக்கின்றான். இவ் வேடங்கள், வடிவங்கள் ஆகியன வெறும் தோற்றங்களே. எனினும் பல்வேறுபட்ட பாத்திரங்களுக்கு (காரியம்) நடிகனானவன் (காரணம்) பொறுப்பானவனாகின்றான். நாம், உண்மையான நடிகனும் அவனது வேறுபட்ட பாத்திரங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டன எனக் கூறமுடியாது. வேறுபட்ட வடிவங்கள், பாத்திரங்கள் எனினும் நடிகன் ஒருவனேயாகும். அந் நடிகன் உண்மையானவன் ஆனால் அவனது பல்வேறுபட்ட வடிவங்கள் தோற்றங்கள் மட்டுமே. அது போலவே தங்க ஆபரணங்களானவை தங்கத்தினின்று வேறுபட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல்ல. ஆனால் அத் தங்க ஆபரணங்களா னவை வேறுபட்ட வடிவங்களுக்கு ஏற்ப வேறுபட்ட பெயர்களைப் பெறுகின்றன. அதாவது தாலி, சங்கிலி, தோடு, மோதிரம், வளையல் எனப் பலவாறாக விளங்குகின்றன. எனவே காரணமும், காரியமும் இரு வேறுபட்ட பொருட்களல்ல. அவை ஒன்று மற்றதாக வருகின்றதெனக் கூறமுடியாது. ஒரு பொருளானது வெளிநிலைத் தோற்றப்பாட்டில் அமையும் ஒரு மாற்றத்தால் மாறமாட்டாது. காரியமானது அந்த வடிவத்தில், இந்த வடிவத்தில் என எல்லாச் சாத்தியமான பகுதிகளிலும் தோன்றுவதாலும் காரியமானது உருவாக்கத்திற்கு முன்னர் இருந்ததென்பதாலும் காரணத்துடன் இணையாது எனத் தர்க்கரீதியில் எடுத்தாளப்படுவதாலும் காரணமும் காரியமும் வேறு வேறு என்பது சாத்தியமற்றதாகின்றது.

உண்மையை, உள்ளபடி வேண்டி நிற்பவர்களாயின் படைப்பு அல்லது உற்பத்தி என்பதென்று கூறுவது பொருத்தமற்றதெனக் காணலாம். படைப்பு அல்லது உற்பத்தி என்பது உண்மையானதாயின் மாற்றத்திற்கு உட்படமாட்டாது. அவ்வாறின்றேல் அழியாதது அழிக்கப்படக் கூடியதாகிவிடும்.[15] ஒரு பொருளானது தனது தன்மை, நிலையினின்று அதற்கு நேர்மாறான ஒரு நிலைக்கு மாறுகிறதென்பதும் ஒரு வகையிலும் சாத்தியமற்றதேயாகும். உற்பத்தி, அழிவு என்று கூறப்படுபவை ஒரு தோற்றம் மட்டுமே. உண்மையில் தோற்றம் அதாவது உற்பத்தி, அழிவு என்று ஒன்றுமில்லை.[16] பல்வேறுபட்ட பொருட்கள், உலகு போன்றன காரணகாரியக் கொள்கையை ஏற்கும் வரை மட்டுமே உண்மை போலத் தோன்றுகின்றன.[17]

மாயையின் தோற்றங்களான நாமரூபங்கள் வெறும் தோற்றங்களும் உண்மை அல்லாதனவும் ஆகுமென எடுத்தானலாம். பிரகதாரணியக உபநிடதத்தில் இப்பிரபஞ்மானது வேறுபடுத்தப்படாதது; ஆனால் அவை நாமரூபங்களாக மட்டும் வேறுபடுத்தப்பட்டுள்ளது எனச் சுட்டப்படுகின்றதை காணலாம்.[18] ஆரம்பத்தில் இருப்பின்மையே இருந்தது எனச் சாந்தோக்கிய உபநிடதத்தில் சுட்டப்பெறும் கருத்தானது சூன்யநிலைக் கருத்தினைச் சுட்டாது, உலகின் நாமரூபங்களின் இருப்பின்மையைச் சுட்டப்பட்டிருதல் பொருத்தமுடையதென மகாதேவன் கருதுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.[19]

காரண காரியக் கொள்கையினை ஆனந்தகிரி விளக்குகையில் காரணகாரிய உறவினை ஊகிப்பதற்கு அடிப்படையில் காரியமானது காரணத்தில் தங்கியுள்ளதென்பதல்ல; ஆனால் மன இருப்பில் ஒன்று இல்லாதது மற்றது இருக்கமுடியாது எனும் உணர்வேயாகும் என்றார்.[20] காரணமும் காரியமும் பற்றிய கொள்கையானது எமக்கு காரண காரியத்தில் நம்பிக்கை இருக்கும் வரையிலேயே நிலைத்திருக்கின்றது, எப்போது அந்நம்பிக்கை நீங்குகின்றதோ அவ்வேளை காரண காரியம் என்பதும் இல்லாததொன்றாகின்றது என்கிறார் கௌடபாதர்.[21] பொது அறிவானது காரணகாரிய உறவில் முரண்பாடுகளினைக் காணாத போதும் தர்க்க ஆய்வானது எதிர் நிலைக்கு எடுத்துச் செல்கின்றதென்பதனைக் கௌடபாதரின் விமர்சனங்கள் சுட்டுகின்றன. காரண காரியம் பற்றிய பொது அறிவானது எமது நேரம் பற்றிய எண்ணக்கருத்தில் பெரிதும் தங்கியுள்ளமையினால் காரணமானது எல்லா நடைமுறை நோக்கங்களுக்கும் காரியத்துக்கு முன்னெடுப்பாக இருத்தல் வேண்டுவதாகின்றது. நேரமானது உண்மையற்ற வெறும் கருத்தென ஆராயப்படுமாயின், காரணகாரியம் பற்றிய கருத்தும் பொருளற்றதொன்றாகிவிடும். எமது மனமானது காரணம், காரியத்தினைப் பொருளாகக் கொடுக்கப்பட்ட அமைப்புக்குரியதாக எடுக்கின்ற வழக்கத்தினைக் கொண்டுள்ளது. எப்போது இந்நிலை நீங்குகின்றதோ அப்போது காரண காரியக் கொள்கையும் தன்னில் தடம்புரளும் என்பது சாத்தியமாகின்றது.

சங்கரரின் விவர்த்த வாதமானது, உண்மையில், அத்வதக்காரண காரியக் கொள்கையே என்றால் தவறாகாது. உண்மைப் பொருள் ஒன்றே; அதுவே பிரம,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விளக்கும் அத்வைதம் ஏனையன தோற்றங்கள் என்றும், உண்மைபோலத் தோன்றுகின்றன என்றும் எடுத்தாளுகின்றது. களிமண்ணில் செய்யப்பட்ட பல உருவங்கள் உண்மையல்லாத தோற்றங்களாக விளங்க, களிமண்ணோ உண்மையானதாக அமைவதுபோல உலகத் தோற்றங்கள் அனைத்தும் பிரமத்தை அடிநிலையாகக் கொண்ட தோற்றங்கள் எனவும் பிரமமே உண்மையானது எனவும் விளக்குவர். அதாவது உண்மைக் காரணத்தினின்று எழும் காரியம் உண்மையல்ல; தோற்றமெனக் கூறும் விளக்கம் விவர்த்தவாதமெனக் அழைக்கப்படுகின்றது.[22] சத்காரியவாதத்தில் காரணம் உண்மை, காரணத்தினின்று எழும் காரியமும் உண்மையென்றமைய சங்கரர் சத்காரணவாதி என அழைக்கப்படும் வகையில் காரணம் உண்மை. ஆனால் காரணத்தினின்று எழும் காரியம் உண்மை அல்லாத தோற்றம் மட்டுமே என எடுத்தாளுதல் நோக்கத்தக்கதாகும். சங்கரர் விவர்த்தவாதம் எனும் சொல்லாட்சியினை அருமையாகவே பயன்படுத்தியுள்ளார். சங்கரர் இப் பதத்தினை அதிகதூரம் பயன்படுத்துவதில் அக்கறைப்படவில்லை என கக்கர் கூறுவதும் ஓரளவிற்குப் பொருத்தமானதே.[23] சங்கரர் காரண காரியக் கொள்கையினைச் சுட்ட காரிய காரணயைத்துவவாதம் என்ற சொல்லாட்சியினைப் பயன்படுத்துதல் காணலாம்.[24] சங்கரைப் போல அவரின் மாணவர்களான சுரேஸ்வரர். பத்மபாதர் ஆகியோரும் விவர்த்த என்ற சொல்லாட்சியினைக் காரணகாரிய உறவுநிலைக்குக் குறிப்பிடத்தக்க வகையில் பயன்படுத்தவில்லை. எனினும்பின் வந்த வசபமிஸ்ரா, பிரகாஸ்த்மன் அத்வைதக் காரணகாரியக் கொள்கையை விவர்த்த வாதமெனும் வகையில் சுட்டும் நிலையில் மிகுதியாகக்கொண்ட தன்மை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கரர் உலகு முழுமையான உண்மை என்பதனை நிராகரிப்பதற்கு வேறுபட்ட நிலைகளான பிராதிபாஷிக சத்து, வியாவகாரிகசத்து, பாரமார்த்திகசத்து என்பவற்றை எடுத்தாளுகின்றார். உண்மை என்ற சொல்லானது மாற்றமில்லாதது, பிறிதொன்றில் தங்கியில்லாதது, நிரந்தரமானது, எல்லையற்றது, எக்காலத்திலுமுள்ளது எனப் பலவாறாகப் பொருள் சுட்டப் பயன்படுத்தப்படுகின்றது. இதனைவிடக் கீழ்வரும் பொருள் நிலையிலும் இச் சொல்லாட்சி இடம்பெறுகின்றது.

1. நேர்மையானது அதாவது போலி, மோசம் போன்றவற்றிற்கு எதிரான பொருளில்,

2. இயல்பானதெனும் கருத்தில் அளாவது செயற்கையானதென்பதற்கு எதிரான பொருளில்,

3. நிரந்தரமான அல்லது தொடர்ந்திருத்தல் எனவாக,

4. கற்பனையற்ற, திரிபற்ற எனும் கருத்தில்,

5. இருப்புடையது எனும் கருத்தில் எனப் பல்வேறான

சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப் பெறுகின்றது.[25] அத்வைதிகள் உண்மை எனும் பதத்தினை அனுபவிக்கக் கூடியது, கற்பனையற்ற நிலையானது, எக்காலத்திலும் உள்ளது எனும் பொருள் சுட்டும் வகையில் பயன்படுத்துதல் காணக்கூடியதாகும். சங்கரரைப் பொறுத்தவரையில் முழுமையான உண்மை என்பது நிரந்தரமான அல்லது நிலையான இருப்புடையதேயாகும். மேலும் மெய்யியலானது என்றுமுள்ள உண்மைத்துவத்தின் இயல்பினை அல்லது உலகின் அடிப்படையான சாரத்தினை வெளிக்காட்வதெனச் சங்கரர் கொள்வார்,[26] இவ்வகையில் அடிப்படையிலான உண்மையாக உள்ளது ஒன்று மட்டுமே என்றும் அதுவே பிரம்ம் என்றும் குறிப்பிட்டார். பிராதிபாஷகசத்து, வியாவகாரிகசத்து, பாரமார்த்திகசத்து எனும் நிலைகளினை ஒரு கோணத்தினின்று பார்க்கும்போது உண்மைத்துவத்தின் வேறுபட்ட நிலைகள் என்பது பொருத்தமானதாகும். அவற்றைத் திரிபுநிலை, அனுபவநிலை, உட்பொருளியல்நிலை எனவும் எடுத்தாளலாம்.

பிராதிபாஷிகம் என்பது கனவுநிலை அல்லது திரிபுக்காட்சி நிலையதாகும். இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் ஒருவன் கனவுகாணும்போது அல்லது ஒரு பொருளைப் பிறிதொரு பொருளாகக் காணும்போது அப் பொருளை உள்ளவாறே ஏற்றுக்கொள்கின்றான். கனவினின்று மீண்டவேளையில் மட்டுமே ஒருவன் கனவின் உண்மையற்ற தன்மையினை அறிகின்றான். அதுவரை கனவில் கண்டவை உண்மையென நம்பிய நிலையினையும் அறிகின்றான். கனவில் கண்ட பொருட்கள் பொய்யானவை, ஏனெனில் அவை அனுபவப் பொருட்களுடன் முரண்படுகின்றன. உலகின் திரிபுத்தன்மையும் கனவுலகத்தினைப்போலவே உள்ளதெனக் கௌடபாதர் கொள்வார். கனவு நிலையானது. அந்நிலை அனுபவத்தினை அனுபவித்துக் கொண்டிருக்கும் வரை உண்மையானது. ஆனால் நனவு நிலையில் நாம் கனவு அனுபவத்தின் இயல்பினை உணர்கின்றோம். இங்கு உண்மையில், எமது மனதே உண்மைத்துவத்தின் கருத்தினை உருவாக்குதல் காணலாம். எப்போதும் மனதானது உண்மையல்லாததற்கப்பால் செல்கின்றதோ, அப்போது பொய்யான கருத்தும் விட்டு நீங்கிவிடுதல் சாத்தியம்.

கனவுநிலையில் கனவானது எவ்வாறு உண்மையல்லாததாகவுள்ளதோ அவ்வாறே நனவு அனுபவமும் கனவு நிலையில் இல்லாததாகின்றது.[27] கனவு காணும் வரை கனவு அனுபவமானது உண்மையாகவுள்ளது போலத் திரிபுக்காட்சியில், கயிற்றைப் பாம்பாகக் காணுகின்ற ஒரு சில விநாடிதானாயினும் – அத்தருணத்தில் கயிற்றை உண்மையான பாம்பாகவே காணுகின்றான். கயிற்றைக் கயிறு என அறிகின்றவேளை உண்மைப் பாம்பு என்ற தன்மையும் இல்லாததாகின்றது. கயிற்றின் உண்மைத்துவம் இனங்காணும்வரை அக்காட்சி உண்மையதாகக் கொள்ளப்படுகின்றது. இந்நிலையே பிராதிபாஷிகசத்து அல்லது திரிபுநிலை உண்மை என அழைக்கப்படுகின்றது.

வியவகாரிக நிலை என்பது நனவு நிலையாகும். கனவு உலகத்தினின்று நீங்கியதும் சாதாரண உலகை உள்ளவாறே காண்கிறான். இவ்விதம் காணும் போது இந்த உலகப் பொருட்கள், விடயங்கள் யாவும் உண்மையாகத் தோன்றுகின்றன. இந்நிலையில் ஏற்கனவே கூறிய பிராதிபாஷிகம் பொய்யெனவாகிறது. கௌடபாதர் கனவு நிலையும் நனவு நிலையும் உலகின் உண்மையல்லாத தன்மையினை நிறுவுகின்றதென எடுத்துக்காட்ட முயன்றார். கௌடபாதரின் வாதங்களினை ஏற்ற சங்கரர் அதனை மேலும் விரித்து விளக்கினார். கனவும், அனுபவமும் தம்முள்ளே முரண்படுவதே உண்மையல்லாத நிலைக்கு ஒரு கட்டளைக் கல்லாகுமென்றார். இரு நிலைகளும் ஒன்றை ஒன்று உண்மையல்லாததாக்க முயல்வது இரண்டு அனுபவங்களும் உண்மையல்லாதன எனும் முடிவிற்கு இட்டுச் செல்கின்றது என்றார். மறுக்கப்படமுடியாத உண்மைமட்டுமே உண்மைநிலைக்குரியதாகும். இந்த எண்ணமே பன்மைத் தன்மை பொருந்திய உலக அனுபவம் உண்மை அல்லாததென்பதற்கு இட்டுச் செல்கின்றதென்பார். சங்கரர், மேலும் இவ்விரண்டும் உணர்வின் பொருட்களென்றும், அவை உண்மையல்லாதன என்றும் சுட்டுவார். உண்மையானது சுய முரண்பாடற்றது. அதாவது பிரமமே சுயமுரண்பாடற்ற உண்மையானது என்றும், என்றுமுள்ளதும் அதீதமாக உள்ளபொருள் என்றும் சுட்டுவர். அதுவே உட்பொருளியல் சார்ந்த உண்மையாகும். இந்த உட்பொருளியல் நிலையில், அதாவது பாரமார்த்திக நிலையில் எவ்வாறு பிராதிபாஷிகநிலை, வியவகாரிக நிலையில் உண்மையல்லாததென்று உணர்கின்றவாறு, வியவகாரிக நிலையும் உண்மையல்லாத ஒன்றென உணரலாம். இதனின்று ஜீவன், ஈஸ்வரன், உலகு ஆகியன நனவுநிலையான உண்மைக்குரியனவே என்பது பெறப்படுவதாகின்றது. உட்பொருளியல் நிலையில், நனவு நிலையில் உண்மையாகத் தோற்றிய பொருட்கள் உண்மையல்லாததாக விளங்குகின்றது. பாரமார்த்திக நிலையிலேயே பிரமத்தின் உண்மையான இயல்பினை உணரலாம். பிரமமே உட்பொருளியல் நிலையான உண்மையும் நாம் பெறவேண்டிய இறுதி இலக்கும் ஆகின்றது. ஆனால் பாரமார்த்திக நிலையை அடையும் வரை வியவகாரிக நிலையை உண்மையென ஏற்றுநிற்பவர், இந் நனவுலகானது அனுபவ நிலையில் மட்டுமே உண்மைத்துவம் பொருந்தியதென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் நாம் எப்போது பாரமார்த்திக நிலையை அடைக்கின்றோமோ, அப்போது அனுபவ உலகானதும் இருப்பற்றதாகின்றது என எடுத்தாள்வர்.

உண்மைத்துவத்தில் முழு உலகும் பிரமமே தவிர வேறில்லை. பிரமம் மாறற்பட முடியாததும் என்றும் மாறாததாய் உள்ளதும் ஆகும். உலகானது பிரமத்தின் மேல்வைத்துச் சொல்லப்படுகின்றது. இவ்வத்யாஸத் தன்மைக்குக் காரணம் மாயையாகும். இது கிளிஞ்சல் வெள்ளியாகத் தோற்றுவது அல்லது கயிறு பாம்பாகத் தோற்றுவது போல் ஏற்படும் ஒரு பிழையேயாகும். கயிற்றுக்குப் பதிலாகப் பாம்பையோ அல்லது கிளிஞ்சலுக்குப் பதிலாக வெள்ளியையோ ஒன்றன்மேல் பிறிதொன்றை ஏற்றிக் காண்பதற்குக் காரணம் இவ் வத்யாஸமே. அத்யாஸத்தினை இல்லாத ஒரு பொருளின் தோற்றம் என வரையறை செய்யலாம். உண்மையில் பிழையான அறிதல் அல்லது தவறான காண்டலே அத்யாஸம் எனப்படும். இதன் முதன்மை கருதியே சங்கரர் பிரம்மசூத்திரத்திற்கு எழுதிய உரையில் அத்யாஸம் பற்றிய ஆய்வுடன் ஆரம்பிப்பதனையும் காணலாம். சங்கரர் தர்க்கரீதியான பிழையினை எடுத்தாளுவதற்கு அத்யாஸம் பற்றிய எண்ணக் கருத்தினைப் பயன்படுத்தினார்.

கயிற்றைப் பாம்பாகத் திரிபுறக் காணும் போது கயிற்றின் மேல் உண்மையல்லாத பாம்பினை வைத்துக் காண்கின்றோம். இது அத்யாஸம் ஆகும்' கயிற்றைப் பாம்பாகக் காணுகின்றபோது கயிற்றை உண்மையான பாம்பாக முழுதாக நம்பிவிடுகிறோம். ஆனால் உண்மை நிலையை உணர வருகின்றவேளை பாம்பு பற்றிய எண்ணத்தினை மாற்றுகின்றோம். இருளில் கயிற்றைக் காணும் காட்சியும், அதனைப் பாம்பெனத் தவறாகக் கொள்ளுதலும் திரிபுக் காட்சியாகும். திரிபுக் காட்சியானது மலடி பெற்ற மகன் போலவோ அல்லது முயற் கொம்பு போல இல்லாத பொருளல்ல. இத்தவறான காட்சியில் நாம் சிலவற்றைக் காணுகின்றோம். தோற்றுகின்ற பொருளானது, உண்மையல்லாததோ எனினும், முற்றாக இல்லாத ஒன்றல்ல. திரிபுக்குரிய பாம்பானது சூன்யத்தின்று எழுந்ததன்று. காட்சிக்குக் காணப்பட்டதாக ஏதோ ஒன்று இருந்திருத்தல் வேண்டும். உண்மையில் நாம் ஒரு பொருளைப் பிறிதொன்றாகக் காணுகையில் இரண்டிற்கும் அடிநிலையாக சில ஒற்றுமைத் தன்மை இருத்தல் அவதானிக்கக் கூடியதாகும். இவ்வொற்றுமைத் தன்மையே பிழையான காட்சியை வழி நடத்த உதவுகின்றது.

சங்கரரும் அவரது வழிவந்தோரும் தர்க்கநிலைப்பாட்டை விளக்குவதற்காகவே இவ்வுதாரணங்களினைப் பயன்படுத்தினர். சங்கரரைப் பொறுத்தவரை அத்யாஸக் கோட்பாடானது தனது கொள்கையினை விளக்குவதற்குரிய தர்க்க அமைப்பெனக் கருதப்பட்டது. இந்தக் கயிறு – பாம்பு உதாரணத்தில் நாம் மூன்று நிலைகளினை இனங் காணலாம். முதலாவது நிலையில் இது ஒரு பாம்பு என்பதான காட்சி அனுபவத்தினைப் பெறுகின்றோம். இந்த காட்சியானது உண்மை என உறுதிப்படுத்தவோ தீர்ப்புக்கூறவே இல்லை. இரண்டாவது நிலையில் ''இது ஒரு பாம்பு'' என்ற உண்மையில்லாத அறிவானது ''இது பாம்பு அல்ல எனும் அறிவினால் மறுக்கப்படுகின்றது. கயிற்றினைக் கயிறாக உணர்வதனால் இந்நிலையில் பிழையான கருத்தானது சரி செய்யப்படுகின்றது. உட்பொருளியல் நோக்கில் இறுதிநிலையில் கயிறானது உண்மையானதென உறுதிப்படுத்தப்படுகின்றது. இது ஒரு கயிறு; பாம்பல்ல எனும் உணர்தலானது. முன்னைய அனுபவத்திற்கு முரணானதாக அமைகின்றது. சுயமுரண்பாடானது பிழையின் இயல்பான தன்மையினை எடுத்துக்காட்டுகின்றது. சங்கரரைப் பொறுத்தவரை சுயமுரண்பாடின்மையே உண்மைத்துவத்தின் முக்கிய அம்சமாகும்.

பிழையான காட்சியின் முதலாவது நிலையில் பாம்பு பற்றிய காட்சியைப் பார்ப்பதற்கு ஏதாவது இருந்திருத்தல் வேண்டும். முழுமையாக உண்மையல்லாத புறப் பொருளை நாம் காணவோ பெறவோ முடியாது. ஆனால் நாம் ஒன்றுக்குப் பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாக பிறிதொன்றைப் பார்க்கின்றோம். அதேவேளை குறிப்பிட்ட சில வினாடிக ளுக்குப் பாம்பு எனக் கண்டது உண்மை என்றும், பிற்பட்ட உண்மைநிலை உணர்ந் ததும் உண்மை அல்லாததும் எனக் கூறு வதும் பொருத்தமற்றதாகும். கயிறு பாம் பாகத் தோற்றுகின்ற திரிபுக்காட்சிநிலை யானது இல்லாத ஒன்றாக இருப்பதால் திரிபுக்குரிய காட்சியானது உண்மைத்து வத்தின் ஓர் அம்சமாகக் கருத முடியாதென மல்கானி குறிப்பிடுதல் இங்கு நோக்குதற் குரியது.[29]

எதுவுமில்லாது உருவாதல் என்பது சாத்தியமில்லாதது போல் அடிப்படை ஏதாவதின்றித் திரிபுக்காட்சியும் சாத்திய மில்லை எனச் சங்கரர் சுட்டுவார். ஏதாவது ஓர் அடிப்படையின்றி அத்யாஸம் கூட அனுபவிக்கவோ பெறப்படவோ முடியா ததாகும். ஆனால் அத்யாஸமும் நாம் அடிப்படையினைச் சரிவர உணரத்தவறும் வரை மட்டுமே நிலைத்திருக்கும். இருப் புடையது மாத்திரம் உண்மையல்ல. நாம் ஒன்றைப் பார்க்கிறோம் என்பது அது உண்மை என்பதாகாது. நாம் பார்ப்பது எல்லாம் உண்மையாயிருப்பின் பிற்பட்ட ஒரு பொய்யான அனுபவம் என ஒன்று இருக்க முடியாத நிலைக்கு இட்டுச் செல்லும். ஏமாற்றுகின்ற கனவு கூட அகநிலை வாழ் வின் ஒரு நிகழ்வென்பதே நோக்கத்தக்க தாகும்.

திரிபுக்காட்சிக்குக் காரணமாயிருப்பது அறியாமை என்னும் அவித்தையாகும். உலகு தோன்றுவதற்குத் திரிபுக்காட்சி காரண மாக இருக்கின்றது. மாயையானது ஒரு பொருளின் உண்மை இயல்பினை மறைக் கும் சக்தி கொண்டது. ஆகவே அறியா மையே திரிபுக்காட்சிக்குக் காரணமாகின்ற தென்பர். திரிபுறக்காணும் பொருளுக்கும் உண்மைப் பொருளுக்குமிடையிலான ஒற்று மைத்தன்மை, புலனுறுப்புக்களின் குறை பாடுகள் ( மஞ்சட்காமாலை, கற்றாற் ) வேறுபட்ட சூழ்நிலைகள் ( தொலைதூரம் இருள் ) போன்றனவும் மாறுபடக் காரண மாகின்றன. சில வேளைகளில் கோபம், ஈடுபாடு போன்றனவும் திரிபுக்காட்சிக்கு ஏதுவாகின்றது. அவித்தை காரணமாக எழும் தோற்றப் பொருட்கள் அவித்தையின் நீக்கத்துடன் நீங்கி பிரமம் சொரூபத்தன் மையினை விளக்கி நிற்கும். உலகு தோற் றமெனின் இத் தோற்றப்பாட்டின் தன்மை என்ன என்பது எழுகின்றது. பௌத்த அசு நிலைக்கோட்பாட்டாளர்களை போல் நாம் காண்பவை வெளிப்புறத்தில் எதுவுமின்றி வெறும் கருத்து மாத்திரமா? அல்லது கற்பனை மாத்திரமா? என எழுகின்றது. சங்கரர் இவ்வாறான கருத்துக்களினை மறுத்து நாம் பார்ப்பவை என்னவாக இருப்பினும் அவை தம்மில் உண்மை யானவை என்றும், அவை எமது எண்ணங் கள் மாத்திரமல்ல என்றும் குறிப்பிடுவர். அவை எமது காட்சியில் உருவாக்கப்பட்ட வையும் அல்ல. நாம் பார்க்காத போது அழிவுக்குரியனவும் அல்ல.

பௌத்தத்தில் ஒரு சாரரான விஞ்ஞான வாதிகள் குறிப்பிடுவது போலன்றிப்புறப் பொருட்கள் உண்மையான தென்பதனைச் சங்கரர் ஏற்றுநிற்பர். விஞ்ஞானவாதிகள் கருத்துக்கள் இருக்கின்றன என நம்புவ தற்கு நியாயம் இருப்பின், இக் கருத்துக்கள் பொருட்களைக் குறித்து நிற்கின்றன என நம்புவதற்கும் இடமுண்டெனச் சங்கரர் வாதிப்பார். எனவே கருத்துக்களன்றிப் பொருட்களையே பார்க்கின்றோம். பொருட்கள் எதுவுமின்றி அப்பொருள்பற் றிய அறிவு எழும் எனக் கூறமுடியாதே. அவ்வாறன்றிப் பொருட்கள் பார்க்கப்பட வில்லை என்றோ, இருப்பற்றதென்றோ கூறமுடியாததேயாகும். புறத்தே பொருட்க ளின்றி அவ்வாறு அவை தோன்றுவதற்குக் காரணமும் கூறமுடியாது. பொருட்களைப் பார்ப்பதனால் அவை அங்குள்ளதென் பது தெளிவிற்குரியதே. ஆனால் பொருட் களைப் பார்ப்பதனால் அவை உண்மை யாக அங்குள்ளது என்பதாகக் கொண்டதே தவறு எனச் சங்கரர் எடுத்தாளுகின்றார்.[30] புறவுலகானது பார்க்கப்படுவது போல கொடுக்கப்பட்டதே. ஆனால் அவ்வாறான உண்மைத்துவம் கொண்டதல்ல என்ப தனைச் சங்கரர் வலியுறுத்துகின்றார். திரிபுக்காட்சிக்குரிய கயிறு பாம்பின் உதா ரண மூலம் தனது கொள்கையினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்க்க நிலையில் நிறுவலாமெனச் சங்கரர் நம்பினார். அதேவேளை இத் திரிபுக்காட்சிக்குரிய அம்சமானது உளநிலைக்குரிய அடிப்படையினையும் தன்னகத்தே தவிர்க்க முடியாதபடி கொண்டுள்ளமையும் காணலாம். இதனையே இராதாகிருஷ்ணனும் திரிபுக்காட்சியின் அடிப்படையான மூலமானது தர்க்கநிலை சார்ந்ததும், உளவியல் நிலை சார்ந்ததுமே தவிர பெளதீக அதீத நிலைக்குரியதல்ல எனக் குறிப்பிடுகின்றார். மேலும் இப் பிரபஞ்சத்தின் பன்மைத்துவமும் ஒரு தவறான தீர்மானமே எனச் சுட்டுவார்.[31] எனினும் நாம் உலகின் இருப்பினைச் சங்கரர் எப்போதும் மறுக்கவில்லை என்பதனை மறந்துவிடக் கூடாது. ஆனால் சங்கரர் உலகினை முழுமையான உண்மை என்பதற்கு இணைவான தன்மையில் ஏற்கவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளக் கூடியதே.

திரிபானது; உண்மையானதுமல்ல, உண்மையற்றதுமல்ல, உண்மையற்ற உண்மையற்றதல்லாத ஒரு நிலைக்குரியதுமல்ல. ஆனால் அநிர்வச்சனியமானது எனச் சங்கரர் சுட்டுகிறார். இவ்வகையில் திரிபு பற்றிய சங்கரரின் விளக்கமானது அநிர்வச்சனிய இயாதிவாதமாக விளங்குகின்றது, எமது அறிவில் உருவானது எதுவெனினும் அது அந்த அறிவிற்குரிய பொருள் பற்றியதாகும். கயிறு-பாம்பு பற்றிய திரிபுக்காட்சியில் பாம்பு எமது உணர்வில் தோற்றியதாகும். இல்லாத ஒன்று தோன்றியிருக்க முடியாது. எனவே பாம்பு திரிபுக்குரிய ஒரு பொருளாக இருக்க வேண்டும். பாம்பாகக் கண்டறிந்தது உண்மையில் அங்கு பாம்பாக அன்றி வேறு எப்பொருளாக இருப்பினும் அது திரிபாகும். இந்தப் பாம்பானது உண்மையானது மல்ல, உண்மையற்றதுமல்ல. அல்லது இரண்டுமல்ல. அதாவது உண்மையும் உண்மையற்றதுமல்ல. ஆனால் இது அநிர்வச்சனியமானதாகும், பாம்பு உண்மையானதாக இருந்தால் பின் திரிபென்பது அமைவதற்கு இடமில்லை என்பதனால் இது உண்மையானதுமல்ல. அதே வேளை உண்மையற்றதுமல்ல. ஏனெனில் உண்மையற்றதாயின் பாம்பு பற்றிய அறிதலினை ஏற்படுத்தியிருக்க வழியில்லை. மேலும் உண்மையும் உண்மையில்லாததுமான ஒரு நிலைக்குரியதுமல்ல. இரு முரண்பாடாண பண்பினைக் கொண்ட தன்மை ஒரே பொருளில் அமைவுறுதலும் சாத்தியமில்லை. எனவே பாம்பு பற்றிய திரிபுக் காட்சியானது சொல்லவொண்ணாதாகும்.

பிரமமே உண்மையானது. உண்மையல்லாத உலகானது நாமரூபங்களேயாகும். நியாயித்தலினால் மாத்திரம்உலகு பற்றிய முழுமையான அடிப்படையிலான உண்மையினைத் தரமுடியாதெனச் சங்கரர் கருதினார். பெளதீக உலகின் உண்மைத்துவத்தினை மறுக்காத சங்கரர், அதனை நடைமுறை அனுபவத்திற்குரிய நிலையில் ஏற்பார். கயிறு – பாம்பு உதாரணத்தில் பாம்பு ஒரு திரிபுக்காட்சியே தவிரவேறில்லை. கயிற்றின் இருப்பானது பாம்பின் தோற்றத்தில் தங்கியிருக்கவில்லை. கயிறு – பாம்பு உதாரணத்தினை பிரமம் - உலகிற்கு ஒப்பிடுகையில் நாம் சில சிக்கல்களினை எதிர்நோக்குகின்றோம். ஆனால் ஆழ்ந்தநோக்கில், உலகானது பாம்புபோலத் திரிபுக்காட்சிக்குரியதல்லவென்பது தெளிவு. அதேவேளை உலகானது உள் பொருளியல் நிலையில் உண்மையல்லாததாகின்றது. கயிறு – பாம்பு போல பிரமனின் இருப்பும் உலகத் தோற்றத்தில் தங்கியிராததொன்றாகும். இந்தநிலையில் சங்கரரின் திரிபுக்காட்சி பற்றிய எண்ணக்கருத்தானது வேறுபட்ட விள்க்கத்தினை அளிப்பதாகின்றது. ஒருவர் மாயையினது அர்த்தத்தினைச் சரிவரத் தெளிந்து கொண்டவராயின், அவர் உலகுபற்றிய நிலைப்பாட்டில் எழும் குழப்பத்தினை இலகுவில் தவிர்த்துக்கொள்ளக் கூடியவராவர். சங்கரரது பார்வையில் இருப்பின்மை எனும் கருத்தில் உலகானது வெறும் தோற்றமானது எனும் தன்மை பொருத்தம் அற்றதாகும். அதேவேளை சூனியம் எனும் கருத்தில் உலகானது உண்மைத்துவம் அற்றதெனும் எண்ணக்கருத்தினையும் சங்கரர் நிராகரித்தல் நோக்கத்தக்கதாகும். உலகத்தின் உண்மைத்துவம் மறுக்கப்படுகின்றவேளை அதற்கப்பால் வேறொரு உண்மைத்துவமானது அத்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசியமற்றதாகச் சுட்டும் சூனியவாதிகளின் போக்கினையும் சங்கரர் மறுத்துரைப்பார்.[32] உலகின் உண்மைத்துவத்தினை நடைமுறையனுபவரீதியில் எடுத்தாள்வதுடன் மாயையே இத் திரிபான உலகின் படைப்பிற்கும் காரணம் என விளக்கி நிற்பார். உண்மையில் கயிறு – பாம்பு உதாரணமானது உலகில் சிக்கல் நிறைந்த பிரச்சினையை தெளிவாக்குவதற்காகவே சங்கரரால் பயன்படுத்தப்பட்டது.

நாணயத்திற்கு இருபக்கங்கள் இருப்பது போல ஒரு பொருளுக்குச் சாமான்ய பாகம் (சாதாரண பாகம்) விஷேடபாகம் (விசேட பாகம்) என இரு நிலைகள் உண்டு. சாதாரண பாகம் பொருளின் தோற்ற நிலைக்கு உரியதாகும். விசேட பாகமானது பூரண விளக்கத்துடன் இதுதான் எனத் திட்டவட்டமாக அறிவிக்கவல்ல நிலையதாகும். கயிறு பாம்பாகத் தோற்றும் உதாரணத்தில் கயிற்றின் வெளித்தோற்றத் தன்மையானது, அதாவது நீண்ட சிறுவளைவு கொண்டதென்னும் தன்மையானது சாதாரணபாகமாகும். அது எப்பொருளால் ஆக்கப்பட்டது எனக் காண்பது விசேடபாகமாகும். ஒரு பொருளின் சாதாரண பாகத்தில் அறியாமை ஏற்படுவதில்லை. விசேட பாகத்திலேயே அறியாமை ஏற்படுவதாகும். உண்மையில் விசேட பாகத்தின் காரணமாகவே திரிபுக்காட்சியானது அமைகின்றது. பொதுவில் சாதாரணபாகமானது தவறான காட்சிக்குக் காரணமாக இருப்பதில்லை. மாயையானது விசேடபாகத்துடன் தன்னில் இணைந்து தவறான காட்சியை உருவாக்க வழிவகுக்கின்றது. கயிற்றில் பாம்பு எவ்வாறு தோன்றுகின்றதோ, அவ்வகையில் சூக்குமப் பொருட்களினின்று அண்டபகிரண்டங்கள் ஈறாக எல்லாவற்றினையும் மாயை தோற்றுவிக்கின்றது.[33]

மாயையின் செல்வாக்குக் காரணமாக உண்மையில்லாத பொருட்கள் உண்மை போலத் தோன்றுகின்றன. பார்வையற்ற குருடன் எவ்வாறு பிரகாசிக்கும் சூரியனைக் காணமுடியாததோ அதுபோல அறியாமையுடையவன் எங்கும் வியாபித்த, எங்கும் நிறைந்த, சச்சிதானந்தப் பிரமத்தைக் காணமாட்டான்.[34] மாயைத்திரையானது நீங்கும் வேளையிலேயே உண்மைப் பொருளானது தன்னில் நீக்கமுறும். உலகானது உண்மையானதாக இருக்கப்பட வேண்டுமாயின், அது ஆழ்ந்த உறக்கநிலையிலும் பார்க்கப்பட வேண்டுமெனச் சங்கரர் விவேக சூடாமணியில் எடுத்தாள்வார். ஆனால் அவ்வாறு உலகு பார்க்கப்படுவதின்மையால் உலகு கனவு போல் உண்மையல்லாததாக இருக்க வேண்டுமென்பார்.[35]

கானல் நீரைக் கண்ட ஒருவன் அது பொய் என அறிந்த பிற்பாடும், அது அவன் கண்ணுக்குத் தோன்றுகின்றது. இவ்வகையில் பொய்யான உலகின் தோற்றத்தினை மெய்யென்று எண்ணவைத்த அஞ்ஞானம் நீங்கிய பிற்பாடும் அவனுக்கு உலகு தோற்றிக் கொண்டிருக்கின்றது. மாயையினின்று நீங்கிய பிற்பாடு, மாயாகாரியம் இருந்து கொண்டேயிருக்கும். கானல்நீரின் உண்மை உணர்ந்தவன் எவ்வாறு பிற்படப் பொய்யான நீரென பயங்கமாட்டானோ அவ்வாறே அஞ்ஞானத்தினின்று நீங்கி ஞானமடைந்தவன் தோற்றவுலகினை உண்மையென எண்ணி ஏமாறமாட்டான். மாயாகாரியப் பிரபஞ்சமானது எப்போது உண்டாயிற்று என்பது கூறமுடியாத வகையில் இது அநாதி என்பதே பொருத்தமுடையது. கானல்நீர் உண்மைஎன எவ்வகையிற் கூறமுடியாததோ அவ்வாறே தோற்றம் பொய்யென அறிந்தபிறபாடும் மாயை நித்தியமானதென்பது பொருந்தாது. அஞ்ஞானநிலையில் மாயை நித்தியம் போல விளங்கினும் தன்னை உணர்ந்தபின் பொய்யென்பது தெளிவிற்குரியதாகும்.

''கற்பனை வந்தவாறு காட்டி
ணோங் காண்பவெல்லாஞ் சொற்பனம்
போலு மென்றே துணிந்தவன் ஞானி
யாவான்''.

— கைவல்ய நவநீதம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்.

1. Schilpp P. L. Ed., *Fragments of a confesston, in the philosopy of S. Radhakrishnan*, Judor publishing co. Newyork, 1952. p. 26.

2. .Dubey. S P, *Hermeneuties in Sankaras advaitism*, Tattvaloka, Madras, Dec. 1982. P, 5.

3. *Chandogya Upanisad*, III - 12 - 6.

4. *Brahma Sutra Bhasya*, III - 1 - 3.

5. *Ibid.*, I - IV - 23.

6. *Aparoksauubhuti*, 45.

7. *Brhadaranyaka Upanisad*, IV - 4.
   *Katha Upanisad* 11 - 1 - 11;
   *Brhadaranyaka Upanisad*, 11 - 5 - 19.

8. ''மாயை'' என்ற சொல்லே அது தோன்றி (மா) ஒடுங்குதலுக்குக் (யா) காரண மாக உள்ளதெனும் நிலையினைச் சுட்டி நிற்கின்றது.

9. *Brahma Sutra*, 11 - 1 - 25.

10. *Ibid.*, 11 - 1 - 2;
    *Vivekacudamani*, 108.

11. *Mandukya Karika*, 4 - 22 - (I) II.

12. *Ibid.*, 4 - 22 - III - IV.

13. *Ibid.*, 4 - 38, 40.

14. *Brahma Sutra Bhasya*, II - I - 19; II - I - 14.

15. *Mandukya Karika*, III - 19.

16. *Ibid.*, II - 32.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. *Ibid.*, IV - 55 - 56; IV - 42.

18. *Brhadaranya Upanisad*, I - IV - 7.

19. Mahadevan, T. M. P, *The Pancadas of Bharatitirtha Vidyaranya*. University of Madras, 1975, p. 15.

20. *Brahma Sutra Bhasya*, II - 1 - 15.

21. *Mandukya Karika*, 4 - 55.

22. *Brahma Sutra Bhasya*, 11 - 1 - 19.

23. Hacker, P, *Vivarta*, Wiesbaden, 1955, p. 24.

24. *Brahma Sutra Bhasya*, 2. 1. 7.

25. Brooks, Richard, "The meaning of real in advaita Vedanta", *The Philosophy of East and West*, VXIX No. 4. Oct. 1969, pp. 385 - 392.

26. Radhakrishnan S. *Indian Philosophy*, Vol. II. George allen and Unwin Ltd. 1971. p. 527.

27. *Aparoksanubhuti*, - 54.

28. *Vivekacudamani*, 230.

29. Malkani, G. R, *Ajnana*, Luzac co. London, 1933 p. 14.

30. Das Gupta, *Philosophicals Essays*, Motilal Banaridass India, 1982. p. 339.

31. Radhakrishnan. S. *Indian Philosophy*, Volume II, George allen and Unwin Ltd. London. 1958, p. 583.

32. *Brahma Sutra* 11 - 2 - 31.

33. Swami Nikhilananda, *Vedanta sara*, advaita ashrama, Calcutta, 1974, pp. 34 - 40.

34. *Atmabodha*, 65.

35. *Vivekacudamani*, 234.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இறப்புக்களின் போக்கினைத் தீர்மானிக்கும் காரணிகளும் விளைவுகளும்

— கா. குகபாலன் —

## முன்னுரை :

குடித்தொகை மாற்றத்தினை ஏற்படுத்தும் குடித்தொகை இயக்கப் பண்புகளில் கருவளம், இடப்பெயர்வு ஆகியவற்றுடன் இறப்பும் மிகமுக்கிய இடத்தைப் பெறுகின்றது. இடப்பெயர்வானது சமூக, பொருளாதாரப் பண்பாட்டுக் காரணிகளுடன் தொடர்புடையதாக இருக்க பிறப்பும், இறப்பும் உயிரியலுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. (Srivastava, S.C 1988 p.165) வரலாற்று ரீதியாக குடித்தொகை வளர்ச்சி, பருமன் ஆகியவற்றின் ஏற்ற இறக்கங்கள் இறப்புகளின் உயர்வு தாழ்வுகளைப்பொறுத்து அமைந்திருப்பதை காணமுடிகின்றது. 18 ஆம் நூற்றாண்டிலிருந்து கைத்தொழிற் புரட்சியினால் ஐரோப்பிய நாடுகளில் குடித்தொகை வளர்ச்சியானது பிரதானமாக இறப்புகளின் வீழ்ச்சியினாலேயே ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. (Agarwala. S N, 1965 pp. 18-19) வளர்முக நாடுகளில் குடித்தொகை மாறல் நிலைப்பண்பானது பிறப்புக்களைப் பொறுத்தவரை சிறிதளவு ஏற்ற இறக்கத்துடன் காணப்பட இறப்புக்கள் பல்வேறு சமூக பண்பாட்டு காரணிகளின் விளைவினால் படிப்படியாகக் குறைவடைந்து செல்லும் நிலை அண்மைக்காலங்களில் காணப்படுவதனால் குடித்தொகை வளர்ச்சி அதிகரித்துக்கொண்டு செல்வதைக் காணமுடிகின்றது, இலங்கையில் 1940 களிற்கு முன்னுள்ள காலப்பகுதிகளில் இறப்புக்களுக்கும் பிறப்புக்களுக்கும் இடையே பெருமளவிற்கு வேறுபாடு காணப்பட்டிருக்கவில்லை. 1871-1875, 1901-1905, 1921-1925 1936-1940, ஆகிய ஆண்டுகளில் சராசரி வருடாந்த இறப்பு வீதமானது முறையே 20. 8, 26. 7, 27. 5, 21. 4 ஆகக் காணப்பட்டிருந்தது. இக்காலப் பகுதிகளில் இலங்கையில் சுகாதார, மருத்துவ வசதிக் குறைவு ஒருபுறமிருக்க மலேரியா, கொலரா போன்ற நோய்களின் உக்கிரத்தினால் அதிகரித்த இறப்புக்கள் காணப்பட்டிருந்தன. (Nadarajah. T, 1976. pp. 103 - 158) 2 ஆம் உலக மகாயுத்தத்தின் பின்னர் நாடளாவிய ரீதியில் மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக இறப்புக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. (James. C. Knowles, 1979, pp. 1-4) 1946-1950, 1961-1965, 1976-1980 1986-1990 ஆகிய காலப்பகுதிகளில் முறையே 14. 5, 8. 8, 7. 0, 5. 5 ஆகக் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மேற்குலக நாடுகள் தற்போதைய கட்டுப்படுத்தப்பட்ட இறப்புக்களைப் பெற்றுக்கொள்ள நூற்றைம்பது வருடங்கள் செலவிட்டிருக்க இலங்கை, கொரியா, தைவான் போன்ற நாடுகள் பத்து வருடங்களில் கட்டுப்படுத்தியமை பெரும் சாதனை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (Agarwala S. N. 1965 pp. 18-29)

ஒரு நட்டில் அல்லது பிரதேசத்தில் வாழும் மக்களிடையே இறப்புக்கள் அதிகமாயிருக்குமாயின் அந்நாட்டு அல்லது அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசம் சமூக, பண்பாட்டுரீதியில் விருத்திக் குறைவாகவே காணப்படுகின்றது எனப் பொருள்படும். இலங்கையில் சுகாதார, மருத்துவ வசதிகள், சமூக பண்பாட்டுக் காரணிகளைப் பொறுத்தவரை சிறிய நாடாகக் காணப்படுவதனால் சிறப்பான பங்களிப்பினைச் செலுத்தி வருவதனால் இறப்புக்களை மிகக்குறைந்த அளவிற்கு கட்டுப்படுத்தக் கூடியதாகவிருக்கின்றது. மேலும் குடித்தொகையின் உயிர்ப்பிறப்புக்கள் தமது வாழ்வில் ஏதோ ஒரு காரணியின் விளைவினால் இறப்பினைத் தழுவிக் கொள்கின்றன. இவை இயற்கையின் நியதியாகும். எனினும் சர்வதேசரீதியாக மக்கள் இறப்பு இயற்கையான பண்புகளூடாக நிகழப் பெறினும் அதனைக் கட்டுப்படுத்தி நீண்டகால வாழ்வினைப் பெற்றுக்கொள்வதற்கு தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. எனவே மக்கள் இறப்புக்களைத் தீர்மானிக்கும் காரணிகளை ஆராய்ந்து, அவற்றை உள்ளார்ந்த, வெளிசார்ந்த இறப்புக்கான காரணிகளாக வகைப்படுத்தி, அவற்றினால் ஏற்படுத்தப்படும் இறப்புக்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளல் அவசியமாகின்றது. எனவே இறப்புக்கள் பற்றிய ஆய்வானது தற்போதைய குடிப்புள்ளியியல் நிலைமைகளை அறிந்துகொள்ள உதவுவதுடன் எதிர்காலத்தில் இறப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கான வழி வகைகளை உருவாக்கவும் முடியும். பொதுவாக இறப்புக்களைப் பற்றிய ஆய்வில் இறப்புக்களின் எண்ணிக்கை, பால், வயதுவகை இறப்புக்கள், இறப்புக்களுக்கான காரணிகள், இடஞ்சார் இறப்புக்கள் போன்றவற்றை கண்டறிவதன் வாயிலாக, பொது சுகாதார மருத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் தோற்றம் செயற்பாடு, பெறுபேறுகள் போன்றவற்றை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் இவ்வாறான ஆய்வானது அரசின் கொள்கைகளைத் தயாரித்தல், பொருளாதார, சமூக நலத்திட்டங்களை முன் எடுத்துச் செல்லுதல், காப்புறுதிக் கம்பனிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், இறப்புக்கான காரணிகளை கண்டறிந்து அவற்றினை உரிய காலத்துள் கட்டுபாட்டுக்குள் கொண்டுவருதல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக இத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்படுதல் வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை அவசியமாகின்றது. மேலும் இறப்புக்கள் ( Constittutional Factors, Environmental Factors ) ஆகிய இரு காரணிகளால் இடம்பெறுவதனால் அதனூடாக ஆராய்தல் சிறப்புடையது. மனிதனது பௌதீக உடற்கூற்றியலுடனும் உளவியலுடனும் தொடர்புடைய இறப்புக்கள் ( Constitutional Factor ) நிகழ்கின்றன எனவும் பொருளாதார சமூக மற்றும் தனிப்பட்ட பழக்கவழக்கங்கள் போன்ற காரணிகளுக்குட்பட்டு நிகழ்கின்றது எனவும் கொள்ளலாம். எனவே இவ்வாறான இறப்புக்கள் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றான போதிலும் வளர்ந்து வரும் மருத்துவ, விஞ்ஞான, தொழில்நுட்ப, சுகாதார முன்னேற்றங்கள் வாழ்வினை அதிகரிப்பதில் முக்கிய பங்கினைப் பெற்று வருவதை இறப்புக்கள் பற்றிய சர்வதேச நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. அதே வகையில் வளர்முக நாடுகளில் ஒன்றான இலங்கையிலும் வாழ்க்கை எதிர்பார்ப்பு அதிகரிக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது.

மேலும் வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கை போன்ற வளர்முக நாடுகள் பலவற்றில் இறப்பு, பிறப்பு, விவாகம் போன்றவற்றைப் பதிவு செய்யும்முறை கட்டாயப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பதிவு செய்தல் பல்வேறு சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்பட்டு வருவது ஒரு துரதிஸ்டமாகவுள்ளது. இலங்கையில் 1867 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வாழ்நிலைப் புள்ளி விபரங்களைப் பதிவு செய்யும் முறை சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட போதிலும் 1897 ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்தல் கட்டாயமாக்கப்பட்டு பதிவு செய்யாதவர்கள் தண்டனைக்குரியவர்கள் எனவும் அறிவுறுத்தப்பட்டபோதிலும் பதிவு முறை குறைவாகவேயிருந்துள்ளது இருப்பினும் காலப்போக்கில் இறப்பு, பிறப்பு, விவாகம் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கு சில உந்து சக்திகள் செயற்பட்டதன் விளைவாக பதிவு முறை பெருமளவிற்கு நம்பகத்தன்மை கொண்டதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் 1970 களின் முற்பகுதியில் இருந்து அரசாங்கத்தின் நிர்வாக முறையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மீண்டும் பதிவு செய்வதற்கு உத்தரவாதம் அளிக்காமையினால் பதிவு முறை மீண்டும் குறைவடைந்துள்ளதைக் காணமுடிகின்றது. எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்குறித்த பண்புகளை வெளிக்கொணரும் நோக்கோடும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வுப் பிரதேசம்

ஆய்வுக்குட்பட்ட பிரதேசமானது இலங்கையின் வடபாகத்தில் அமைந்துள்ள நிர்வாகமாவட்டமான யாழ்ப்பாணமாவட்டமாகும். இம்மாவட்டம் 983.6 சரதுகிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதும் 79° 38' 80°-43' கிழக்கு நெடுங்கோட்டிற்கும் 9''. 06'' 09''-47'' வடக்கு அகலக்கோட்டிற்கும் இடையில் அமைந்துள்ளது. இம் மாவட்டத்தின் பௌதீக நிலையானது வருடத்தில் பெரும்பாலான காலப்பகுதிகளில் வரட்சித்தன்மை கொண்ட பிரதேசமாக விருந்த போதிலும் பௌதீகப் பண்புகளை குறிப்பாக தரைத்தோற்றம், இயற்கைத் தாவரம், மண்வளம், காலநிலை, நீர் வளம் போன்ற பல்வேறு அம்சங்களில் வேறுபட்ட பண்புகளைக் கொண்டிருப்பதைக் காணலாம். குறிப்பாக இப்பிரதேசம் சுண்ணக்கற் பாறைகளினால் ஆக்கப்பட்டிருப்பதன் விளைவாக தரைக்கீழ் நீர் வளத்தைக் கொண்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் ஒரு குடாநாடாகக் காணப்படுவதுடன் அதன் தென்மேற்குப் பிரதேசத்தில் பல தீவுகள் அமைந்துள்ளன. காலநிலை ரீதியாக குடாநாட்டுப் பகுதியின் பெரும்பாலான பிரதேசங்கள் வளமுள்ள மண் அமைப்பினைக் கொண்டு காணப்பட தீவுப்பகுதிகளும் அதனைச் சார்ந்த பிரதேசங்களும் அதிகளவு வரட்சித்தன்மை கொண்டமைந்துள்ளதுடன் வளமற்ற மண் அமைப்பினைக் கொண்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வரலாற்றுக் காலத்தி லிருந்து அதிகளவில் மக்கள் வாழ்ந்துவந்துள்ளனர். தென்னிந்தியாவிற்கு அண்மையில் இம் மாவட்டம் அமைந்திருப்பதால் தென் இந்தியப் பண்பாட்டு நிலைகள் தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக காலத்துக்குக் காலம் தென்னிந்தியாவிலிருந்து மக்கள் உள்வரவு ஏற்பட்டிருக்கின்றது. இதனால் இப்பிரதேசத்தில் 98.0 வீதத்தினர் தமிழர்களாகவும் ஏனையோர் இஸ்லாமியர் மற்றும் ஏனைய இனத்தவர்களாக உள்ளனர். 1981 ஆம் ஆண்டுக் குடித்தொகைக் கணிப்பீட்டின்படி மக்கள் தொகை 729874 ஆகவும் சதுர கிலோ மீற்றருக்கான அடர்த்தி 742 ஆகவுமுள்ளது. எனினும் மாவட்டத்தின் மொத்தக்குடித்தொகையில் வலிகாமம் பிரிவில் 65.7 வீதமான மக்கள் வாழ்ந்துவர வடமராட்சி வடகிழக்கு, தீவுப்பகுதிகளில் குறைந்தளவில் வாழ்ந்து வருவதைக் காணலாம்.

இம்மாவட்டத்தின் பெரும்பாலான மக்கள் விவசாயிகளாகவிருந்தபோதிலும் பண்பாட்டு ரீதியாக ''கல்வி''யில் நாட்டம் கொண்டவர்களாகவும் அதனூடாகத் தொழில் வாய்ப்பினை பெற முயல்பவர்களாகவும் இருக்கின்றனர். இப்பிரதேசத்தின் விவசாயப் பொருளாதார முறைமை மாற்றத்துக்குள்ளாகி வருவதுடன் கல்வி மற்றும் வெளிநாடுகளில் தொழில் மற்றும் அகதிகளாக வாழ்ந்து வருவதன் மூலம் பெறப்படும் அன்னியச் செலாவணியை பெறுவதன் மூலமாகவும் பெரும்பாலானோரின் பொருளாதார அமைப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் பாரிய கைத்தொழிலாக்க நடவடிக்கை குறைவாகவுள்ளதுடன் கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபாடு கொண்டவர்களும் குறைவாகக் காணப்படுகின்றனர்.

சமூக ரீதியாக கணிசமான மக்கள் வசதியாக வாழ்ந்து வரினும் விவசாயத் தொழிலாளர் மற்றும் பின்தங்கிய சமூகத்தினைச் சேர்ந்தோரில் பெரும்பாலானோர் பொருளாதார ரீதியாக நலிவுற்றோராகக் காணப்படுகின்றனர். அதாவது வசதியற்ற வாழ்விடம், மாசடைந்த சூழல் பண்புகள், பொருளாதார நலிவுத் தன்மை, பின்தங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய சமூகப் பண்புகள் போன்றன இவர்களிடையே அதிகளவிலான பிறப்புக்களையும் இறப்புக்களையும் ஏற்படுத்தி வருவதைக் காணமுடிகின்றது.

இலங்கையில் சுகாதார மற்றும் மருத்துவ வசதிகள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து விருத்திபெற்று வந்துள்ளன. எனினும் இவை சுதந்திரத்தினைத் தொடர்ந்து விரிவு பெற்றுள்ளன. இதன் விளைவாக இறப்புக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதார மருத்துவ நிலையங்கள் பெருமளவிற்கு நிறுவப்பட்டுள்ளன. பொதுவாக மாவட்டத்தின் மருத்துவ சேவைகளை வழங்கும் பொருட்டு ஒரு மாகாண போதனா வைத்தியசாலையும் ஒரு ஆதார வைத்தியசாலையும் ஐந்து மாவட்ட வைத்தியசாலைகளையும் சுற்றுயிற்கூறு(7) கிராமிய வைத்தியசாலைகள் (4) பிரசவ வைத்தியசாலைகள் (8) மத்தியமருந்தகங்கள் (14) சமூக வைத்தியசாலைகள் (3) தெரிவுசெய்யப்பட்ட தனியார் வைத்தியசாலைகள் (7) பலவும் மாவட்டத்தில் செறிவாக பரந்து காணப்படுகின்றன. இதன் விளைவாக நாட்டின் ஏனைய வரண்டவலய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது இம் மாவட்டம் பல்வேறு வழிகளில் முன்னேறிய மாவட்டமாகும். (Balasundarampillai. P, Rubamoorthy. K. 1986 pp. 10-14)

## தரவு மூலங்கள்:

குடித்தொகைக் கல்வியில் எத்துறையில் ஆய்வினை மேற்கொள்ளவேண்டுமாயினும் தரவுகள் அவசியமானது. ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட தரவுகள் கிடைக்கப்பெறாயின் ஆய்வு பூரணப்படமாட்டாது. இவ்வகையில் ஆய்விற்குட்பட்ட பிரதேசத்தில் நிகழ்ந்த இறப்புக்கள் பற்றிய பூரண விளக்கத்தை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது. இலங்கையில் இறப்புகள் உட்பட வாழ்நிலைப்புள்ளி விபரங்களைப் பொறுத்தவரை 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைக் காலப்பகுதி வரை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளது. 1867 ஆம் ஆண்டிலிருந்து வாழ்நிலைப் பண்புகளை பதிவு செய்யும் முறை கட்டயாப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 1893ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யும் முறையில் மாற்றம் ஏற்பட்டது. இதன்படி இறப்புக்கள் பிறப்புக்கள் ஆகியன கட்டாயமாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் அவை பதிவு செய்யாது விடப்படுமாயின் குறிப்பிட்ட குடும்பத் தலைவர் தண்டனைக்குரியவராவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இருந்தபோதிலும் எல்லா இறப்புக்களும் பதியப்பட்டன எனக் கூறமுடியாது. எனினும் 1940 களில் இருந்து ஆய்வுப்பிரதேசம் உட்பட இலங்கையில் பல்வேறு பகுதிகளில் உந்துதலின் பேரில் பதிவு முறை பெருமளவிற்கு காணப்பட்டிருந்தது. குறிப்பாக 1967 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி பிறப்புக்களில் 97.0 வீதமும் இறப்புக்களில் 93.7 வீதமும் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (Dallas Fernando. 1976. pp. 28-35) அண்மைக்கால ஆய்வின்படி நகரப் பகுதிகளிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் 100.0 வீதமான வாழ் நிலைப்புள்ளி விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது. (Sivarajah. N. 1989, p. 6) 1970 களைத் தொடர்ந்து உணவுப்பங்கீட்டு முறையில் ஏற்பட்ட மாற்றங்கள், கிராம சேவையாளர் தெரிவிலும் நியமனத்திலும் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவற்றினால் இறப்புக்கள் பதிவுசெய்யும் முறை தளர்ச்சியடைந்து சென்றுள்ளது எனத் துணியலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் இறப்புக்களையும் அவற்றிற்கான காரணிகளையும் கண்டறிந்து கொள்வதற்கு முதலாம் தரத் தரவாக 1981 – 1990ம் ஆண்டுகளில் நிகழ்ந்த இறப்புக்களில் பதிவு செய்யப்பட்ட தரவுகள் பெறப்பட்டன. இவை பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அலுவலகங்களில் இருந்தே பெறப்பட்டன. இவ்வலுவலகங்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இரு நகரங்களில் அமைந்துள்ளன. இக்காலப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட மொத்த இறப்புக்கள் 43941 ஆகும். இவை ஒவ்வொன்றாக பரிசீலனை செய்யப்பட்டு அதில் அடங்கியுள்ள இறப்பு நிகழும்போது வயது, பால், இறப்பிற்கான காரணங்கள் இறப்பு நிகழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவாளர் பிரிவுகள் போன்றனவும் பெற்றுக்கொள்ளப்பட்டு ஒழுங்குபடுத்தி ஆராயப்பட்டது. இதுவே இவ்வாய்விற்குரிய முதற் தரவாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே குடித்தொகைக் கணிப்புகள் வாழ்நிலைப் புள்ளி விபரங்கள் ஆகியன பதிவுசெய்யப்படுதல் ஆரம்பிக்கப்பட்டதனால் இக்காலப் பகுதிகளில் இருந்து இறப்புக்களுக்கான நிகழ்வுகள் எவ்வாறமைந்திருந்தன என்பதற்கு குடித்தொகைக் கணிப்பு அறிக்கைகள், வாழ்நிலைப்புள்ளி விபர அறிக்கைகள் போன்றனவும் இவை சம்பந்தமான நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகளும் முக்கியமானதாகவிருந்துள்ளது. இவை இரண்டாம் தரத் தரவுகளாகக்கொள்ளலாம். 1871ஆம் ஆண்டிலிருந்து காலத்துக்குக் காலம் பெறப்பட்ட, குடித்தொகைக் கணிப்புகள் பதிவாளர் நாயகத்தினால் பெறப்பட்ட வாழ்நிலைப்புள்ளிவிபர அறிக்கைகள் இவ்வாய்விற்கு பெரிதும் உதவியாகவிருந்துள்ளன.

## ஆய்வு முறைகள் :

இவ்வாய்வானது கிடைக்கப்பெற்ற தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அதிலிருந்து முடிவுகளைப் பெற்றுக்கொள்வதாகும். ஆய்வுப் பிரதேசத்தின் இறப்புக்கள் மூன்று முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

1. ஏற்கனவே பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் நெறிப்படுத்தப்பட்ட தரவுகளை ஒழுங்குபடுத்தி மாவட்ட ரீதியில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இறப்புக்களையும் அவ்வாறான இறப்புக்களுக்கு உடற்கூற்றியல் மற்றும் சமூக பொருளாதார பண்பாட்டுக் காரணிகள் வகித்துள்ள பங்களிப்பினை அறிந்து கொள்ளல்.
2. ஆய்வுப்பிரதேசத்தில் 1981-1990ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மொத்த இறப்புக்கள் தனித்தனியாக பரிசீலனைசெய்து அவ் இறப்புகக்களுக்கான காரணிகளையும் பிரதேச, பால், வயதுவகை இறப்புக்களையும் வெளிக்கொணர்ந்து மேற்குறித்தவற்றின்பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல்.
3. இறப்புப் பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட தகவல்களை ஒழுங்குபடுத்தி பிரிவுப் பதிவாளர் பிரிவினடிப்படையில் வகைப்படுத்தி ஆராய்தல்.
4. இறப்புப் பதிவுகளில் காணப்படும் குறைபாடுகளை பிரிவுப் பதிவாளர், கிராமசேவகர்கள் மற்றும் இத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களிடமிருந்து பெற்று ஆய்வினை மேற்கொள்ளல்.

எனவே மேற்குறித்த முறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## பெறுபேறு'

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1871-1931ஆம் ஆண்டுகளிடையில் பிறப்புக்களுக்கும் இறப்புக்களுக்கும் இடையில் பெருமளவிலான வேறுபாடு காணப்பட்டிருக்கவில்லை. இடப்பெயர்வும் பெருமளவிற்கு மேற்கொள்ளப் பட்டிருக்காத நிலையில் குடித்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகக் காணப்படப் பின்வரும் காரணங்கள் முக்கியமாகவிருக்கின்றன. இக்காலப் பகுதிகளில் மலேரியா, கொலரா போன்ற நோய்களினாலும் சூறாவளி, வெள்ளப்பெருக்கு, உணவு நிரம்பலில் காணப்பட்ட குறைபாடுகள், சுற்றுப்புறச் சூழல் உவப்பானதாக இருக்காமை போன்ற பல காரணிகளின் விளைவாக இறப்புக்கள் அதிகரித்துக் காணப்பட்டன. ஆனால் 1940 களிலிருந்து மலேரியா ஒழிப்பு நடவடிக்கை மட்டுமல்லாது மானியமுறையிலும், இலவசமாகவும், உணவு, விநியோகம், கல்வி கற்றலில் ஆர்வம், வைத்திய சாலைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் தாய், சேய் நலப்பிரிவுகளின் உருவாக்கம், குழந்தைகளுக்கான பால் உணவு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்பட்டமை, நகரங்களில் மட்டுமல்லாது கிராமங்களிலும் வைத்தியசாலைகள் உரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கப்பட்டமை, சுற்றுப்புறச் சுகாதார நிலையங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப் பட்டமை போன்ற பல காரணிகள் இறப் பினைக் கட்டுப்படுத்த உதவியது எனலாம் இது 1901-'990 ஆண்டு வரையிலான பருமட்டான இறப்பு வீதத்தினை நோக் கும் போது புலனாகின்றது. (அட்ட வணை 1)

அட்டவணை: 1

யாழ்ப்பாண மாவட்டத்தின் இறப்பு வீதம்
(5 ஆண்டுகளுக்கான சராசரி) 1901 - 1990

| ஆண்டு | பருமட்டான இறப்புவீதம் | ஆண்டு | பருமட்டான இறப்பு வீதம் |
|---|---|---|---|
| 1901 – 1905 | 28.4 | 1946 – 1950 | 14.0 |
| 1906 – 1910 | 26 3 | 1951 – 1955 | 11.5 |
| 1911 – 1915 | 30.7 | 1956 – 1960 | 9.5 |
| 1916 – 1920 | 30.3 | 1961 – 1965 | 9.1 |
| 1921 – 1925 | 27.9 | 1966 - 1970 | 7.9 |
| 1926 – 1930 | 26.4 | 1971 – 1975 | 7.4 |
| 1931 – 1935 | 25.1 | 1976 – 1980 | 5.9 |
| 1936 – 1940 | 23.3 | 1981 – 1985 | 6.3 |
| 1941 – 1945 | 23.7 | 1986 – 1990 | 5.5 |

ஆதாரம்: Statistical Abstract of Ceylon - 1901 – 1990

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் மக்கள் பொதுவாகப் பொருளாதார சமூக பண்பாட்டு ரீதியாக வளர்ச்சி பெற்ற பண்பினைக்கொண்டு காணப்படுகின்றனர். இதன் விளைவாக 1990 ம் ஆண்டு கணிப் பீட்டின்படி 1000: 5. 5 இறப்புக்களே நிகழ்ந்துள்ளன. இந் நிகழ்வானது உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிடும் போது கூட குறைவானதாகவே அமைந் திருக்கின்றது. இத்தகைய குறைந்த இறப் புக்கள் நிகழ்ந்துள்ளமை எவருக்கும் சந்தே கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவே இருக் கின்றது. எனவே இவை பற்றி இம்மாவட் டத்திலுள்ள 36 உதவி பதிவாளர் பிரிவுக ளிலுள்ள பதிவாளரில் பன்னிருவருடனும் கிராம சேவையாளர் 18 பேருடனும் பேட்டி கண்டதன் விளைவாக இறப்புப் பதிவில் மக்கள் அதிக நாட்டம் கொண்டவர்களாக விருக்கவில்லை என்பது தெளிவாகியது. காப்புறுதி, ஓய்வூதியம் பெறுபவர்களின் இறப்புக்கள் பதிவு செய்யப்படுவதுடன் வைத்தியசாலைகளில் பதிவு செய்யப்படுதல் பெருமளவிற்கு கடைப்பிடிக்கப்படுவதாலும் பதிவு செய்யப்படுகின்றனவேயொழிய வீடு களிலும் போராட்டங்களிலும் இறப்பவர்க ளில் பெரும்பாலானோரின் இறப்புக்கள் பதிவு செய்யப்படுதல் மிகக் குறைவாக விருந்து வருகின்றது என்பதை அறிய முடிந்தது. அதாவது பிறப்புக்களின் பதிவானது வாழ்வில் பல்வேறு தேவை களைப் பூர்த்தி செய்வதற்காகமேற் கொள்ளப்பட இறப்புக்களின் பின்னர் அப் பதிவானது தேவையற்றதொன்று எனக்கருதுவது தான் முக்கிய காரணமாய் அமைந்துள்ளது.

பொதுவாக ஆய்வுப்பிரதேசத்தில் இறப்புக்கள் படிப்படியாக குறைவடைந்து கொண்டு செல்லினும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்ற அளவிற்கு குறையவில்லை என்பதற்கு பல்வேறு சான்றுகள் காணப் படுகின்றன. யாழ்ப்பாணப் பிரிவில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் 311 இறப்புக் களில் 144 (46. 4 வீதம்) இறப்புக்களே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்திய சாலைகளில் நிகழ்ந்த இறப்புக்களில் 44. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதமான இறப்புக்களே பதிவு செய்யப்பட்டதாகவும் வீடுகளில் நிகழ்ந்த இறப்புக்களில் 44.9 வீதமான இறப்புக்களே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (Sivarajah. N., Sivagnanasundaram. S) கல்வி மற்றும் பல்வேறு நிலைகளில் விருத்தி பெற்ற இப்பிரதேசத்தில் இத்தகைய தாழ்ந்த நிலையில் பதிவு காணப்படுமாயின் கிராமப்புறங்களில் அல்லது பின்தங்கிய பிரதேசங்களில் பதிவு முறை மிகக் குறைவாகவேயிருக்கும் என நம்பலாம்.

## இறப்புகளுக்கான காரணிகள்

ஒரு மனிதனது இறப்பானது ஏதோ ஒரு உடற்கூற்றியலுடன் தொடர்பு படுத தப்படுகின்றது. அதாவது எந்த ஒரு காரணமும் இல்லாது உயிர்களது இறப்பு ஏற்படுவதில்லை. அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் மக்களின் இறப்புக்களுக்கான காரணிகளைக் கண்டறிவதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இறப்புக்கான காரணிகள் சம்பந்தமாகப் பல்வேறு உண்மைத்தன்மைகளை வெளிக்கொணரும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக இறப்புக்களுக்கு மனிதனின் உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களில் ஒன்றோ அல்லது பலவோ காரணங்களாக அமைந்துள்ளன. இவ்வாறு இறப்பினைக் தழுவிக்கொள்ளும் போது வைத்தியரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறிக்கை மூலம் அவ்விறப்பு எக் காரணங் களினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இப் பிரதேசத்தில் நிகழும் இறப்புக்களில் கணிசமான பங்கு வீடுகளிலேயே நிகழ்கின்றது. இவ்வாறாக நிகழும் இறப்புக்களுக்கு வைத்தியரின் அத்தாட்சி இல்லாமல் ஈமைக்கிரியைகள் நடைபெறுகின்றன. இறப்பின் பின் பதிவுசெய்யப்படும்போது இறப்புக்கான சரியான காரணிகள் கொடுக்கப்படாமையால் எவ்வகை நோயினால் இறந்துள்ளனர் என்பதைச் சரியாகக் கண்டறிய முடிவதில்லை, உதாரணமாக காய்ச்சலினால் பலர் இறந்துள்ளனர் எனக் காரணம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் எந்த நோயினால் காய்ச்சல் ஏற்பட்டது என்பதை அறியாதவர்களாக இருக்கின்றமையால் அதற்கான காரணிகளைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இதே போலவே வயோதிபம், இயற்கை மரணம் என பல இறப்புகளுக்குக் காரணம் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி இறப்புகளுக்கு கூட ஒன்று அல்லது பல காரணிகள் இருக்கின்றன,

பொதுவாக யாழ்ப்பான மாவட்டத்தில் இறப்புக்களுக்கான காரணியினை பொதுமைப்படுத்தி வெளிக்கொணர 17 வகையான இறப்புக்கான காரணியினை அடையாளம் காணக்கூடியதாகவுள்ளது. (அட்டவணை 2)

### I. வயோதிபம், இயற்கை மாற்றம்

இலங்கையில் ஆண்களுக்கான ஆயுட்காலம் 70 ஆகவும் பெண்களுக்கான ஆயுட்காலம் 77 ஆகவும் காணப்படுவதாகப் பதிவாளர் நாயகத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனவே மக்களில் பெரும்பாலானோர் வயோதிப காலத்தில் இறத்தல் சாத்தியமே. எனினும் அதற்கான காரணிகளை பதிவுகளில் காணப்படாமை இத்தகைய இறப்புக்கள் பற்றிய ஆய்வுக்கு இடையூறாகவேயுள்ளது. இம் மாவட்டத்தில் நிகழ்ந்த மேற்படி மொத்த இறப்புக்களில் 21.2 வீதமான இறப்புக்களுக்கு காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. இவற்றிற்கான காரணங்கள் பின்வருமாறு அமைகின்றன. வயோதிப இறப்புக்களில் கணிசமான பங்கு வீடுகளிலேயே நிகழ்கின்றது. பதியப்படும் இறப்புக்களுக்கான காரணிகள் சரிவர தெரியப்படுத்துவதில்லை. மேலும் வயோதிபர் குடும்பத்தில் ஒரு பாரமாக இருப்பதனால் நோய்க்குறியினை விட வயோதிப நிலை தான் அவர்கள் முன் தோன்றுகின்றன. பதிவுக்காரராக இருப்பவர் குறைந்த பட்சம் மருத்துவத் துறையுடன் தொடர்புடையவராக இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டபோதிலும், அரசியல் மற்றும் செல்வாக்கு உள்ளவர்களால் அப்பதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. மேலும் ஒய்வூதியம், காப்புறுதி போன்ற தேவைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாவட்டத்தின் காரணிகளடிப்படையில் இறப்புக்கள் 1981 – 1990

| இறப்புக்கான காரணிகள் | மொத்த இறப்பு | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போசாக்கின்மை | 65 | 11 | 09 | 18 | 12 | 02 | 03 | 02 | 05 | 03 | — |
| இருதய பலவீனம் | 5714 | 461 | 595 | 539 | 639 | 680 | 568 | 648 | 582 | 611 | 398 |
| குழந்தை இறப்பு | 4978 | 480 | 604 | 668 | 609 | 554 | 511 | 427 | 372 | 500 | 262 |
| சலரோகம் | 1017 | 77 | 104 | 146 | 109 | 81 | 101 | 87 | 149 | 90 | 65 |
| நுரையீரல் சம்பந்தமான | 940 | 157 | 147 | 120 | 70 | 63 | 114 | 67 | 112 | 44 | 46 |
| மூளை சம்பந்தமான | 1433 | 205 | 238 | 144 | 170 | 147 | 124 | 333 | 115 | 81 | 76 |
| புற்றுநோய் | 1283 | 177 | 164 | 143 | 152 | 137 | 118 | 103 | 73 | 108 | 94 |
| குடல் சம்பந்தமான | 1161 | 96 | 120 | 105 | 178 | 95 | 101 | 94 | 110 | 119 | 143 |
| விபத்து | 1240 | 217 | 163 | 129 | 140 | 104 | 84 | 51 | 87 | 149 | 116 |
| கொலை | 446 | 27 | 28 | 24 | 22 | 64 | 24 | 52 | 59 | 53 | 113 |
| து. கு. ஷெல், குண்டு, வீச்சு | 5875 | 05 | 10 | 22 | 70 | 113 | 228 | 2869 | 1005 | 976 | 577 |
| தற்கொலை | 1605 | 305 | 307 | 288 | 244 | 123 | 83 | 50 | 56 | 103 | 666 |
| வயோதிபர் இயற்கை மரணம் | 9297 | 926 | 804 | 864 | 1084 | 958 | 941 | 888 | 912 | 1033 | 887 |
| பிரசவ இறப்பு | 37 | 06 | 07 | 03 | 04 | 03 | 01 | 01 | 07 | 03 | 02 |
| காய்ச்சல் | 1670 | 156 | 151 | 160 | 185 | 226 | 143 | 151 | 116 | 273 | 109 |
| ஈரல் நோய் | 344 | 39 | 45 | 43 | 54 | 26 | 53 | 27 | 16 | 12 | 99 |
| ஏனையன | 6836 | 665 | 678 | 724 | 910 | 744 | 570 | 522 | 696 | 750 | 569 |
| மொத்தம் | 43941 | 4004 | 4174 | 4140 | 4932 | 4120 | 3758 | 6152 | 4472 | 4908 | 3552 |

ஆதாரம்: இறப்புப் பதிவுகளிலிருந்து கணிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு அன்றி இறப்புக்களைப் பதிவு செய்தலில் அக்கறையின்மையால் பதிவு செய்தல் வேண்டும் என்ற ஒன்றிற்காகவே மேற்கொள்ளப்படுவதால் உண்மையான இறப்புக்கான காரணிகளைத் தெரிவிக்காது விடல், வீட்டில் உள்ளவர்கள் இறப்புக்கான பொதுக் காரணிகளைக் கண்டறிதலில் ஆற்றலின்மை போன்ற பல காரணிகளைக் கூறிக்கொள்ளலாம். குறிப்பாகப் பதிவாளரிடையே காணப்படும் அக்கறையின்மை காரணமாக 30–40 வயதில் இறந்தவர்கள் கூட இயற்கை மரணம் எய்தியவர்களாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ் நகர் மேற்குப் பிரிவில் 90 குழந்தை இறப்புக்கள் கூட இயற்கை மரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை பதிவாளரின் அறியாமையைக் காட்டி நிற்கின்றது.

## 2. எறிகணை, குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட இறப்புக்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் அரசியல் ரீதியாக பல்வேறு வழிகளில் ஏமாற்றம் அடையவே, சாத்வீக பாதையில் நம்பிக்கை குறைவடைந்து ஆயுதம் ஏந்தி உரிமையினை வென்றெடுக்கவேண்டிய நிலை உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக 1970 களிலிருந்து ஆயுதப் போராட்டத்தின் விளைவாக இலங்கையில் 50,000 த்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர். இதன் விளைவாக பலர் குடும்ப அங்கத்தவர்களை இழந்துள்ளனர். இத்தகைய இறப்புக்களுள் 1980 தொடக்கம் 87 யூலை வரையும் சிறிலங்கா இராணுவத்தினால் செய்யப்பட்ட படுகொலை, 1987-1989 ஆண்டுகளில் அமைதி காப்பதற்கென வருகை தந்த இந்திய அமைதிப் படையினால் செய்யப்பட்ட படுகொலைகள், இயக்கங்களிடையே காணப்பட்ட முரண்பாடுகளும், இயக்கங்களுக்குள்ளே ஏற்பட்ட பூசல்களினாலும் நிகழ்ந்த படுகொலைகள் 1990 ம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து மீண்டும் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளினால் நிகழ்ந்த இறப்புக்கள் என்பன அடங்கும். மேற்குறித்த காரணிகளினால் நிகழ்ந்த இறப்புக்கள் மொத்த இறப்புக்களில் 13,4 வீதமாகும். எனினும் மேற்குறித்த காரணிகளினால் நிகழ்ந்த இறப்புக்கள் அதிகமாகவேயிருந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை பதியப்படாமல் விடப்பட்டுள்ளதை பதிவாளர்கள், கிராம சேவகர்களுடனான பேட்டியின் போது தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது. அதாவது மேற்குறித்த காரணிகள் இறந்தவர்களின் குடும்பத்தவர்களால் பதிவு செய்யாமல் இருந்திருக்க வேண்டும். அல்லது பதிவின்போது மேற்குறித்த காரணியாலேயே இறந்தவர் என்பதற்குப்பதிலாக வேறு காரணிகளைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். ஒரு போராளியோ அல்லது ஆதரவாளரோ இறக்கும் பட்சத்தில் அவர்களது குடும்பத்தவர்கள் தமக்குச் சில பின் விளைவுகள் ஏற்படலாம் என்ற அச்சத்தினால் பதியாது விட்டிருக்கலாம். மேலும் இத்தகையோரின் இறப்பின் நிகழ்வின் இடம் வேறு பிரதேசமாகவும் இருந்திருக்கலாம்.

எவ்வாறெனினும் மேற்குறித்த காரணிகளினால் இறந்தவர்களைப் பொறுத்தவரை இந்திய அமைதிப்படை நிலை கொண்டிருந்த காலத்திலேயே அதிகளவிலான இறப்புக்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1987ஆம் ஆண்டு செப்ரம்பர்- டிசம்பர் மாதங்களுக்கிடையில் நிகழ்ந்த இறப்புக்கள் 1981–90 ஆண்டுக்கான இறப்புக்களோடு ஒப்பிடும் போது 48.8 வீதமாக விருந்துள்ளன. இவை தவிர இக்காலப் பகுதியில் நிகழ்ந்த இறப்புக்கள் பெருமளவிற்கு பதியப்படாமல் விடப்பட்டிருக்கும் வாய்ப்புண்டு. 1987–1989 ஆம் ஆண்டுகளுக்கிடையில் யாழ் மாவட்டத்தில் மேற்படி காரணிகளில் நிகழ்ந்த இறப்புக்களை பொறுத்தவரை 1981-91 ம் ஆண்டுக் காலப்பகுதிகளில் நிகழ்ந்த மொத்த இறப்புக்களில் 82.6 வீதமான இறப்புக்கள் பெருமளவிற்கு இந்திய இராணுவத்தின் செயற்பாட்டினாலேயே நிகழ்ந்துள்ளது எனத் துணியலாம். 1990 ஆம் ஆண்டு யூலைக்குப் பின்னர் மீண்டும் சிறிலங்கா அரசின் இராணுவத்தினால் நிகழ்த்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுவீச்சு தாக்குதலினால் தொடர்ந்து இப்பிரதேச மக்கள் கொன்றொழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### 3. தற்கொலை இறப்புக்கள்

தற்கொலையானது மனிதன் தனது வாழ்வில் ஏற்படும் விரக்தி காரணமாக தன்னுயிரை பலவந்தமாக போக்கிக் கொள்வதைக் குறித்து நிற்கும். அதாவது நஞ்சருந்தல், தூக்குக்கயிற்றில் தொங்குதல், கிணறு, குளம், கடல்களில் விழுதல், அலரிக்காய் உண்ணுதல், ஓடும் வாகனத்தின் முன் விழுதல், அதிகளவு தூக்கமாத்திரையை உண்ணல் போன்றவற்றினை மேற்கொள்ளுவதன் மூலம் இறப்பினை தழுவிக் கொள்வதையே தற்கொலை இறப்புக்கள் என வகைப்படுத்தலாம். திசநாயக்கா, டீ. சில்வா போன்றவர்களின் ஆய்வின்படி 1961 ஆம் ஆண்டில் 10,0000 பேருக்கு 9.9 தற்கொலைகள் நிகழ்ந்துள்ளதாகவும் 1970 ஆம் ஆண்டில் 19.2 தற்கொலைகள் நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 36 உதவிப் பதிவாளர் பிரிவுகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளின்படி 1981 – 1990 ஆம் ஆண்டுகளுக்கிடையில் 1605 பேர் தற்கொலை செய்துகொண்டனர். எவ்வாறெனினும் இவ்வெண்ணிக்கை அதிகமாகவேயிருக்கும். தற்கொலை செய்துகொண்டவரினை அவர்களது உறவினர்கள் பதிவு செய்து கொள்ளும் போது வேறு காரணங்களைத் தெரிவிக்கும் பண்பினை ஆய்வாளர் பதிவாளர்களுடன் கலந்துரையாடும் போது தெரிய வந்துள்ளது. மேலும் ஆய்வுப்பிரதேசத்தில் நிகழ்ந்த தற்கொலை இறப்புக்கள் 1981 – 1985ஆம் ஆண்டுகளுக்கிடையில்அதிகரித்துக் காணப்பட்ட போதிலும் 1986 ஆம் ஆண்டிலிருந்து இவ்வகை இறப்புக்கள் குறைவடைந்துள்ளன என்பதைப் பதிவுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. (அட்டவணை 3)

அட்டவணை; 3

தற்கொலை இறப்புக்கள் – யாழ்ப்பாண மாவட்டம்

| ஆண்டு | குடித்தொகை | 100000 பேருக்கு இறப்பு |
|---|---|---|
| 1981 | 738791 | 41.2 |
| 1982 | 746179 | 41 0 |
| 1983 | 751641 | 38.4 |
| 1984 | 761177 | 29.5 |
| 1985 | 768789 | 16.0 |
| 1986 | 776477 | 11.0 |
| 1987 | 784242 | 6.4 |
| 1988 | 792084 | 7.1 |
| 1989 | 800005 | 12.9 |
| 1990 | 808005 | 8.2 |

ஆதாரம்: இறப்புப் பதிவுகளிலிருந்து கணிப்பிடப்பட்டுள்ளது.

1981, 1982, 1983, 1984, 1985 ஆம் ஆண்டுகளில் முறையே 100000 பேருக்கு 41.2, 41.0, 38.4, 29.5, 16.0 ஆக குறைவடைந்து சென்றுள்ளது. இதன் பின்னர் படிப்படியாக இவ்விறப்புக்கள் 1987 இல் 6 4 ஆகவும் 1990 இல் 8.2 ஆகவும் காணப்பட்டுள்ளது. அத்துடன் ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதிகளில் நிகழ்ந்த இறப்புக்களில் 1258 இறப்புக்கள் அதாவது 78.4 வீதமானவை 15–34 வயதிடைவெளியில் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மைக்காலங்களில் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர் அக்கறை குறைவடைந்து செல்லல், குறிப்பாக இராணுவ நடவடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் இருந்து தப்பிக்கொள்ள வேண்டும் என்பதற்காகக் கல்வியினை இடைநடுவில் முறித்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு அனுப்புதல், பிள்ளைகளைக் கண்டிப்பதை மட்டுபடுத்திக் கொண்டிருத்தல், தான் விரும்பியதை ஏற்றுக்கொள்ளும் மனப் பான்மை காணப்படல் போன்ற பல காரணிகளால் இவ்வகை இறப்புக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன எனலாம்.

## 4. கொலை

ஒருவர் தனது சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் மற்றொருவரினாலோ அல்லது, குழுவினாலோ அவரது உயிரைப் பறித்தெடுக்கும் செயலை கொலைக் எனலாம். யாழ்ப்பாண மாவட்டடத்தில் இக் காரணியினால் 1981-1990 ஆம் ஆண்டுகளிடையில் மொத்த இறப்புக்களில் 1.0 வீதத்தினரேயாயினும், இத்தகைய இறப்பினை ஏற்படுத்தும் செயல்கள் நாகரிக உலகில் தவிர்த்துக் கொள்ள வேண்டியவையாகும். மேற்படி ஆய்வின் முடிவின்படி இம்மாவட்டத்தில் புங்குடுதீவு, சாவகச்சேரி, கச்சாய், யாழ்ப்பாண மேற்கு பிரிவில் போதனா வைத்திய சாலை அமைந்துள்ளமையால் இத்தகைய நோயாளிகளை வைத்திய சிகிச்சைக்காக கொண்டுவருவதன் மூலமாகவே அதிக இறப்புக்கள் நிகழ்த்துள்ளன எனலாம்.

## 5. இருதய பலவீனம்

இருதய பலவீனத்தால் ஏற்பட்ட இறப்புக்கள் 5714 அல்லது 13.0 வீதமாகக் காணப்படுகின்றது. மாரடைப்பு, காச நோய், இருதயநோய், இரத்த அமுக்கம் போன்ற நோய்களினால் ஏற்படுத்தப்படும் இறப்புக்கள் இப்பிரிவுக்குள் அடக்கப்படுகின்றன. யாழ்ப்பாண உதவி அரச பிரிவில் மட்டும் 44.7 வீதமான இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன. இப்பிரதேசத்தில் காணப்படும் வைத்திய சேவையினை பயன்படுத்தும் நோக்குடன் நோயாளிகள் கொண்டுவரப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும் போது ஏற்பட்ட இறப்புக்களே இவற்றில் பெரும்பான்மையானதாகும். எனினும் பொதுவாக எல்லா உதவி பதிவாளர் பிரிவுகளிலும் இக் காரணங்களினால் ஏற்பட்ட இறப்புக்கள் அதிகமாகவுள்ளன.

## 6. புற்று நோய்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981 – 1990 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த இறப்புக்களில் 2.9 வீதமான இறப்புக்கள் புற்று நோயினால் ஏற்பட்டவை ஆகும். எனினும் இந்த நோயினால் கணிசமான பங்கினர் மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் இறந்தமையினால் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பொதுவாகப் புற்று நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படப்போவதை அறிந்த உறவினர்கள் தமது வீடுகளுக்கு அழைத்துச் செல்வதன் விளைவாக அவ்விடங்களிலேயே இத்தகைய இறப்புக்கள் ஏற்படக் காரணமாய் அமைந்துள்ளன.

## 7. போசாக்கின்மையால் நிகழ்ந்துள்ள இறப்புக்கள்

மக்கள் வாழ்வோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டது அவர்கள் உட்கொள்ளும் உணவிலுள்ள போசாக்குத் தன்மையாகும். வளர்முக நாடுகளில் ஐந்து வயதிற்குட்பட்டவர்களை பொறுத்தவரை அவர்களிடையே போசாக்கின்மை ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. இதனால் நிறை, உடற்கட்டு, உயரம், போன்றவற்றை பாதித்து சோர்வுத்தன்மையுடன் தொழிலாற்றல் குறைந்து காணப்படுவதுடன் பெருமளவிற்கு இறப்பினை ஏற்படுத்தி விடுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் 1981 - 1990 ஆம் ஆண்டுகளிடையில் அசாதாரண அரசியல் சூழ்நிலையினால் மக்கள் நிறையுணவினை உட்கொள்ளுவதில் இடர்பாடு காணப்படுகின்றது. பொருளாதாரத்தடை, எரிபொருள்தடை, போசாக்குள்ள உணவு வகைகள் உள்வருவது அரசினால் தடை செய்யப்பட்டிருக்கின்றமை போன்றன மக்கள் நிறையுணவினை உட்கொள்ளுவதற்கு தடையாகவிருக்கின்றது. இதனால் இப்பிரதேசத்தில் இறப்புக்கள் அதிகரித்துக் காணப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்துள்ள போதிலும் ( Nachinar - kiniar S. S. ) ஆய்வுக்குட்பட்ட 10 வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் 65 பேர் மட்டுமே போசாக்கின்மையால் இறந்துள்ளனர். இவர்களில் 41 பேர்யாழ்ப்பாணம் மேற்கு பதிவாளர் பிரிவில்இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 8. பிரசவத் தாய் இறப்புக்கள்

குழந்தையைப் பெற்றெடுக்கும் காலத்தில் தாயானவள் இறப்பினை தழுவிக் கொள்வதையே பிரசவத்தாய் இறப்புக்கள் எனலாம். (Peter. R. Cox, 1976, pp 109 – 141) வளர்முக நாடுகளில் பிரசவத் தாய் இறப்பானது இளவயது விவாகம், அடிக்கடி குழந்தையினை பெற்றுக்கொள்ளல், கருவுற்ற காலத்தில் போசாக்கற்ற உணவினை உட்கொள்ளல், கடினமான வேலை, மருத்துவ வசதிக்குறைவு, போன்ற காரணிகளால் நிகழ்கின்றது. ஆய்வுப்பிரதேசம் உட்பட நாட்டில் பிரசவத்தாய் இறப்புக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதன் விளைவாக ஆய்வுப்பிரதேசத்தில் 1981, 1983, 1985, 1987, 1989 ஆம் ஆண்டுகளில் முறையே 1000 பிரசவத் தாய்மாருக்கு 0.6, 0.6, 0.4, 0.5, 0.7, என்ற விகிதத்திலேயே மேற்படி இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன. இதற்கு முக்கிய காரணம் யாதெனில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட பிறப்புக்கள் வைத்திய சாலைகளில் நிகழ்வதாலேயே இது சாத்தியப்பட்டுள்ளது எனலாம்.

### 9. சலரோகமும் இறப்பும்

யாழ் மாவட்டத்தில் சலரோகத்தினால் 1981 - 1990ஆம் ஆண்டுகளிடையில் இறந்தவர்கள் மொத்த இறப்பில் 2.3 சதவீதமாக உள்ளனர். மேற்படி இறப்புக்களில் 36.6 வீதமானவை யாழ் உதவி அசர பிரிவிலேயே நிகழ்ந்துள்ளன.

### 10. நுரையீரலுடன் தொடர்புடைய இறப்புக்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981 - 1990 ஆம் ஆண்டுகளிளிடையில் நுரையீரலுடன் சம்பந்தப்பட்ட நோய்களினால் இறப்பினைத் தழுவிக் கொண்டவர்கள் மொத்த இறப்பில் 2. 1 வீதமாகும். மேற்குறித்த நோயினால் இறந்தவர்களின் 74.4 சதவீதமானவர்கள் யாழ்நகர் கிழக்கு, யாழ்நகர் மேற்கு பிரிவுகளில் அடங்குவர். நுரையீரலில் நோய்க்குறி ஏற்படுவதனை முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியுமாதலால் நோய் தீர்க்கும் பொருட்டு நகர்புற வைத்தியசாலைகளில் அநுமதிக்கப்பட்டு பின்னர் இறந்துவிடுகின்றனர். இதனாலேயே இப்பிரிவில் அதிகரித்த இறப்புக்கள் காணப்படுவது போல் தோற்றமளித்துள்ளது.

### 11. ஈரலுடன் தொடர்புடைய நோய்களினால் நிகழ்ந்த இறப்புக்கள்

ஈரலில் ஏற்படும் நோய்க்குறியினால் நிகழ்ந்த இறப்புக்கள் மொத்த இறப்புக்களில் 0. 8 சத வீதமாகும். ஈரல் நோய்களானவை இறப்பதற்கு முன்கூட்டியே அறியக்கூடியதாகையால் நகர்புற வைத்திய சாலைகளிலேயே அதிகளவுக்கு ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் யாழ்நகர் கிழக்கு, யாழ்நகர் மேற்கு,ப்பதிவாளர் பிரிவுகளில் மொத்த ஈரலுடன் தொடர்புடைய இறப்புக்களில் 56. 7 சதவீதமானவை நிகழ்ந்துள்ளன. மருத்துவர்களின் கருத்துப்படி அதிகரித்த மதுபான நுகர்வினாலேயே இவ்வகை இறப்புக்கள் பல நிகழ்ந்துள்ளன என அறியமுடிகின்றது.

### 12. விபத்துக்களால் நிகழ்ந்த இறப்புக்கள்

மனிதன் எதிர்பாராத விதமாக இறப்பினை சந்திப்பதற்கு முக்கிய காரணம் விபத்தாகும். வாகனங்களால் மோதப்படுதல், இயந்திரங்களால் நசிவுறுதல், தவறுதலாகக் குளம், கடல், கிணறுகளில் விழுதல் மதுபான போதையில் வலிமையான பொருட்களுடன் மோதுதல், மரங்களிலிருந்து தவறி விழுதல் போன்ற காரணிகளால் யாழ்ப்பாண மாவட்டத்தில் இறப்பினை தழுவிக் கொண்டவர்களும் உள்ளனர். ஆய்வுக்காலத்தில் மொத்த இறப்புக்களில் 2.8 சத வீதமானவை விபத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் ஏற்பட்டவை ஆகும். இவ்வகைப் பிரிவு இறப்பில் யாழ்ப்பாணம் மேற்குப் பிரிவில் மட்டும் 54.5 சத வீதமானவை நிகழ்ந்துள்ளன. விபத்தினால் உயிரா பத்தினை எதிர்நோக்கியவர்களை போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவந்து சிகிச்சை பலனளிக்காத போது இறப்புக்கள் ஏற்படு வதாலேயே இப்பிரிவில் கூடுதலான பங்காக அவை இருந்துள்ளன.

## 13. மூளையுடன் தொடர்புடைய இறப்புக்கள்

யாழ் மாவட்டத்தில் 1981 – 1990 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்துள்ள மொத்த இறப் பில் 3.3 சத வீதமானவை மூளையுடன் தொடர்புடைய இறப்பாக உள்ளது. ஏனைய நோய்களின் பிரதேச ரீதியிலான இறப்புகளுக்கு மாறாக மூளையுடன் தொடர்புடைய இறப்புக்கள் வடமராட்சிப் பிரதேசத்திலே அதிக அளவில் நிகழ்ந்துள் ளன. இங்கு மொத்த இறப்பில் 32.9 வீத மான இறப்புக்களும் இதற்கு அடுத்ததாக 28.3 சத வீதமானவை யாழ்நகர் மேற்கு பிரிவிலும் 9.7 சத வீதமானவை தீவுப் பகுதிகளிலும் நிகழ்ந்துள்ளன.

## 14. குடலுடன் தொடர்புடைய இறப்புக்கள்

மேற் குறிப்பிட்ட நோய்களினால் ஏற் பட்டவையாக மொத்த இறப்பில் 2.6 வீதமான இறப்புகள் பதியப்பட்டுள்ளன. இவற்றில் யாழ்நகர் கிழக்கு, யாழ்நகர் மேற் குப் பதிவாளர் பிரிவுகளில் 46.3 சத வீத மான இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

## 15. காய்ச்சலுடன் தொடர்புடைய இறப்புக்கள்

காய்ச்சலானது பல்வேறு நோய்க் கார ணிகளுடன் தொடர்புபட்டிருந்த போதி லும் பதிவாளரினால் பதியப்பட்ட தவறான பதமாக அது இறப்புக்கான ஒரு கார ணியாகக் கொள்ளப்படுகின்றது. மாவட் டத்தில் மொத்த இறப்பில் 3.8 வீதமான வர்கள் காய்ச்சலினால் இறந்துள்ளனர். பொதுவாக எல்லாப் பதிவாளர் பிரிவுகளி லும் இக் காரணியால் பெருமளவில் இறந் துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாயி னும் யாழ்ப்பாண உதவிஅரசஅதிபர் பிரிவில் 33.7 சத வீதமாகவும், சங்கானை பதிவாளர் பிரிவில் 13.2 சத வீதமாகவும் புங்குடுதீவு பதிவாளர் பிரிவில் 11.0 சத வீதமாகவும் நிகழ்ந்திருக்கின்றது.

## 16. குழந்தை இறப்புக்கள்

குழந்தை இறப்புக்கள் பொதுவாக உயிரியல் மற்றும் சமூக பொருளாதார சூழல் காரணிகளால் நிகழ்வதாகும். பொதுவாக ஒரு நாட்டில் வாழும் மக்க ளிடையே குழந்தை இறப்புக்கள் அதிக மாகக் காணப்படின் அந்நாடு பொருளாதார சமூக பண்பாட்டு ரீதியில் வளர்ச்சி குறை வாகவிருக்கின்றது எனக் கொள்ளலாம். குழந்தை இறப்புக்கள் குறைவாகக் காணப் படுமாயின் பருமட்டான இறப்புக்களின் மட்டமும் குறைவாகவே காணப்படும் என லாம். பொதுவாக குழந்தை இறப்புக்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்பவர்கள் குழந்தை பிறந்த 28 நாட்களுள் நிகழும் இறப்புக்கள், 28 – 365 நாட்களுக்கிடையில் ஏற்படும்இறப்புக்கள், 1–4 வருடங்களில் நிக ழும் இறப்புக்கள் என மூவகைப்படுத்துவர் முதலாவது வகை இறப்பு பிறப்பு சார்ந்த இறப்பு எனவும் (Neo Natal Mortality) இரண்டாவது வகை பிறப்பின் பின்னர் நிகழும் இறப்புக்கள் எனவும் (Post Neo Natal Mortality) கொள்ளப்படும்.

பொதுவாக குழந்தை இறப்புக்கான காரணிகளை இரு பிரிவுகளாக வகைப் படுத்தலாம். 1. உட்காரணிகள் 2. வெளிக் காரணிகள். உட்காரணிகளின் விளைவாக ஏற்படும் இறப்புக்கள் கருப்பையில் கரு வளர்ச்சியடைகின்ற தன்மையுடன் தொடர் புடையதாகவிருக்கின்றன. குழந்தையைப் பெற்றெடுக்கும் காலத்தில் தாயின் வயது, பிறப்பு ஒழுங்கு, பிறப்புக்களிடையே காணப் படும் இடைவெளி, கருமுதிராத் தன்மை, பிறப்பின் போது குழந்தையின் நிறை, பல பிறப்புக்கள் (Multiple Birth) போன்ற காரணிகளால் ஏற்படுவதாகும். வெளிக் காரணியை பொறுத்தவரை சமூக கலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார பொருளாதார சூழலியல் காரணிகள் ஆகியவற்றால் ஏற்படுத்தப்படுகின்றன.

யாழ் மாவட்டத்தில் 1981-1990 ஆம் ஆண்டுகளிடையில் 4978 குழந்தை இறப்புக்கள் அதாவது மொத்த இறப்புக்களில் 11.3 சதவீதமானதாக காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981 – 1990 ம் ஆண்டுகளில் நிகழ்ந்த குழந்தை இறப்புக்களைப் பொறுத்தவரை யாழ்நகர் மேற்கு பதிவாளர் பிரிவில் மாவட்டத்தின் மொத்த குழந்தை இறப்பில் 65.1 சதவீதமான குழந்தைகள் இறந்துள்ளனர். யாழ் நகரத்தில் போதனா வைத்தியசாலை மட்டுமல்லாது பல அரச சார்பற்ற பல்வேறு தரத்திலான வைத்தியசாலைகள் அமைந்துள்ளன. குடாநாட்டிலிருந்து மட்டுமல்லாது குடாநாட்டுக்கு அப்பாலுள்ள தமிழர் பிரதேசங்களிலிருந்து பிரசவ நோக்கத்திற்காக வரும் கர்ப்பிணிகள் பிரசவம் நிகழ்கின்ற போது குழந்தைகளை இழக்கும் நிலையை காண முடிகின்றது. இதே போலவே மாவட்டத்தில் தரம் வாய்ந்த வைத்திய சாலைகள் இயங்கிவரும் இணுவில், மூளாய், கட்டைவேலி, சாவகச்சேரி, தெல்லிப்பளை போன்ற பிரிவுகளிலும் குழந்தை இறப்புக்கள் அதிகமாக இருப்பதற்கு வைத்தியசாலைகளின் செறிவே காரணம் எனலாம், குறிப்பாக கட்டைவேலிப் பதிவாளர் பிரிவில் மொத்தக் குழந்தை இறப்புக்களில் 9.3 சதவீதமான இறப்புக்களும், யாழ் நகர் கிழக்கு பதிவாளர் பிரிவில் 4.2 சதவீதமான இறப்புக்களும் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 42.2 சதவீதமான குழந்தைகள் பிறந்த 4 கிழமைக்குள் இறக்கின்றனர். 22.2 சதவீதமானோர் 1 – 12 மாதத்திற்கிடையிலும் 35.6 சதவீதமான குழந்தைகள் 1 – 4 வருடங்களிற்கிடையிலும் இறப்பினைத் தழுவிக்கொள்கின்றனர். இவ்வாறாக நிகழும் இறப்புக்களுக்கு ஒன்றோ அல்லது பலவோ காரணிகளாகவிருக்கலாம். இம் மாவட்டத்தில் 40.2 சதவீதமான குழந்தைகளின் இறப்புக்கள் தொற்றுநோய்களாலும், ஒட்டுண்ணி நோய்களாலும் நிகழ்ந்துள்ளன. கொலரா, கஸ்ரரோ என்ரரயிற்றிஸ், வாந்திபேதி, இலக்ரோலைட்இம்பலன்ஸ், வயிற்றோட்டம், ரொக்சீமா, செப்ரிசீமியா, யூரிகுளோசிஸ், போலியோ போன்ற நோய்களே அவையாகும். (அட்டவணை 4).

அட்டவணை: 4

ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் குழந்தை இறப்புக்கள் 1981 — 1990

| உதவி அரச அதிபர் பிரிவு | கிழமைக்குள் | ஒரு வருடத்துள் | 1-4 | மொத்தம் |
|---|---|---|---|---|
| நெடுந்திவு | 4 | 22 | 8 | 14 |
| தீவுப்பகுதிதெற்கு | 25 | 31 | 30 | 86 |
| தீவுப்பகுதிவடக்கு | 56 | 39 | 46 | 141 |
| யாழ்ப்பாணம் | 1427 | 774 | 1254 | 3455 |
| நல்லூர் | 3 | 2 | 10 | 15 |
| வலி தென்மேற்கு | — | 10 | 25 | 35 |
| வலிமேற்கு | 19 | 23 | 39 | 81 |
| வலி. தெற்கு | 71 | 20 | 28 | 119 |
| வலி. வடக்கு | 99 | 34 | 61 | 194 |
| வலி. கிழக்கு | 9 | 16 | 39 | 64 |
| தென்மராட்சி | 89 | 41 | 51 | 181 |
| வடமராட்சி தெ. மே | 1 | 07 | 13 | 21 |
| வடமராட்சி வ. கி | 307 | 97 | 167 | 571 |
| மொத்தம | 2110 | 1096 | 1772 | 4978 |
| | (42.2) | (22.2) | (35.6) | 100.0 |

ஆதாரம்: இறப்புப் பதிவுகளிலிருந்து கணிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிகழ்ந்த இறப்புக்களில் பிரசவ காலத்தில் ஏற்படும் நோய்களாலும், கரு முதிராமையாலும் நிகழ்ந்த இறப்புக்கள் மொத்த குழந்தை இறப்பில் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளன. மீக்கோணியம், கருமுதிரா நிலை, நியூனேற்றம், அனென்கெபலி ஸ்பைனா, கைற்றோகபலஸ், அப்நோ மலிஸ்ட் போன்றவற்றினால் ஏற்படுத்தப் படும் இறப்புக்களே அவையாகும். மேற்படி இறப்புக்களுக்கு உட்காரணிகள், வெளிக் காரணிகள் இரண்டும் பங்கேற்கின்றன. கருச்செழிப்பின் பிற்பட்ட காலப்பகுதிகளில் பிரசவிக்கும் போதும், குழந்தை கருவில் இருக்கும்போதும் போசாக்குள்ள உணவினை உட்கொள்ளாமை, கடினவேலை, வைத்திய வசதிகள் பற்றாக்குறை, கருவுற்றிருக்கும் காலத்தில் கரு வளர்ச்சியிலும், அதனைப் பராமரிப்பதிலும் அக்கறையின்மை, உடல், உளநிலை, பயஉணர்வு போன்ற பல்வேறு காரணிகள் மேற்படி இறப்புக்கள் இடம் பெறுவதற்கான காரணிகளாக அமைகின் றன. மொத்தக் குழந்தை இறப்பில் 34.8 வீதமான பங்குகள் இக் காரணிகளினா லேயே நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆய்வுப்பிரதேசத்தில் குழந்தை இறப்புக் கான காரணிகளில் மூன்றாவதாக இருதயத் துடனும் சுவாசத்துடனும் தொடர்புடைய நோய்கள் இறப்புக்களுக்கான காரணிகளாக உள்ளன. இவ்விறப்புக்கள் மேற்படி இறப் புக்களில் 15.5 வீதமாக இருப்பது குறிப் பிடத்தக்கது. காடியோ பெயிலியர், நியூ மோனியா, இருதயநோய் மாரடைப்பு, காட்டிசீஸ், மயோகாடியோ இன்பெக்சன், பால்மனறி எம்போலிசம் துறம்போசிஸ், அஸ்பிரேசன், சளிஅடைப்பு, புறொங் வைற்றிஸ், தொய்வு லங்இன்பெக்சன், முட்டு, ரோக்கியொ லைற்றிஸ், வியூகினியா போன்ற நோய்களினால், நிகழ்ந்த இறப் புக்களைப் பொறுத்தவரை வைத்தியசாலை களிலேயே பெருமளவிற்கு இடம்பெற் றுள்ளன.

பொதுவாகக் காய்ச்சல் தொற்று நோய்களுள்ளும், ஒட்டுண்ணி நோய்க ளுள்ளும் அடக்கப்படக்கூடியதா யினும், மருத்துவத்துடன் தொடர்பற்ற பதிவாளர்கள் இறப்புக்கான காரணி களுள் காய்ச்சல் என்ற காரணியை முதன் மைப்படுத்தி தனியாக வகைப்படுத்தி இருப் பதால் தனியான பிரிவு ஒன்றின் கீழ் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் மொத்த குழந்தை இறப்பில் 5.9 வீதமான இறப்புக்கள் காய்ச்சலினால் இறந்துள்ளன எனத் தெரிய வருகின்றது. மேலும் அண் மைக்காலத்தில் தமிழர் பிரதேசத்தில் குறிப் பாக யாழ்ப்பாண மாவட்டந்தில் இடம் பெற்று வரும் இராணுவ நடவடிக்கை குழந் தைகளையும் விட்டுவைக்கவில்லை. இம் மாவட்டத்தில் 61 குழந்தைகள் எறிகணை, குண்டுவீச்சு, துப்பாக்கி ச்சூடு ஆகியவற்றால் உயிரிழந்துள்ளனர். மொத்தக் குழந்தை இறப்பில் 1.6 வீதமான இறப்புக்கள் இக் காரணியால் இறந்தவர்களாவர். காய்ச்சல் இறப்புக்கான ஒரு காரணியாக கொள்ளப் பட்டது போல வலிப்பினாலும் 1.2 வீத மான குழந்தைகள் மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

ஆய்வுப் பிரதேசத்தில் கடந்த ஒரு தசாப்தமாக மக்களிடையே போசாக்குள்ள உணவு உட்கொள்வது படிப்படியாகக் குறை வடைந்து வருகின்றது. இதனால் குழந்தை கள் மட்டுமல்லாது ஏனையோரினதும் இறப் புக்கான காரணியாகவிருந்த போதிலும் போசாக்கின்மையுடன் தொடர்புடைய நோய்கள் குறித்து வைக்கப்பட்டுள்ளன வேயொழிய போசாக்கின்மையால் இறந் தவர் எனத் தெரிவிக்கப்படாதது குறை பாடாகவுள்ளது. இவை தவிர விபத்து, கிரந்தி, கொலை போன்ற காரணிகளினா லும் குழந்தை இறப்புக்கள் நிகழ்ந்துள்ளன எனப் பதிவேடுகள் தெரிவித்த போதிலும் மிகக் குறைவாகவே நிகழ்ந்துள்ளது. (அட்டவணை 5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5

## யாழ்ப்பாண மாவட்டத்தில் குழந்தை இறப்புக்கள் 1981 — 1990

( இறப்பிற்கான முதன்மைக் காரணிகள் அடிப்படையில் )

| நோய்கள் | மொத்தம் | வீதம் |
|---|---|---|
| தொற்று நோய்களும் ஒட்டுண்ணி நோய்களும் | 1575 | 40.2 |
| பிரசவகாலத்தில் ஏற்படும் நோய் | 1365 | 34.8 |
| இருதய நோய்கள் | 604 | 15.5 |
| காய்ச்சல் ( சன்னி ) | 230 | 5.9 |
| துப்பாக்கிச் சூடு, குண்டுவீச்சு, ஷெல் | 661 | 1.6 |
| வலிப்பு | 47 | 1.2 |
| கிரந்தி | 18 | 0.5 |
| போசாக்கின்மை | 7 | 0.2 |
| விபத்து | 6 | 0.1 |
| கொலை | 2 | — |
| மொத்தம் | 3915 | 100.0 |

ஆதாரம்; இறப்புப் பதிவுகளிலிருந்து கணிக்கப்பட்டது.

### வயது வகை இறப்புக்கள்

பொதுவாக இறப்பானது பல்வேறுபட்ட பொருளாதார சமூக சூழலியல் தாக்கங்களினாலும் பிரதேசங்களின் பௌதீக, பண்பாட்டு இயல்புகளினாலும், உடற்கூற்றியல் வேறுபாட்டினாலும் ஏற்படுவதைக் காணலாம். (Garnire J. P. 1966 PP 48-56) இறப்பு எல்லா உயிர்களிடத்தும் பொதுவான ஓர் இயற்கை செயலாக இருந்த போதிலும், அவ்விறப்பு நிகழ்கின்ற காலத்தில் அவனுடைய வயது நிலைக்கேற்ப, சமூக பொருளாதார பண்பாட்டுத் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்து விடுகின்றது. குழந்தைப் பருவத்திலும், வயது முதிர்ந்த நிலையிலும் இறப்புக்கான நிகழ்திறன் அதிகமாகவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆய்வுக் காலப் பகுதிகளில் நிகழ்ந்த இறப்புக்களை பகுப்பாய்வு செய்து தேசிய ரீதியோடு ஒப்பிடும் போது வேறுட்ட பண்பினைக் காட்டி நிற்கின்றது. (அட்டவணை 6)

அட்டவணை: 6

வயது வகை இறப்புக்கள் 1981 - 1990

| வயதுப்பிரிவு | இலங்கை | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 0 - 4 | 20. 5 | 11. 3 |
| 5 - 14 | 3, 4 | 3. 4 |
| 15 - 34 | 10. 8 | 14. 8 |
| 35 - 54 | 13. 0 | 14. 6 |
| 55 - 64 | 11. 1 | 14, 1 |
| 65 க்கு மேல் | 41. 2 | 39. 8 |
| மொத்த இறப்பு | 100. 0 | 100. 0 |

ஆதாரம்: பதிவாளர் நாயகத்தின் அறிக்கையிலிருந்து கணிக்கப்பட்டுள்ளது.

0-4 வயதிடைவெளியுள்ள இறப்பினைப் பொறுத்தவரை தேசிய ரீதியோடு ஒப்பிடும் போது சார்பான தன்மை கொண்டதாக உள்ளதை புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது இலங்கையில் மொத்த இறப்பில் குழந்தை இறப்புக்கள் 20.5 வீதமாக இருக்க, ஆய்வுப்பிரதேசத்தில் 11.3 வீதமாகவே உள்ளது. 5 - 14 வயதிடையில் நிகழ்ந்த இறப்புக்கள் தேசிய பண்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் ஒற்றுமை கொண்டுள்ளது. ஆனால் 15 – 64 வயதிடைவெளியில் ஏற்பட்ட இறப்புக்கான வீதம் தேசிய நோக்கோடு ஒப்பிடும் போது அதிகமாக இருப்பதற்கு பல்வேறு காரணிகள் துணைபுரிகின்றன. அதாவது அண்மைக்காலங்களில் நிகழ்ந்து வரும் அசாதாரண சூழ்நிலைகளினால் அநியாய இறப்புக்கள் இவ்வயதிடைவெளியில் அதிகம் நிகழ்ந்துள்ளதாலேயே உயர்ச்சிப் பண்பு கொண்டதாகக் காணப்படுகின்றது. மேலும் இவ்வயதுத் தொகுதியினரின் இறப்புக்களில் பெண்களை விட ஆண்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். இதன் விளைவாக சமூக ரீதியாக விதவைகள் அதிகரிப்பு, கரு, வளஆக்கம் குறைவடைதல், குடும்பங்களுக்கிடையே, பொருளாதாரம் நலிவடைதல், சமூக பிரச்சனைகள் உருவாதல், எதிர்கால சந்ததியினருக்கான வழிகாட்டிகள் இல்லாது போதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளதுடன், இதன் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புண்டு.

வயது வகை இறப்புக்களில் 15 – 34 வயதிடைவெளியில் நிகழ்ந்த இறப்புக்கள் தேசிய ரீதியாக 10.8 வீதமாகக் காணப்பட யாழ்ப்பாண மாவட்டத்தில் 14.8 வீதமாகவிருப்பது அசாதாரண நிலையையே காட்டி நிற்கின்றது. குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இவ்வயதுத் தொகுதியினரில் கணிசமான பங்கினர் இறப்பினைத் தழுவிக் கொண்டனர். இராணுவத்தின் கொடுமைகளுக்கும் இவ்வயதுத் தொகுதியினரே அதிகம் பலியாகியுள்ளனர். அத்துடன் இயங்கங்களுக்கிடையே காணப்பட்ட பகைமையுணர்வும் இவ் வயது வகை இறப்பில் முக்கியத்துவம் கொண்டுள்ளது. மேலும் இவ்வயதுத் தொகுதியினரின் இறப்புக்களைக் காலரீதிக்யாக நோக்கும் போது 1987 – 1989 ஆம் ஆண்டுகளிடையே அதிகமாகவிருந்துள்ளது. அதாவது இந்தியஅமைதிப்படையினரது அடாவடித்தனத்தினால் இளைஞர்கள் சித்திரவதைக்குட்பட்டு கொல்லப்பட்டனர். 35 – 54 வயதிடைவெளியில் நிகழ்ந்த இறப்புக்களை பொறுத்த வரை தேசிய ரீதியோடு ஒப்பிடும் போது அதிகமாகவுள்ளது. நோய்கொள்நிலை, இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனம், உளவியல் ரீதியான பாதிப்பு, மதுபானம், புகைத்தல், போன்றவற்றால் ஏற்படும் பாதிப்பு போன்ற பல இவ்வயது வகை இறப்பினை ஏற்படுத்தி உள்ளது. 65 வயதிற்கு மேற்பட்டவர்களின் இறப்புக்கள் தேசிய ரீதியாக ஒப்பிடும் போது ஒத்த பண்புகளைக் கொண்டு காணப்படுகின்றது.

## பால் ரீதியான இறப்புக்கள்

யாழ், மாவட்டத்தில் 1981 – 1990 ஆம் ஆண்டுகளிடையில் 27226 ஆண்களின் இறப்புக்களும் 16715 பெண்களின் இறப்புக்களும் நிகழ்ந்துள்ளன. பொதுவாக சர்வதேச ரீதியில் ஒப்பீட்டு அடிப்படையில் ஆண்களின் இறப்புக்களே அதிகமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் நெடுந்தீவு, வலிகாமம் தெற்கு உதவி அரச அதிபர் பிரிவிலேயே பெண்களிலும் பார்க்க ஆண்களின் இறப்பு குறைவாக இருந்துள்ளது. ஏனைய பிரிவுகளில் ஆண்களே அதிகமாக இறந்துள்ளனர். எனினும் வலிகாமம் வடக்கு பிரிவில் 1000 பெண்களுக்கு 2117 ஆண்கள் இறந்துள்ளனர். குறிப்பாகப் பெண்களின் இறப்பு குறைவாகக் காணப்படுவதற்கு உயிரியல் பண்புகளுடன் கடின உழைப்பினை மேற்கொள்ளாமை, பிரசவத் தாய் இறப்புக்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமை, இராணுவ நடவடிக்கையின் போது ஆண்களின் இறப்புக்கள் அதிகரிப்பு போன்ற பல காரணிகள் தீர்மானித்துள்ளன. 1987 ஆம் ஆண்டு தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு. கிழக்கு பிரதேசங்களில் குறிப்பாக இந்திய அமைதிப்படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவாக இந்திய படையால் அப்பாவி தமிழர்கள் குறிப்பாக ஆண்கள் கொல்லப்பட்டனர். இதுவரை நடந்த யுத்தங்களில் இறந்தவர்களை விட இவர்களால் கொல்லப்பட்டவர்களே அதிகமாகும்.

## தொழிலமைப்பும் இறப்புக்களும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் மக்களில் கணிசமானோர் பயிர்ச் செய்கை பொருளாதாரத்தை அடிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த போதிலும், ஐரோப்பியரின் வருகையின் பின்னர் கணிசமானவர் கல்வியுடன் தொடர்புடையவர்களாக அதனுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். கரையோரப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலுடன் தொடர்புடைவர்கள் காணப்படுகின்றனர். எவ்வாறெனினும் பொதுவாக இக்குடாநாட்டில் பொதுவாக எல்லாத் தொழில்களை மேற்கொள்பவர்களும் பரந்து வாழ்கின்றனர். இறப்பின் போது மேற்கொண்ட தொழில்களை அட்டவணை ஏழு குறிப்பிடுகின்றது.

ஆய்வுக் குட்பட்ட காலப்பகுதிகளில் இறந்தவர்களில் 48.1 வீதமானவர்களைப் பொறுத்தவரை இறப்பின் போது எந்தத் தொழிலையும் செய்யவில்லை என்பது பதிவு செய்பவர்களால் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. அதாவது வயோதிப இறப்பு, குழந்தை இறப்பு, இயற்கை மரணம் எய்தியவர்களிடையே பெருமளவிற்குத் தொழில் குறித்துரைக்கப்படவில்லை. மேற்குறிப்பிட்டவர்கள் மொத்த இறப்பில் 32.5 வீதமாகக் காணப்படுகின்றனர். கல்வி கற்கின்ற காலத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை மொத்த இறப்பில் 4.8 வீதமாகக் காணப்படுகின்றது. இலங்கை, இந்திய இராணுவத்தினாலும், சமூக விரோத விடுதலை அமைப்புக்களாலும் மாணவர்கள் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (அட்டவணை 7)

அட்டவணை; 7

### தொழில் அமைப்பும் இறப்புகளும் — 1981 — 1990

| தொழில் | இறப்புக்கள் | வீதம் |
|---|---|---|
| பயிர்ச்செய்கை | 4760 | 10.8 |
| மீன்பிடி | 1319 | 3.0 |
| கைத்தொழில் | 893 | 2.0 |
| சேவைத்தொழில் | 6153 | 14.0 |
| மாணவர் | 2096 | 4.8 |
| ஏனைய தொழில்கள் | 7595 | 17.4 |
| தொழில்பற்றித் தெரிவிக்காதோர் | 21125 | 48.1 |
| மொத்தம் | 43941 | 100.0 |

ஆதாரம்: இறப்புப் பதிவுகளிலிருந்து கணிக்கப்பட்டது

முடிவுரை:

பொதுவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பருமட்டான இறப்புக்களைப் பொறுத்தவரை வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைவாகக் காணப்படுகின்றது. சுவீடன், ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றில் பருமட்டான இறப்புவீதம் முறையே 1000 பேருக்கு 11.1, 11.5, 8.7, 11.6 ஆகக் காணப்பட - இலங்கையில் 1000 : 6 ஆகக் காணப்பட - ஆய்வுப் பிரதேசத்தில் 5.5 ஆகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்குறித்த தரவுகளை ஒப்பீட்டு நோக்கும்போது இலங்கை உட்பட ஆய்வுப் பிரதேசம் உலகிலேயே மிகக்குறைவான இறப்பு வீதத்தை கொண்ட பிரதேசமாக காணப்படுவதுபோல் தோற்றமளிக்கின்றது. ஆய்வுப்பிரதேசம் உட்பட இலங்கையில் பிறப்புக்களின் பதிவினைப் பொறுத்தவரை அதன் தேவை முக்கியமாகக் காணப்படுவதனால் பதிவுசெய்தல் சிறப்பானதாக இருக்க, இறப்புகளைப் பொறுத்தவரை பதிவுசெய்தலின் அவசியம் உறவினர்களைப் பொறுத்தவரை எல்லா சந்தர்ப்பங்களிலும் வேண்டப்படாததால் குறைந்த அளவிலேயே பதிவு மேற்கொள்ளப்படுகின்றது. அக்காலங்களில் கிராம விதானைமாருக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமமக்கள் நன்கு அறிமுகமாகியவர்களாக இருந்தமை மட்டுமல்லாது பங்கீட்டு உணவு அட்டை வழங்குதல் போன்ற விடயங்களில் மிகக் கவனமாக மேற்பார்வை செய்யப்பட்டு வந்தது. எனவே இறப்பு, பிறப்பு பதிவுகள் உறுதிப்படுத்தப்பட்டன. ஆனால் புதிய கிராம சேவையாளர் நியமனம், அவர்கள் கிராமத்துக்குப் புதியவர்களாக இருத்தல், பங்கீட்டு உணவுமுறை நீக்கம், சிவில் நிர்வாக செயலிழப்பு, குறிப்பாக இந்திய, இலங்கை இராணுவ கெடுபிடிகள், விடுதலை அமைப்புக்களின் விரிவாக்கம், அவர்களிடையே ஏற்படும் இறப்புக்கள் பதிவுசெய்யப்படாமை, காப்புறுதி, கடவுச் சீட்டு ஒய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருத்தல், மக்களது இடப்பெயர்வு அதிகரித்துச் சென்றமை, வயோதிப இறப்புக்கள் அதிகம் நிகழ்வதால் உரிமைக்காரருக்குப் பதிவின் தேவை முக்கியத்துவப்படாமை, விவாகப் பதிவுகளில் பதிவாளர் காட்டும் அக்கறைபோல பிறப்பு இறப்புக்களில் காட்டத் தவறும் நிலை, பதிவாளர்கள் அகதிகளாக இடம்பெயர்ந்திருத்தல், துப்பாக்கிச்சூடு, எறிகணைக் குண்டு வீச்சினால் நிகழ்ந்த இறப்புக்களில் கணிசமானவை பதியப்படாது இருத்தல், அதாவது பதிவுக்குப் பின்னர் பின் விளைவுகள் ஏற்படும் என பயந்து மேற்கொள்ளாதிருத்தல் தேசிய ரீதியில் இறப்பு, பிறப்பு பதிவுகளின் நன்மை தீமை பற்றி அறியாமை போன்ற பல காரணிகளால் இறப்பு பதிவுகள் மேற்கொள்ளாது விடப்பட்டமையாலேயே இறப்பு வீதம் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது குறைவாகக் காணப்படுவது போல் தோற்றமளிக்கின்றது.

குழந்தை இறப்பினை பொறுத்தவரை பெரும்பாலான பிரசவங்கள் வைத்தியசாலைகளில் நிகழ்வதால் அவ்வப் பிரிவில் பதிவாளரால் பதிவு செய்யப்படுகின்ற போதிலும் சகல பதிவுகளும் பதிவு செய்யப்படுகின்றன எனக்கூறுவதற்கு இல்லை. குழந்தை இறப்புப் பெரும்பாலும் கருமுதிரா நிலைமையே முக்கிய காரணியாக இருக்கின்றமையால் பதிவு செய்தலில் பெற்றோர் அக்கறை செலுத்துவதில்லை. ஏனெனில் உளவியல் ரீதியாக நோக்கும் போது குழந்தை பிரசவிக்கும் காலம் வரை தாயாரால் சுமக்கப்பட்டுப் பிரசவத்தின் போதோ அல்லது பிரசவத்தின் பின்னரோ இறக்கும் பட்சத்து விரக்தி மனப்பான்மை ஏற்படுவதாலும், பெற்றோர்கள் அக்கறை இன்மையாலும், அப்பதிவானது சுகாதார மருத்துவத்துறையினருக்கு உதவியாக இருக்கும் என்ற பொது நோக்கத் தன்மையினாலும் பதிவு செய்யாது விடப்படுகின்றது.

வயது வகைப்பிரிவு இறப்பினை பொறுத்தவரை தேசியப் பண்போடு ஒப்பிடும் போது குழந்தை இறப்புக்கான வீதம் குறைவாகக் காணப்படுகின்ற போதிலும் 15 / 64 வயதிடைவெளியில் இறப்புக்கள் அதிகரித்துக் காணப்படுவதற்கு ஆய்வு பிரதேசத்தில் காணப்படுகின்ற அசாதாரண சூழ்நிலைகளே காரணமாகவிருந்துள்ளன. மேலும் இறப்புக்களின் பதிவின் போது இறந்தவரது உண்மை வயதினைத் தெரிவிக்காத நிலை உண்டு. எனவே இதனைக் கவனமாக பரிசீலணை செய்து பதிவு செய்தால் அப்பிரதேசத்தில் அல்லது நாட்டின் ஆயுள் அட்டவணையை அறிந்து கொள்வதற்குச் சுலபமாகஇருக்கும். எனவே பிறந்த திகதி, மாதம், ஆண்டு ஆகியனவும் பதிவுக்குட்படுத்த வேண்டும்.

ஆண் பெண் இறப்புக்களைப் பொறுத்தவரையில் சர்வதேச ரீதியில் நிகழ்கின்ற தன்மைகளைப் போலவே ஆண்களின் இறப்பு அதிகமாகவிருக்கின்றது. மேலும் பொதுவாக பிறக்கும் போது அவர் சார்ந்திருந்த தொழில்கள் பற்றித் தெரிவிக்கப்படாத நிலையில் ஏறத்தாழ அரை பங்கினர் காணப்படுகின்றனர். ஏனெனில்குழந்தைகள் வயோதிபர் இறப்பின் போது தொழில் அற்றவர்களாக இருப்பதும் ஒரு காரணியான போதிலும், ஏனையோர் விடயத்திலும் தொழில் குறித்து வைக்கப்படாத நிலை பதிவாளரின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டுள்ளது. மேலும் சாதாரண உலகில் மாணவர்களின் இறப்பு மிகக் குறைவாக இருக்கின்றது. ஆனால் ஆய்வுப்பிரதேசத்தில் மாணவர் இறப்பு அதிகமாகவிருப்பதற்கு இராணுவத்தாக்குதலே காரணமாக விருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மேற்குறித்த நிலையின் படி பெரும்பாலான இறப்புக்கள் பதியப்படாத நிலையில், பிறப்புக்கள் அதிகமாகவும், இறப்புக்கள் குறைவாகவும் இருப்பது போல் வெளிக்காட்டுவதால் வளர்ச்சி வீதம் அதிகரித்துள்ளது போல் தோற்றம் அளிக்கின்றது. இது உண்மைத்தன்மை அல்ல என்பது இவ்வாய்வின் முடிவுகளில் ஒன்றாகும்.

மேலும் ஒரு குறிபிட்ட பதிவாளர் பிரிவில் நியமிக்கப்படும் பதிவாளர் குறைந்த பட்சம் மருத்துவ அறிவு உடையவராக இருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அரசியல் காரணிகளாலும், செல்வாக்கினாலும் இவை பற்றி எந்தவித அறிவும் இல்லாதவர்களுக்கு நியமனம் வழங்கப்படுவதால், இறப்புக்கான காரணிகளைத் தம் அறிவுக்கெட்டிய படி மட்டுப்படுத்தி எழுதுகின்றமையால் உண்மைக்காரணிகளைக் கண்டறிவதில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிரமம் ஏற்படுகின்றது. அதாவது இந்தநிலைமைகளால் பதிவாளரது அனுபவத்திற்கேற்ப பல சந்தர்ப்பங்களில் பொதுமைப்படுத்தியும் சில வேளைகளில் அவ்வூர் வழக்கிற்கேற்ப நோய்களை குறித்தும் வைத்துள்ளனர். உதாரணமாக வயோதிபம், இயற்கை மரணம் பாண்டு, சன்னி போன்ற பலவாகும்.

மேலும் நகரப்புறங்களில் குறிப்பாக வைத்தியசாலைகளில் இடம்பெறும் இறப்புக்களுக்கான காரணிகளை ஆங்கிலப்பதங்களில் அப்படியே தமிழில் எழுதும் முறை காணப்படுகின்றது, எனவே அதற்கான தமிழ் பதங்களை உபயோகப்படுத்தல் வேண்டும் அல்லது இறப்புக்கான காரணிகளை ஆங்கில மொழியில் உள்ளவாறு எழுத வேண்டும். மருத்துவத் துறையில் தமிழ்ச் சொற்கள் புகுத்தப்படாமல் இருப்பதை இது சுட்டிக்காட்டுகின்றது.

மேலும் ஒருவர் இறக்கும் பட்சத்தில் இறந்தவர் பெயர், வயது, பால், இறந்த பதிவாளர் பிரிவு, இறப்புக்கான காரணி, தொழில், அடக்கம் செய்யப்படும் மயானம் என்பனவே பதிவு செய்யப்படுகின்றன. இவை இறந்தவரது தகவல்களை முற்று முழுதாகத் தருகின்றது எனக்கூற முடியாது. குறிப்பாக இறந்தவரது பிறந்த இடம், நிரந்தர, தற்காலிக விலாசம், விவாக நிலை, இறந்த இடம் அதாவது வைத்திசாலையிலோ, வீட்டிலோ என்பது, வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட திகதி, வேறு இடத்தில் இறந்திருந்தால் வேறு இடத்து விலாசம், அடக்கம் அல்லது தகனம் செய்யப்படும் மயானத்தின் பெயர் ஈமக்கிரிகைகளைப் பொறுப்பேற்று நடாத்துபவரின் பெயரும் அவரது விலாசமும், போன்றவற்றைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். மேற்படி தகவல்கள் ஆய்வாளர், ஆர்வலர் மற்றும் பதிவாளர் திணைக்களத்தினர் போன்றவர்களுக்கு மிகவும் பேருதவியாகவிருக்கும் என நம்பலாம்.

இறப்புப் பதிவினைப் பொறுத்தவரை ஆய்வுப்பிரதேசம் உட்பட இலங்கையில் நிகழ்வுற்ற இறப்புக்களில் பெரும்பாலானவை பதியப்படாது விடப்படுகின்றது என்பது தெளிவான ஒன்று. இவைபற்றி சமகாலத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுகளும் தெரிவித்துள்ளன. எனவே அரசாங்கத்தால் பதிவு செய்வதை உறுதிப்படுத்துவதற்கு குறித்துரைக்கப்பட்ட சட்டங்கள் போதியதாகவில்லை. எனவே கடுமையான சட்டங்கள் உருவாக்கப்படுதல் அவசியமாகின்றது. அதாவது தற்போது நிகழும் இறப்புக்களில் அவரது உறவினர்களால் பதிவு செய்யப்படுவது மிகக்குறைவாகவேயுள்ளது. எனவே இறந்தவரது வாரிசாக உள்ளவரை தண்டிக்கக் கூடிய சட்டங்களை உருவாக்குதல் அவசியமாகின்றது. இவற்றுடன் பதிவாளர் நியமனத்தை பொறுத்தவரை மருத்துவ அறிவுடையவர்களுக்கே வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் சட்டங்கள் கொண்டு வரப்படல் வேண்டும், இதனால் இறப்பதற்கான காரணிகள் அறியப்படின் அதனைக் கட்டுப் படுத்தக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ள வாய்ப்புண்டு. அத்துடன் ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவரது பெயர், நடந்த இடம், திகதி ஆகியவற்றைக் குறித்துப் பிரிவுப்பதிவாளருக்குக் கிராம சேவையாளரினால் உடன் தெரியப்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படல் வேண்டும். இந்நிகழ்வு பதிவு செய்தலைத் தூண்டுவதாகவே அமையும். மேலும் இவற்றிற்கு மேலாக மயானம் அல்லது சேமக்காலைகளில் பதிவு செய்தல் முறையினை அறிமுகம் செய்தல் வேண்டும். அல்லது மயானத்துக்கு வரும் இறந்த உடல்களுக்குப் பதிவு செய்யப்பட்டதற்கான அத்தாட்சி கொண்டு வரப்படல் வேண்டும் என்பதைச் சட்டரீதியாக நடைமுறைக்குக் கொண்டு வருதல் வேண்டும். இவற்றினை சம்பந்தப்பட்ட மாநகரசபை, நகரசபை. பிரதேச சபைகளின் பொறுப்பில் விடுதல் வேண்டும். அத்துடன் வைத்தியசாலைகளில் இறந்தவரது உடல்களை வெளியே எடுத்துச் செல்வதற்கு முன்னர் பதிவு செய்வதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். அத்துடன் பதிவாளர்களுக்கு இறப்புக்கான பதிவுகளை மேற்கொள்வதற்கான பணக் கொடுப்பனவுகளை அதிகப்படுத்துதல் வேண்டும், இவ்வாறான ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தாதுவிடின் ஆய்வுப்பிரதேசம் உட்பட நாட்டின் இறப்புக்களும், இறப்பு வீதமும் சர்வதேசரீதியில் வீழ்ச்சி நிலையில் தான் தொடர்ந்தும் போய்க் கொண்டிருக்கும் என நம்பலாம். □

---

## உசாத்துணை நூல்கள்


1. Agarwala, S. N., (1965), *Population Problems*, New Delhi.
2. Bhende, A. Asha and Kanitkar, Tara, (1987), *Principles of Population Studies*, Himalaya Publishing House, Bombay.
3. Clark John, I., (1965), *Population Geography*, Pergaman Press, London.
4. Dallas Fernando, (1976), " Recent Trends in Fertility of Sri Lanka ", *Population Problems of Sri Lanka*, *DTRU* University of Sri Lanka, Colombo.
5. Davis Kingsley. (1951), *The Population of India and Pakistan*, Princeton.
6. Dissanayake, S. A. W., De Silva, W, P., (1974), Suicide and attempted Suicide in Sri Lanka, *Ceylon Journal of Medical Science*, Colombo.
7. Garnier, J. P., (1966), *Geography of Population*, St. Martin's Press, New York.
8. Government of Ceylon, ( 1935 ), "The Ceylon Malaria Epidemic – 1934 - 1935" *Report by the Director of Medical and Sanitary Services*, Sessional Papers XX, Colombo.
9. James. C. Knowles, (1979), *Population Geography*, New York.
10. Jeyasuriya, D. C., (1980), *Laws Regulating and Influencing the Vital Registration System in Sri Lanka*, Department of Census and statistics, Colombo.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. Lewis, J. P., (1964), *Manual of Vanni Districts of the Nothern Province of Ceylon*, Colombo.

12. Meegama, S. S., (1969), "The Decline in Maternal and Infant Mortality and its relation to Maleria Eradication", *Population Studies* Vol. XXIII, No. 2, United States of America.

13. Nadarajah, T., (1976), "Trends and Defferentials in Mortality", *Population of Sri Lanka*, ESCAPE, Bangkok.

14. Sarkar, N. K., (1957), *The Demography of Ceylon*, Colombo.

15. Sivarajah, N., (1987), Death Registration in the Jaffna Division, *Jaffna Medical Journal*, Vol. XXII, Nos. 1 & 2, April - December.

16. Stella Soundara Raj, (1983), *Text Book of Population Education*, Macmillan India Ltd, Bombay.

17. Srivastava, S. C., (1988), *The Demography*, Himalayas Publishing House, NewDelhi

18. குகபாலன், கா., (1979), யாழ்ப்பாண மாவட்டத்தின் குடித்தொகை இயக்கம், முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# இலங்கையில் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழிலாக்கம்: சாதனைகள், குறைபாடுகள், சவால்கள்

கா. கந்தையா

## அறிமுகம்

பரந்த கருத்தில் கைத்தொழிலாக்கம் என்பது, நவீன தொழில்நுட்ப அடிப்படையில் பொருளாதாரத்தில் உள்ள எல்லாத் துறைகளிலும் உருமாற்றத்தை ஏற்படுத்துதல் எனக்குறிப்பிடலாம். ஆனால் பொதுவாகக் கைத்தொழிலாக்கம் என்று கூறும் போது ஒரு குறிப்பிட்ட நவீன துறை அல்லது தொழில்களை மேம்படுத்தி வளர்ச்சியடையச் செய்தலையே குறிக்கும். கைத்தொழிலாக்கம் ஏற்படுகின்றபோது கைத்தொழில்துறையும் அதனோடு சேர்ந்த துணைத்துறையும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குக் கூடுதலான பங்களிப்பைச் செய்வதையும் தொழிற்படையில் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதையும், ஏற்றுமதிவருவாயில் கைத்தொழில் துறை பெரும் பங்களிப்புச் செய்வதையும் கைத்தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளின் அனுபவங்களினூடாகக் காணக்கூடியதாக உள்ளது. 'குசுநெட்ஸ்' என்ற பொருளியலாளர் கைத்தொழிலாக்கம் பற்றிக் கூறுகின்றபோது முதன்மை(விவசாயம்) துணைத் துறைகள் (கைத்தொழில்) என்பனவற்றிற்கிடையே காணப்படுகின்ற உற்பத்தி இடைவெளிகள் இல்லாமல்போகின்றது என்றும் கைத்தொழில் துறையே அபிவிருத்தியின் யந்திரமாகச் செயற்படும் என்றும் கூறுகின்றார். [1]

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி-வளர்ச்சி என்பதற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் என்ற குறிக்கோள்களை அடைவதற்குமாக இந்நாடுகளின் கைத்தொழிலின் அபிவிருத்தி முக்கியம் வாய்ந்ததொன்றாகக் கருதப்பட்டதோடு அனேகமாக நாடுகள் கைத்தொழில் உத்தியின் மூலமாகத் தமது பொருளாதார அபிவிருத்தி அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன. சில நாடுகள் இம்முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளன. புதிய கைத்தொழில் நாடுகளாகத் தம்மை இனங்கண்டுள்ள கிறிஸ், இஸ்ரவேல், போர்த்துக்கல், ஸ்பெயின், யூகோசிலேவியா, ஹொங் கொங், சிங்கப்பூர், தென்கொரியா, பிறேசில், ஆர்ஜந்தீனா, மெக்சிக்கோ போன்ற நாடுகளைக் கைத்தொழிலாக்கத்தினால் தமது பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திய நாடுகள் எனக்கூறமுடியும்.

அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகள் கைத்தொழிலாக்த்தினை மேற்கொள்கின்றபோது உற்பத்தியை அதிகரித்தல், வளர்ந்து வருகின்ற வேலைப்படையினருக்கு வேலை வாய்ப்பினை வழங்குதல், அந்நியச் செலாவணியை உழைத்தல் அல்லது சேமித்தல், உற்பத்தித் துறைகளிடையே முன்கொழு, பின்கொழு விளைவுகளை ஏற்படுத்தல் என்ற குறிக்கோள்களை மையமாகக் கொண்டே செயற்படுத்துகின்றன. [2] இக் குறிக்கோள்களை அடைவதற்கான முன் நிபந்தனைகளான கிடைக்கக்கூடிய தேர்ச்சி, தேர்ச்சியற்ற, பகுதியாகத் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள், உற்பத்தி முடிவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்கள், கைத்தொழிலுற்பத்தி மூலப்பொருட்களைப் பெறுவதற்கான வழிகள், முதலீட்டுக்கான மூலங்கள், தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கான வழிமுறைகள் என்ற அம்சங்களையும் ஒரு நாடு தனது கைத்தொழிலாக்கத்தின்போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

வரலாற்று ரீதியாக இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்பு கைத்தொழிலாக்கத்தினைப் பின்பற்றி வந்த அபிவிருத்தியடைய முற்பட்ட நாடுகள் ஆரம்பத்தில் தத்தமது நாட்டுவளங்களின் கிடைப்புத் தன்மைக்கேற்பவும், பொருளாதார கொள்கைகளிற்கேற்பவும் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை என்பதனையும் பின் சில நாடுகள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் என்பதனையும் நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. இறக்குமதிப் பதிலீடு என்பது இதுவரை இறக்குமதி மூலம் தமது தேவையைப் பூர்த்திசெய்து வந்ததற்குப் பதிலாக உள்நாட்டில் அக் கைத்தொழில்களை நிறுவி அதற்குத் தேவையான பாதுகாப்பினை அரசிறைக் கொள்கைகளினூடாக வழங்கி இத் தொழில்களை வளர்ச்சியடையச் செய்தலாகும். 1950 களிலும் 1960 களிலும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் முதல் விளைவுப் பொருட்களுக்கு உலக சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சியும், சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியும் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் ஆக்க முயற்சிக்கு வழிவகுத்துள்ளன. இம் முயற்சி சில நாடுகளில் குறிப்பாக லற்றீன் அமெரிக்க நாடுகளில் வெற்றியளிக்கவில்லை. இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையை பின்பற்றியதனால் பல விரும்பத்தகாத விளைவுகள் இப் பொருளாதாரங்களில் ஏற்பட்டுள்ளன.[3] பல வெளிநாட்டு நிறுவனங்கள் இக் கொள்கையால் ஏற்பட்ட நன்மைகளை அனுபவித்துள்ளன. அத்தோடு உள்நாட்டுக் கைத்தொழில் உரிமையாளரும் சில நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர். சலுகை முறையில் வெளிநாட்டில் இருந்து முதலீட்டு மூலதனப் பொருட்கள், இடைத்தரப் பொருட்களை இறக்குமதி செய்ததினால் முதற் செறிவான உற்பத்தி முறைகளும், சென்மதி நிலுவைப் பிரச்சினை மேலும் அதிகரிக்கவும் இக் கொள்கை வழி வகுப்பதாகவும் அமைந்தது, இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கைகளைக் கடைப்பிடித்து வரும் நாடுகள் மலிவான விலையில் முதலீட்டு மூலதனப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் நோக்கோடு தமது நாணயங்களின் செலாவணிப் பெறுமதியை எப்போதும் மிகை பெறுமானமுள்ளதாகவே வைத்திருந்தன. இதனால் இறக்குமதிகள் தொடர்ந்தும் அதிகரித்ததோடு ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளை வெளிநாடுகளில் உயர்த்தியது. மிகைப் பெறுமானமுள்ள அந்நியச் செலாவணிக் கொள்கையின் விளைவாக முதற் செறிவான முதலீட்டு உற்பத்திகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டது. இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையின் மூலமான நிலைத்து நிற்கக்கூடிய கைத்தொழிலாக்கம் என்பது முன்கொழு - பின்கொழு விளைவுகள் மூலமாக ஏற்படுத்தலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்த போதிலும் உள்ளீடுகள் வெளிநாடுகளிலிருந்தே பெறவேண்டியிருந்ததால் இக்கொழு விளைவுகள் பொருளாதாரங்களில் ஏற்படவில்லை.[4] சுருக்கமாகக் கூறின் இறக்குமதிப் பதிலீட்டுக்கொள்கை எதிர்பார்த்ததை விட மாறாகப் பல பாதகமான விளைவுகளையே பொருளாதாரங்களில் ஏற்படுத்தியுள்ளது. ஊழியச் செறிவான உற்பத்தி முறைகளுக்குப்பதிலாக முதற் செறிவான உற்பத்தி முறைகளையும், வெளிநாட்டு இறக்குமதிகளைக் குறைப்பதற்குப் பதிலாகக் கூடுதலான மூலதன முதலீட்டுப் பொருட்களை பெற்றுக் கொண்டதால் சென்மதிநிலுவைப் பிரச்சினையையும், இதன் வழியாக அந்நிய செலாவணிப் பற்றாக்குறையையும், பெரும்பாலான ஆலைத்தொழில்கள் முழு இயலளவுக்குக் குறைவான நிலையில் இயங்கி வந்துள்ளமையும் நாம் அனுபவரீதியாகப் பல நாடுகளிடையே அவதானிக்க முடிகின்றது. மொத்தத்தில் கைத்தொழில் துறையின் காரணி ஒதுக்கீடு என்பது உத்தமமாக நடைபெறாததோடு உற்பத்தி செயற்றிறன் அற்றவையாகவுமே பெரும்பாலும் காணப்பட்டன. சமூகரீதியாக கைத்தொழில் உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இறக்குமதிப் பதிலீட்டு உத்தி கைத்தொழிலாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகள் மூலம் அதிகளவான நன்மைகளைப் பெற்றுக் கொண்டதினால் நாட்டில் வருமானச் சமமின்மையை மேலும் அதிகரித்துள்ளது.

இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் அணுகுமுறையின் தோல்வி என்பது அவ்வவ் நாடுகளின் அபிவிருத்திப் படிமுறை வளர்ச்சி, அக் கொள்கையை நடைமுறைப் படுத்துகின்றமாதிரி, அரசாங்கக் கொள்கைகள் என்பவற்றோடு தொடர்புபட்டதால் இக்கொள்கையினால் கிடைக்கின்ற விளைவுகள், அனுபவங்கள் என்பன நாட்டுக்கு நாடு வேறுபடலாம். உதாரணமாக சிறிய இலற்றீன் அமெரிக்க நாடுகள், ஆபிரிக்க நாடுகள், இந்தியா என்பன இன்னமும் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் அணுகுமுறையிலேயே தமது கைத்தொழிற்றுறையை அபிவிருத்திசெய்து வருகின்றன. இஸ்றேல் இறக்குமதிப் பதிலீடு, ஏற்றுமதி மேம்பாடு என்ற இரண்டு அணுகுமுறையையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதன் மூலமே தனது கைத்தொழில் துறையினை அபிவிருத்திசெய்து வருகின்றது.[5] எனவே இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையானது ஏற்றுமதி மேம்பாட்டினை விருத்தி செய்வதற்கு ஒரு முன் நிபந்தனையாக காணப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. உதாரணமாக தென்கொரியா, சிங்கப்பூர், தாய்வான் ஆகிய நாடுகள் நீண்ட காலப் பாவனைக்கல்லாத உள்நாட்டுப் பதிலீட்டு உற்பத்திகளை இலகு படிமுறை உற்பத்திகளாகச் செய்துமுடித்த பின்னரே ஏற்றுமதி மேம்பாட்டினை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபட்டன. இறக்குமதிப் பிரதியீட்டுத் தொழில் உபாயத்தின் மூலமாகப் கைத்தொழிற்றுறையின் வளர்ச்சி என்பது தேக்க நிலையில் இருந்தமையால் இலற்றீன் அமெரிக்க நாடுகளும், கிழக்காசிய நாடுகளும் கைத்தொழில் அபிவிருத்தி என்பதனை வெளிநோக்கிய அபிவிருத்திக் கோட்பாட்டின் வழியாகவே அடைய முயற்சித்து வெற்றியும் கண்டுள்ளன.

ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் ஏற்றுமதிகளை வெளிநோக்கிய வர்த்தக உபாயத்தினை கைக்கொள்ளுதல் மூலம் வளர்ச்சியடையச் செய்வதையே வலியுறுத்துகின்றது. இவ் வளர்ச்சியானது பொருளாதார அமைப்பு, கைத்தொழில் அனுபவங்கள், ஒரு நாட்டின் அபிவிருத்தி முன்னுரிமை என்பவற்றையே பொறுத்துள்ளது. வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளின் ஏற்றுமதி மயமாக்கல் என்பது வெளிவாரியான அழுத்தங்களுக்கும், தளம்பல்களுக்கும் ஊறுபடக் கூடியதாக எப்போதும் உள்ளது என்று விதந்துரைக்கப்படுகின்றது.[6]

Balassa[7] *(1978)* என்பவர் மெய்ச்சான்று ரீதியாக ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் கைத்தொழில் அபிவிருத்தி, இறக்குமதிப் பதிலீட்டு அணுகுமுறை என்பதனை விட வளர்ச்சியடைந்த நாடுகளிடையே கூடுதலான பொருளாதார வளர்ச்சி வீதம் என்பதனை ஏற்படுத்தியுள்ளது என நிரூபித்துள்ளார். ஏற்றுமதி மேம்பாட்டு அணுகுமுறையின் மூலமாகக் கைத்தொழில் வளர்ச்சியடைந்து செல்கின்ற போது ஒப்பீட்டு நய அடிப்படையிலேயே போட்டி முறையாக நாடுகளுக்கிடையே காரணி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இதனால் காரணிகள் சிறந்த உத்தம பயன்பாட்டைப் பெறுகின்றன. பொருளியல் அளவுத்திட்ட சிக்கனங்களைப் பெறக்கூடிய உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. வெளிநாட்டுப் பொருள் உற்பத்திகளுடன் போட்டியிடக்கூடிய தொழில் நுட்ப உற்பத்தி முறைகள் பின்பற்ற வாய்ப்பும் கிடைக்கின்றது. மிகை உழைப்புள்ள நாடுகளில் போதியளவிலான வேலையாக்கத்தினையும் செய்ய உதவுகின்றது.

## இலங்கையின் கைத்தொழிலாக்கம்

இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி என்பது சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலிருந்தே தொடங்கப்பட்டபோதும் ஒரு இறுக்கமான அணுகுமுறையினூடான கைத்தொழில் அபிவிருத்தி என்பதனை இலங்கை 1957 ஆம் ஆண்டிலிருந்தே ஆரம்பித்திருந்தது.[8] இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தி வளர்ச்சி என்பதனை மூன்று கால கட்டங்களாக வகைப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்க முடியும். முதலாவது காலப்பகுதியினை 1948-1956 வரையும், இரண்டாவது காலப்பகுதி 1957-1977 வரையும் மூன்றாவது பிரிவு 1977 க்குப் பிற்பட்ட பகுதியும் என பாகுபடுத்தி ஆராய முடியும். ஒவ்வொரு காலப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் அவ்வவ் அரசாங்கங்களின் அரசியல் சித்தாந்தங்களைப் பிரதிபலிப்பதாகவே காணப்பட்டன. இலங்கையின் கைத்தொழில் கொள்கையின் ஆரம்ப காலத்தில் பொருளாதார அபிவிருத்தியில் கைத்தொழில் துறையின் பொருளாதார, அரசியல், சமூக நன்மைகளை உணர்ந்து செயற்பட்ட போதும், அரசாங்கத் துறையின் நடவடிக்கையின் மூலமே கைத்தொழில் துறையின் அபிவிருத்தி ஏற்பட முடியும் என நம்பப்பட்டது. தனியார் முயற்சிகள் கைத்தொழில் நடவடிக்கைகளில் ஊக்குவிக்கப்பட்ட போதும் தனியார் துறை பெரியளவான பங்களிப்பினை இக்காலப் பகுதியில் கைத்தொழில் அபிவிருத்தியில் ஏற்படுத்தவில்லை. இக்காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார அமைப்பு பெருந்தோட்டப் பயிர்களிலேயே பெரிதும் தங்கியிருந்ததோடு இலங்கைப் பொருளாதாரம் பெரியளவான பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கிய காலமாக இருக்கவில்லை. இருந்தும் பொருளாதார நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே கைத்தொழில் அபிவிருத்தி என்பது அமைந்தது. இது பெரும்பாலும் பொருளாதாரத்தை புனரமைப்புச் செய்யும் காலகட்டமாகவே காணப்பட்டது. இறக்குமதிப் பதிலீடு என்ற கொள்கையின் வாயிலாகக் கைத்தொழிலாக்கம் ஏற்படுகின்ற போது அது ஒரு தற்சார்புள்ள பொருளாதாரமாகவே வளர முடியும் என வலியுறுத்தப்பட்டது. இது மகஉறல நோபிஸ் முன்மாதிரி என அழைக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் இலங்கை அரசாங்கத்தின் கொள்கை வெற்றியளிக்கவில்லை.[9]

இரண்டாவது காலகட்டமாகிய (1957 - 77) காலகட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்திக் குறிகோள்கள் மாற்றம் அடைந்ததோடு கைத்தொழில் நடவடிக்கைகள், கொள்கைகளும் அரசாங்கத்தின் அதிக கவனத்தை ஈர்த்தன. வளர்ந்து வருகின்ற தொழிலாளர் படைக்கு வேலை வாய்ப்பளித்தலே கைத்தொழில் துறை வளர்ச்சியின் முக்கிய குறிக்கோளாகக் காணப்பட்டது. இதனை அடைவதற்காக உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தல், தொழிற் செறிவான உற்பத்தித் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தல் என்ற அடிப்படையிலே வேலைவாய்ப்பினை அடைதல் என்ற குறிக்கோளை அடையமுடியும் என்று கருதப்பட்டது. இது குமாரசாமின் போன்ற பொருளியலாளர்களின் உள்நோக்கிய பொருளாதார அபிவிருத்திக் கோட்பாட்டினை ஆதாரமாகக் கொண்ட ஒரு மாதிரியாகவே காணப்பட்டது. இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியானது 1960 களிலிருந்து இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையின் உபாயத்தினை அடிப்படையாகக் கொண்டு அதிகளவில் வளர்ந்துவரும் கைத்தொழிலாக்கப் பாதுகாப்பு என்பதுடன் நடைபெறத் தொடங்கியது. கைத்தொழில் துறையின் பாதுகாப்பு என்பது பழம் பொருளியலாளர்களின் பொருளியல் கோட்பாட்டின் "இளம் தொழில் வாதம்" என்பதனைப் பின்னணியாகக் கொண்டதாகவே காணப்பட்டது. கைத்தொழில் உற்பத்திகள் செயற்றிறன் வாய்ந்த பாதுகாப்பு இறுப்பு அமைப்பின் மூலமாகவும், நேரடியான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மூலமாகவும், மிகைப்பெறுமான அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் மூலமாகவும் செயற்படுத்தப்பட்டன. இந்நடவடிக்கைகளோடு இணைந்ததாக பொதுக்கூட்டுத் தாபன முதலீடுகள், முதலீடுகளின் மீது நேரடியான கட்டுப்பாடுகள் என்பனவும் நடைமுறையிலிருந்தன.

இறக்குமதிப் பதிலீட்டு உபாயம் என்பதனை நடைமுறைப்படுத்தியதன் மூலம் இலங்கை பல அனுகூலமற்ற விளைவுகளைப் பெற்றுக்கொண்டது. ஆரம்ப காலங்களில் கைத்தொழில் துறையானது ஓரளவு குறிப்பிடக்கூடிய வளர்ச்சியை அடைந்துள்ளது 1973 க்குப் பின்பு சடுதியாகக் குறைவடைந்துள்ளது. அதாவது கைத்தொழில்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1965 – 70 காலப்பகுதியில் வருடாந்தம் சராசரியாக 7.3 வீதத்தையும் 1970 – 73 காலப்பகுதியில் சராசரியாக வருடாந்தம் 2 2 வீதத்தையும், 1973 – 76 இல் சராசரியாக வருடாந்தம் 1.7 வீதத்தையும் அடைந்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள்கள், இடைத்தரப் பொருட்கள் என்பவற்றிலேயே உள்நாட்டு கைத்தொழில் என்பது பெருமளவில் தங்கியிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் பயன்பாடு என்பது 1975ஆம் ஆண்டில் 70 சதவீதமாகக் காணப்பட்டது. ஏற்றுமதிக்கான கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி மூலப்பொருட்களின் அளவு 40 சதவீதமாக இருந்தது. இதேபோன்று ஆலை உற்பத்தித் தொழில்களின் இயலளவுப் பயன்பாடு என்பதும்குறைவானதாகவே இருந்துவந்துள்ளது. உதாரணமாக 1970 இல் இயலளவுப் பயன்பாடு பொதுவாகக் கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகளில் 40 வீதமாகவே காணப்பட்டது.[10] கைத்தொழில் இயலளவு குறைவானதாகக் காணப்பட்டமைக்கான காரணம் இறக்குமதி மூலப்பொருள்கள் சீராகக் கிடைக்காமையும் நடைமுறைக்கு ஒவ்வாத பொறித் தொகுதிகள் இயந்திரங்கள் என்பன கைத்தொழில் உற்பத்திகளில் பயன்படுத்தப்பட்டமையும் எனலாம்.

இக்காலகட்டத்தில் கைத்தொழில் துறையின் சாதாரணமான செயலாற்றல் என்பதன் மூலமாகப் பொதுவான அபிவிருத்திக் குறிக்கோள்களான பொருளாதாரக்கட்டமைப்பினைப் பன்முகப்படுத்தல், மோசமடைந்துவருகின்ற வர்த்தக மாற்று வீதத்தின் வழியாக மேலும் தீவிரமடைந்து வருகின்ற சென்மதி நிலுவையின் சமமின்மையைக் குறைத்தல் என்ற குறிக்கோள்களை அடைய முடியவில்லை.

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பதனைப் பொறுத்தும் 1966 இல் தயாரிப்புத் துறையானது 11.6 சதவீதமான பங்கினையும் 1977 ல் 12.5 வீதத்தையும் பதிவு செய்திருந்தது. இப்புள்ளி விபரங்களிலிருந்து நாம் காணக்கூடியது என்னவெனில் இலங்கையின் கைத்தொழில் உற்பத்தியானது பொருளாதார அமைப்பினை பெருந்தோட்ட பொருளாதார அமைப்பிலிருந்து மாற்ற முடியவில்லை என்பதாகும். சென்மதி நிலுவைப் பிரச்சினை என்பதனைப் பொறுத்தும் கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகள் ஒரு சுமையாகக் காணப்பட்டதேயன்றி உதவியாக அமையவில்லை. மொத்த ஏற்றுமதி வருமானத்திலும் கைத்தொழில் ஏற்றுமதிகள் கணிசமான பங்களிப்பினைச் செய்யவில்லை. உதாரணமாக 1974 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்கள் உற்பத்தி தவிர்ந்த ஏற்றுமதி வருமானமாக ரூபா 137 மில்லியனை அல்லது மொத்த வருவாயில் 4% த்தையே கைத் தொழில் மூலமாகப் பெறமுடிந்தது.[11]

இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையைப் பயன்படுத்தியதனால் ஏற்பட்ட பிரச்சினைகளில் இருந்து விடுவித்துக் கொள்ளவும், பொருளாதாரத்தில் காணப்பட்ட அதிக உயர்ந்தளவான வேலையின்மையினைக் குறைக்கவும், குறைந்தளவான வளர்ச்சி வீதத்தைக் குறிப்பாக கைத்தொழில் துறையின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் கைத்தொழில் கொள்கைகள், குறிக்கோள்கள், உபாயங்கள் என்பனவற்றில் உடனடி மாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. இதே நேரம் புதிதாகப் பதவிக்கு வந்த யு. என். பி அரசாங்கத்தின் அரசியல் சித்தாந்தமும் முன்னைய அரசாங்கத்தின் சித்தாந்தத்தில் இருந்து வேறுபட்டதாகவே காணப்பட்டது. அத்தோடு கிழக்காசிய நாடுகளான தென் கொரியா, தாய்வான், ஹொங்கொங், சிங்கப்பூர், என்பனவற்றின் கைத்தொழில் அணுகுமுறையும், துரிதமான கைத்தொழில் வளர்ச்சியும் அம்மாதிரிகளை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி மேம்பாட்டு உபாயம் என்பதனை கைத்தொழில் துறை அபிவிருத்தியில் மேற்கொள்ளத் தூண்டுகோலாக அமைந்தது. தாராள மயப்படுத்தல் என்ற பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் ஏற்கனவே இருந்த வர்த்தக, அந்நியச் செலாவணி வெளிநாட்டு முதலீடு என்பனவற்றிற்குரிய கட்டுப்பாடுகளைப் படிப்படியாக நீக்குவதன் மூலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநோக்கிய பொருளாதார கைத்தொழில் - வர்த்தக உபாயம் ஒன்றின் மூலமே இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைய முடியும் என 1977 இல் பதவிக்கு வந்த அரசு கருதி அதனையே செயற்படுத்தத் தொடங்கியது. இதற்கான ஆரம்ப நடைமுறைகளாக ஏற்கனவே இருந்த இறுக்கமான இறை நாணயக்கொள்கை நடைமுறைகளைத் தளர்த்தத் தொடங்கியது. இறக்குமதிப் பொருட்களுக்குத் தொகை ரீதியாக இருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதோடு அதற்குப் பதிலாக உயர்ந்தளவான இறுப்பு விகிதங்கள் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்டன. அனுமதி முறையில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் எண்ணிக்கை 1977 இல் 281 ஆகவிருந்து 1980 இல் இவற்றின் எண்ணிக்கை 77 ஆகக் குறைக்கப்பட்டது.[12] அனுமதி முறையினை மேற்பார்வை செய்வதையே அரசு செய்து வந்தது. வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக வைத்திருப்பதற்காக இறுப்பு அமைப்புக்களைப் புதிய அரசாங்கம் மீளாய்வு செய்ததோடு இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து வைத்திருக்க இறுப்புக்களையே பயன்படுத்தி வந்தது. வரி அமைப்புக்கள் சீர்திருத்தி அமைக்கப்பட்டதோடு, தனியார், கம்பனி ஆகியவற்றின் முதலீட்டினை ஊக்குவிக்குமுகமாக அவர்களுக்கான வரிவிகிதங்கள் குறைக்கப்பட்டது. விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு சந்தைப் பொறிமுறையின் செயற்பாடு ஊக்குவிக்கப்பட்டது. அரசாங்கம் கொள்கையளவில் தனியார் மயமாக்கல் என்ற கருத்தினை ஏற்றுக்கொண்டதோடு புதிய தொழில் முயற்சிகளில் அரசாங்கம் முதலீடு செய்தல் என்பதும் ஊக்குவிக்கப்படவில்லை. மேலும் இதுவரை மிகை மதிப்பாக இருந்துவந்த இலங்கை ரூபாவினை மிதக்கவிடப்படுதல் மூலம் நாணய மாற்று வீதம் நிர்ணயிக்கப்பட்டது.

மேற்கூறிய கொள்கைகள் ஏற்றுமதி மேம்பாட்டு அணுகுமுறை உபாயத்தின் நடவடிக்கைகளை இலகுபடுத்த ஏற்படுத்தப்பட்டவையாகும். இக்கொள்கைகளோடு இணைந்ததாகச் சில நிறுவனரீதியான அமைப்புக்களையும் அரசாங்கம் புதியகைத்தொழில் அணுகுமுறைக்கு உதவியாக ஏற்படுத்திக் கொண்டது. அவற்றுள் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு, வெளிநாட்டு முதலீட்டு மதிப்புரைக்குழு, உள்நாட்டு முதலீட்டு மதிப்புரைக்குழு, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை என்பன பிரதான மானவையாகும். கொழும்பு பெரும்பாக ஆணைக்குழுவும், வெளிநாட்டு முதலீட்டு மதிப்புரைக் குழுவும் வெளிநாட்டு முதலீடுகளைக் கவரவும், முதலீட்டுக்கான உதவிகளைச் செய்யவும் ஏற்படுத்தப்பட்டனவாகும். முதலீட்டு மேம்பாட்டு நிலையமானது ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் என்பதனை ஊக்குவிக்கின்ற அரசின் பிரதான முகவராகவே செயற்பட்டது.

மூலப்பொருள் பற்றாக்குறையாலும், இயந்திரங்கள், அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் இன்மையாலும் தடைப்பட்டிருந்த உற்பத்தி நடவடிக்கைகள் தாராளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கை 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, 1978இல் கைத்தொழில்துறை 17 வீதமான மெய்வளர்ச்சி வீதத்தைக் காட்டியது. 1978 - 80 காலப் பகுதியில் சராசரியான மெய்வளர்ச்சி வீதம் 22 வீதமாகக் காணப்பட்டது. இச் சடுதியான வளர்ச்சி தாராள மயமாக்கல் கொள்கையின் உடனடி விளைவாக அமைந்தது. எனினும் 1977 – 85 வரையிலான காலப்பகுதியில் வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் 10 வீதமாகவே காணப்பட்டது.

கீழேயுள்ள அட்டவணையானது இலங்கையின் தயாரிப்புத்துறையின் மொத்தப் பொருளாதார உற்பத்தியின் பங்கினைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

இலங்கையின் தயாரிப்புத்துறையின் மொத்த பொருளாதாரப் பங்களிப்பு

| | 1962-69 | 1970-77 | 1978-85 | 1986-90 |
|---|---|---|---|---|
| 1. விவசாயம் | 30.7 | 26.72 | 24.27 | 24.3 |
| 2. சுரங்கம் அகழ்தல் | 0.50 | 2.05 | 3.43 | 2.8 |
| 3. தயாரிப்புத் தொழில் | 15.36 | 15.78 | 13.82 | 17.0 |
| 3. 1. தயாரிப்புத் தொழில் (ஏற்றுமதி பதனிடல்நீக்கி) | 7.28 | 9.76 | 9.84 | ...... |
| 4. கட்டிடத்துறை | 3.92 | 4.66 | 4.70 | 7.2 |
| 5. சேவைகள் | 49.45 | 50.89 | 53.77 | 51.2 |
| 6. மொத்தம் | 100.00 | 100.00 | 100.00 | 100.00 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி, பல்வேறு ஆண்ட அறிக்கைகள்.

தயாரிப்புத்துறை வெளியீடு என்பதில் ஏற்றுமதிக்காகப் பதனிடப்பட்ட உற்பத்திகளான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களின் பெறுமதிகளும், தொழிற்சாலைக் கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதிகள், சிறிய கைத்தொழில் பெறுமதிகளும் அடங்குகின்றன. ஏற்றுமதிக்காகப் பதனிடப்பட்ட பெருந்தோட்ட உற்பத்திகள் பெரும்பாலும் அரசதுறைக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களிலும், ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திலும் பெருமளவில் காணப்படுகின்றது. தொழிற்சாலையளவில் நடைபெறுகின்ற கைத்தொழில் நடவடிக்கைகள் பெரிய, நடுத்தரக் கைத்தொழிலாகக் காணப்படுவதோடு, கொழும்பிலும் உப நகரப் பகுதிகளிலும் செறிவாக அமைந்துள்ளதாகவும், பெரும்பாலும் இத் தொழில்கள் அரசாங்கத்துறையைச் சேர்ந்தவையாகவும் உள்ளன. சிறிய கைத்தொழில்கள் பெரும்பாலும் தனியாருக்கே சொந்தமானதாகும். இத்தொழில் நடவடிக்கைகள் முக்கிய நகரங்களுக்கு வெளியேயும் காணப்படுகின்றன. தயாரிப்புத் தொழில்துறை வெளியீட்டில் தொழிற்சாலைக் கைத்தொழில் ஏறக்குறைய 65 வீதமான பங்கினையும், ஏற்றுமதிக்காகப் பதப்படுத்தப்படும் கைத்தொழில் 22 வீதமான பங்கினையும், சிறிய கைத்தொழில்களும் ஏனையவையும் 13 சதவீதத்துக்கும் பொறுப்பாக இருக்கின்றன. எனவே தயாரிப்புத்தொழில்துறை உற்பத்தி நடவடிக்கைகளில் தொழிற்சாலைக் கைத்தொழில் முதன்மையான பங்களிப்பைச் செய்கின்றது என்பது வெளிப்படையானது. இலங்கையின் கைத்தொழில் துறையின் செயலாற்றல் பற்றி மதிப்பீடு செய்கின்றபோது ஏற்றுமதிப்பதனிடல் நீக்கி பொருளாதார உற்பத்தியில் கைத்தொழில் நடவடிக்கைகளின் பங்கு என்ன என்பதை மதிப்பிடல் பயனுள்ளது. இதனை அட்டவணை(1) இல் 3.1 என்ற நிரை காட்டுகின்றது. இலங்கையின் தயாரிப்புத் தொழில், கைத்தொழில், தொழிற்சாலைக் கைத்தொழில் (ஏனையவை) ஆகிய துறைகளின் வளர்ச்சி வீதங்கள் 1965-80 காலப் பகுதியில் சராசரியாக முறையே 3.2, 4.7 சதவீதமாகவும் 1980-89 காலப்பகுதியில் முறையே 6. 2, 4. 4 சதவீதமாகவும் காணப்பட்டது.[13]

இலங்கை மத்திய வங்கி கைத்தொழில் துறையினை எட்டு உப பிரிவுகளாகப் பிரித்து மொத்த கைத்தொழில் உற்பத்தியில் ஒவ்வொரு உப துறைகளினதும் ஒப்பீட்டு ரீதியான பங்களிப்பை குறிப்பிட்டுள்ளது. கீழேயுள்ள அட்டவணையானது பல்வேறு உபதுறைகளின் பங்களிப்பினைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

## தொழில் வகைகளின் அடிப்படையில் கைத்தொழில் துறையில் ஏற்பட்டமாற்றம்

| | 1963/64 | 1976/77 | 1984/85 | 1990 |
|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 50 | 30.4 | 25.6 | 25.3 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோலுற்பத்திகள். | 14.3 | 10.5 | 22.8 | 32.2 |
| 3. மரம், மர உற்பத்திகள். (தளபாடங்கள் உட்பட) | 1.6 | 1.9 | 1.7 | 0.84 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் | 4.8 | 3.5 | 2.7 | 2.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாஸ்ரிக் உற். | 16.7 | 36.8 | 39.9 | 24.4 |
| 6. உலோகமல்லா கனிப்பொருள் உற். | 5.3 | 5.8 | 4.9 | 8.7 |
| 7, அடிப்படை உலோக உற்பத்திகள் | ----- | 2.0 | 0.4 | 1.15 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோ உற். | 5.2 | 7.9 | 4.0 | 4.78 |
| 9. ஏனையவை | 1 5 | 0.4 | 0.3 | 0.33 |
| | 100.00 | 100.00 | 100 00 | 100.00 |

ஆதாரம்;- இலங்கை மத்திய வங்கி, பல்வேறு ஆண்டறிக்கைகள்.

ஆரம்ப காலப் பகுதியில் உணவு குடிபானங்கள், புகையிலை என்ற தொழிற் கைத்தொழில் உபபிரிவு பெரியளவான பங்கினை புகையிலை உற்பத்தி, கரும்பு உற்பத்தி, கள்ளுற்பத்தி, பாலுற்பத்தி, என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பால் கொண்டிருந்தபோதும், சமீப காலங்களில் புடவைகள், அணியும் ஆடைகள், தோலுற்பத்திகள் என்ற பிரிவு முதன்மைப் பிரிவாக உள்ளதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாஸ்ரிக் உற்பத்திகள் என்ற பிரிவு மொத்த உற்பத்தியில் கணிசமான பங்கினை வகிக்கின்ற உபபிரிவாகக் காணப்படுகின்றபோதும் கைத்தொழில்துறையின் கூட்டப்படுகின்ற பெறுமதி என்பதில் மிகக் குறைவான பங்கினையே வகிப்பதால் இவ் உபபிரிவானது கைத்தொழில் நடவடிக்கைகளில் பிரதான ஒரு பிரிவாகக் கருதமுடியாது.

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் கைத்தொழிலாக்கத்தின் முதற்கட்டமாகப் புடவைகள் உற்பத்தியும், அதனோடு சேர்ந்து உணவு பதனிடலும் முதலில் வளர்ச்சியை அடைந்து வருவது ஒரு விதியாக எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது.[14] இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. இத்தொழில் நடவடிக்கைகளைத் தொடர்ந்து போக்குவரத்துச் சாதனங்களின் உற்பத்தி, கனரக உற்பத்திகள் இரசாயன - உலோக உற்பத்திகள் வளர்ச்சியடைந்து செல்லும். ஆனால் இலங்கையில் கனரக உற்பத்திக்கான வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது.



பொது சன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அபிவிருத்தியில் கைத்தொழிற்துறையின் செயலாற்றத்தினை மதிப்பிடுகின்றபோது கூட்டப்படும் பெறுமதி என்பதனைக்கொண்டு மதிப்பிடல் பயனுள்ளதாக அமையும். கூட்டப்படும் பெறுமதி என்பது வெளியீட்டின் தொழிற்சாலைப் பெறுமதியிலிருந்து இறக்குமதி மூலப்பொருட்களின் செலவுகளைக் கழிப்பதன் மூலம் பெறப்படுகின்றது. கூட்டப்படும் பெறுமதியில் உள்நாட்டு மூலப்பொருட்கள், கூலி, இலாபம், வட்டி தேய்வுகள், எரிபொருள், இயந்திரங்கள் ஏனைய சேவைகள் என்பனவற்றிற்கான செலவுகள் அடங்கியுள்ளன.[15]

வளர்ந்துவருகின்ற தொழிற்படையினருக்கு வேலை வாய்ப்பினை வழங்குதல் என்ற கொள்கையிலேயே இலங்கையின் கைத்தொழில் அணுகுமுறைகள் ஊழியச் செறிவான தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டுமென அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றது. இலங்கையில் கல்வி அறிவுள்ளதும் இலகுவாகத் தேர்ச்சியளிக்கக்கூடியதுமான தொழிற்படையே வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர வாய்ப்பாகக் காணப்பட்டது. அத்தோடு தொழிலாளர்களுக்கான கூலியும் ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகின்றபோது மிகக் குறைவாகவேயுள்ளது. தயாரிப்புத்துறையானது 1973 இல் மொத்த வேலைவாய்ப்பில் 9.3 சதவீதமான பங்கினருக்கும் 1978/79 இல் 13.6 சதவீதமானவர்களுக்கும், 1981/82 இல் 12.4 சதவீதமானவர்களுக்கும் வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது. இந்நிலைமையினை தென்கொரியா, ஹொங்கொங் ஆகிய நாடுகளின் புள்ளி விபரங்களோடு ஒப்பிடும்போது மிகக்குறைவாகவே உள்ளது. இலங்கையின் கைத்தொழில்துறையில் வேலைபெற்றுள்ளோரின் புள்ளி விபரங்களைத் தொடர்ச்சியான வகையில் பெற்றுக்கொள்ளுதல் கடினமானதாகையால் வெவ்வேறு காலங்களில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீடுகளிலிருந்தே தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. கீழேயுள்ள அட்டவணையானது வெவ்வேறு காலங்களில் கணிப்பிட்ட புள்ளிவிபரங்களிலிருந்து கைத்தொழில் துறையில் வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கைகளை காட்டுகின்றது.

அட்டவணை 3

தயாரிப்புத்துறையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை.

| ஆய்வு / மூலம் | வருடம் | தொழிலாளர்களின் எண்ணிக்கை (ஆயிரத்தில்) |
|---|---|---|
| 1. தொழிற்படையும், சமூக பொருளாதார மதிப்பீடும் - ( குடிசன புள்ளிவிபரத் திணைக்களம் ) | 1969 / 70 | 379.4 |
| 2. குடிசன மதிப்பீடு ( குடிசன புள்ளிவிபரத் திணைக்களம் ) | 1971 | 339.4 |
| 3. நுகர்வோர் நிதியும், சமூக பொருளாதார மதிப்பீடும். ( மத்திய வங்கி ) | 1973 | 313.7 |
| 4. நுகர்வோர் நிதியும், சமூக பொருளாதார மதிப்பீடும். ( மத்திய வங்கி) | 1978 / 79 | 630.0 |
| 5. குடிசன மதிப்பீடு ( குடிசன புள்ளி விபரத் திணைக்களம் | 1981 | 416.8 |
| 6. நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார மதிப்பீடும். ( மத்தியவங்கி ) | 1981 / 82 | 577.5 |
| . தொழிற்படையும், சமூக பொருளாதார மதிப்பீடும் (குடிசன புள்ளிவிபரத் திணைக்களம் ) | 1985 / 86 | 648.5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணை யானது பல வேறுகாலப் பகுதிகளில் பெறப் பட்ட கணிப்பீடுகளைத் தொகுத்துத் தரு வதாகவேயுள்ளது. இங்கு தாயரிப்புத்துறை முழுவதையும் உள்ளடக்கிய வேலை அளவு என்பதே தரப்பட்டுள்ளது. தயாரிப்புத் துறையில் உள்ள கைத்தொழில் நடவடிக் கைகளில் முறைசார்ந்த (சட்டரீதியாகப் பதியப்பட்ட) முறைசாரா (சட்டரீதியா கப் பதியப்படாத) கைத்தொழில் என்ற இருபிரிவுகளும் அடங்குகின்றன. 1969 / 70 காலப்பகுதியில் குடிசன புள்ளிவிபரத்தி ணைக்கள கணிப்பீடுகளின்படி 379.4 ஆயி ரம் தொழிலாளர்களை வேலைக்கமர்த்திய தயாரிப்புத்துறை, ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் கொள்கையின் விளைவாக 1978 / 79 காலப்பகுதியில் இலங்கை மத் திய வங்கியின் கணிப்பீட்டின்படி 630 ஆயி ரம் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி யுள்ளது. இவ் அதிகரிப்பு விகிதம் திறந்த பொருளாதாரக் கொள்கையினூடாக கைத் தொழிற் துறையின் சடுதியான அபிவிருத் திக் குறிகாட்டிகளான கைத்தொழில் உற் பத்தி வெளியீட்டு விகிதம், இயலளவுப் பயன் பாட்டு வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைவானதாகவே காணப்படுகின்றது. கைத்தொழில் துறையின் வேலைவாய்ப்பு நிலையைப் பற்றிய புள்ளிவிபரங்கள், முறை சார்ந்த கைத்தொழில் நடவடிக்கைகளைப் பற்றியவை கீழே தரப்பட்டுள்ள அட்டவ ணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை: 4

### தயாரிப்புத் துறையில் வேலை

| வருடம் | எண்ணிக்கை | வளர்ச்சி % | வருடம் | எண்ணிக்கை | வளர்ச்சி % |
|---|---|---|---|---|---|
| 1970 | 105105 | 1.32 | 1978 | 136168 | 14.83 |
| 1971 | 110191 | 4.83 | 1979 | 146260 | 7.41 |
| 1972 | 123896 | 12.51 | 1980 | 154563 | 5.68 |
| 1973 | 105715 | – 14.73 | 1981 | 164440 | 6.39 |
| 1974 | 96668 | – 8.56 | 1982 | 170577 | 3.73 |
| 1975 | 107944 | 11.66 | 1983 | ........ | ..... |
| 1976 | 112288 | 4.02 | 1984 | ........ | ..... |
| 1977 | 118576 | 5.60 | 1985 | 206172 | ..... |

ஆதாரம்: அட்டவணை மூன்றில் குறிப்பிடப்பட்டவை.

மேலே தரப்பட்ட தரவுகள் முழுமை யற்ற தரவுகளாகவே கொள்ளப்பட வேண் டும். சட்டரீதியாக அங்கீகரிக்கப்படாத கைத் தொழில் முயற்சிகள் இப்புள்ளிவிபரங்களில் உள்ளடக்கப்படாமையால் தயாரிப்புத் துறையில் உள்ள வேலை வாய்ப்புப் பற்றிய தரவுகள் இதற்கு முன் காட்டப்பட்ட அட்ட வணையிலிருந்து வேறுபடுகின்றது. எனினும் மேலுள்ள அட்டவணையின்படி 1970 – 77 காலப்பகுதியில் வேலைவாய்ப்பு சராசரியாக 2.8 சதவீதமாகவும், 1978 / 82 காலப்பகு தியில் சராசரி வளர்ச்சி 7.6 சதவீதமாகவும் காணப்படுகின்றது. 1982 / 90 ஆண்டுகாலப் பகுதியில் இது மேலும் குறைவடைந்துள் ளது.

வேலை வாய்ப்பு என்பதனை உபகைத் தொழில்துறை அடிப்படையில் பார்க்கின்ற போது புடவைகள், அணியும் ஆடைகள், உணவு, குடிபானங்கள், புகையிலை, உலோகமல்லாக் கனிப்பொருட்கள், உருவ மைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், கருவி கள், பொறிகள் ஆகிய உப பிரிவுகளே கூடு தலான தொழில் வாய்ப்புகளைக் கொண் டுள்ளன. இதே போன்று தொழிலாளர் களுக்கான வேலைவாய்ப்பினைத் தனியார் பொதுத்துறை என்று பிரித்துப் பார்க்கின்ற போது 1980 ஆண்டுவரை பொதுத்துறை மூலம் கைத்தொழில் வேலையாக்கம் என்பது அதிகளவாகக் காணப்பட்டதெனினும், இந் நிலமை படிப்படியாகக் குறையத்தொடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியது. 1985 ஆம் ஆண்டில் தயாரிப்புத் தொழிலில் 66 சதவீதமான வேலைவாய்ப்பு என்பது தனியார் துறையாலேயே வழங்கப் பட்டது.

பொதுவாகக்கூறின் சாதாரண வளர்ச்சி வீதத்தையும், ஒரு குறுகிய அடித்தளத்தையும் கொண்டதான இலங்கையின் கைத் தொழில்துறையானது, வளர்ந்துவருகின்ற வேலைப்படையினருக்கும், ஏற்கெனவே விவசாயத்துறையில் கீழுழைப்பு, மறைமுக வேலையின்மை என்பவற்றையும்கொண்ட ஒரு சிக்கலான வேலையின்மைப் பிரச்சினைக்குச் சாதகமான தீர்வை ஒரு குறுகிய காலத்தில் வழங்கும்என நாம் எதிர்பார்க்க முடியாது. (அட்டவணை 5)

மொத்த ஏற்றுமதி வருவாயினை அடிப் படையாகக்கொண்டு தயாரிப்புத் தொழில் துறையின் செயலாற்றம் பற்றிய மதிப்பீடு சிலவேளைகளில் தவறான கணிப்பீடாகவும் அமையலாம்.[16] ஏனெனில் பெரும்பாலான கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகள் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களைக்கொண்டும், சில உற்பத்தி நடவடிக் கைகள் இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப் பாகங்களைப் பொருத்துகின்ற நடவடிக் கைகளையும் மேற்கொள்வதனால் மொத்த ஏற்றுமதி வருவாயைக் கொண்டு ஒப்பீடுப் செய்தல் பொருத்தமற்ற ஒன்றாகக் கருதப் படுகிறது. எனவே ஏற்றுமதி வருவாய்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளினைச் சரி செய்து பெறுகின்ற தரவுகளே சிறந்தவை. எனினும் இக்கட்டுரையின் நோக்கம் கைத்தொழில் செயலாற்றம் என்பதனை வெவ்வேறு புள்ளிவிபரங் களை ஒப்பீட்டு ரீதியாக நோக்கி மதிப்பீடு செய்வது என்பதனால் தனியே ஏற்றுமதி வருவாய்களினைச் சரிசெய்தல் என்ற ஆய்வு முறையை கவனத்தில்கொள்ளவில்லை. பொதுவாக மொத்த ஏற்றுமதி வருமானத் தரவுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. பெற்றோலியம் தவிர்ந்த தயாரிப்பு துறையின் ஏற்றுமதி வருவாயின் பங்களிப்பு படிப்படியாக அதிகரிப்பதையும், வருடாந்தச் சராசரி வளர்ச்சிவீதம் 1974 – 77 காலப்பகுதியில் 52.6 சதவீதமாகவும், 1978 – 80 காலப்பகுதியில் 51.8 சதவீதமாகவும், 1981 – 84 காலப்பகுதியில் 32.7 சதவீ மாகவும் 1984 – 90 காலப்பகுதியில் 30 சத வீதமாகவும் காணப்படுகின்றன 1986 ஆம் ஆண்டிலிருந்து புடவைகளும், ஆடைகளும் இலங்கை ஏற்றுமதியில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் தொடர்ந் தும் 1990 ஆம் ஆண்டிலும் ஏறக்குறைய 32 சதவீதமான பங்கினை ஏற்றுமதியில் பெறுகிறது. மொத்த ஏற்றுமதி வருவாயில் கைத்தொழில் துறை 51 சதவீத பங்கினை 1990 இல் பதிவு செய்துள்ளது.

## இலங்கையின் கைத்தொழில் துறையின் குறைபாடுகள்

ஏறக்குறைய பதினைந்து வருடங்களுக்கு மேலாக ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத் தொழில் கொள்கையை மேற்கொண்டு ''வெளிநோக்கிய பார்வை'' யில் ஓரளவுக்கு சந்தைச் சக்திகளினை தொழிற்பட வைக்கின்ற இலங்கையின் கைத்தொழிற்துறையானது பெரியளவான வளர்ச்சி வீதத்தையோ கைத்தொழில் வளர்ச்சி மாதிரியினையோ அடைந்துள்ளதாகக் கூறுவதற்கில்லை. இத் தோல்வி விகிதத்தைப் புள்ளிவிபரங்கள் ரீதியாக நிரூபிக்கமுடியாதவிடத்தும் இக்கொள்கையானது எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை என்று கூறுதல் முடியும் இலங்கை சிறிய நாடாக உள்ளதால் வரையறுக்கப்பட்ட உள்நாட்டு சந்தை காணப் படுவதோடு வெளிநாடுகளில் ஏற்படுகின்ற விலை ஏற்ற இறக்கங்கள், பொருளாதார மந்த நிலைகள் என்பனவற்றினாலும் இலகுவில் பாதிப்படையக் கூடியதாகவுள்ளது. அத்துடன் இலங்கையின் கைத்தொழில் துறையின் வளர்ச்சியானது ஒரு நிலைத்து நிற்கக்கூடியதாக அல்லாமல் ஒரு சாதாரண வளர்ச்சியாகவே இருந்து வந்துள்ளது. மேலும் கைத்தொழில் ஆக்கம் என்பதும் சடுதியாக ஏற்படவேண்டியதில்லை. ஆனால் நிலைத்து நிற்கக்கூடியதாகவும், இறுக்கமான கைத்தொழில் அடித்தளத்தினைக் கொண்டதாகவும் அமையவேண்டும். இலங்கையின் கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகள் ஒரு ஆரம்பகால கட்டத்திலேயே இன்னமும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5

## ஏற்றுமதி செயலாற்றம்: பொருட்களின் வகைகள்
(வீதாசார பங்களிப்பு)

| | 1974 | 1977 | 1980 | 1984 | 1988 | 1990 |
|---|---|---|---|---|---|---|
| 1. பிரதான விவசாய உற்பத்திகள் (தேயிலை, இறப்பர், தென்னை) | 71.6 | 72.8 | 54.4 | 57.4 | 38.7 | 35.0 |
| 2. சிறிய விவசாய விளைபொருட்கள் | 8.5 | 7.7 | 7.1 | 5.1 | 5.6 | 4.3 |
| 3. கனிப்பொருட்கள் | 3.9 | 5.0 | 4.6 | 2.5 | 5.8 | 4 5 |
| 4. கைத்தொழில் பொருட்கள் (பெற்றோலியம் தவிர) | 3.6 | 5.6 | 14.4 | 25.5 | 45.0 | 51 0 |
| 5. பெற்றோலிய உற்பத்திகள் | 10 1 | 9.1 | 17.8 | 8.9 | 5.0 | 5,2 |
| 6. மொத்தம் (ஏற்றுமதி பெறுமானம் நடைமுறை எஸ். டி. ஆர். பெறுமதி) | 433.0 | 628.5 | 812.0 | 1412.6 | 1061.4 | 1350.0 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி பல்வேறு ஆண்டறிக்கைகள்

குறிப்பு: மாற்று வீதம்
1974: 1 சி எ உ = ரூ. 8.03
1977: 1 சி எ உ = ரூ. 10.42
1980: 1 சி எ உ = ரூ. 21.52
1984: 1 சி எ உ = ரூ. 26.08
1988: 1 சி எ உ = ரூ. 42.7577
1990: 1 கி எ உ = ரூ. 54,4216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சுதேச முதலீட்டாளர் வர்க்கம் பெருந்தோட்டத்துறையை மையமாகக்கொண்டு, பிரித்தானிய முதலீட்டாளர்களுடன் இணைந்தவகையில் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாக வளர்ச்சியடைந்து வந்தபோதும், இவ்வர்க்கம் கைத்தொழில் துறையினால் உள்ளிழுத்துக்கொள்ளப்படாது இருப்பது துரதிஷ்டவசமானதாகும். இதனால் நீண்டகாலமாக கைத்தொழில்துறை குறிப்பாக ஆலைக் கைத்தொழில்கள் அரச முயற்சிகளையும் பொது முதலீடுகளையுமே கொண்டு அபிவிருத்தி செய்யப்படவேண்டியிருந்தது. சமீப காலத்தில் தனியார் முதலீடுகளை ஊக்குவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இந்நடவடிக்கைகள் பெரியளவான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. தென்கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளில் விவசாய நிலச் சீர்திருத்த சட்டங்களின் வழியாகச் கிராமியத் துறையிலிருந்து பெரிய முதலீட்டாளர்கள் கைத்தொழிற்துறை முதலீட்டாளர்களாக மாற்றப்பட்டனர். மாறாக இலங்கையின் நில உச்சவரம்பு எல்லைகள் அதிகளவாக இருந்தமையால் விவசாயத்துறையிலே முதலீடுகள் செய்ய அவர்களுக்கு வாய்ப்பு இருந்தது. அத்தோடு இலங்கை கைத்தொழில் முதலீடுகளுக்கான நிதியைப் பெறுவதில் பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. கைத்தொழில் முதலீடுகளைக் கடனாகவோ அல்லது உதவியாகவோ வெளிநாடுகளிலிருந்தோ அல்லது சர்வதேச நிறுவனங்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ளவில்லை. சமீப காலங்களில் கடன் சேவைப் படுத்தல் விகிதம் என்பதும் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. உள்நாட்டு மொத்தச் சேமிப்பு என்பது 1960 ஆம் ஆண்டளவில் 9 சதவீதமாக இருந்து இது 1981 இல் 12 சதவீதமாகவும், 1990 இல் 14 சதவீதமாகவும் காணப்பட்டது. வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது 1977 க்கு முன்னர் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

அனேகமான குறைவிருத்தி நாடுகளில் குடியேற்ற காலனித்துவ வாதத்தினைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட கைத்தொழிலாக்கம், துரித பொருளாதார வளர்ச்சியையும், வேலையாக்கத்தினையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் இலங்கையின் கைத்தொழில் நடவடிக்கைகள் குறிப்பாக 1957 ஆம் ஆண்டுக்குப் பின்பே தொடங்கப்பட்டன இதனால் இலங்கை ஏற்றுமதிக் மேம்பாடு கைத்தொழில் உபாயத்தை காலம் பிந்தியே கைக்கொள்ளவேண்டியிருந்தது. தென்கொரியா 1963, லும் தாய்வான் 1961 லும், ஏற்றுமதி மேம்பாடு உத்தியினைக் கையாளத் தொடங்கியதோடு அக்காலப் பகுதியில் உற்பத்திக்களுகான சந்தைப்படுத்தலில் பிரச்சினை காணப்படவில்லை. குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் தற்போது கையாளும் இறுப்புக்களல்லாத தடைகளான கோட்டா முறைகளினால் கைத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்கள் வரையறுக்கப் பட்டிருக்கவில்லை

இலங்கையின் தயாரிப்புத் துறையானது ஏனைய துறைகளான முதற்துறை சேவைத்துறை என்பனவற்றோடு ஒப்பிடுகின்றபோது இன்னும் பொருளாதார உற்பத்தி வளர்ச்சியில் பெரியளவான பங்களிப்பைச் செய்யவில்லை என்றே கூறவேண்டும். உதாரணமாக வர்த்தகம் செய்யக்கூடிய துறைகள் (விவசாயம், சுரங்கமறுத்தல், தயாரிப்புத்துறை) வர்த்தகம் செய்யமுடியாத துறைகளான கட்டிடத்துறை, போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொலைத் தொடர்புகள், பொதுப்பயன் பொருட்கள் என்பவை மிக அதிகளவான பங்கினைத் துறைரீதியான வெளியீட்டில் கொண்டுள்ளன. நேரடி உற்பத்தித்துறைகளான விவசாயம், சுரங்கத் தொழில் என்பனவற்றோடு ஒப்பிடுகின்றபோது தயாரிப்புத் தொழில் வளர்ச்சியடைந்து வருகின்றபோதும் வர்த்தகத்தில் ஈடுபடாத துறைகளோடு ஒப்பிட்டு நோக்கின் தயாரிப்புத்துறை பின் தங்கியே உள்ளது. நீண்டகாலப் பகுதியில் நேரடியான உற்பத்தித்துறையானது வளர்ச்சியடையாத போது வர்த்தகத்தில் ஈடுபடாத துறையின் வளர்ச்சி நிலைத்து நிற்க முடியாது. இது நிலைத்து நிற்க வேண்டுமாயின், கைத்தொழில் துறையின் வளர்ச்சியே முன் நிபந்தனையாக அமையவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இலங்கையின் கைத்தொழில் துறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட கைத் தொழில்கள் (சட்டரீதியாகப் பதியப்பட்டவை) ஒரு பகுதியாகவும், ஒழுங்குபடுத் தப்படாத கைத்தொழில்கள் (சட்டரீதியா கப் பதியப்படாதவை) வேறு ஒரு வகை யாகவும் உள்ளன. பிற்குறிப்பிட்ட வகை யைச் சேர்ந்த கைத்தொழில்கள் மொத்தத் தயாரிப்புத் தொழில் உற்பத்தியில் பிர தான பங்கினை வகிக்கின்றன. கைத்தொ ழில் அபிவிருத்திச் சபையால் 1976 இல் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி 15559 கைத்தொழில் நடவடிக்கைகள் பதி யப்படாத வகையில் அடங்குகின்றன. வேறுசில கணிப்பீடுகளின்படி மொத்தக் கைத்தொழில் நடவடிக்கையில் 90 பொதுக் கூட்டுத்தாபனங்களும் 2000 பதிவு செய்யப் பட்ட கைத்தொழில்களும், 20000 பதிவு செய்யப்படாத கைத்தொழில் அலகுகளும் உள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. உலக வங்கியின் மதிப்பீடொன்றின்படி பதிவு செய்யப்படாத சிறிய கைத்தொழில்கள் ஏறக்குறைய கைத்தொழிலில் 44 சதவீத கூட்டப்படும் பெறுமதிக்கும் 67 சதவீத வேலையையும் அளிப்பதாகக் கூறப்பட்டுள் ளது. சரியான தகவல்கள் இல்லாததால்திட மான முடிவுகளைக் கூறமுடியாது. ஆனால் 1977 ஆம் ஆண்டுக்குப் பின்பாக ஏற்பட்ட கைத்தொழில் உபாயத்தினால் இவ்வகையில் உள்ள கைத்தொழில் நடவடிக்கைகள் வெகு வாகப் பாதிப்படைந்துள்ளன.

நீண்ட காலமாகக் கைத்தொழில் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இருந்துவந்துள்ளன. 1977 காலப்பகுதிக் குப் பின்னர் வெளிநாட்டுக் கைத்தொழில் முதலீடுகள் கொழும்பு பெரும்பாக ஆணைக் குழுவினதும், வெளிநாட்டு முதலீட்டு ஆலோசணைக்குழுவினதும் சிபார்சுகளின் பேரில் சுதந்திர வர்த்தக வலயங்களுக்குள் ளேயும் (முதலாவது சுதந்திரவர்த்தக வல யம் கொழும்பு - கட்டுநாயக்க, இரண்டாவது கொழும்பு – பியகம, மூன்றாவது காலி ஹொக்கல, வெளியேயும் முதலிட வாய்ப்புக்கள் வழங்கப்பட்டது. இம் முதலீடுகளின் மூலம் நேரடி முதலீடு களை மட்டுமல்லாது தொழில்நுட்ப முன்னேற்றம், நிபுணத்துவம், தொழிலா ளர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் எதிர் பார்க்கப்பட்டன. ஆனால் எதிர்பார்த்த விளைவுகள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை குறிப்பாக ஆடைகள், உடுதுணிகள் போன்ற துறைகளின் உற்பத்தியிலேயே இம் முத லீடுகள் குவிந்து காணப்பட்டதோடு முத லீட்டாளர்கள் தமக்குள்ள சலுகைகளைப் பயன்படுத்தி பங்குஇலாபங்கள், இலா பங்கள் என்பனவற்றை வெளியனுப்புவதால் ஏற்படுகின்ற சென்மதி நிலுவையின் தாக் கங்களையும் பற்றி மதிப்பீடு செய்யப்பட் டால் மட்டுமே வெளிநாட்டு முதலீட்டின் சாதகமான விளைவுகள் பற்றிக் கூறமுடியும்.

இலங்கை அடிப்படையில் ஒரு விவசாய நாடாகவும், கிராமிய பொருளாதாரத் துறை நடவடிக்கைகள் மேம்பட்டுள்ளதாக வும் காணப்படுவதால் கைத்தொழில்துறை யானது விவசாயக் கைத்தொழிலாகவும், கிராமியக் கைத்தொழில் நடவடிக்கைகளா கவும் அமைய வேண்டும் என அறிவுறுத்தப் படுகின்றது. இதன் மூலம் கைத்தொழில் அடித்தளம் என்பதனை மாற்றியமைக்க முடியும். கைத்தொழில் துறையின் நடவ டிக்கைகளை மேற்பார்வை செய்யக்கைத் தொழில் விஞ்ஞான அமைச்சு, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, புட வைக் கைத்தொழில் அமைச்சு, நிதி திட்ட மிடல் அமைச்சு போன்ற அமைச்சுக்கள் இருந்தபோதும் கைத்தொழில் ஆய்வு என் பதனைச்செய்யப் போதுமான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுவதில்லை.

## இலங்கையின் கைத்தொழில் எதிர்நோக்கும் சவால்கள்

அ) இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழிலாக்கத்தினை மேற் கொண்டு வருவதனால் கைத்தொழில் பொருட்களுக்கான சந்தை என்பது வெளிநாடுகளிலேயே உள்ளது. புதிய சந்தைகளைத் தேடிப்பெறவேண்டிய தோடு ஏற்கனவே உள்ள சந்தைக ளையும் தொடர்ந்து பேணிப்பாதுகாப் பது அவசியமானது. வளர்ச்சிய டைந்த நாடுகள் தமது கைத்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பாதுகாப்பதற்காக வளர்ச்சியடைகின்ற நாடுகளின் கைத்தொழில் பொருட்களுக்கான தடைகள், கட்டுப்பாடுகள் என்பன விதிக்கப்படுகின்ற வேளையில் புதிய சந்தைகளைப் பெறுதல் சிக்கலானது. இலங்கையின் வெளிநாட்டுச்சந்தையை பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவன ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகள் குறைவாகவேயுள்ளது. வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களும், வர்த்தக அமைச்சுமே கைத்தொழில் சந்தைப்படுத்தல் நடவடிக்கையைச் செய்துவருகின்றன.

ஆ) இலங்கை சர்வதேச ரீதியில் தனது உற்பத்திப் பொருட்களைப் போட்டி அடிப்படையில் விற்பனை செய்ய வேண்டியிருப்பதாலும், புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தவேண்டியுள்ளதாலும் இது ஊழியச் செறிவான உற்பத்தி நுண்முறை என்ற கருத்தில் இருந்து விலகிச் செல்ல வழி வகுக்கின்றது.

இ) கைத்தொழில் பொருட்களுக்கான உள்நாட்டு வெளிநாட்டுக் கேள்விகள் இல்லாமல் இருப்பதும், இந்நிலைமையை மாற்றி உற்பத்திகளுக்கான கேள்வியை அதிகரிக்க வேண்டிய நிலைமையும் இருந்து வருகின்றது.

ஈ) இலங்கையின் கைத்தொழில் அடித்தளத்தை மாற்றக்கூடியளவு முதலீட்டுக்கான நிதிகள் இல்லாமல் இருக்கின்றது. இதனை ஊக்குவிப்ப தற்காகக் கைத்தொழில்துறை மீதான முதலீடுகளுக்குக் கவர்ச்சிகரமான பிரதிபலன் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட வேண்டும். அதனோடு மூலதனத்தின் திறமையான பயன்பாடு என்பதனையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். சுதந்திர ஊக்குவிப்பு வலயங்களில் வெளிநாடுகளில் பாவிக்கப்பட்ட இயந்திரங்கள் இங்கு இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. வெளிநாட்டு முதலீடுகளை கவர்ச்சிகரமானதாக மாற்ற உள்நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்கவேண்டிய தேவையும் அரசுக்கு ஒரு நிர்ப்பந்தமாக இருக்கின்றது. சமீப காலங்களில் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களின் பயனாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் பெரியளவான உள்நாட்டுச் சந்தையும் இம் முதலீட்டாளர்களுக்கு மேலும் ஊக்கமளிப்பதாகவுள்ளது. இதனால் இலங்கையில் உள்ள வெளிநாட்டு முதலீடுகள் இந்தியாவுக்குச் சென்றடையக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. ஏற்கெனவே முதலீட்டுப் பற்றாக்குறையாகவுள்ள இலங்கையின் கைத்தொழில் துறைக்கு இது மேலும் பிரச்சினையாக மாறமுடியும். இதனைவிடப் புடவைகள், தைத்த ஆடைகள் என்பனவற்றில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையின் ஏற்றுமதிக் கோட்டாவின் உச்சப்பயன்பாட்டினை பெற்றுள்ளதால் இந்நிறுவனங்கள் பங்களாதேஷ் போன்ற புதிய புடவை கைத்தொழில் மையங்களுக்கு நகர வாய்ப்புண்டு.

உ) இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியில் விவசாயக் கைத்தொழில்களை ஊக்குவிக்கவேண்டும் என்பதனை வாதிடுகின்றவர்கள் இக்கைத்தொழிலுற்பத்திக்கான மூலப்பொருட்களை எமது விவசாயத்துறை என்பதனால் வழங்க முடியுமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். விவசாய உற்பத்திகள் பருவகால நடவடிக்கைகள், ஆனால் கைத்தொழில் வருடம் முழுவதும் தொடர்ந்து நடைபெற வேண்டும். எனவே விவசாய கைத்தொழில் தொடர்ந்து இயங்கக்கூடியதாக விவசாயத்துறை அபிவிருத்தி அடையவேண்டும்.

ஊ) இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி என்பது இடைத்தர மூலதன, முதலீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தல் வேண்டும். இப்பொருள் உற்பத்தி நடவடிக்கைகளுக்கான ஊக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவிப்புக்களும் கொள்கைத் திட்டங்களும் செயற்படுத்தப்படவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது.

எ) தனியார் மயப்படுத்தல் என்ற கொள்கையின் கீழ் ஏற்கெனவே இலாபத்தில் இயங்கிவரும் அரச கைத்தொழில் முயற்சிகள், கூட்டுத்தாபன கைத்தொழில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றினை அரசு தனியார் மயமாக்குதல் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையாகவே அமையும். எனவே ஏற்கனவே நட்டத்திலும் செயற்றிறன் அற்ற முறையிலும் இயங்கும் தொழில் நடவடிக்கைகளைத் தனியார் மயமாக்கலே சிறந்த வழியாகும்.

ஏ) சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள உற்பத்திப் பொருட்கள் உள்நாட்டுச் சந்தைக்குக் கடத்தப்படல், அத்தியாவசியமற்ற உள்நாட்டு உற்பத்தி வாய்ப்புக்களைக் கொண்ட நுகர்வுப் பொருட்கள் வெளிநாட்டுச் சந்தைகளில் இருந்து தருவித்தல் என்பதன் மூலம் உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்தி என்பது பாதிக்கப்படுகின்றது. இதனை தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஐ) தென்கிழக்காசிய நாடுகளின் மாதிரி ஒன்றைப் பயன்படுத்தி இலங்கை 2001ஆம் ஆண்டளவில் அந்த நாடுகள் அடைந்துகொண்ட புதிய கைத்தொழில் நாடு என்ற நிலையை அடையும் என்று கூறுவது எந்தளவுக்குச் சாத்தியப்படக்கூடியது என்பது பலரால் வினாவப்படும் ஒரு கேள்வியாக உள்ளது. தற்போதைய போக்கில் இலங்கையின் கைத்தொழில்துறை மாற்றமடையாது தனது வளர்ச்சி போக்கினை அமைத்திருக்குமானல் இலங்கை புதிய கைத்தொழில் நாடாக விரைவில் மாறும் என்று எதிர்பார்க்க முடியாது. □

---

## அடிக்குறிப்புக்கள்

1. Kuznets ,S (1966) *Modern Economic Growth: Rate, Structure* and *Spread*. New Haven, Yale University Press.

2. C. H. Kirkpatric and F. I. Nixon Ed., (1983), *Industrialisation of the less developing Countries*, edited by C. H. Kirkpatric and F. I. Nixon.

3. Ibid, Pp, 22 - 23.

4. Hirsehman, A. O (1968), "The Political Economy of Import - Substituting industrialization in Latin Amerca" *Quaterly. Journal of Econcmics*, Lxxx, 1, February, PP. 1 - 12.

5. Yut. Kubo and Sherman Robinson (1969), "Source of industrial growth and structural change: a comparative analysis of light economics." *Proceedings of the Seventh International Conference on input - output Techniques*. P. 240.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Helleiner G. K. ( 1973 ), " Manufacturing for Export: Multinational firms and Economic development. " *World Development*, 1,7, July PP. 13 - 24.

7. Dept. of National Planning, *The Ten year plan*, Colombo, 1958.

8. Balakrishnan, N. ( 1977 ) " Industrial Policy and Development Since Independence" in K. M. de Silva (Ed) *Sri Lanka: A Survey*, London: C. Hurst and Company, PP, 192 - 221.

9. Central Bank of Sri Lanka, *Annual Report 1970.*

10. Central Bank of Sri Lanka *Annual Repcrt, 1975.*

11. *The Gazzate of the Democratic Socialist Republic of Sri Lanka. Extraordinary*, November 16, 1977.

12. Bassala, B. ( 1978 ), " Export and Economic Growth, "*Journal of Development Economics*, 5,2, June PP 181 - 9.

13. World Bank ( 1991 ), *World Development Report* Table 2. Growh of Production.

14. Athukorale, P. ( 1984 )"Export Development: Policies and Achievements" , *Economic Review* ( Peoples' Bank , Sri Lanka ) 10 (3) ; PP. 3 - 20.

15. Ministry of Industry, ( 1984 ), *Industrial Survey*, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# கிராமிய வறுமைத் தணிப்பு: உலக வங்கியின் அணுகுமுறை

— சி. அம்பிகாதேவி —

''வளர்முக நாடுகளது வறுமையானது தாங்கமுடியாத அளவுக்கு மனித அந்தஸ்தினையும், ஒழுக்கத்தினையும் பாதிக்கின்றது. போசாக்கின்மை, எழுத்தறிவின்மை, வேலையின்மை, இளமையில் இறத்தல் என்பன இந்நாடுகளின் பெரும்பாலான மக்களைத் தாக்கியுள்ளன. அபிவிருத்தியானது இந்நிலைமைகளை மாற்றமுடியாவிடில், அது தோல்வியிலேயே முடிவடையும்.''

(ஆர். எஸ். மக்னமாரா; 1973)

## அறிமுகம்

வளர்முக நாடுகளிற் பெரும்பான்மையினர் கிராமப்புறங்களில் வாழ்வதாலும், அவர்களில் கணிசமானோர் முழு வறுமை நிலையில் இருப்பதாலும், அபிவிருத்தித் திட்டங்களில் கிராமப்புறங்களுக்கு மிகக் கூடிய முக்கியத்துவத்தினை அளிக்கவேண்டியுள்ளது. அபிவிருத்திப் பொருளியலாளர்களின் கருத்துப்படி வளர்முகநாடுகளின் அபிவிருத்தித் திட்டங்கள் தோல்வியில் முடிவடைந்தமைக்கு கிராம அபிவிருத்தியில் போதிய கவனம் செலுத்தாமையே காரணம் எனப்படுகின்றது. மேலும் செல்வந்தருக்கும் வறியோருக்கும் இடையிலான அகன்று செல்லும் இடைவெளியானது பொசிந்துசெல்லும் அபிவிருத்தி அணுகுமுறையின் தோல்வியை எடுத்துக்காட்டுகின்றது. 1950 களிலும், 60 களின் ஆரம்பத்திலும் அபிவிருத்தி என்பது மொத்தத்தேசிய உற்பத்தி உயர்வு என்பதாகவே வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருந்தது. வறுமையைக் குறைப்பதற்கு பொருளாதார வளர்ச்சி அவசியமானதாக இருந்தபோதும், நாடுகளின் கடந்தகால அனுபவங்கள் இது போதாது என்பதனையே காட்டுகின்றன. இவ்வளர்ச்சி முழுவறுமை நிலையில் உள்ள சமூகத்தின் அடிமட்டத்தினரை சென்றடைவதற்குப் பதிலாக சந்தைப் பொறிமுறைக்குட்பட்டு பங்கீடுசெய்யப்பட்டதால் செல்வந்தருக்குச் சார்பாகச் செயற்பட்டுள்ளது. இதனால் அபிவிருத்தி என்பது சந்தைக் கேள்வியை நிறைவுசெய்வதனையும்விட அடிப்படைத் தேவைகள் அணுகுமுறை என்ற நோக்கத்தைக் கொண்டிருத்தல் அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது. இதனாலேயே 1970 களிலும் 80 களிலும் அபிவிருத்திமீது கவனம் கொண்டுள்ள சர்வதேச நிறுவனங்களும், தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற திட்டமிடல்களும், கொள்கை வகுத்தல்களும் அபிவிருத்தி குறித்த தம் நோக்கினை மாற்றிக்கொண்டதுடன் அடிமட்டத்தவரின் சமூக, பொருளாதார நலன்களை மேம்படுத்தும் திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றன. இப்புதிய அணுகுமுறையானது ''வளர்ச்சியிலிருந்து மறுபங்கீடு'' என்ற வகையில் பரந்தளவில் காணப்படும் முழுவறுமை, வருமானப்பரம்பலில் உள்ள அதிகரித்துவரும் சமமின்மைகள், உயர்ந்தளவிலான வேலையின்மை என்பவற்றின்மீது குறைப்பினை ஏற்படுத்தக்கூடியதான செயல்திட்டங்களில் கவனம் செலுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட அம்சங்களைக் கவனத்திற்கொண்டு இக்கட்டுரையானது மூன்று பகுதிகளாக விளக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியில் முழு அளவிலான வறுமை, சார்பு ரீதியான வறுமை பற்றிய எண்ணக்கருக்களை வரையறுத்து, வளர்ச்சியடைந்துவரும் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க, ஆசிய நாடுகளில் இவ்வறுமை நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்பதனை மெய்ச்சான்று ரீதியாக உலக வங்கியின் தகவல்களோடு எடுத்துக் காட்டப்படுகின்றது. இரண்டாவது பகுதியில் இவ்வறுமை நிலைமைகளைத் தணிப்பதற்காக உலகவங்கியால் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி சார்ந்த நடவடிக்கைகள், அணுகுமுறைகள் பற்றி விளக்கப்படுகின்றது. மூன்றாவது பகுதி உலக வங்கியின் அணுகுமுறைகள் எந்தளவிற்கு வெற்றியளித்துள்ளன என்பதனை மதிப்பீடு செய்கின்றது.

I

## வறுமையும் அதன் பரம்பலும்,

வறுமை என்பது வருமானம், போசாக்கு, ஏற்றுக்கொள்ளக் கூடிய சமூக நலன்கள், சமூக, அரசியல் ஈடுபாடுகள் என்ற பல்வேறு பொருளாதார, அரசியல் சமூகவியல், பரிமாணங்களிலும் குறைந்த பட்ச அளவினையேனும் அடைய முடியாதிருக்கும் நிலையைப் பிரதிபலிக்கின்றது. இவ்வாறு வறுமையை மதிப்பிடுவதற்குப் பல குறிகாட்டிகள் பயன் படுத்தப்படலாம். எனினும் இக்கட்டுரையில் பொருளாதார குறிகாட்டிகள் மட்டுமே கவனத்திற் கொள்ளப்படுகின்றன. உலக நாடுகளில் அவதானிக்கப்பட்டுள்ள வறுமையை முழுவறுமை, சார்பு வறுமை என இரு வகையாக நோக்கலாம். முழு வறுமை என்பது தொடர்ந்து உயிர் வாழ்வதை உறுதிப்படுத்தக் கூடிய அடிப்படைப் பௌதீகத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் என்பவற்றை நிறைவு செய்வதற்கான குறைந்த மட்ட வருமானத்திலும் கீழான வருமானத்தைக் கொண்டிருத்தலாகும். சார்பு வறுமை என்பது வருமானப் பரம்பலையும் அது உள்ளடக்கியுள்ள மக்கள் தொகுதியினரையும் கொண்டு வரையறுக்கப்படுவதாகும். தனி ஒருவன் தனது வாழ்க்கையை நடாத்துவதற்குப் போதுமான வருமானத்தைக் கொண்டிருந்த போதும் சமுதாயத்தில் உள்ள ஏனையவர்களுடன் ஒப்பிடும்போது இவ்வருமான மட்டம் குறைவாகக் காணப்படின் அவர் சார்பு வறுமையினாற் பாதிக்கப்பட்டவர் எனலாம். பொருளாதாரக் குறிகாட்டிகளின் அடிப்படையில் வறுமையினை நோக்கின் இன்னமும் பெருமளவுக்குக் கிராமியப் பொருளாதாரப் பண்புகளைக் கொண்டுள்ள துணைசகாரா, தென்னாசியா பகுதிகள் முழு வறுமையினை அனுபவிக்கின்ற நாடுகளாகவும், லத்தீன் அமெரிக்கா, தென்கிழக்காசிய நாடுகள் சார்பு ரீதியான வறுமையினை அனுபவிக்கின்ற நாடுகளாகவும் கணிப்பிடப்பட்டுள்ளன. (WDR 1991)

முழுவறுமையின் பரிமாணங்களை அறிந்துகொள்வதற்கு 1990 இல் UNDP யால் அறிமுகம் செய்யப்பட்ட மனித அபிவிருத்திச் சுட்டெண் (Human Development Index HDI) பயன்படுத்தப்பட்டுள்ளது, இச்சுட்டெண் கொள்வனவுச் சக்தி, வயது வந்தோர் எழுத்தறிவு, மனித ஆயுட்கால எதிர்பார்க்கை என்பவற்றை உள்ளடக்கியது. இவற்றுள் கொள்வனவுச் சக்தி மூலம் மெய்க்கூலி அதிரிப்பு, கூலியில் ஆண் பெண் சமத்துவம் என்பவற்றை அறிய முடிகிறது. எனினும் HDI வறுமையை அளப்பதற்குப் பூரணமானதல்ல என்பதால் 1991 இல் மனித சுதந்திர சுட்டெண் (Human Freedom Index-HFI) என்பதையும் UNDP இணைத்துள்ளது. இச்சுட்டெண் இதுவரை பயன்படுத்தப்பட்டுவந்த பொருளாதாரக் குறிகாட்டிளுடன், அரச, சமூக, கலாசாரம் என்பவற்றையும் உள்ளடக்கியதாக நாற்பது குறிகாட்டிகளைக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது. (Human Development Report 1991 : 18) இச்சுட்டெண்ணை மதிப்பிடுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் பல சிக்கல்கள், வாதப்பிரதி வாதங்கள் தோன்றியுள்ள போதும் தனிமனித நடத்தையுடன் தொடர்பான மனித உரிமை மீறல்கள் குறிப்பாக ஓரினச் சேர்க்கை, பெண் ஒடுக்குமுறை போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளமை இதன் சிறப்பம்சமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். இவற்றுடன் சூழல் மாசடைதல், உணவுப் பாதுகாப்பின்மை என்பதையும் வறுமைக்கான குறிகாட்டிகளாக உலக வங்கியினால் கணிப்பிடப்படுகின்றது, (WBAR: 1980)

### பிராந்திய ரீதியில் வறுமையின் பரம்பல்

1991 ஆம் ஆண்டு உலக அபிவிருத்தி அறிக்கைப்படி ஆபிரிக்க நாடுகளில் துணை சகாரா பிராந்தியமும், ஆசியாவில் தெற்காசிய நாடுகளும், தென்கிழக்காசியாவில் வியட்னாம், மியான்மார், இந்தோனேசியா என்பன உள்ளடக்கியதாக 41 நாடுகள் குறைவருமான நாடுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.[2] உலக மொத்த சனத்தொகையில் 26.3% மானோர் அல்லது 1.4 பிலியன் மக்கள் வறுமை நிலையில் உள்ளார்கள் என்று கணிப்பிடப்பட்டுள்ளது. (WDR: 1991) சனத்தொகையின் அடிமட்ட வகுப்பினரின் அல்லது முழுவறுமை நிலையில் உள்ளோரின் அளவு வளர்முக நாடுகளுக்கிடையில் பிராந்திய அடிப்படையிலும், நாடுகளுக்கிடையிலும் வேறுபடுவது முக்கிய அம்சமாகும் பிராந்திய அடிப்படையில் நோக்கின் ஓரளவு நகர்மயப்பட்ட வளர்ச்சியை அடைந்து கொண்ட புதிய கைத்தொழில் நாடுகளின் தொகுதிகளை உள்ளடக்கிய லத்தீன் அமெரிக்காவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 19% மாகவும், ஆபிரிக்க நாடுகளில் 33% மாகவும், ஆசிய நாடுகளில் 40% மாகவும் உள்ளது. நாடுகளின் அடிப்படையில் நோக்கின் ஆபிரிக்காவில் வறுமை ஆகக்கூடிய நாடாக எதியோப்பியாவும் (62%) ஆகக் குறைந்த நாடாக ரியூனிசியாவும் (9%) விளங்குகின்றன. இதேபோன்று ஆசியாவில் ஆகக்கூடிய வறுமை நாடாக இந்தோனேசியாவும் (62%) ஆகக்குறைந்த நாடாக தைவானும் (4%) விளங்குகின்றன. இலங்கை ஆசிய சராசரியில் அரைப் பங்கினை (10%) முழுவறுமையாகக் கொண்டுள்ளது. (Todaro, 1989: 32)

### துறைரீதியான வறுமையின் பரம்பல்

வறியோரில் 80% மானோர் கிராமப்புறத்திலே இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கிராமிய வறியோரில் 4/5 பங்கினருக்கு விவசாயமே முதன்மைத்துறையாக விளங்குகின்றது. (WDR: 1991) கிராமிய வறியோர் என்ற பிரிவில் சிற்றளவு விவசாயிகள், குத்தகைக்காரர், பங்குச் செய்கையாளர், நிலமற்ற தொழிலாளர் என்ற வகுப்பினர் அடங்குவர். சிற்றளவு விவசாயிகளில் 80 மிலியனுக்கு மேற்பட்டோர் முழுவறுமை மட்டத்திற்குக் கீழான வருமானத்தை உழைக்கக்கூடியளவு பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட குறைந்தளவு நிலத்துண்டினை உடைமையாகக் கொண்டுள்ளனர். மிகக்குறைந்தளவு நிலத்துண்டினை உடையோர், நிலமற்றோர் ஆகியோரின் எண்ணிக்கை தென்னாசிய நாடுகளில் அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகின்றது. (World Bank Staff: 1983: 249) வறுமையானது குறைந்தளவு போசாக்கு மட்டம், உடல் ஆரோக்கியம், கல்வியறிவு என்பவற்றினதும் பிரதிபலிப்பாக அமைவதனால் இவை வாழ்க்கைத் தரத்தை மட்டுமன்றி, கிராமிய மக்களின் உற்பத்தித் திறனையும் பாதிப்படையச் செய்கிறது. எனவே இருக்கின்ற சிறுநிலத் துண்டுடன் உற்பத்தியைப் பெருக்குவதற்கேற்ற தொழில்நுட்பத் திறனும் குறைவாகவே உள்ளதால் இறுதியாக இப்பகுதிகளின் நிலம், மனித மூலதனம் ஆகிய இரண்டும் வளம் குறைந்த சொத்துக்களாகவே கணிக்கப்பட வேண்டும். எனவே கிராமிய வறுமையின் முக்கிய தன்மை என்னவெனில் நச்சு சுழற்சியின் மூலமாக உற்பத்தித்திறன் குறைவான மனித மூலவளம், இதனால் குறைவான உற்பத்தி, இதன் தொடர்ச்சியாக குறைந்த வருமானம், குறைந்த சேமிப்பு, குறைந்த முதலீடு போன்ற பொருளாதார இடர்களைத் தொடர்ச்சியாக அனுபவிப்பதாகும். இக்குறைபாட்டின் அடிப்படையிலேயே கிராமிய வறுமை தணிப்பு அல்லது கிராமிய அபிவிருத்தி என்பது விவசாய அபிவிருத்தியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

## வறுமை தணிப்புத் தொடர்பான வங்கியின் கொள்கைகளும், அணுகுமுறைகளும்

உலகவங்கி தாபிக்கப்பட்டதன் முதன்மை நோக்கம் புனரமைப்பே எனினும் அதன் ஆரம்ப சரத்துக்களில் ஒன்றாக உழைப் பாளரின் உற்பத்தித் திறனையும், வாழ்க் கைத் தரத்தையும் உயர்த்துதல் என்பதும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் வங்கி களின் ஆரம்பகாலக் கடன்வழங்கல்கள் பிர தானமாகப் போக்குவரத்து, சக்தி / வலு போன்ற கட்டுமான வசதிகளுடன் வரை யறுக்கப்பட்டிருந்தது. 1961-ஆம் ஆண்டில் உலகவங்கியின் துணை நிறுவனமாகச் சர்வ தேச அபிவிருத்திச் சங்கம் ( IDA ) தாபிக் கப்பட்ட காலத்திலிருந்து வங்கியின் செயற் பாடும் புனரமைப்பிலிருந்து அபிவிருத்தி என்ற வகையில் விவசாயம், சமூகநலத் துறைகள் போன்றவற்றுக்குக் கூடுதலான கடன்களை வழங்கிவந்துள்ளது.

1963-ஆம் ஆண்டில் ஜோர்ஜ் வூட்ஸ் வங்கித் தலைவராகத் செயற்படத் தொடங் கிய காலத்திலிருந்தே ஒப்பீட்டளவில் இதற்கு முன்னைய காலங்களை விடக் கூடு தலான கடன் விவசாயத்துறைக்கு வழங் கப்பட்டது, 1963-லிருந்து 1968 வரையி லான காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன் களில் பெருந்தோட்டம் அல்லது வர்த்தக முயற்சிகளை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்துறைகளே முதன்மை பெற்றிருந் தன. மக்னமாரா காலத்திலிருந்து( 1958) உலகவங்கி வறுமை மீது உடனடித் தாக் கத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கை களில் நேரடியாக ஈடுபடத் தொடங்கியது. இவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த கிளௌசனும் ( 1981 ) இதே கொள்கை யிலேயே செயற்பட்டார். தனது செயற் பாட்டுக் காலத்தில் வங்கியின் கடன் கொள்கை எவ்வாறு அமையும் என்பதைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

'' வங்கியின் முதன்மை நோக்கம் வறுமை தணிப்பாகும், உலகின் எந்தப் பகுதியில் வறிய நாடு இருப்பினும் வங்கி பாரபட்சமின்றிப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கும், உள்நாட்டு வறுமையைத் தணித்து, அடி மட்டத்தில் உள்ளோரைப் பொருளாதார அபிவிருத்தி நீரோட்டத்தில் பங்குகொள்ளச் செய்வதற்கும் எந்தநேரத்திலும் உதவும். '' ( Finance Development; 1982 : 17 )

வங்கித் தலைவர்களின் கூற்றுக்கள் மட் டுமன்றி இக்காலப் பகுதிகளில் வங்கியின் வெளியீடுகள், ஆராய்ச்சிகள் என்பனவும் வறுமை மீது கவனம் செலுத்துவனவாக உள்ளன. உதாரணமாக 1978 லிருந்து 1990 வரையிலான உலக அபிவிருத்தி அறிக் கைகளில் வறுமைக் குறைப்பிற்கும், பொரு ளாதார அபிவிருத்திக்குமிடையிலான நெருங்கிய தொடர்பினைப் பற்றியும், இதனை உள்நாட்டு அரசாங்கங்களும் சர்வ தேச சமூகங்களும், எவ்வாறு எதிர்கொள் ளப் போகின்றது என்பன பற்றியும் எடுத் துக் கூறப்பட்டுள்ளது. கிராமிய வறுமை தொடர்பான பிரச்சினைகளின் அடிப்படை யில் அதனைக் குறைப்பதற்கும்' பொருளா தார வளர்ச்சியை மேம்படுத்துவதற்குமென வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட உபா யங்களை இருவகையாக நோக்கலாம்.

1. வறியோரின் வருமான உழைப்புச் சந் தர்ப்பங்களை அதிகரிப்பதற்கான சிறப்பு நிகழ்ச்சித் திட்டம்.
2. வறியோர் சார்பான சமூகநல நிகழ்ச் சித் திட்டம்.

பொதுவான பொருளாதார வளர்ச்சியா னது பொசிந்து செல்லல் செய்முறைமூலம் இலக்குடைய மக்களைச் சென்றடைவதில் பூரணமாகத் திருப்தியளிக்காததினால் உலக வங்கி நேரடியாக வறுமை மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நடவடிக் கைகளில் 1970 களிலிருந்து ஈடுபட்டு வந் துள்ளது. இந்நடவடிக்கைகளாக போசாக்கு ஆரம்ப சுகாதார வசதிகள், ஆரம்ப இடை நிலை கல்வி வசதிகள் என்பவற்றை வழங்கு வதன் மூலம் குறுங்காலத்தில் வறியோரின் வாழ்கைத்தரத்தை உயர்த்துவதுடன் எதிர் பார்க்கப்படும் ஆயுட்காலத்தையும் உயர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இவற்றிற்கு மேலாக நிலச் சீர் திருத்தம், நீர்ப்பாசனம், சிறு விவசாயி ளுக்கான கடன், விவசாய ஆராய்ச்சி என்பவற்றின் ஊடாக நிலத்தின் உற்பத்தித் திறனையும், கல்வி, விவசாயப் பயிற்சிகள் என்பவற்றின் மூலம் மனித மூலதனத்தையும் பெருக்கி இலக்காக இருக்கும் சனத்தொகையின் பௌதிக வளங்களை உற்பத்தித் திறனுடைய வளங்களாக மாற்றமுடியும்.

கிராமிய மக்கள் நேரடியாகப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதன் மூலமோ அல்லது விவசாயத்தைக் அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களில் ஈடுபடுவதன் மூலமோ தான் தமக்கு வேண்டிய பிழைப்பாதார வருமானத்தைப் பெறுகின்றனர். இவர்களின் உற்பத்தித்திறன் அல்லது தலாவருமானம் நகரமட்டத்துடன் ஒப்பிடும் போது 30 - 40% வரையாகவே உள்ளது. இந் நிலையிலேயே வறுமை தணிப்பின் மையக் கொள்கையாக உலகவங்கி விவசாயத்தினையும், கிராமிய அபிவிருத்தியையும் தேர்ந்தெடுத்துள்ளது. வங்கியின் கடன் வழங்கும் போக்கில் பெயரளவில் மாற்றம் ஏற்பட்டு வந்தபோதும் மெய்ரீதியில் அவ்வாறில்லை. உதாரணமாக 1969 - 73 காலத்தில் 2.6 பிலியன் டொலராக வழங்கிய கடனளவு 1978 - 81 இல் 13 பிலி. டொலராகவும், 1988 - 89 இல் 40.5 பிலி. டொலாரகவும் அதிகரித்து வந்துள்ளது. இதே நேரம் வங்கியின் மொத்தக் கடனில் இவற்றின் பங்கு 25% என்றளவில் நிலையாகவே இருந்து வந்துள்ளது. (பின்னிணைப்பு 1)

## விவசாயத்துறைக்கான வங்கிக் கடன்கள்

வங்கியின் விவசாயத்துறைக்கான கடன் வழங்கலில் நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு, பிராந்திய அபிவிருத்தி, கொடுகடன் என்பன 1970 களிலிருந்து இன்றுவரை முன்னுரிமை பெற்று வந்துள்ளன. அட்டவணை 1 இன் படி ஏறக்குறைய 60 - 70% மான கடன்கள் இவ்வகையான நோக்கங்களுக்கே வழங்கப் பட்டுள்ளன. 1989 ஆகஸ்டில் முழுவிவசாய நடவடிக்கைக்குமென வழங்கப் பட்ட கடனில் ஏறக்குறைய 30% மட்டும் நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு, என்பவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. வளர்முக நாடுகளில் சிறப்பாக தெற்கு- தென்கிழக்காசியாவில் நெல், இதர தானிய உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்குடன், நீர்ப்பாசன இயலளவை அதிகரிப்பதற்காக இவ்வாறு கூடுதலான கடன் வழங்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன முயற்சிகள் என்றவகையில் குழாய்க் கிணறு அமைத்தல், குளப் புனருத்தாரணம், நீர்ப்பாசன முகாமைத்துவம் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்குகின்றது.

அட்டவணை: 1

### 1989-ஆம் ஆண்டில் விவசாயத்திற்கும் கிராமிய அபிவிருத்திக்கும் வழங்கப் பட்ட கடன்போக்கு. (வீகிதாசாரத்தில்)

| | |
|---|---|
| விவசாயக் கொடுகடன் | 17.9 |
| விவசாயக் கைத்தொழில் | 7.0 |
| பிரதேச அபிவிருத்தி | 19.2 |
| மீன்பிடி | 0.8 |
| காட்டுத்தொழில் | 3.2 |
| நீர்ப்பாசனமும், வடிகாலமைப்பும் | 28.9 |
| கால்நடை | 5.0 |
| நீண்டகாலப் பயிர்க்கடன் | 5.4 |
| ஆராய்ச்சியும், விரிவாக்கமும் | 4.4 |
| ஏனையன | 8.2 |
| மொத்தம் | 53.1 |

பிலியன் டொலர்
(100%)

ஆதாரம்: Annual Report, World Bank 1989: P. 176, Table 5-7

வங்கியின் கடன் கொள்கையில் விவசாய ஆராய்ச்சி, விரிவாக்கம், காட்டுத் தொழில், மீன்பிடி, கால்நடை போன்ற செயற்பாடுகள் குறைந்தளவு முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன. இத்துறைகள் கடந்த காலத்தில் மொத்தக் கடனில் 10% திற்கும் குறைவாகவே இருந்துள்ளன. ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் வளர்முக நாடுகளில் சிறப்பாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தேசிய மட்டத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுடன் பண்ணையல்லா முயற்சிகளான சிறுகைத்தொழில்முயற்சிகள், நன்னீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்வளர்ப்பு என்பவற்றுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருந்த போதும் உலகவங்கியின் கடன்வழங்கற் கொள்கையில் இன்னமும் இவை குறைந்தளவு கவனத்தைப் பெற்றிருப்பது குறைபாடுடைய தாகும். இதேபோல பொருளாதார அபிவிருத்தியின் ஒரு கூறாகிய சூழல் பாதுகாப்பினைக் குறித்து வங்கி கொள்கையளவில் இணக்கம் கண்டுள்ளபோதும் செயற்பாட்டில் மீளவனமாக்கல், வனப்பாதுகாப்பு என்பவற்றையும் உள்ளடக்கிய காட்டுத் தொழிலுக்கு உலகவங்கி குறைந்தளவு முக்கியத்துவத்தையே வழங்கியுள்ளது.

கிராமிய வறுமையை மேலும் தீவிரமாக்கும் வகையில் விவசாயப்பொருட்களின் விலைகள் கடந்த ஒரு தசாப்தகாலமாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளன. 1981-86 காலப்பகுதியில் எண்ணெயல்லா விவசாயப் பண்டங்களின் விலைகள் மெய்ப்பெறுமதியில் 4.8% தால் வீழ்ச்சியடைந்துள்ளது, இது 1986, 87 ஆம் ஆண்டுகளில் முறையே 14.2%, 8.8% மாகக் குறைவடைந்துள்ளது, விவசாய உற்பத்திகளுக்குக் கிடைத்த கிடைத்து வருகின்ற குறைந்தளவு விலைகளும், மூலதனச் செறிவு வாய்ந்த கைத்தொழில் மயவாக்கமும் வறுமையைக் குறைப்பதற்குத் தடையாக உள்ளன என்பதை இலங்கையின் கடந்தகால அனுபவங்களூடாக அறியமுடிகின்றது. நைஜீரியா, கானா என்பவற்றின் அனுபவங்களும் இதே மாதிரியானதே. இந்தியா, சீனா, போன்ற நாடுகளில் போக்குவரத்து, சந்தைப் படுத்தல் வசதிகள் விருத்தியடைந்த சில மாநிலங்களில் விவசாய வருமானம் உயரும்போது அது உடனே பண்ணையல்லா வருமானங்களையும் உயர்த்தியதை உலக வங்கி தனது செயற்திட்ட மதிப்பீடுகளினூடாக அறிந்து கொண்டது. மேலும் வளர்முக நாடுகளில் இயந்திர மயவாக்கம் இடம்பெற்றபோது இதனால் பாதிப்படைந்தது அடிமட்ட வகுப்பினராகிய நிலமற்ற விவசாயிகளும், கூலி விவசாயிகளுமேயாகும். இந்நிலையிலேயே விவசாய அபிவிருத்தி என்பது பரந்த கருத்தில் விவசாய சீர்திருத்தமாக அதாவது நிலத்தின் மீதான தெளிவான உடைமை உரிமை, பயன்படுத்தும் உரிமை என்பவற்றின் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை வங்கி வலியுறுத்தியுள்ளது. வறியோரில் வறியோராகக் (Poorest of the poor) காணப்படுகின்ற இவர்கள் சார்பாக இரட்டை நோக்கங்களின் – சொத்துப் பங்கீடு, வேலை வாய்ப்பு அதிகரிப்பு – அடிப்படையில் செயற்படுவதன் மூலம் சமூக சமத்துவத்தை ஏற்படுத்த முடியும். வங்கியின் வறுமைச் செயற்றிட்டம் அடிமட்ட 40% தினரைக் கருத்திற் கொண்டது என்று வங்கி அதிகாரிகளால் கூறப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் 15 – 20 % தினரையே சென்றடைய முடிகிறது. உதாரணமாக பங்களாதேஷில் மேற்கொள்ளப்பட்ட குழாய்க்கிணற்றுத் திட்டம் வறுமையுள் வறியோர் குறித்த அணுகு முறையில் வங்கியின் செயலாற்றுத் திறனை எடுத்துக் காட்டுகின்றது. (பொருளியல் நோக்கு, மார்ச் 1978 : 13)

மேலும் சிற்றளவு விவசாயிகள் உற்பத்தித் திறனைப் பெருக்குமளவிற்கு அத்தியாவசிய உள்ளீடுகளான பசளைவகை, கிருமிநாசினிகள் என்பவற்றைப் போதுமான அளவில்தகுந்த நேரத்தில் பெறுவதில்லை. இத்துடன் விவசாயப் பொருட்களின் சந்தைப்படுத்தலும் முக்கிய பிரச்சினையாகின்றது. இவர்களுக்கு உத்தரவாத விலை. மானியப்படுத்தப்பட்ட உள்ளீட்டு விநியோகம், தொழில்நுட்ப ஆலோசனை, சந்தை பற்றிய தகவல்கள் எபைன உரிய காலத்தில் கிடைக்கும் பட்சத்தில் உற்பத்தித் திறனை அதிகரித்து வருமானத்தை உயர்த்த முடியும். உறுதியான உயர்ந்த வருமானத்தைப் பெறுவதற்கு குறைவருமான நாடுகள் சார்பாக தாங்கிருப்பு திட்ட வசதியினை வங்கி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் விவசாயம் என்பது இன்னமும்இந்நாடுகளில் அறுவடை வரையான செயற்பாட்டுடன் மட்டுமே முக்கியமானதாகக் கருதப்படுகின்றது, அறுவடைக்குப் பின்னைய செயற்படுகளான விவசாயப் பதப்படுத்தல் உட்பட பல்வேறு கைத்தொழில்களிடையும் வருமான உருவாக்கல் நோக்கில் மேற்கொள்வதற் கேற்ப வங்கி வசதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். மேற்கூறிய வழிவகை ஊடாகவே கீழ்மட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தவரை சமூக, பொருளாதார வழிகளில் மேனிலைக்குக் கொண்டுவரமுடியும்.

## சமூக நலத்துறை சார்ந்த வங்கி நடவடிக்கைகள்

அடுத்து சமூக நலத்துறை சார்பான வறுமைத் தணிப்பில் வங்கி ஈடுபடும் போது உடனடியாகத் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியதான ஆரம்பக்கல்வி, முறைசாராக் கல்வி, ஆரம்ப சுகாதாரம், போசாக்கு என்பவற்றுக்குக் கடன் வழங்குவதனூடாக நெறிப்படுத்துகின்றது. இக்கடன்கள் பற்றிய விபரத்தை பின்னிணைப்பு - 1இலிருந்து அறிய முடிகின்றது. மக்னமாரா காலத்தில் இக்கடன்கள் உச்சகட்டத்தை அடைந்து, பின் எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்துவீழ்ச்சியடைந்து வருகின்றது. மக்னமாராவினை அடுத்து வருகின்ற கிளௌசன், கொர்னேபிள் காலங்கள் மனிதவள மூலதன ஆக்கம் என்பதனையும் விட வருமான உருவாக்கத்திற்கான வழிவகைகள் என்ற வகையில் விவசாயத்துறைக் கடன்களுக்கும், அமைப்பு ரீதியான சீராக்கற் கடன்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கத் கப்பட்டுள்ளன.

ஆரம்பக்கல்வி, சுகாதாரம், போசாக்கு என்பவற்றின் மீதான முதலீட்டின் மூலம் இலக்குடைய வர்க்கம் நன்மையடைவதற்கான சாத்தியம் அதிகமானதாகும். இவற்றில் கல்வியை எடுத்து நோக்கின் 1969 இல் வங்கியால் வழங்கப்பட்ட கடனில் பெற்றபங்கு பூச்சியமாக இருந்தது. இது 1989-இல் 5% மாக அதிகரித்துள்ளது. இதே நேரம் ஆரம்பக்கல்வியும், முறைசாராக் கல்வியும் இன்னமும், வங்கிக்கடனில் 2% தைத் தாண்டவில்லை. பலநாடுகளில் கல்விக்கான மானியம் என்பது மத்திய அல்லது உயர்ந்த வர்க்கத்தினர் கூடுதலான நன்மையடையக் கூடிய துறையான உயர்கல்வி – பல்கலைக்கழகக் கல்வி – மீதே கூடுதலாகக் காணப்படுகின்றது. இதேபோல உலக வங்கியின் கல்விக்கான கடனும் செல்வந்தரை நோக்கிய செயற்றிட்டங்கள் காரணமாக வறியோரை அடைவதில் எதிர்பார்த்த வெற்றியளிக்கவில்லை. சுகாதாரத் துறையை எடுத்து நோக்கின் இதுவும் வங்கிக்கடனில் 1% மாகவே இன்னமும் உள்ளது. ஆரம்ப சுகாதாரம் என்பதற்குள் உள்ளடங்கிய நோய்த் தடுப்பு முறை (Preventive Medicine) நோயுள்ள வாழ்வு, மரண வீதங்கள் என்பவற்றைக் குறைப்பதற்கு உதவிய போதிலும் வளர்முக நாடுகளின் சுகாதார செலவில் 70-85% வரை நோய்க்குணப்படுத்தல் (Curative Medicine) என்ற வகையில் நகர செல்வந்த வகுப்பினரை நோக்கி மேற்கொள்ளப்படுகின்றது.

கல்வி, சுகாதாரம் என்பவை மட்டுமன்றி சமூக பாதுகாப்பு என்றவகையில் வளர்முக நாடுகளின் அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படும் சில செலவுகளும் மாற்றுக் கொடுப்பனவு கூட இளைய தலைமுறையினரை விட வயது வந்தோருக்கே அதாவது பொருளாதார ரீதியான செயற்பாடு அற்றவர்களை நோக்கியேமேற்கொள்ளப் படுகின்றது. மனித மூலதன அபிவிருத்தி எனும் போது குழந்தை நலம்பேணல் என்பதே நீண்டகாலத்தில் நன்மை பயக்கக்கூடியது. எனவே வளர்முக நாடுகளால் மேற்கொள்ளப்படுகின்ற தவாறன, திறனற்ற செலவு ஒதுக்கீட்டினால் மிகச் சிறுபான்மையினரான செல்வந்த வகுப்பினர், இச்சமூக நல செலவினங்களின் நன்மைகளை அனுபவிக்க தொடர்ந்து வறுமையாக இருப்பதன் காரணமாக கிராமிய வறியோருக்கு இந்நன்மைகள் மூடப்பட்டதாக அல்லது மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. இதே நேரம் இச்சமூக நல செலவீடுகளை இலக்குடைய மக்களை நோக்கி மீள ஒழுங்கு படுத்தல் அவசியமானது. அதாவது நோயைக் குணப்படுத்தலிலிருந்து நோய்த் தடுப்புக்கு, உயர்கல்வியிலிருந்து ஆரம்ப அல்லது இடைநிலைக் கல்விக்கு, சமூக பாதுகாப்பிலிருந்து குழந்தை நலனுக்கு என்ற வகைகளில் ஒதுக்கீடுசெய்வது சிறந்ததாக இருப்பினும், அரசியல் நோக்கங்களுக்காகத் தேசிய மட்டத்தில் இதனை மீள ஒழுங்கு படுத்தப்படுவதற்கு அரசாங்கங்கள் முன்வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுப் பாதுகாப்பின்மையும் வங்கிச் செயற்பாடும்

1990 ஆம் ஆண்டு உலக அபிவிருத்தி அறிக்கையின்படி 41 குறை வருமான நாடுகளில் ஏறக்குறைய 700 மில்லியன் மக்கள் பிழைப்புமட்ட போசாக்கு நிலையில் உயிர் வாழ்கின்றனர். இவர்கள் பெறுகின்ற வருமானத்தில் 80% உணவுக்காகச் செலவு செய்யப்படுகின்றது. (Todaro, 1989: 545) பருவ கால உற்பத்தி தளம்பலடைந்து விலை அதிகரித்தால் அல்லது உள்நாட்டுக் கலவரங்களால் உணவு விநியோகம் சீர்குலைந்தால், வேறு மாற்றுவழி இல்லாத நிலையில் மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் வறியோரே. இவ்வாறு பாதிக்கப்படக்கூடிய வறியோரின் நலன்பேணல் என்ற வகையில் உணவுப் பாதுகாப்பு (Food Security) முக்கியமானதாகின்றது. உணவுப் பாதுகாப்பு என்பது ஆரோக்கியமானதும், சுறுசுறுப்பானதுமான வாழ்க்கைக்கு வேண்டியளவு போதுமான உணவு எல்லா நேரத்திலும் அனைத்து மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாக இருத்தல் ஆகும். உணவுப் பாதுகாப்பின்மை தற்காலிகமானதாக (Transi - tairy) அல்லது தொடர்ச்சியானதாக (Chronic) அமையலாம். தற்காலிக உணவுப் பாதுகாப்பின்மை என்பது எதிர்பாராதவகையில் உணவு விநியோகம் சீர்குலைவதனால் ஏற்படுவதாகும். இப் பிரச்சினையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சகல மட்டத்தில் உள்ளவர்களும் எதிர் நோக்குகின்றார்கள். வளர்முக நாடுகளில் 1970 களிலிருந்து விடுதலைப் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளதால் இந் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. இந்த தற்காலிக உணவுப் பாதுகாப்பின்மை பிழைப்பூதிய மட்டத்தில் வாழ்கின்ற மக்களையே கடுமையாகப் பாதிக்கின்றது. ஏனெனில் இவர்கள் தமது வருமானத்தில் பெரும்பகுதியை உணவுக்குச் செலவழிப்பதால் எதிர்பாராத விதமாக ஏற்படுகின்ற திடீர் விலை உயர்வினால் இவர்களின் கொள்வனவுச் சக்தி குறைவடைய போசாக்கு மட்டநிலை மேலும் மோசமடைந்து தீவிர வறுமைக்குள் (Ultra Poverty) ளாகின்றார்கள். தொடர்ச்சியான உணவுப் பாதுகாப்புப் பிரச்சினை என்பது வறுமையின் வெளிப்பாடாக, போதுமான உணவுக் கொள்வனவு செய்யும் ஆற்றலற்ற, வருமானம் குறைந்த குடும்பங்கள் எப்போதும் தேவைப்படும் அளவிலும் குறைந்த உணவையே பெற்றுக்கொள்ளும் நிலையைக் குறிக்கும். தொடர்ச்சியான உணவுப் பாதுகாப்பின்மையை வளர்முக நாடுகளின் சனத்தொகையில் (சீனா தவிர) மூன்றிலொரு பங்கினர் அனுபவிக்கின்றார்கள். இதில் மூன்றிலிரு பங்கினர் ஆபிரிக்கா, தென்னாசிய நாட்டைச் சேர்ந்தவர்கள்.

1980 களிலிருந்து வங்கியின் வறுமை தணிப்பில் புதிய கொள்கையாக உணவுப் பாதுகாப்பின்மையும் சேர்ந்துள்ளது. இது குறித்த வங்கியின் செயற்பாடுகள் பின் வரும் அம்சங்களைக் கவனத்திற் கொண்டனவாக அமைந்தன.

1. குறைந்த வருமானம் பெறுகின்ற சிறுடைமையாளர்கள், பெண் விவசாயிகள், என்போர் மட்டத்திலிருந்து உணவு நிரம்பல் அதிகரிக்கப்படும் பட்சத்தில் வங்கி அதற்கு நிதியுதவி செய்தல்.

2. பசியினால் வாடும் நாடுகள் அல்லது பிராந்தியங்களைத் தெரிந்தெடுத்து அவற்றில் சில சிறப்புத் திட்டங்களை ஆரம்பித்தல். (துணை சகாரா பகுதியில் உள்ள 22 நாடுகள் இவ்வகையான சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் 1985 ஜுலையிலிருந்து நிதியுதவியைப் பெற்ற நாடுகளாகும்)

3. குறிப்பிட்ட நாட்டின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான செயற்றிட்டங்களில் தேசிய மட்டத்தில் பல்வேறு நிறுவனங்களதும் தலையீடு கூடுதலாக வற்புறுத்தப்படும் அதே நேரம் சர்வதேச மட்டத்தில் உதவி வழங்கும் நாடுகளையும் உணவுப் பாதுகாப்புத் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கச் செய்தல்.

வறிய நாடுகளின் கிராமியப் புறங்களில் பயன்படுத்தப்படாத, அதே நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய விருத்திக்குச் சாத்தியமாகக் கூடிய வளங்கள் உயர்வாக உள்ளன. வளமார்ந்த பிராந்தியம் ஒன்று வறியோரால் சூழப்பட்டுள்ளது என்பதுவே தென்னாசியாவினது வறுமையும், அபிவிருத்தியும் குறித்துக் காணப்படும் முரண்பாடாகும். மீள் பங்கீட்டுக் கொள்கையினூடாக இவ்வளங்களை விருத்தியாக்கி உற்பத்தியில் ஈடுபடுத்துவதன் மூலம் இப்பிரதேசங்களில் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும். சர்வதேச உணவு கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் (IFPRI) கணிப்பீட்டின் படி துணை சாரா, தென்னாசியா நாடுகளில் சிறு விவசாயிகள், பெண்கள் என்பவர்களை நாட்டின் உணவு உற்பத்தித் திட்டத்தில் ஒருங்கிணைப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பின்மையை நீக்க முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (IFPRI Report: 1990) புதிய கைத்தொழில் நாடுகளில் உள்ள கிராமியப் புறங்களில் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, அதனூடாகக் கிராமிய வேலை வாய்ப்புக்கள் பண்ணை, பண்ணையல்லாத் துறைகளில் அதிகரித்து இவை இன்று நடுத்தர வருமான நாடுகள் என்ற நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளன. 1970–80 காலத்தில் குறை வருமான நாடுகளின் முழுவறுமை 50% தால் அதிகரிக்க, நடுத்தர வருமான நாடுகளின் முழு வறுமை 50% குறைவடைந்துள்ளது. எனவே இந்த அனுபவத்தினூடு குறை வருமான நாடுகளின் முழு வறுமையை நோக்குமிடத்து, இவற்றினது, வறுமை தணிப்புக்கும், உணவுப் பாதுகாப்புக்குமான கொள்கையாக உற்பத்தி அதிகரிப்பினைத் தெரிந்தெடுப்பதே சிறந்தது என்பது புலனாகின்றது. இந்நிலையில் வங்கியின் செயற்பாடு விவசாய ஆராய்ச்சி, தொழில் நுட்ப உதவிகள் என்பவற்றை வழங்குவதாக அமைய வேண்டும். பசியால் வாடுவோரில் 25% தினர் (250 மிலியன்) பொருளியல் ரீதியாக உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருந்தும், இன்னமும் போதியளவு ஆதார வசதிகள் இல்லாமை காரணமாக வறுமையில் இருக்க வேண்டியுள்ளது.

## அமைப்பு ரீதியான சீராக்கல் கடன்திட்டமும் வறுமை தணிப்பும்

குறைவருமான நாடுகள் எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சினைகளை பேரின ரீதியிலான அணுகுமுறையூடாக, அமைப்பு ரீதியான சீராக்கல் முறையூடாக குறைப்பதற்கு வங்கி முன்வந்துள்ளது. 1981 ஆம் ஆண்டிலிருந்து வங்கியினால் அமுல்படுத்தப்படும் அமைப்பு ரீதியான சீராக்கல்கடனின் முதன்மை நோக்கம் சென்மதிநிலுவைப் பிரச்சினைகளைத் தீர்த்தலாகும், இவ்வகை முயற்சி உள்நாட்டு, வெளிநாட்டு வளங்களின் மாற்று ஒதுக்கீட்டினூடாக அடைந்து கொள்ளப்படும். இச்செய்முறை வறியோர் மீது குறைந்தளவு பாதகத் தன்மைகளை ஏற்படுத்துவதுடன் உறுதியான பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. உள்நாட்டு வளங்களின் மாற்று ஒதுக்கீடு என்ற வகையில் அரசாங்கங்கள் பொதுச்செலவுகளைக் குறைக்க வேண்டுமென வங்கியினால் வலியுறுத்தப்பட்டது. பொதுச்செலவுக் குறைப்பு 1. பொதுத்துறை முதலீட்டைக் குறைப்பதனூடாகவும் 2. சமூக நலன்புரி செலவுகளைக் குறைப்பதனூடாகவும் நெறிப்படுத்தப்பட்டது. இவ்விரு செயற்பாடுகளினூடாகவும் கூடுதலாகப் பாதிப்படைந்தவர்கள் வறியவர்களே. பொதுத்துறை முதலீடு குறைக்கப்பட்டதனால் சிறப்பாகக் கட்டுமான அமைப்பில் அல்லது இதர பொதுச் சேவைகளில் வேலை வாய்ப்பினைப் பெற்ற பயிற்சியற்ற அல்லது அரைப் பயிற்சியுடன் ஈடுபட்டிருந்த பலர் இப்போது வேலையிழந்த நிலையிலோ, அல்லது மெய்க்கூலிக் குறைப்பினாலோ மேலும் வறியோராகின்றனர். அத்துடன் இவர்களிடம் காணப்படுகின்ற குறைந்தளவு பயிற்சி, பயிற்சியின்மை காரணமாக வேறு மாற்றுத் தொழிலையும் இலகுவில் பெறமுடியாதுள்ளது. எனவே இவ்வகையான செலவுக் குறைப்பு வறியோரை மேலும் வறுமைக்குள்ளாக்குவதால் வங்கி இவர்களுக்கு ஒழுங்குபடுத்தல் செயற்திட்டத்தை (Deployment Programme) நட்டவீடாகச் செயற்படுத்துகிறது. உதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணமாக மடகாஸ்கரில் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் சமூக பரிமாணங்கள் ( Social Dimension of Adjustment Programme ; S D A ) என்ற வகையில் பொதுத்துறையிலிருந்து நீக்கப் பெற்றவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கும் நோக்கில் உழைப்புச் செறிவு வாய்ந்த பொது வேலைத் திட்டங்களாகிய மலேரியா ஒழிப்புத் திட்டம், பாது காப்புத் திட்டம், சுயமுயற்சித் திட்டம் போன்றவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களூடாக நடைமுறைப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டிலிருந்து வங்கிநிதியுதவி செய்துவருகின்றது.

வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கத்தினால் பாதிக்கப்பட்ட வர்க்கம் மேலும் பாதிப்படையக்கூடிய வகையில் உலகப் பொருளாதார நிகழ்வுகள் சமகாலத்தில் நடந்தேறின. குறைவருமான நாடுகள் உலோக வகை உட்பட விவசாயப் பண்ட வர்த்தகத்திலீடுபடும் நாடுகளாகும். இவற்றின் ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் 1980 களின் ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளன. உதாரணமாக 1985 – 86 காலத்தில் தகர விலைகள் 5 % மாக வீழ்ச்சியடைந்த போது பிரதான தகர ஏற்றுமதி நாடான பொலிவியாவில் இதன் பிரதிபலிப்பாக சுரங்கத்தொழிலாளர் பலர் வேலையையிழந்ததுடன், மெய்க்கூலிக் குறைப்பிற்கும் உட்படுத்தப்பட்டனர். தொழிலாளரின் கொள்வனவுச் சக்தி குறைவடைந்த இந்நிலையில் வங்கி, தகர விலைகள் மேலும் வீழ்ச்சியடையாது உறுதியாக வைத்திருப்பதற்குப் பதிலாக அவர்களின் சமூக நலன்களை உயர்த்தும் முயற்சியில் ஈடுபடுகிறது. 1985இல் அவசரகால சமூக நிதி(Emergency Social Fund) யைத் தாபித்து அதனூடாகக் கொள்வனவு ஆற்றல் குறைந்த போதும், போசாக்கு மட்டத்தைத் தொடர்ந்து அதே அளவில் பேணுவதற்காக கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டுந் தாய்மார், 5 வயதிற்குட்பட்ட சிறார்கள், என்ற பிரிவினரை இலக்காகக் கொண்டு ஏறக்குறைய 14 போசாக்குத் திட்டங்களுக்கான அனுமதியை வழங்கியுள்ளது. வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் திட்டம் வறிய பிரிவினரின் நலன் பேணும் நடவடிக்கையில் வெற்றியளிக்கவில்லை என்பதுஒருபுறமிருக்க சில பிராந்தியங்களில் வறியோரை மேலும் வறுமைக்குள்ளாக்கியுள்ளது. இதற்குரிய மாற்று நடவடிக்கைகளாக, குறிப்பிட்ட பிராந்தியங்களின் தேவைக்கேற்ப சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இத்திட்டங்கள் 80 களின் மத்திய அல்லது பிற்பகுதிகளிலேயே செயற்பாட்டுக்கு வந்துள்ளதால், இவற்றின் பொருளாதார, சமூக ரீதியான நன்மைகளினை மதிப்பிடுவதற்கு குறுங்காலம் ஒரு தடையாக உள்ளது.

III

## வங்கிச் செயற்பாடுகளின் செயலாற்றம்

> ''மிகப் பெருந்தொகையான மக்களை கொடூரமான வறுமையிலிருந்து விடுவித்து, சுபீட்சம் நிறைந்த வாழ்க்கைக்கு அவர்களை இட்டுச் செல்வதில், உலகின் வேறெந்த நிறுவனத்தையும் விட உலக வங்கியே கூடுதலாக உதவுகின்றது.''
>
> (ஆர். எஸ். மக்னமாரா, 1980)

இக்கூற்று 1970 களின் பிற்பகுதி வரை ஏற்றுக்கொள்ளக்கூடியதே. ஆனால் இந்நிலைமைக்கு மாறாக 80 களை இக்கூற்றுடன் தொடர்பு படுத்தி மூன்று முக்கிய நன்மைகளை எடுத்துக் காட்ட முடியும். 1. 80 களில் வறுமைக்கான சமூக நலக் குறிகாட்டிகளில் மட்டும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2. வறுமையில் ஏற்பட்ட முன்னேற்றம் லத்தீன் அமெரிக்கா, தென்கிழக்காசிய நாடுகளில் கூடுதலானதாகும். 3 துணை சகாரா, கிழக்காசிய நாடுகளில் வறியோர் சார்பான பொருளாதார அபிவிருத்திகள் முக்கியமாக விவசாய அபிவிருத்தி, அத்துடன் தொடர்புடைய தலா வருமான அதிகரிப்பு என்பன குறைவடைந்துள்ளன.

இந்த அடிப்படையிலேயே வறியோர் சார்பான வங்கிச் செயற்பாடு 80 களில் 'இழந்த தசாப்தம்' ( Lost Decade ) என வர்ணிக்கப்படுகிறது.

பின்வரும் அட்டவணை சில தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் வறுமையில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

## தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளில் வறுமையில் ஏற்பட்ட மாற்றம்.

(மொத்த சனத்தொகையில் வறுமையின் வீகிதாசாரம்)

| | கணிப்பிட்ட காலம் | | மாற்ற வீதம் | |
|---|---|---|---|---|
| | முதல் ஆண்டு | இறுதி ஆண்டு | முதல் ஆண்டு | இறுதி ஆண்டு |
| பிறேசில் | 1960 | 1980 | 50 | 21 |
| இந்தியா | 1972 | 1983 | 54 | 43 |
| இலங்கை | 1962 | 1986 | 37 | 27 |
| மொறக்கோ | 1970 | 1984 | 43 | 34 |
| பாகிஸ்தான் | 1962 | 1984 | 54 | 23 |
| தாய்லாந்து | 1962 | 1986 | 59 | 26 |
| சிங்கப்பூர் | 1972 | 1984 | 31 | 10 |

ஆதாரம்: *Finance & Development, Vol 27, No 3, Sept. 1990.*

சனத்தொகை அதிகரித்ததற்கேற்ப வறியோரின் அளவு, எண்ணிக்கை அடிப்படையில் அதிகரித்து வந்தாலும் மொத்த சனத்தொகையின்வீகிதாசாரமாகநோக்குமிடத்து கடந்த காலங்களில் வறுமை குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. (அட்டவணை – 3) இந்த வளர்ச்சியினை நடுத்தர வருமான நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து குறைவருமான நாடுகள் மெதுவாக அடைந்துள்ளன. உதாரணமாக பிறேசில் 20 ஆண்டுகளில் வறுமை தணிப்பில் ஏற்படுத்திய 60% முன்னேற்றத்துடன் இலங்கையை ஒப்பிடும்போது இதன் வேகம் மிகக் குறைவாகும். அதாவது 24 ஆண்டுகளில் 27% மட்டுமே முன்னேறியுள்ளது. இங்கு கூறப்பட்டுள்ள வறுமைத் தணிப்பு நடவடிக்கைகள் சமூக நலக் குறிகாட்டிகளின் உயர்ச்சியினால் அடையப்பெற்றவையாகும். உதாரணமாக 1965 – 85 இற்கிடையில் குறைவருமான நாடுகளின் வாழ்க்கை எதிர்ப்பார்ப்புக் காலம் 50 வருடங்களிலிருந்து 62 வருடங்களாகவும், வயது வந்தோர் கல்வி மட்டம் 1975 – 85 இடையில் 35% – 56% மாகவும் அதிகரித்துள்ளது. இதேபோல இறப்பு வீதமும் 1965 – 89 இடையில் 21 - 10 (1000 திற்கு) ஆகவும் குறைவடைந்துள்ளது. இவ்வகை முன்னேற்றங்கள் மனித மூலதனம் என்ற வகையில் இவ்வறிய நாடுகளின் நீண்டகாலப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவ முடியும். எனினும் வறிய நாடுகளின் உடனடிப் பிரச்சினையாகிய குறைந்தளவு வருமானம், குறைந்த முதலீடு என்பவற்றுக்கு உதவுவதாக இல்லை.

மேலும் வறிய நாடுகளில் ஏற்பட்ட சமூக நல முன்னேற்றங்கள் அந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சியுடன், அதாவது உற்பத்தி சார்ந்த முயற்சியுடன் இணைக்கப்படவில்லை என்பதும் முக்கிய பிரச்சினையாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3

சில தெரிவுசெய்யப்பட்ட குறைவருமான நாடுகளின் வறுமைக் குறிகாட்டிகளில் ஏற்பட்ட மாற்றம்:

| பிராந்திய அடிப்படையில் நாடுகள் | பொருளாதாரக் குறிகாட்டிகள் | | | | சமுக நலக் குறிகாட்டிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விவசாய வளர்ச்சி வீதம் | | தலா வருமான வளர்ச்சி வீதம் | தலா உணவு உற்பத்திச் சுட்டெண் 79-81 | வாழ்க்கைக் காலம் | | இறப்பு வீதம் | | வளர்ந்தோர் கல்வி | |
| | 65-80 | 80-89 | 65-89 | 87-89 | 78 - 89 | | 65-89 | | 75 | 85 |
| **1. துணை சகாரா நாடுகள்** | | | | | | | | | | |
| 1. தன்சானியா | 1.6 | 4.2 | -0.1 | 90 | 51 | 49 | 23 | 17 | 66 | — |
| 2. எதியோப்பியா | 1 2 | -0.4 | -0.1 | 89 | 39 | 48 | 20 | 18 | 10 | 62 |
| 3. சோமாலியா | — | 3.8 | 0.3 | 97 | 43 | 48 | 26 | 18 | 60 | — |
| **2. தெற்காசியா** | | | | | | | | | | |
| 1. பங்களாதேஷ் | 1.5 | 2.1 | 0.4 | 93 | 47 | 51 | 21 | 14 | 26 | 33 |
| 2. இந்தியா | 2.5 | 2.5 | 1.8 | 113 | 51 | 59 | 20 | 11 | 36 | 43 |
| 3. பாகிஸ்தான் | 5.0 | 3.2 | 2.5 | 103 | 52 | 55 | 21 | 12 | 21 | 30 |
| 4. இலங்கை | 2.7 | 2.2 | 3.0 | 87 | 69 | 71 | 08 | 06 | 78 | 87 |
| குறைவருமான நாடுகள் | 2 6 | 4.0 | 1 4 | 1 6 | 50 | 62 | 21 | 10 | 38 | 56 |

ஆதாரம்: *World Development Reports. World Bank. 1980, 1991.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக எதியோப்பியாவின் வயது வந்தோர் கல்வி மட்டம் 1975 – 1985 இற்கிடையில் 10% – 62% மாக அதிகரித்துள்ளது. இங்கு கல்வித் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் பிரதிபலன்களை இதர துறைகளில் அவதானிக்கமுடியாதுள்ளது. உலக நாடுகளில் இன்னமும் இறப்பு வீதம் கூடிய நாடாகவும், வாழ்க்கைக்காலம் குறைவான நாடாகவும் இருப்பது எதியோப்பியாவே. இது மட்டுமன்றி கடந்த தசாப்தத்தில் விவசாயத்துறை வளர்ச்சியும் எதிர்க்கணியமாகவே இருந்துள்ளது. ஆகவே இத்தரவுகளைக் கொண்டு நோக்குமிடத்து அங்கு அடைந்து கொண்ட கல்வி மட்டத்தை ஓர் அபிவிருத்திக் குறிகாட்டியாகக் கொள்ளலாமா? என்ற வினா எழுகின்றது.

வறுமையின் மையக்கூறாகிய வருமானக் குறைவை எடுத்து நோக்கின் உயர்வருமான நடுத்தர வருமான நாடுகள் அடைந்து கொண்ட தலா வருமான வளர்ச்சி வேகத்தினை இன்னமும் குறைவருமான நாடுகள் அடைந்து கொள்ளவில்லை. வறிய நாடுகளுக்கும், செல்வந்த நாடுகளுக்கும் இடையே காணப்படுகின்ற சமமற்ற வருமானப் பங்கீடே வறிய நாடுகளின் முழுவறுமை நிலை அதிகரிப்பதற்குக் காரணமாகின்றது. 1965 – 89 காலத்தில் GNP வளர்ச்சி வீதத்தை, பிராந்திய ரீதியில் எடுத்துப் பார்ப்பின் சயாரா, சியாரா லியோன், உகண்டா, நைஜீரியா, தான்சானியா, நைகர், செனிகல், நிக்ரகுவா, ஆகியன எதிர்க்கணிய வளர்ச்சிப் போக்கினைக் கொண்டுள்ளன. இதர வறிய நாடுகள் நேர்க்கணிய வளர்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்த போதும் இவை வளர்ச்சியடைந்த நாடுகளைக் காட்டிலும் குறைவான வளர்ச்சியையே கொண்டுள்ளன. உதாரணமாக 1830 இல் அமெரிக்கா அடைந்து கொண்ட வளர்ச்சியை இந்தியா, டோகோ, சயாரா, கெயிட்டி என்பன இன்னமும் அடையவில்லை என்பதன் மூலமும், இந்தோனேசியா, இலங்கை என்பன 1880 இல் அமெரிக்கா அடைந்துகொண்ட வளர்ச்சியை இன்னமும் அடையவில்லை என்பதன் மூலமும், வறிய – செல்வந்த நாடுகளுக்கிடையிலான வருமான இடைவெளியை அறிய முடிகின்றது.

வறியோருள் வறியோர் என்று பிரிவினரை முழு வறுமையிலிருந்து விடுவிப்பதற்கு விவசாய அபிவிருத்தி நேரடியாகப் பங்களிப்புச் செய்யக்கூடியதாக இருந்தும், சீனா, இந்தியா தவிர்ந்த ஏனைய குறைவருமான நாடுகளின் வளர்ச்சி வீதம் 2.5% மாக கடந்த மூன்று தசாப்தத்தில் நிலையாகவே இருந்துள்ளது. இதனாலேயே கிராமிய அபிவிருத்தியில் உற்பத்தித் துறை சார்ந்த அல்லது நேரடி வருமான உருவாக்கல் செயற்பாடுகள் சார்பான வங்கிச் செயற்பாடுகள் எண்பதுகள் முழுவதும் இழந்த தசாப்தமாகவே கொள்ளப்படுகின்றது. 1980 களில் வங்கியினால் வழங்கப்பட்ட கடனில் 25% (9.7 பிலி. டொலர்) விவசாயத்துறை அபிவிருத்திக்கென வழங்கிய போது அதன் பலாபலன்கள் நிலமற்ற சிற்றளவு விவசாயிகளைச் சென்றடையவில்லை என்றே கூறலாம். எனவே கிராமிய வறுமை தணிப்பிற்கானதேவை கடன் என்பதுடன் நிலச்சீர்திருத்தத்தினையும் உள்ளடக்கியதாக, முழுமையான கிராமிய சீர்திருத்தத்தினை வேண்டி நிற்கின்றது. இது நீண்ட காலத்தில் சமமான சொத்துப் பங்கீட்டுக்கு உதவுவதன் ஊடாக வறுமையை ஒழிக்க முடியும். வங்கியின் கடந்த கால அனுபவங்களின் படி இதர விவசாயக் கடன்களைக் காட்டிலும் சிறு விவசாயக் கடன் குறைந்த செலவில் கூடிய பயன் உடையதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (Michel Lipton, 1982: 17) வறிய நாடுகளுக்கான சிறு விவசாயக் கடனானது வருமான உருவாக்கத்திற்கு வழியமைக்கக் கூடிய பண்ணையல்லாத் தொழில்களையும் உள்ளடக்கியதாகவும், அதேநேரம் பெண்கள், கூலித் தொழிலாளர்கள் என்பவர்களையும் உள்ளிழுக்கக்கூடிய உழைப்புச் செறிவு வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும்.

இழந்த கடந்த தசாப்தங்கள் மட்டுமன்றி, எதிர்காலமும் கூடத்தேசியக் கொள்கைகள் காரணமாக நெருக்கடி மிக்க காலமாகவே தென்படக்கூடும். உறுதியான வளர்ச்சிக்கு சமாதானம் அவசியம் எனப்படுகின்ற அதேநேரம், இச்சமாதானத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில் இன்று இனக்கலவரங்கள், உள்நாட்டுக் கலவரங்கள், சர்வதேச முரண்பாடுகள், படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெடுப்புக்கள் உருவாகியுள்ளன. குறிப்பாக வளர்முக நாடுகளில் தோற்றம் பெற்ற விடுதலைப் போராட்டங்கள் பெரும் போராகத் தீவிரமடைந்துள்ளன. இவற்றால் வறுமையின் பரிமாணங்களும் பலவிதப்பட்டவையாக விரிவடைந்துள்ளன. உதாரணமாக விவசாய உற்பத்திகள் பாதிக்கப்படல். இதனால் நிலையற்ற உணவுப் பாதுகாப்பின்மை தொடர்ச்சியானதாக வலுப்பெறல், இராணுவச் செலவிற்காக நலன்புரிக் கொள்களைக் குறைத்தல் போன்ற நிகழ்வுகள் வறியோருள் வறியோரைக் கடுமையாகப் பாதிக்கின்றது. எனவே வறுமை தணிப்பு என்ற வகையில் மனித உரிமைகள் உள்ளடக்கியதாக மனித தேவைகள் யாவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிலேனும் கிடைக்கும் பட்சத்திலேயே வங்கியின் கிராமிய அபிவிருத்தி அணுகுமுறை வெற்றியடைய முடியும். இறுதியாக வறுமைக்குறைப்பிற்கு வருமான உயர்வு மட்டுமன்றி, அரசியல், சமூக நலன்களும், சமத்துவமானதும், நீதியானதுமான (வர்க்க, பால் அடிப்படையில்)முறையில் கிடைக்கும் பட்சத்திலேயே சாத்தியமாக முடியும். □

---

பின்னிணைப்பு: I

1969 – 89 காலத்தில் உலகவங்கியினால் வழங்கப்பட்ட கடனளவுகள்.

(விகிதாசாரத்தில்)

| | 69-71 | 72-74 | 75-77 | 78-80 | 81-83 | 84-85 | 86-89 |
|---|---|---|---|---|---|---|---|
| **நேரடி வறுமைசார்ந்த துறைகள்** | | | | | | | |
| 1. கிராமிய அபிவிருத்தி (அ) | 3.1 | 8.2 | 15.4 | 15.8 | 14.6 | 9.6 | 20.4 |
| 2. ஆரம்ப, முறைசாராக் கல்வி | 0.1 | 0.4 | 0.6 | 0.6 | 1.0 | 1.3 | ... ஆ |
| 3. சுகாதாரம், போசாக்கு, | 0.2 | 0.7 | 0.6 | 1.1 | 0.4 | 1.5 | 2.0 |
| 4. சிற்றளவுத் தொழில் முயற்சிகள் | 0.0 | 0.2 | 1.2 | 1.5 | 2.6 | 4.1 | 2.6 |
| 5. நகரம் | 0.1 | 1.5 | 1.7 | 3.4 | 3.6 | 3.0 | 6.8 |
| 6. குடிநீர் விநியோகம் | 4.0 | 4.7 | 4.0 | 6.8 | 4.5 | 4.8 | 3.9 |
| மொத்தம் | 7.5 | 15.7 | 23.5 | 29.3 | 26.7 | 24.2 | .... |
| **ஏனைய நடவடிக்கைகள்:** | | | | | | | |
| 1. ஏனைய விவசாய நடவடிக்கைகள் | 15.6 | 13.6 | 14.2 | 15.1 | 11.9 | 14.5 | ...... |
| 2. ஏனைய கல்வி | 4.0 | 5.3 | 3.6 | 3.7 | 3.6 | 4.1 | ...... |
| 3. வலு, சக்தி | 22.2 | 16.0 | 13.5 | 18.3 | 19.4 | 23.7 | 19.1 |
| 4. கைத்தொழில், அபிவிருத்தி நிதிக் கம்பனிகள் | 12.6 | 16.4 | 19.2 | 12.9 | 14.9 | 9.1 | 15.0 |
| 5. போக்குவரத்தும் தொலைத் தொடர்பும் | 32.8 | 25.9 | 19.0 | 16.4 | 13.6 | 16.8 | 14.1 |
| 6. அமைப்பு ரீதியான சீராக்கற் கடனையும் உள்ளடக்கிய திட்டமல்லாக் கடன்கள் | 4.7 | 6.1 | 5.9 | 3.6 | 9.3 | 6.7 | 10.4 |
| 7. ஏனையவை | 0.6 | 1.1 | 1.1 | 0.8 | 0.6 | 0.8 | ...... |
| மொத்தம் | 92.5 | 84.3 | 76.5 | 70.7 | 73.3 | 75.8 | ...... |

ஆதாரம்: 1. *Finance & Development, Sept, 1986: P 28*

2. *Annual Report, World Bank; 1989*

அ. விவசாய நடவடிக்கைக்கெனத் தனியாக வழங்கப்பட்ட கடன்களும் இதில் அடங்கியுள்ளன.

ஆ. தரவுகள் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

1. Abeysekara C. Jeyawardana and Jeyadeva Uyangoda Eds., "How free is your country? The Human freedom Index", *Pravada* Vol. 1, No. 1. (November 1991) PP. 31 - 32

2. Atkinson B, "Compairing Poverty rates Internationally: Lessons from recent Studies in Developed Countries" *The World Bank Economic Review*, Vol, 5. No. 1, (January 1991) PP 3 - 19

3. Bell M. W. and Sheehy R, L, "Helping Structural Adjustment in Low - Income Countries", *Finance & Development*, Vol. 27, No, 4, (December, 1987) PP. 6 - 9.

4. Bourguignon F J. de Mel and C. Morrission, "Poverty and Income Distribution During Adjustment: Issues and Evidence from the OECD", *World Development*. Vol. 19, No. 11 (November 1991) PP. 1485 - 1505.

5. Huang Y. and Nicholas P., "The Social Cost of Adjustment", *Finance & Development*, Vol. 24, No.2 (June 1987) PP 22 - 24.

6. Lipton M. and Shakow A, "The World Bank and Poverty", *Finance & Development*", Vol. 19, No. 2 (June 1982) PP. 16 - 19.

7. Macnamara R. S. *One Hundred Countries, Two Billion People*, Praeger Publishers, New York. (1973).

8. UNDP, *Human Development Reports*, 1990. 91, 92.

9. Watton M. "Combating Poverty: Experience and Prospects", *Finance & Development*, Vol. 27, No. 3 PP. 3 - 5.

10. The World Bank, *Annual Reports*, 1978 - 1989.

11. The World Bank, *World Development Reports*, 1979 - 1991.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# இலங்கையில் விஞ்ஞானக் கல்வியின் தேவையும் அதன் இன்றைய நிலையும்

— சு. அருளானந்தம் —

ஒரு சமூகத்தின் வளர்ச்சியானது அதன் கல்வி வளர்ச்சியில் தங்கியுள்ளது. இக் கல்வி வளர்ச்சி வரலாற்றின் ஆரம்பப் படியினை ஆராயின், அங்கு அறிவுவளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி என்ற வகையில்தான் கல்வியின் நோக்கங்களுக்கு அழுத்தங் கொடுக்கப்பட்டது. ஆங்கு விஞ்ஞானக் கல்வி என்னும் நிலை அன்று காணப்படவில்லை. பின்னைய காலகட்டங்களில், குறிப்பாகப் பரிசோதனை யுகத்தைத் தொடர்ந்த காலகட்டத்தில் விஞ்ஞான அறிவும், விஞ்ஞான ஆராய்ச்சிகளும் சமூகத்தில் மிளிரத் தொடங்கவே விஞ்ஞானக் கல்வியின் தேவை சமூகத்தில் பரவலாக உணரப்படலாயிற்று. அதன் விளைவாகவே இன்று பாடசாலை எனும் நிறுவன அமைப்புக்கூடாக அடிப்படை விஞ்ஞான அறிவேனும் வழங்கப்படும் நிலை காணப்படுகிறது. அதுமட்டுமல்ல பாடசாலையில் கற்கும் சகல மாணவரும் இவ் அடிப்படை அறிவைப் பெறும் வாய்ப்பும் கிடைக்கின்றது.

'விஞ்ஞானக் கல்வியானது அறிவாற்றல் மிக்கோருக்கே இயலுமானது' என்ற பீதிநிலை அன்று மக்களிடையே காணப்பட்டது. 'விஞ்ஞானக் கல்வியானது பெரும்பாலானோரால் விரும்பப்படாததொன்றாக ஒரு காலத்தில் இருந்தது!'[1] எனக் கொள்ளப்பட்டமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால், அன்று அவர்களிடையே காணப்பட்ட இந்தத் தவறான கருத்துக்கு எதிரான கருத்தைக் கல்வியியலாளர் புறூணர் அவர்களின் கூற்றிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. அவர் 'எந்தப் பிள்ளைக்கும் அவர்களின் அறிவாற்றலின் எந்த விருத்தி நிலையிலும்' எந்தப் பாடத்தையும் அறிவாற்றல் சார்ந்த நேர்மையான வடிவத்தில் திறமையாகக் கற்பிக்கமுடியும், என்றார்.[2] இக்கூற்று விஞ்ஞான பாடம் கற்றலுக்கும் பொருந்துவதாகும். இதற்கிணங்க இன்று ஆரம்ப வகுப்பு முதல் இடைநிலை வகுப்புவரை சகல பாடசாலைகளிலும் விஞ்ஞானக் கல்வி புகட்டப்படுவது காணக்கூடியதாக உள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இரு தசாப்தங்களிலேயே, விஞ்ஞானமானது பிரபல்யமான பாடமாகப் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இடம் பெற்றது. ஆனால் மேற்கத்தைய நாடுகளில், அதுவும் பிரித்தானியாவில், மக்களிடையே விஞ்ஞானத்தைப் பரப்பும் நிலையும் விஞ்ஞானக் கற்கையும் பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி அரைக்கூற்றுக் காலகட்டத்திலேயே உருவாகி விட்டது. இங்கிலாந்தில், 1870 ஆம் ஆண்டளவில் விஞ்ஞானம் கற்பித்தலை அறிமுகப் படுத்துவது சார்பான விவாதம் உச்சக்கட்டத்தை அடைந்துகொண்டிருந்த போது விஞ்ஞானத்திற்குச் சார்பாகக் குரல் எழுப்பியவர்களுள் ஹெறபார்ட் ஸ்பென்சர் (Herbert Spencer), ரின்டோல் (Tyndall) உறக்ஸ்லி (Huxley) போன்றோர் குறிப்பிடத்தக்களவுக்கு இடம்பெற்றுள்ளனர்.[3]

புதுப்புது உண்மைகளை வெளிப்படுத்துவது விஞ்ஞானத்தின் பிரதான தொழிற்பாடு. உயர் இலட்சியங்களையும் நோக்கங்களையும் கொண்டிருப்பது இதன் பிரதான தோற்றப்பாடு. டுவேன் றோலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(H. Duane Roller) எனும் விஞ்ஞான வரலாற்றாசிரியர், 'விஞ்ஞானம் என்பது அறிவுக்காய தேடுதலே அன்றி அறிவு அல்ல' என்கின்றார்.[4] இத்தகைய பண்பு களைக்கொண்ட விஞ்ஞானத்தை பயனுறக் கற்கவேண்டில் அதனை அனுபவத்தில் அறியவேண்டும் கற்பித்தலின் அடிப்ப டைக் கொள்கையே வாழ்ந்து கற்றல் – செய்து கற்றல் என்பதாகும். இது விஞ் ஞானம் கற்பித்தலில் உண்மையான கூற் றாகும். விஞ்ஞானத்தைக் கற்கவேண்டு மேயொழிய விஞ்ஞானத்தைப் பற்றிக் கற் பது விஞ்ஞானமல்ல. விஞ்ஞானமானது ஒவ்வொருவரின் வாழ்க்கையுடன் மிகநெருங் கியது. உலகில் எங்குசென்றாலும் விஞ் ஞானமானது உயிர்ப்பொருள், புவி ஆகா யம், காற்று, நீர், ஒளி, வெப்பம், விசை போன்ற அவனைச் சூழ்ந்துள்ள சூழலுடன் ஒன்றிய பகுதியாகவுள்ளது.[5] ஒருவன் உல கில் காலடியெடுத்து வைக்கும்போதே விஞ் ஞானம் அவனுடன் ஒட்டியதாக வரு கின்றது.

இத்தகைய விஞ்ஞானக் கல்வியானது இன்னமும்கிராமிய சமூகங்களிடையே ஊடுரு வவேண்டியுள்ளது. இவர்களுடன் ஒப்பிடும் போது பெரும்பாலும் நகரப்புறப் பிள்ளை களே மருத்துவர்களாகவும், பொறியியலா ளர்களாகவும், உயர்தொழில் நுட்பவியலா ளர்களாகவும் வரும் சந்தர்ப்பங்களும் அனு கூலங்களும் காணப்படுகின்றன. இந்நிலை களைந்தெறியப்படவேண்டியது அவசியம். இந்நிலைக்கு கிராமிய சமூகத்தின் விஞ்ஞா னம்சார் எதிர்மனப்பாங்குகளும் காரண மாகும். விஞ்ஞானத்தில் மாணவரது மதிப் பீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒரு யுனெஸ்கோ அறிக்கையில்,[6] சில மாண வர்களிடையே காணப்பட்ட விஞ்ஞானம் சார் எதிர்மனப்பாங்குகள் சில குறிப்பிடப் பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

— விஞ்ஞானம் கடினமான பாடம்

— அதிகளவு தகவல்களை மனனம் செய் யவேண்டியுள்ளது

— அன்றாட வாழ்க்கைக்குப் பொருத்த மற்ற பாடம்

விஞ்ஞானபாடத்தில் தேர்வு தொடர் பான இவர்களின் மனப்பாங்கானது தேர் வில் சித்திபெறுவதொன்றேயாகும் என்றும், ஆசிரியர்களும் இந்நிலையைத் தூண்டுகின் றார்கள் என்றும், மாணவர்கள் தேர்வில் தோல்வியடையும் போது இம்மனப்பாங்கு மேலும் வளர்க்கப்படுகின்றது என்றும், வெளிவாரித் தேர்வுகளும் இவ் ஏழைமாண வர்களது மனப்பாங்கைத் தூண்டிவிடுகின் றது என்றும் இவ் ஆய்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கருத் திற்கு முற்றிலும் முரணான கருத்தை போலிண்ட (H. F. Boulind) என்பவர் குறிப்பிட்டுள்ளதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது அவசியம். இவர் மாணவரது விஞ்ஞான மனப்பாங்கு சார்பாகக் கூறும் போது, ஏனைய பாடங்களை விட விஞ்ஞா னத்தில் மாணவர்கள் கூடிய அக்கறை கொள்கின்றார்கள் என்கிறார்.[7] ஆனால், விஞ்ஞானமானது விருப்பு, வெறுப்பு பாட மாக அமைவது, அவர்களது விஞ்ஞானக் கல்விக்குக் கிடைக்கும் வசதிகள் வாய்ப் புக்கள், சமூகச் சூழல் என்பவற்றில் தங்கி யுள்ளது.

விஞ்ஞானமானது எல்லா ஆண், பெண் பிள்ளைகளினதும் கல்வியில் நம்பிக்கையான இடமாக இருக்கவேண்டும் என்று இப்போது எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.[8] துரித பொருளாதார அபிவிருத்திக்கும், வளர்ந்துவரும் தொழில்நுட்பக் காலத்தின் சிக்கல்களை ஒவ்வொரு குடிமகனும் ஓரள வாவது விளங்கிக்கொள்வதற்கும் விஞ்ஞா னக் கல்வியின் துரிதமுன்னேற்றம் அவசிய மானது. வளர்முக நாடுகளில் காணப்படும் நான்கு முதன்மையான தீய சக்திகளான மிகையான சனத்தொகைப் பெருக்கம், வறுமை, அல்லூட்டம், தொடர்ச்சியான உடல்நலக் குறைவு போன்றவற்றிலிருந்தும், நாட்டை அபிவிருத்திப் பாதையில் இருந்து வழிமாற்றிச் செல்லும் காரணிகளிலிருந்தும் நாட்டைக் காப்பாற்ற வேண்டும். வாழ்க் கைத்தரத்தை உயர்த்துவதற்குத் தேவை யான கண்டுபிடிப்புக்களுக்கு விஞ்ஞான அறி வும், திறனும் கொண்ட விஞ்ஞானிகளும், தொழில்நுட்பவியலாளர்களும் பெருமளவில் எமக்குத் தேவை. தாம் வாழும் உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பாகவும், பொறுப்புணர்வுடனும், வசதியாகவும் இருப்பதற்குரிய விஞ்ஞான விளக்கம் ஒவ்வொரு குடிமகனுக்கும் அவசியம். இவ்வாறான அம்சங்களைக் கொண்ட விஞ்ஞானக் கல்வியானது பாடசாலைக் கலைத்திட்டத்தில் இடம்பெறவேண்டி உள்ளது.

விஞ்ஞானக் கல்வியானது அடிப்படை பிரயோக ஆராய்ச்சி நிலையங்களுக்கும் தொழில்நுட்ப தொழில் நுணுக்க விஞ்ஞானக் கல்வி நிலையங்களுக்கும் பெருமளவில் தகுதியான மாணவர்களை வழங்குதல் வேண்டும். விஞ்ஞானத் தொழிலாளர் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அத்துடன் பொதுமக்களிடையே விஞ்ஞானத்தின் சமூகநயப்பை ஊக்குவிக்க வேண்டும்.

இத்தகைய தேவைகளை விஞ்ஞானக் கல்விமூலம் வேண்டிநிற்கின்ற சமுதாயத்திற்கு அரசானது எவ்வளவுக்கு அத்தேவைகளை நிறைவேற்றி வருகின்றது என்பதை நாம் எமது இலங்கை நாட்டை முன்வைத்து இங்கு நோக்கிப்பார்க்கலாம். ' எல்லோருக்கும் விஞ்ஞானம் ' எனும் உலகளாவிய நோக்கில், குறைந்தது கனிட்ட இடைநிலை மட்டம் வரையிலாவது (ஆண்டு 11 வரை) சகல மாணவர்க்கும் விஞ்ஞானம் கற்பிக்கப்படல் வேண்டும். இந்த நோக்கானது வளர்ச்சியடைய முன்னர், இம்மட்டத்தினரின் கல்வியில் விஞ்ஞானப் பாடநெறிக்கு எமது நாட்டில் வழங்கப்பட்ட இடம், வாய்ப்புக்கள், வசதிகள் என்பனவற்றினை நோக்கின் ( 1928 இலிருந்து ), இலங்கைக் கல்வி இலாகாவினால் 1928 இல் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பாடத்திட்டத்தின் பிரகாரம் ஆரம்ப விஞ்ஞானம் என்னும் பெயரில் விருப்பத்துக்குரிய பாடமாக மட்டுமே வழங்கப்பட்டுள்ளமை அறியவருகின்றது.[9] எல்லா மாணவர்களும் விஞ்ஞானபாடத்தைக் கற்கக் கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. வீட்டுப்பணி எனும் பாடத்துடன் ஆரம்ப விஞ்ஞானமானது இரண்டினில் ஒன்றைத் தெரிவுசெய்யும் நிலையில் தெரிவுப் பாடமாகவே வழங்கப்பட்டது.

1940 வரை இந்நிலை நடைமுறைப் படுத்தப்பட்டு வந்து, 1940 இல் ஆரம்ப விஞ்ஞானம் ஆனது பொதுவிஞ்ஞானம் எனப் பெயர்மாற்றம் பெற்றது. ஆனால், பாட உள்ளடக்கம், கற்பித்தல் முறை ஆகிய இரண்டிலும் மாற்றம் இடம்பெறவில்லை. அத்துடன் தெரிவுப் பாடமாகவுமே இது வழங்கப்பட்டது.

1945 இல் தாய்மொழி போதனா மொழியாகக் கட்டாயப்படுத்தப்பட்டதுடன், இந்நிலை தரம் 1 இலிருந்து ஆரம்பித்து 1957 இல் தரம் 10 வரை சென்று முடிவடைந்தது. இம் மொழி மாற்றத்தினால், விஞ்ஞானபாடத்தைக் க. பொ. த (சா/த) வகுப்பில் எடுப்போர் தொகை இலங்கையில் அதிகரித்தது. 1957 – 1966 வரையான காலஇடை வேளையில் 5000 இலிருந்து 30,000 வரை அதிகரித்தது. அத்துடன் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் பாடசாலைகளின் தொகையும் 115 - 500 ஆக அதிகரித்தது.[10]

1954 ஆம் ஆண்டின் விஜயவர்த்தனா ஆணைக்குழுவின் சிபாரிசு அறிக்கையும் பின்னர் அரசாங்க மாற்றத்துடனும் தொடர்ந்து, 1957 இல் தரம் 6, 7, 8 இல் உள்ள எல்லாத் தாய்மொழிப்பாடசாலை மாணவர்க்கும் பொது விஞ்ஞானமானது பொதுக்கல்வியின் முக்கிய கூறாக வழங்கப்பட்டது. விஞ்ஞானக் கலைத்திட்ட விரிவாக்கம் 1957 இல் முதன்முதலாக உருவாக்கப்பட்டு, நாட்டின் எல்லாப் பாடசாலைகளுக்கும் கிடைக்கக்கூடியதாக பாட அடக்கம் (Syllabus), போதனைத்திட்டம், பொதுவிஞ்ஞான சேவைக்காலக் கல்வித் திட்டம் போன்றன வெளியிடப்பட்டன. விஞ்ஞானக்கல்வி மேம்பாட்டிற்காக இப்படியான எத்தனங்கள் அரசினால் ஏற்படுத்தப்பட்ட போதும் பல பாடசாலைகளில் - குறிப்பாகக் கிராமப்புறப் பாடசாலைகளில் கனிட்ட இடைநிலை மட்டத்தில் பொது விஞ்ஞானம் கற்பிக்கப்படாத நிலையும் இருந்தது.

1961 இல் தரம் 9,10 க்காய விஞ்ஞான பாடங்களான உயிரியல், இரசாயனம், பௌதிகம் போன்றவற்றில் மீள்பரிசீலனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. 1961 - 63 வரையில் இப் பாடங்களுக்கான பாடத்திட்டம் Scheme - of work) ஆசிரியருக்கான போதனைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு 1963 இல் வெளியிடப்பட்டன. இதுவரை காலமும் தேர்வைமட்டும் நோக்கிய கற்பித்தலாக அமைந்த விஞ்ஞானபாடக் கற்பித்தல் முறையானது, இத் திருத்திய பாடத்திட்டத்தின் மூலம் மாணவர் விஞ்ஞானமுறைகளில் பயிற்சி பெறுவதை உறுதிப்படுத்துவதாகவும் நூல்களைவிட, இயற்கையிலேயே விஞ்ஞானத்தைத் தேடிக்கொள்வதை ஊக்கப்படுத்துவதாகவும் அமையும் என ஈ.எச். டி. அலவிஸ் அவர்கள் இதன் அறிமுக உரையில் கூறியிருந்தார்.[11] இத்திட்டத்தின்மூலம் மாணவரது விஞ்ஞான மனப்பாங்கை வளர்ப்பதற்காக விஞ்ஞான பாடத்தில் செய்முறைகளும், அவற்றுக்காய இணக்கல் உபகரணங்களும் ( Improvised Apparatus ) முக்கியமாக வலியுறுத்தப்பட்டன. இத்திருத்திய பாடத்திட்டம் 1965 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

கனிட்ட இடை நிலைமட்டத்தில் (தரம் 6, 7, 8) விஞ்ஞானமானது பொது விஞ்ஞானம் என்னும் பெயரில் வழங்கப்பட்டது. இதற்காக வாரத்தில் 3 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் தரம் 8 இல் மூன்றாம் மொழிப்பாடம் சேர்க்கப்படும்போது இம் மூன்று பாடவேளைகளும் இரண்டு பாடவேளைகளாகக் குறைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டது.[12] இவ்வாறு மூன்றாம் மொழிக்கு இடமளிக்கும் பொருட்டு, விஞ்ஞானபாடத்துக்கு ஒதுக்கப்பட்ட பாடவேளைகளைக் குறைத்துக்கொள்ள எடுத்த முயற்சியானது, சமூகத்தில் விஞ்ஞானத்தின் தேவையையும் முக்கியத்துவத்தையும் உணர்வதில் அரசின் தாமதத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

கனிட்ட இடைநிலைமட்டத்து பொது விஞ்ஞானபாட ஒழுங்குமுறையானது 1971 வரை தொடர்ந்து சென்றது. இதன்பின் 1972 இல் ஏற்படுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்தின் பாரிய மாற்றத்தின்மூலம் இது மாற்றத்திற்குள்ளானது. இப்புதிய கல்வித்திட்டத்தின் மூலம் விஞ்ஞானம், சமூகக்கல்வி, முன்தொழில்பாடம், கணிதம் என்பவற்றுக்கு முற்றிலும் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டன.[13] இப் பாடங்களைக் கருத்துள்ளவகையில் ஒன்றுடனொன்று தொடர்புபடுத்துதலில் (ஒன்றிணைந்த ரீதியில்) பாடவிதான அபிவிருத்தி நிலையம் கவனம் செலுத்தியது. இதுவரை ஐந்தாண்டுகால இடைநிலைக் கல்வியின் பின்னர் நடைபெற்ற க. பொ த (சா/த) தேர்வானது, இந்த உத்தேசத் திட்டத்தில் நான்கு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. 1972 வரை தரம் 6, 7, 8 இற்கு விஞ்ஞானமானது பொது விஞ்ஞானமாகவும், தரம் 9, 10 இற்கு பௌதீகம், இரசாயனம் உயிரியல் எனும் பாடங்களாகவும் வழங்கப்பட்டது. 1972 இன் பின் இந்நிலைமாறி தரம் 6 தொடக்கம் 9 வரை விஞ்ஞானக் கல்வியானது ஒரேபாடமாக ஒன்றிய விஞ்ஞானம் எனும்பெயரில் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தினால் நாட்டின் எல்லாப் பாடசாலை மாணவருக்கும் ஒரே சீரான பொதுக் கல்வியே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது இதற்கு முன்னைய கால கட்டங்களில் கனிட்ட இடைநிலை மட்டத்தில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் என மாணவர்களை வெவ்வேறு துறைகளுள் வகுத்துக் கற்பிக்கப்பட்ட வழக்கு இத்திட்டத்தின்மூலம் கைவிடப்பட்டது.

விஞ்ஞான பாடத்தினைப் பொறுத்தவரையில், இப்புதிய திட்டத்தில் எல்லா மாணவருக்கும் விஞ்ஞானம் என்பது ஒரு புத்தாக்க முயற்சியாகக் காணப்பட்டது. இன்றைய உலகுக்கு மிக முக்கியமாக உள்ள அடிப்படை விஞ்ஞான அறிவை ஒவ்வொரு கனிட்ட இடைநிலை மாணவனும் பெறக்கூடியதாக, ஒன்றிணைந்ததாக செய்முறை இயல்புள்ளதாக, மாணவரின் சொந்தச் சூழலுடன் தொடர்புபட்டதாக இவ் விஞ்ஞானபாடம் அமைந்து காணப்பட்டது. மாணவர்கள் தாமாகவே இணக்கல் உபகரணங்களைச் செய்து விஞ்ஞானம் கற்கும் சந்தர்ப்பங்களும் இங்கு வழங்கப்பட்டது. ஒன்றுக்கொன்று தொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்ற சில தலைப்புக்கள் மூலம் கற்பித்து மாணவரின் கற்றலை எல்லைப்படுத்துவதற்குப் பதிலாக, மாணவர் தாமாகவே அனுபவங்களைப் பெற்றுக் கற்றுக் கொள்வதற்கு இங்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதற்கு வசதிசெய்வதாக வகுப்பு 6, 7 ஒவ்வொன்றுக்கும் விஞ்ஞானபாடம் கற்பித்தலுக்கு நான்கு பாடவேளைகளும், வகுப்பு 8, 9 ஒவ்வொன்றுக் ஆறு பாடவேளைகளும் ஒதுக்கப்பட்டிருந்தது. முன்னைய காலத்தில் போலன்றி இங்கு விஞ்ஞான பாடத்திற்கு ஒதுக்கப்பட்ட பாடவேளைகளின் அதிகரிப்பானது விஞ்ஞானபாடக் கலைத்திட்டத்தின் (அகற்சி விரிவாக்கத்தையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

கலைத்திட்ட மறுசீராக்கமானது இரு அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும். முதலாவதாக, வளர்ந்துவரும் சந்ததியை நாட்டு அபிவிருத்திக்கு அவசியமான அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றால் நிரப்புவது. இரண்டாவதாக, நாட்டு அபிவிருத்திக்கு அவசியமான செயல்களை நிலைநாட்டுவது.[14] மேலும் கற்பித்தல் - கற்றலானது மாணவனைச் சூழ்ந்துள்ள உயிரிகளைத் தொடர்புபடுத்துவதாலும், மாணவனின் பொருளாதாரச் சூழலைத் தொடர்புபடுத்துவதாலும் மேற்கொள்ளப்படும்போது கூடிய கருத்தும் அக்கறையும் (சிரத்தையும், உள்ளதாக ஆக்கமுடியும். இவற்றைக் கருத்தில் கொண்டதாகவே 1972 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டமும் அமைந்திருந்தது. இத்திட்டத்தில் கணிதம், விஞ்ஞானம் கற்பிப்பதற்கென, க. பொ. த (உ / த) விஞ்ஞானம், கணிதம் சித்தியெய்தியவர்கள் பலர் விசேடமாக முதன்முறையாகக் கணித / விஞ்ஞான ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டு நியமனம் வழங்கப்பட்டார்கள். இவர்களது கற்பித்தலை மேம்படுத்துவதற்காக இவர்களுக்குச் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களும், புத்தூக்கல் வகுப்புக்களும் துரிதமாகவும், பரவலாகவும் மேற்கொள்ளப்பட்டன. விஞ்ஞானம் கற்பித்தல் – கற்றல் செயற்பாட்டை சிறப்புறச் செய்வதற்கு உதவியாக விஞ்ஞான உபகரண வசதிகள், இரசாயனப் பொருட்கள் போன்றன வகுப்பு 6 இலிருந்து 9 வரை ஒவ்வொரு மட்டத்துக்கும் ஒவ்வொரு பாடசாலைக்கும் அரசினால் வழங்கப்பட்டது. விஞ்ஞான உபகரணங்களைச் செய்வதற்கான பயிற்சி வகுப்புக்களும் இவ்வாசிரியர்க்கு வெளிக்கள நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டன. இவ்வாறாக 1972 இலிருந்து நடைமுறைக்கு வந்த கனிட்ட, இடைநிலை மட்ட விஞ்ஞான பாடத்தைக் கற்பித்தலுக்குப் பரவலாக வசதிகளும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டமை 'எல்லோருக்கும் விஞ்ஞானம்' என்ற கருத்தை அரசு செவிமடுத்து செயற்பாடு கொண்டமையை உணர்த்துகின்றது.

எந்தவொரு நாட்டிலும் அரசியலில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றமானது கல்வியிலும் மாற்றம் கொண்டுவருதல் மரபு. இவ்வாறான மாற்றமாகவே 1972 இல் ஏற்பட்ட கல்வி மாற்றமுமாகும். இதனைத் தொடர்ந்து 1977 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றமும் 1978 இல் கல்வியில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. இங்கு கலைத்திட்டத்தைப் பொறுத்தவரை பாடங்களின் பெயரில் மட்டுமே மாற்றம் காணப்பட்டது. ஆனால், 1972 இலிருந்து நான்காண்டுகளாகக் குறைக்கப்பட்ட கனிட்ட இடைநிலை மட்டமானது இங்கு ஐந்தாண்டுகளாக மீண்டும் கூட்டப்பட்டது. பத்துப் பாடங்களைக் கொண்டிருந்த கலைத்திட்டமானது ஒன்பது பாடங்களைக் கொண்டதாக மாற்றப்பட்டது. விஞ்ஞானபாடத்தைப் பொறுத்தவரையில் தரம் 6, 7, 8 இல் ஆரம்பவிஞ்ஞானமாகவும் தரம் 9, 10 இல் பொதுவிஞ்ஞானமாகவும் கற்பிக்கப்பட்டது. இங்கு விடயங்களில் மாற்றம் காணப்படாத போதிலும் அவற்றில் சிலவற்றின் விடய ஆழம் கூட்டப்பட்டிருந்தது. 1984 வரை தொடர்ந்து இந்நிலை காணப்பட்டது.

1985 இல் திரும்பவும் பாடத்திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள் அவ்வப்போது முதல் தடவையாகப் புகுத்தப்பட்ட விதம் அட்டவணை – 1 இல் காட்டியவாறு அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

## திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம் புகுத்தப்பட்ட வருடமும் - வகுப்பும்

| புகுத்தப்பட்ட வருடம் | | வகுப்பு (ஆண்டு) |
|---|---|---|
| 1985 | — | 1. 4 |
| 1986 | — | 2' 5, 7. 8, 9 |
| 1987 | — | 3, 6, 10 |
| 1988 | — | 11 |

* இத் திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டங்களுடன், வகுப்புக்களைத் தரங்களாகக் குறிப்பிட்ட வழக்கு மாற்றப்பட்டு, ஆண்டுகளாகக் குறிக்கப்படும் வழக்கு ஏற்படுத்தப்பட்டது.

இம்மாற்றங்கள் யாவும் 1981 ஆம் ஆண்டின், கல்வியமைச்சின் வெள்ளை அறிக்கையைப் பின்பற்றியதாகவே மேற்கொள்ளப்பட்டது. இதுவரை காலமும் கனிட்ட இடைநிலை மட்டத்தில் வகுப்பு 6 இலிருந்து வழங்கப்பட்டுவந்த விஞ்ஞான பாடமானது இத்திட்டத்தினால் மேலும் ஆரம்பப்பாடசாலை மட்டத்துக்குப் பரவலாக்கப்பட்டது. ஆண்டு 4 – 5 வரையான வகுப்புக்களுக்கு ஆரம்ப விஞ்ஞானமாக வாரத்திற்கு இரு பாடவேளைகளும் ஆண்டு 6 – 8 வரையான வகுப்புகளுக்குப் புதிய விஞ்ஞானமாக ஆறு பாடவேளைகளும் ஆண்டு 9 – 11 வரையான வகுப்புகளுக்கு விஞ்ஞானமென ஏழு பாடவேளைகளும் ஒதுக்கப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றது. இந்த நிலைமை இன்றுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

விஞ்ஞானக் கல்வியானது பாடசாலைப் பொதுக் கலைத்திட்டத்தில் ஒன்றிணைந்த பகுதியாக உள்ளபோதும் இதன் ஒழுங்கமைப்பு, கற்பிக்கும் நேரம், விஞ்ஞானத்தைக் கற்பிக்க ஆரம்பிக்கும் வகுப்பு, இதைக் கட்டாய பாடமாக ஆக்கப்பட்ட வகுப்பு போன்றன நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. எல்லா நாடுகளிலும் விஞ்ஞானமானது சுற்றாடற்கல்வி அல்லது பொது விஞ்ஞானம் அல்லது ஒன்றிய விஞ்ஞானம் என்றவாறு பாடசாலையின் முதல் ஐந்து அல்லது ஆறு வருடங்களுக்குக் கற்பிக்கப்படுகின்றது. இம்முறைமை இந்தியா, லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசு (Laos) மாலைதீவு, மொங்கோலியா, வியட்நாம் சோசலிசக் குடியரசு, சோவியத் சோசலிசக் குடியரசு தவிர்ந்த ஏனைய நாடுகளில் கனிட்ட இடைநிலைமட்டம் வரை தொடர்ந்து நடைபெறுகின்றது. மேற்குறிப்பிட்ட நாடுகளில் இம்மட்டத்து விஞ்ஞானம் ஆனது அதன் வேறுபட்ட பிரிவுகளாகவே கற்பிக்கப்படுகின்றது.[15]

1972 இலிருந்து எல்லா நாடுகளிலும் ஆரம்பப் பாடசாலை மட்டத்தில் விஞ்ஞானமானது மையப் பாடங்களுள் ஒன்றாகவும், கனிட்ட இடைநிலை மட்டத்தில் கட்டாய பாடமாகவும், சிரேட்ட இடைநிலை மட்டத்தில் தனிப்பாடங்களாகவும் கற்பிக்கப்படுகின்றது. சில நாடுகளில் இடைநிலை மட்டம் முடியும்வரை கட்டாய பாடமாக உள்ளமையும், சில நாடுகளில் தெரிவுப்பாடமாக உள்ளமையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

விஞ்ஞானத்தின் பிரதான கிளைகளான உயிரியல், இரசாயனம், பௌதிகம் போன்றவற்றில் ஓரளவு அறிவையேனும் பெற்றுக் கொள்ளாமல் புற உலகினுள் நுழையக் கூடாது. இதற்குச் செயல் வடிவம் கொடுப்பதாக எமது நாட்டு விஞ்ஞானக் கல்வியானது இன்று ஆரம்பப் மட்டத்திலிருந்து கனிட்ட இடைநிலை மட்டம்வரை ஒன்றிய விஞ்ஞானமாகக் கற்பிக்கப்படுகின்றமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு விஞ்ஞான எண்ணக்கருவும் முன்னர் கற்ற எண்ணக்கருவிலிருந்து கட்டியெழுப்பப்படும். இவை பின்னர் உயர்மட்ட அல்லது சிக்கலான எண்ணக்கருவுக்கு அத்திவாரமாக அமையும். விஞ்ஞான நோக்கங்கள் குறுகிய காலத்துள் அடையப்படக்கூடியவையல்ல. இந்த ஒன்றிய விஞ்ஞானமானது பாடத்துள்ளும், வகுப்புக்களுள்ளும் ஒன்றிணைவைக் கொண்டு காணப்படுவது விஞ்ஞான எண்ணக்கரு வளர்ச்சிக்கும், விஞ்ஞான நோக்கங்களின் அடைவுக்கும் வழிகோலுவதாக உள்ளது. மேலும் வெவ்வேறுவகையான விஞ்ஞானத்துறைகளில் மாணவரின் பங்குபற்றலைக் கூட்டுவதாகவும், அவர்களின் பின்னைய சிறப்புக் கற்கைநெறிக்கும், ஆழமான கல்விக்கும் அடிப்படையாகவும் இதன் வடிவமும் பொதுமையாக்கமும் அமைகின்றது. பாடங்களிடையே இணைப்பைப் பேணுகின்ற தன்மை இல்லையெனின் அவற்றினால் பெறும் பயிற்சியானது நிரல்படுத்தப்பட்ட தகவல் தொகுப்பாக மட்டுமே அமைந்துவிடும். அதனால் கல்வி வாய்ப்புக்களில் பெரும்பாலானவை வீணடிக்கப்பட்டு விடும்.

சமூகத்தில் ஏற்படும் நெருக்கிடைகள் வேலையற்றோரின் மனமுறிவுகளினால் மட்டுமன்றி கல்வி அமைப்பில் மாணவர்கள் நம்பிக்கையற்று இருப்பதினாலும் ஆகும் இதையுணர்ந்தே இலங்கை அரசு 1972 இல் கலைத்திட்ட மாற்றத்தினை உருவாக்கியது. இதில் மாணவரின் நம்பிக்கையை ஊட்டுவதாகவும். வாழ்க்கைப் பயனுடையதாகவும் அமைந்தவற்றுள் ஒன்றே இன்றைய கனிட்ட இடைநிலை மட்டத்தில் புகுத்தப்பட்ட ஒன்றிய விஞ்ஞானமாகும். எல்லோருக்கும் விஞ்ஞானம்' என்ற நோக்கானது, ஒரு நாட்டில் எல்லா சமுதாயத்திற்கும் அடிப்படையான விஞ்ஞானக் கல்வியை வழங்குதல். விஞ்ஞானத்தைப் பிரபல்யமாக்கல், விஞ்ஞானக் கற்பித்தலுடன் வெறுமனே நின்றுவிடாது விஞ்ஞான – தொழில்நுட்பம் சார் (Science and Technology) நேர்மனப் பாங்குகளை வளர்த்தல் என்ற வகையில் முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொண்டுள்ளது.[17] இன்று உலகில் ஒன்றிய விஞ்ஞானமானது முக்கிய எண்ணக்கருவாக அமைந்தது. 'எல்லோருக்கும் விஞ்ஞானம்' என்பதன் நோக்குகளை அடைவதற்காக உலகளாவிய ரீதியில் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

எமது நாட்டுக் கல்வி வளர்ச்சியில் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியை அன்றிலிருந்து இன்றுவரை நோக்கும் போது. அது ஒடுங்கிய பாதையிலிருந்து பரந்துபட்ட பாதைக்கு வளர்ச்சியடைந்து வந்துள்ளமை புலப்படுகின்றது. எல்லோருக்கும் விஞ்ஞானம் என்ற இன்றைய உலகநாடுகளின் கருத்துக்கமைவாக எமது நாட்டிலும் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியடைந்துள்ளது. எமது நாட்டுக் கலைத்திட்டத்தில் முக்கிய பகுதியாக இது இடம்பெற்றுள்ளதுடன், சிறந்ததாகவும், கல்விசார் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், எல்லா மாணவருக்கும், எல்லாக் கல்வி மட்டத்திலும் கற்கத்தகுந்த ஒழுங்குபடுத்தப்பட்ட பெறுமதிவாய்ந்த அறிவின் தொகுப்பாகவும் அமைந்துள்ளது. இந்த விஞ்ஞானக் கல்வியை மாணவருக்கு வழங்கும்போது அதனால் அவர்கள் முழுப்பயனை அடைய வேண்டும். விஞ்ஞானக் கல்விமூலம் அவர்கள் அடையவேண்டிய நோக்கங்களையும், இலக்குகளையும் அவர்கள் அடையும் வண்ணம் வழிநடத்தவேண்டியது அதனைக் கற்பிக்கும் ஆசிரியர்களது தலையாய கடமையாகும். கற்பித்தால்மட்டும் போதாது. மாணவர் கற்கும்வண்ணம் கற்பித்தல் நடைபெறவேண்டும். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்


1. Ministry of Education - England, *Science in Secondary Schools Ministry of Education Pamphlet No 38, (* London: H.M.S.O., 1960 *)*, PP. 5 - 13.

2. Jerome S.Bruner, *The Process of Education, (* Cambridge: Harvard University Press, 1975*)*, P. 12

3. Ministry of Education - England, *op.cit.*

4. H.Duane Roller, "Has Science a Climate" ? Sunday Oklahoman Oklahoma City, Oklahoma, I970, P. 23 Cited in John W. Renner & Don G. Stafford, *Teaching Science in the Elementary School*, 3rd edition, *(* New York: Harper & Row, Publishers, inc., 1979 *)*, P. 4

5. Unesco, *Sourcebook for Science teaching*, Revised and enlarged edition, *(*Paris; Unesco, 1962*)* , P. 9

6. Unesco, *Pupil Evaluation in Science* - Report of a Study Group Meeting Penang, Malaysia, 9 - 18 January 1985, *(*Bangkok: Unesco Regional Office for Education in Asia and the Pacific, 1985 *)*, P. 4

7. H.F. Boulind, *The teaching of Physics in Tropical Secondary Schools, (*Oxford University Press, 1957*)*, PP. 3 - 4.

8. Commonwealth Education Liaison Committee, *School Science Teaching* Report of an Expert Conference held at the University of Ceylon Peradeniya, December 1963, *(* Londonn; H.M.S.O., 1964*)*, P. 5

9. K.Sinnathamby, *A Study of the implementation of the intergrated Science Ptogramme in the Tamil Medium Schools of the Colombo South Educational Region*, Unpublished M.A *(*Education*)* Dissertation, Colombo Campus University of Sri Lanka, Colombo, 1978, P. 22.

10. E.L.Wijemanne, "Development of the Curriculum " *Education in Ceylon* A Centenary Volume, Part 111, *(*Colombo*:* Ministry of Education and Culturel affairs, 1969*)*, PP. 947 - 959.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. Ministry of Education - Ceylon, *Syllabuses of Instruction and Schemes of Work in Science for Ceylon Schools G.C.E Classes*, (Colombo: Ministry of Education, 1963)

12. *Circular No. 1 of 1963,* Issued by the Director of Education.

13. Ministry of Education - Sri Lanka, *Education in Sri Lanka - New Horizons*, (Sri Lanka: Govt. Press, year of publication not given), P. 12

14. Government of Ceylon, *The Five year Plan*, (Ceylon: Ministry of planning and Employment , 1971), P. 111

15. Unesco: *Science for All* - Report of a Regional meeting. Bangkok, 20 - 26 September 1983 (APEID), (Bangkok: Unesco Regional Office for Educa - tion in Asia and the Pacific, 1983), P. 7

16. Unesco, *Bulletin of the Unesco Regional Office for Education in Asia and Pacific* - Science Education in Asia and the Pacific, No. 25, June 1984, (Bangkok: Unesco, 1984), P. XIV.

17. Unesco, *Science for All* - Report of a Planning Group meeting, Bangkok 20 - 23 July 1982, (Bangkok: Unesco Regional office for Education in Asia and the Pacific, 1982) P. 2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை
தொகுதி V
இதழ் I, II – 1993

# யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இறந்த கால அமைப்பு

— இ. கயிலைநாதன் —

உலகிலே சில மொழிகள் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என இரு பெரும் வழக்கினைக் கொண்டவை. இவ்விரு வழக்குகளும் அமைப்பிலே வேறுபடுபவை. இம்மொழிகளில் பேச்சு வழக்கினை அறிந்த ஒருவர் எழுத்து வழக்கினைச் சம்பிரதாயப் படி கற்றே அறிந்து கொள்ள முடியும். இரு வழக்குகள் கொண்ட மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். எழுத்துத் தமிழும், பேச்சுத் தமிழும் இலக்கண அமைபுக்களில் பெரிதும் வேறுபடுகின்றன. இவ் வேறுபாடுகளை ஒப்பிட்டு ஆராய்வது பயனுள்ள முயற்சியாகும். ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம் இரு வழக்குகளின் தன்மை, போக்கு, வரலாறு முதலியனபற்றி அறிந்து கொள்ளலாம். தமிழ் மொழியைத் தாய் மொழியாகப் பேசும் மாணவர்களுக்கு எழுத்து வழக்கைக் கற்பிக்கும் போது கற்றலிலும், கற்பித்தலிலும் எழும் சிக்கல்கள் பற்றி அறிந்து கொள்ளலாம். ஒப்பிட்டு ஆராய்வதற்கு முதலில் இருவழக்குகளின் அமைப்புக்களைத் தனித் தனியே விளக்குதல் வேண்டும். அதன் பின்னரே ஒப்பிட்டு ஆராய்தல் கூடும்

தமிழ் மொழி எழுத்து வழக்கில் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்காலங்கள் உண்டு; இதேபோன்று பேச்சு வழக்கிலும் இம் முக்காலங்களும் உண்டு. ஆயின் இரு வழக்குகளிலும் காலங்களின் அமைப்பு மிக வேறுபடுகின்றது. யாழ்ப்பாணத் தமிழ்ப் பேச்சு வழக்கில் இறந்த கால அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது; இவ்வமைப்பில் காணப்படும் தனித் தன்மைகள் யாவை எனக் காண்பதே இவ் வாய்வின் நோக்கமாகும்.

பொதுவாக எழுத்துத் தமிழிலாயினும் பேச்சுத் தமிழிலாயினும் வினை அடிச் சொற்கள் வினை முற்றாகப் பயன்படுத்தப்படும் போது அவை காலங் காட்டும் விகுதி, பால் காட்டும் விகுதி, எண் விகுதி, இடவிகுதி, ஆகியனவற்றை ஏற்று வினைமுற்றாக அமைகின்றன. இருவழக்குகளிலும் வினை அடிகள் (Verb roots) ஏவல் வினையாகவும் தொழிற்படுவன.

யாழ்ப்பாணப் பேச்சு மொழியில் வினை அடிச் சொற்கள், இறந்தகால அடிச்சொல் (Past tense base) ஆகுமாற்றை முதற் கண் பார்ப்போம். இதனை விளக்குவதற்கு முன் வினை அடிகளின் தனிச் சிறப்பு வாய்ந்த வகைப்பாட்டினை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

வினைச் சொற்கள் வல்வினை (Strong Verbs) மெல் வினை (Weak Verbs) என இருவகைப்படும். வினைஅடி ஒன்று வினையெச்சமாவதற்கு -க்க எனும் விகுதியை ஏற்றால் அது வல்வினையைச் சார்ந்ததாகும். -அ எனும் விகுதியை ஏற்றால் அது மெல் வினையைச் சார்ந்ததாகும். படி – படிக்க, எழுது – எழுத, என்பன எடுத்துக்காட்டு.

இனி யாழ்ப்பாணப் பேச்சு மொழியில் இறந்த கால விகுதிகள் பலவுண்டு. இந்த வினை அடி இறந்த காலத்தைக் காட்டுவதற்கு இந்த விகுதியை ஏற்கும் என ஓர் ஒழுங்கு முறையில் வினையடிகள் அனைத்திற்கும் திட்டவட்டமாகக் கூறுவது எளிதன்று. ஆனால் சில வினை அடிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்த வரையில் மட்டும் அவை இறந்த காலத்தைக் காட்டுவதற்கு ஏற்கும் விகுதிகளைத் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

முதலில் வல்வினைச் சொற்களைக் கருத்திற் கொள்வோம்:– அ என்னும் ஒலியை ஈற்றில் கொண்டு முடியும் வல்வினைச் சொற்கள் அனைத்துமே –ந்த்– பெற்று இறந்த கால வினை அடியாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக மற, பற, நட போன்றவை மறந்த்–, பறந்த்–, நடந்த்– என அமைவதைக் காண்க. இரு, வச்சிரு ஆகிய இரு வல்வினைகளும் இறந்த காலத்தைக் காட்ட -ந்த்- விகுதியையே ஏற்கின்றன: இருந்த்–, வச்சிருந்த்–, வல்வினை அடியின் ஈற்றிலே -இ, -ய் அல்லது -ஐ உளது எனின் அது இறந்த காலத்தைக் காட்ட -ச்ச்- எனும் விகுதியை ஏற்கும். எடுத்துக்காட்டாக வாசி, காய், கதை போன்ற வினை அடிகள் வாசிச்ச்-, காய்ச்ச்-, கதைச்ச்-, என இறந்த கால வல்வினை அடியாக அமைவதைக் கருதுக. மேலே குறிப்பிடாத உயிரொலி ஒன்றில் வல்வினை அடி முடியுமாயின் அது இறந்த காலத்தைக் காட்டுவதற்கு -த்த்- என்னும் விகுதியை ஏற்கும். எடுத்துக்காட்டாக குடு- குடுத்த்-, படு-படுத்த்- என அமையும்.

உயிரொலிகளில் முடியும் வல்வினைச் சொற்களோடு ஒப்பு நோக்கும் போது மெய்யொலிகளில் முடியும் வல்வினைச் சொற்கள் குறைவாகும். அவை இறந்த கால அடியாக அமையும்போது ஏற்படும் மாற்றங்கள் சிக்கலானவையாகும். மெய்யில் முடியும் வல்வினைகள் ஏற்கும் இறந்த கால விகுதிகள் வெவ்வேறாகும். இவற்றுள் குறிப்பிட்ட மெய்யொன்றில் முடிவுறும் வினை குறிப்பிடக்கூடிய இறந்தகால விகுதியொன்றை ஏற்கும் என உறுதியாகச் சொல்லக்கூடிய ஒரு நிலை இல்லை. எடுத்துக்காட்டாக கேள்-, நில்-, வில், பார்-, ஆகிய வினைகளைப் பார்ப்போம். இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு இறந்தகால விகுதியை ஏற்பதைக் காண்க: கேட்ட்-, நிண்ட்-, வித்த்-, பாத்த்-, .

இனி மெல்வினைகளை நோக்குவோம். இவற்றுள் குறிப்பிட்ட ஒரு வினை எந்த இறந்தகால விகுதியை ஏற்கும் என ஓரளவு கூறத்தக்கதாக உள்ளது.

குறிலை அடுத்து 'டு' பெற்று முடியும் மெல்வினைகள் -ட்ட்- எனும் இறந்த கால விகுதியை ஏற்கின்றன. எடுத்துக்காட்டு: சாப்பிடு சாப்பிட்ட்-, நடு நட்ட்-, இறந்தகால விகுதியை ஏற்கும்போது 'டு' கெட்டு விடுகின்றது. ஈற்றிலே-ர் கொண்டு முடியும் மெல்வினைகள் -ந்த்- எனும் இறந்த கால விகுதியை ஏற்கின்றன; ஏற்கும்போது -ர் கெட்டுவிடுகிறது. எடுத்துக்காட்டு, சேர் சேந்த்-. -ழ் அல்லது ழு என முடிவுறும் மெல்வினைகள் சிலவும் -ந்த்- ஏற்று இறந்த காலத்தைக் காட்டும். எடுத்துக்காட்டாக, இகழ் இகழ்ந்த்-, விழு-விழுந்த்-. மெல்வினைகளுள் தா-, வா-, கொண்ட-, ஆகியவையும் -ந்த்- பெற்று இறந்தகாலத்தைக் காட்டுகின்றன. இதனை விதிவிலக்கெனக் கொள்தல் வேண்டும்.

'ன்' அல்லது 'ண்' அல்லது 'ள்' கொண்டு முடியும் மெல்வினைகள் இறந்த காலத்தைக் காட்ட –ண்ட்– எனும் விகுதியைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, காண் – கண்ட் –, தின் – திண்ட் –, விகுதியை ஏற்கும்போது வினை அடிகள் தம் ஈற்று எழுத்தை இழந்துவிடுவதாகக் கொள்கின்றோம்: தின் + ண்ட் > திண்ட் –, காண் எனும் வினைஅடியின் ஆகாரம் இறந்தகால விகுதியை ஏற்கும்போது அகரமாகிவிடுகிறது. மேலே 'ழ்' கொண்டு முடியும் சில வினை அடிகள் இறந்த காலத்தைக் காட்டுவதற்கு – ந்த் – எனும் விகுதி ஏற்பதைக் கூறினோம். அத்தகைய வினை அடிகள் சில இறந்த காலத்தைக் காட்டுவதற்கு - ந்த் – எனும் விகுதியை ஏற்காது – ண்ட் – விகுதியை ஏற்பதும் உண்டு. எடுத்துக்காட்டாக தவழ் – தவண்ட் –, போன்றவற்றைக் காண்க. 'இ' அல்லது 'ய்' அல்லது 'ஐ' கொண்டு முடியும் மெல்வினைகள் இறந்தகாலத்தைக் காட்டுவதற்கு – ஞ்ச் – எனும் விகுதியை ஏற்கின்றன. எடுத்துக்காட்டாக அறி – அறிஞ்ச் – தோய்– தோஞ்ச் –, நனை – நனைஞ்ச் – எனக் காட்டலாம். – ஞ்ச் – விகுதியை ஏற்கும்போது ஈற்று 'ய்' கெட்டுவிடுகிறது. இனி மெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைகளுள் மிகப் பல இறந்த காலத்தைக் காட்டுவதற்கு – இன் – விகுதியை ஏற்கின்றன. மெல்வினைகளுள் எவை எவையெல்லாம் – இன் – விகுதியை ஏற்கின்றன என முழுமையாகத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. எனினும் பின்வரும் மெல்வினை வகைகள் – இன் – விகுதியை ஏற்கின்றன எனக் கூறலாம்: (அ) வினை அடிச் சொற்கள் இரு மெய் எழுத்துக்களுடன் 'உ' கரத்தைக் கொண்டு முடித்தால் ($C_1C_2$உ) அல்லது இரட்டித்த மெய் எழுத்துக்களுடன் 'உ' கரம் கொண்டு முடித்தால் ( – ல்லு என முடிபவை தவிர ) ($C_1C_2$உ) அவை – இன் – என்னும் இறந்தகால விகுதியை ஏற்கும். எடுத்துக்காட்டாக தொடங்கு – தொடங்கின், திரும்பு – திரும்பின், அடுக்கு - அடுக்கின், காட்டு – காட்டின். (ஆ) வினை அடிச் சொற்களின் ஈற்று மெய் எழுத்து 'உ' கரத்துடன் சேர்ந்து அதன் முன் நெட்டுயிர். உடையதாய் முடிந்தால் அவை – இன் – விகுதியை ஏற்கும். எடுத்துக்காட்டாக பேசு – பேசின் –, ஏறு – ஏறின் – , தேடு – தேடின் –. (இ) 'உ' கரத்தை ஈற்றில் கொண்டு மூன்று குற்று அசையைக் (three Short Syllables) கொண்ட வினை அடிச் சொற்கள். எடுத்துக்காட்டாக கழுவு, எழுது, உதவு ; போன்றவை கழுவின் –, எழுதின் –, உதவின் –, என – இன் – விகுதியை ஏற்கின்றன. இவ்வினை அடிச் சொற்களில் வரும் 'உ' கரம் – இன் - விகுதியின் முன் கெட்டுவிடும்.

இதுவரை யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் காணப்படும் இறந்தகால வினை அடிவடிவங்கள் எவ்வாறு அமைகின்றன எனப் பார்த்தோம். இனி பயன்பாட்டிலே இவ்வினை வடிவங்கள் சிலவற்றில் தோன்றும் தனித் தன்மைகளைக் கவனிப்போம்.

இறந்தகாலத்திற்கு – இன் - விகுதியை ஏற்கும் வினையடிகள் யாவும் அஃறிணை வினைமுற்று வடிவங்களிலும் உயர்திணைப் பன்மைப் படர்க்கை வினைமுற்று வடிவங்களிலும் அந்த – இன் – விகுதியை - இச் – என உருமாற்றிக் கொள்கின்றன. அதாவது –இன் - எனும் இறந்தகால விகுதி, – இனம், – உது, – உதுகள் ஆகிய விகுதிகளுள் ஒன்று அடுத்து வரும்போது – இச்– ஆக மாறிவிடுகிறது. இதனைப் பின்வரும் ஆடு எனும் வினையடியின் வினைமுற்று வாய்பாடு தெளிவாக்கும்.

வினையடி : ஆடு

| | |
|---|---|
| நான் ஆடினென் | – ( ஆடு + இன் + என் ) |
| நாங்கள் ஆடினம் | – ( ஆடு + இன் + அம் ) |
| நீ ஆடினாய் | – ( ஆடு + இன் + ஆய் ) |
| நீர் ஆடினீர் | – ( ஆடு + இன் + ஈர் ) |
| நீங்கள் ஆடினீங்கள் | – ( ஆடு + இன் + ஈங்கள் ) |
| அல்லது | |
| நீங்கள் ஆடினியள் | – ( ஆடு + இன் + இயள் ) |
| அவர் ஆடினார் | – ( ஆடு + இன் + ஆர் ) |
| அவன் ஆடினான் | – ( ஆடு + இன் + ஆன் ) |
| அவங்கள் ஆடினாங்கள் | – ( ஆடு + இன் + ஆங்கள் ) |
| அவா ஆடினா | – ( ஆடு + இன் + ஆ ) |
| அவள் ஆடினாள் | – ( ஆடு + இன் + ஆள் ) |
| அவளவை ஆடினாளவை | – ( ஆடு + இன் + ஆளவை ) |
| அவை ஆடிச்சினம் | – ( ஆடு + இச்ச் + இனம் ) |
| அது ஆடிச்சுது | – ( ஆடு + இச்ச + உது ) |
| அதுகள் ஆடிச்சுதுகள் | – ( ஆடு + இச்ச் + உதுகள் ) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தகால விகுதியாக - இச்ச் - வல்வினைகள் சிலவற்றுடன் வருவது முன்னர் கூறப்பட்டது. எடுத்துக்காட்டாக படிபடிச்சினம். இங்கு - இச்ச - பிறிதொரு விகுதியின் உருமாற்றம் எனக் கொள்ளப்படவில்லை. இங்குமட்டும் கொண்டுள்ளோம். இச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான அமிசத்தைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். இறந்த காலத்திற்கு - இன் - விகுதி தவிர்ந்த ஏனைய விகுதிகளுள் ஒன்றை ஏற்று வரும் அனைத்து வினையடிகளும் - வல்வினையாயினும் மெல்வினையாயினும் - அடுத்து - இனம் அல்லது - உது அல்லது - உதுகள் வரும் - போது தாம் ஏற்கும் இறந்தகால விகுதியுடன் - இச்ச் - எனும் விகுதியையும் கட்டாயமற்ற முறையில் ( ( Optionally ) ஏற்றுவரக் காண்கிறோம். எடுத்துக் – காட்டாக, நட, நடக்க, நடந்தினம் ~ நடந்திச்சினம்; நில், நிக்க நிண்டினம் ~ நிண்டிச்சினம்; போடு, போட போட்டினம் ~ போட்டிச்சினம்; அறி, அறிய, அறிஞ்சினம் ~ அறிஞ்சிச்சினம். ஆனால் இப்படி வருவதை அஃறிணையில் காணோம். நடந்துது என வருகிறது, நடந்திச்சுது என வருவதில்லை; நிண்டுது என வருகிறது, நிண்டிச்சுது என வரக் காணோம்.

மேலே குறிப்பிட்ட வடிவங்களில் மேலதிகமாக வரும் - இச்ச் - யாது? ஏன் அவ்வாறு வருகிறது ? - இன் - எனும் விகுதியே - இச்ச் - என மாறுகிறது எனக் கொண்டோம். - இனம் விகுதி இறந்தகால விகுதி - இன் - போல இருப்பதனால், - இச்ச் - எனவும், ஒரு விகுதி வந்துவிடுகிறதா ? இங்கு அவ்வாறு கருதும்போது அந்த - இனம் எனும் விகுதி - இச்ச் - ஆக உரு மாறுவதாகக் கருத முடியாது. அன்றி இரண்டு இறந்தகால விகுதிகள் வருகின்றன எனக் கொள்ளலாமா ? நடத்தினம் என்பதில் - ந்த் - இறந்தகால விகுதி. நடத்திச்சினம் என்பதில் - ந்த் -, இச்ச் - ஆகிய இரண்டுமே இறந்தகால விகுதி எனலாமா ? இரண்டு பன்மை விகுதிகளை ஏற்கும் பெயர்கள் வழக்கில் உண்டு. ஆசிரியன், ஆசிரியர், ஆசிரியர்கள், ஆசிரியர்மார் போன்றவற்றில் - ர் பன்மையைக் குறிக்கலாம் ; - கள் - - மார், ஆகிய இரண்டும் மேலும் பன்மையைக் குறிப்பன. இறந்தகால விகுதி ஒன்றை ஏற்ற வினைகளுடன் - இச்ச் - மேலதிகமாக வருவது சிந்தனைக்குரியது. இப்பண்பு யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் காணப்படும் ஒரு தனித் தன்மையாகும். இதனை ஒரு மாதிரியாக இங்கு தருகின்றோம். இது போன்ற தனித் தன்மைகள் இன்னும் சில உண்டு. □

---

## உசாத்துணை நூல்கள்


1. James N. Gair and Suseendirarajah, S. (1981) "Some Aspects of the Jaffna Tamil Verbal System" *International Journal of Dravidian Linguistics*, Vol.X, No.2. Kerala.

2. James W. Gair, Suseendirarajah, S., Karunatilake, W.S. (1978) *An Intro - duction to Spoken Tamil*, External Serviecs Agency, University of Sri Lanka.

3. Suseendirarajah, S. (1967) *A Descriptive Study of Ceylon Tamil* (with special reference to Jaffna Tamil), Ph.D. diss. (Unpublished) Annamalai University, India.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# பிரித்தானியர் கால நல்லூர்: ஒரு நோக்கு

— ச. சத்தியசீலன் —

பிரித்தானியர் ஆதிக்கம் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 1796 இல் ஆங்கிலக் கடற் படைத் தளபதியான ஜேம்ஸ் ஸ்ருவார்ட் பருத்தித்துறையில் இறங்கி மிக விரைவிலே யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டதிலிருந்து ஆரம்பமாயிற்று. இவ் வகையில் யாழ்ப்பாண மக்களின் பிரதான மைய இடமாகக் காணப்பட்ட நல்லூர்ப் பிரதேசமும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலத்திலே ஐரோப்பிய அரசியல் நிலைமைகளின் விளைவாக அவர்கள் ஆதிக்கம் இப்பிரதேசத்திலும் தளர்வடையலாயிற்று. அதனால் இதுவரை அவர்கள் பின்பற்றிவந்த புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ மதத்திற்கு ஆதரவான கொள்கையிலும் தளர்வு ஏற்படலாயிற்று. இதனால் நல்லூரையும், அதனைச் சுற்றியும் காணப்பட்ட பழைய வழிபாட்டிடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுத் தடை செய்யப்பட்டிருந்த இந்துமத வழிபாட்டு முறைமைகள் வளர்ச்சி அடையாலாயின. இத்தகைய ஒரு பின்னணியிலே பிரித்தானியர் ஆதிக்கம் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட போது அவர்கள் பின்பற்றிய மதக் கொள்கை ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதியிலே இடம் பெற்ற இந்துமத வழிபாட்டு முறைமைக்கு மேலும் உத்வேகத்தை அளிப்பதாக அமைந்தது. குடிமக்கள் யாவரும் அவரவர் விரும்பிய மதத்தைப் பின்பற்றலாம் என்ற ஆங்கிலேயரின் கொள்கையினால் மக்களிடையே இந்துமதத்தைப் பின்பற்றுவதிலே தீவிர ஆர்வம் காட்டப்பட்டது, மதச் சுதந்திரம் வழங்கப்பட்டமையினால் முன்பு அரசின் கட்டாயத்தின் பேரிலும், உதவிகளைப் பெறும் வகையிலும் கிறிஸ்தவர்களாய் மதம் மாறியஅனேகர் அம்மார்க்கத்தைக் கைவிட்டு இந்து சமய ஆசாரங்களை வெளிப்படையாக அனுசரிக்கத் தொடங்கினர். முன்னர் இடிக்கப்பட்டிருந்த இந்து ஆலயங்களைத் திரும்பக் கட்டவும், உபயோகிக்கப் படாமற் பாழாய்க் கிடந்த ஆலயங்களைப் புதுபித்து உபயோகிக்கவும், முன்னே பதுங்கி ஒதுங்கி அந்தரங்கத்திற் செய்து வந்த ஆசார, நியம நிட்டைகளைப் பகிரங்கத்திற் செய்யவும் மக்கள் தலைப்பட்டனர்.

இந்திய மகாமேற்றிராணியாராகிய புக்கனன் (Dr. Buchanan) 1806 இல் யாழ்ப்பாணம் வந்து, பார்வையிட்டபின்னர் பின்வரும் கருத்துக்களைக் குறிப்பிட்டிருந்தார். யாழ்ப்பாணத்திலே போத்துக்கேயர் கட்டிய ஆலயங்கள் உபயோகிப்பார் இன்றிப் பாழாய்ப் போகின்றன என்றும், கோவையிலிருந்து வந்த றோமன் கத்தோலிக்க மத குருமார் மாத்திரம் யாழ்ப்பாணத்திலே இருந்து ஊழியம் செய்கின்றார்கள் என்றும், யாழ்ப்பாணத்திலே ஒல்லாந்தர் காலத்திலே புரட்டஸ்தாந்த மதத்தைத் தழுவினோர் அனேகர் கிறிஸ்து மார்க்கத்தை விட்டு மறுபடியும் இந்து மதத்திற்கு மாறுவதாகவும், இது விடயத்தில் ஆங்கில அரசு எது வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் பிரித்தானிய அரசுக்கு மனுச் செய்திருந்தார். நாம் முன்னர் பார்த்த நிலைமையை டாக்டர் புக்கனனின் கருத்து உறுதிப்படுத்துகின்றதனை இங்கு அவதானிக்கலாம். இவ்விடயத்தைக் கவனிக்கும்படி குடியேற்ற நாட்டுக்காரியதரிசி அப்போதைய தேசாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி சேர்தோமஸ் மெயிற்லண்டிற்குத் தகவல் அனுப்பியிருந்தார்.

பிரித்தானியர் கால நல்லூரைப் பற்றி விளங்கிக் கொள்வதற்கு அதன் இடப்பரப் பினை அறிந்து கொள்வது அவசியமான தாகும். அவ்வகையில் நாம் தற்போது காணும் திருநெல்வேலி, வண்ணார் பண்ணை, நல்லூர், கல்வியங்காடு, நாயன் மார்கட்டுப் பகுதிகளை உள்ளடக்கியதாக இப்பிரதேசம் அமைந்திருந்தது எனலாம். இப்பிரதேசத்தில் இடம்பெற்றுவந்த சம்ப வங்களை விளங்கிக்கொள்வதன் மூலம் பிரித்தானியர் காலப்பகுதியில் நல்லூர்ப் பிரதேசம் எத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது என்பதனை அறிந்து கொள் ளலாம். மேற் குறிப்பிடப்பட்ட ஊர்கள் நெருங்கிய வகையிலே திருமண உறவுகள் மூலமும், தமிழ் அறிஞர்களின் இருப்பிடம், சேவைகள் மூலமும், இந்துமத வளர்ச்சியில் ஆற்றிய பணிகள் மூலமும், இணைக்கப்பட் டிருந்தன. யாழ்ப்பாணத்து அரசர்களின் தலைநகரமாக நல்லூர் விளங்கியதிலிருந்து சைவத்திற்கும், தமிழுக்கும் ஒரு தலைமை யிடமாக அது தொடர்ந்து விளங்கியிருப்ப தனைநாம் காண்கின்றோம். தலை நகர மாக விளங்கியதிலிருந்து வளர்ச்சி அடைந்த சைவத் தமிழ்ப் பாரம்பரியம் தொடர்ச்சி யாக நல்லூரை மையமாகக் கொண்டு அபி விருத்தி அடைந்து வந்திருப்பதனைப் பிரித் தானியர் காலப்பகுதியிலும் நாம் காண்கின் றோம். இப்பின்னணியில் தமிழர் மதமாகிய சைவத்திற்கும், அவர்கள் மொழியாகிய தமி ழுக்கும், அவற்றின் வளர்ச்சிக்கும் நல்லூர் முக்கிய தொண்டினை ஆற்றியுள்ளது. சங்கம் வைத்துத் தமிழ் மொழியும், சைவ சமயமும் தழைக்க உதவிய யாழ்ப்பாணத்து அரசபாரம்பரியம் தொடர்ச்சியாக வேறு வடிவங்களில் இவ்விரண்டின் வளர்ச்சிக்கும் பங்களித்திருப்பதனை நாம் அவதானிக்க லாம்.

நல்லூரின் உள்வட்டத்திலே தற்போது அமைந்திருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோயிலை (1793) மையமாக வைத்து நான்கு திசைகளிலும் நான்கு கோவில்கள் அமைந்திருந்தன. நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கே சட்டநாதர் ஆலயமும், கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோயி லும், தெற்கே கைலாசநாதர் ஆலயமும், மேற்கே வீரமாகாளியம்மன் கோவிலும் அமைந்திருந்தன. இந்நான்கு கோவில்களும் யாழ்ப்பாணத்து மன்னர்களின் காலத்தில் அவர்களுடைய ஆதரவைப்பெற்றுச் சிறப் புடன் இயங்கிய கோவில்களாக விளங்கின. இக் கோயில்கள் போர்த்துக்கேயரா லும், ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்டன. ஒல்லாந்தர் தாம் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டைக்குக் கைலாசநாதர் ஆலயத்தின் கற்களைப் பயன்படுத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அழிக்கப்பட்ட இக் கோவில்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் கடைக் கூற்றிலும், ஆங்கிலேயராட்சியின் ஆரம்பங் களிலும் சைவத் தமிழபிமானிகளால் சிறிது சிறிதாகப் புனரமைக்கப்பட்டன. நல்லூரின் வெளிவட்டத்திலே வண்ணைச்சிவன்கோவில் (1789) பிரதான சிவன்கோவிலாக வளர்ச்சி அடைந்தது. அதற்கு அயலிலே கதிர்வேலா யுதசுவாமி கோவில் அமைக்கப்பட்டது. 1920 இல் நல்லூர் கந்தசாமி கோவிலின் பழைய இருப்பிடமாகக் கொள்ளப்படும் இடத்தில் தற்போதைய வடமாகாணக் கல்வி அலுவலகத்திற்கு மேற்கே கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது.

நல்லூர்ப் பிரதேசம் இவ்வாறு காணப் பட அயலிலே பிரித்தானியர் கால யாழ்ப் பாண நகரம் எவ்வாறு காணப்பட்டது என் பதனை அறிதல் பொருத்தமானதாகும். போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட கோட்டையை மையமாகக் கொண்டு வளர்ந்த யாழ்ப்பாண நகரம் ஒல்லாந்தர் காலத்தில் சில அபிவிருத்திகளுடன் வளர்ச் சியுற்றது. ஆங்கிலேயர் காலத்தில் அது சிறு சதுர அமைப்பினை உடையதாக வலது கோணத்தில் தெருக்களை ஊடறுக்கும், தன்மையினதாகக் காணப்பட்டது. இதன் வடக்கு எல்லையாகத் தேவாலய வீதியும், மேற்கெல்லையாகத் திறந்தவெளி அரங் கும், தெற்கில் கடற்கரை வீதியும், கிழக்கே மூன்றாம் குறுக்குத்தெருவும் அமைந்திரு தன. இச்சதுரத்தின் வடக்கில் தாராக் குளமும், அதனை அண்டியவயல்களும், வட கிழக்கில் மஞ்சற்கரைச்சான் குளமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவரிக்குளமும் அதனை அண்டிய வயல்களும், தெற்கில் வண்ணாங்குளமும், தென்மேற்கில் கரையூர் கிராமமும் அமைந்திருந்தன. இப்பகுதியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே ஆங்கிலேயர் ஆட்சியின் போது பல புதிய பாடசாலைகள், தேவாலயங்கள், வீதிகள், அரசாங்க நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், வசிப்பிடங்கள் என்பன கட்டப்பட்டுப் பிரதான தலைநகரமாகவும், நிர்வாக மையமாகவும் வளர்ச்சி அடைந்தது. இங்கேதான் பெரும்பாலான ஐரோப்பியக் குடிமக்களதும் அவர் வம்சாவளியினரதும் குடியிருப்புக்கள் காணப்பட்டன. இவ்வகையில் மேலைத்தேயக் கிறிஸ்தவ செல்வாக்குப் பிரதேசமாக யாழ்ப்பாண நகரம் காணப்பட்டது. இதற்கு அயலிலே வடக்கேயும், கிழக்கேயும், வடமேற்கேயும் இந்துச் செல்வாக்குப் பிரதேசமாக நல்லூர் காணப்பட்டது.

பிரித்தானியர் ஆட்சி ஆரம்பித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இடம் பெற்ற முக்கிய அபிவிருத்தியாகக் கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்களின் நடவடிக்கைகள் அமைந்தன. இம் மிஷனரி இயக்கங்கள் தம் மத மாற்ற, கல்வி நடவடிக்கைகளுக்குப் பிரதானமாகத் தேர்ந்தெடுத்த மையங்களாகச் சைவமும், தமிழும் செழித்தோங்கிய இடங்கள் காணப்பட்டன. அவ்வகையில் தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை நல்லூர் போன்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு மிஷனரிப் பிரிவினரும் தத்தம் முயற்சிகளில் ஈடுபட்டனர். அவ்வாறாக 1818 இல் சேர்ச் மிஷன் நல்லூரில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அதன் தலைவரான யோசேப் நைற் என்பவர் யாழ்ப்பாண நகரிலிருந்து சிறிது தூரத்தில் அமைந்த நல்லூரில் தனது இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொண்டார். நீண்ட காலமாகவே இந்து, தமிழ்ப் பாரம்பரியத்தைக் கொண்ட நல்லூரிலே இவரது நடடிக்கைகளுக்குக் கடுமையான எதிர்ப்புக் காட்டப்பட்டது. இக்கால மக்கள் மிஷனரிமாரினைச் ''சாதி குறைந்தவர்கள்'' (Outcasts) என்றும், தங்கள் இருப்பிடங்களுக்கு அவர்களது வருகை தூய்மைக் கோட்டினை ஏற்படுத்துவதாகவும் கருதினர். இத்தகைய ஒரு எதிர்ப்பின் மத்தியிலேதான் வண:.யோசேப் நைற் அவர்கள் தம் மிஷனரி நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

மிக விரைவிலேயே நல்லூரில் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும், அதனை ஒட்டிய சில வாழ்விடங்களும் மிஷனரிமார்களுக்காக அமைக்கப்பட்டன. (1820) இன்று நாம் நல்லூரில் யமுனாரிக்கு அருகாமையில் காணப்படும் தேவாலயம் இப்பின்னணியில் அமைக்கப்பட்டதாகும். அத்துடன் 1822 யூலையில் இவரால் நல்லூர் ஆங்கில பாடசாலை என்ற பெயரில் ஆங்கில மொழி மூலம் போதனையை வழங்கும் பாடசாலை ஒன்று தாபிக்கப்பட்டது. தொடர்ந்து 1841 இல் பெண் கல்வியை முன்னேற்றும் வகையில் நல்லூர் பெண்கள் விடுதிப் பாடசாலை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. அதே வடரும் நல்லூர் ஆங்கில பாடசாலை சுண்டிக்குளிக்கு மாற்றப்பட்டது. 1826 இல் முதன்முதலாக இலங்கையில் அதுவும் நல்லூரிலே ஒரு அச்சியந்திரசாலை ஒன்று அமைக்கப்பட்டது. உண்மையிலே அமெரிக்கன் மிஷனரிச் சங்கத்தினால் கொண்டு வரப்பட்ட இவ்வச்சுயந்திரம் இயங்குவதற்கு அரசினால் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் வண. யோசேப் நைற் அவர்கள் அதனை விலைக்கு வாங்கி நல்லூரிலே நிறுவிக் கொண்டார். இவ்வச்சகத்திலிருந்து முதன்முதலில் 'முத்திவழி' எனும் தமிழ் நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. கிறிஸ்தவ மதம் பரப்பலுக்கும், கல்வித் தேவைக்குமான பெருமளவு பிரசுரங்கள் இவ்வச்சகம் மூலம் பிரசுரிக்கப்பட்டன. இவ்வாறு பலவகையிலும் சேர்ச்மிஷனரிமார் தம் மத, கல்வித் தொண்டினை நல்லூரை மையமாக வைத்து ஆற்றி வந்தமை அங்கு வாழ்ந்த தமிழிந்து மக்களிடையே பெரும் அதிருப்தியினை ஏற்படுத்தலாயிற்று. நல்லூரில் மட்டுமல்ல யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் பல பாகங்களிலும் மிஷனரிமார்களின் மதம் பரப்பும் வேலையும், அதற்கு ஒரு வழியான கல்வித் தொண்டும் இந்துமக்களிடையே அதிருப்தியைப் பெற்று வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனரிமார்களின் இத்தகைய நடவடிக்கைகள் அங்கு வாழ்ந்த தமிழிந்து மக்களிடையே எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தலாயிற்று. இந்த எதிர் நடவடிக்கைகளுக்கு தலைமைத்துவத்தைக் கொடுக்கும் வகையில் நல்லூரும், அதனது வரலாற்றுப் பாரம் பரியமும், அங்கு வாழ்ந்த கற்றோர் உயர்குழாமும் இயங்குவதனை அவதானிக்கலாம். இவர்களது எதிர் நடவடிக்கைகளின் ஆரம்பமாக நல்லூர் கந்தசுவாமி கோவிலின் பிரதமகுருவாக இருந்த சுப்பையர் என்பவரால் அரசாங்க உதவியுடன் யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருத-தமிழ்ப்பாடசாலை அமைப்பதற்குரிய முயற்சிகள் 1816-18 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை எடுத்துக் காட்டலாம். இலங்கையில் நீதிபதியாகவும் பின்னர் பிரதம நீதியரசராகவும் விளங்கிய அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் மூலம் இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்தைப் பிரதம குருக்கள் அணுகியிருந்தார். ஆனால் அரசிடமிருந்து சாதகமாக எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை. 1834 அளவில் யாழ்ப்பாணத்தில் 239 இந்து சமயப் பாடசாலைகள் இருந்தன என்றும் அவை கிறிஸ்தவ மிஷனரிமாரின் நடவடிக்கைகளின் முன் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் அவர்கள் கைகளுக்கே மாறியதாகவும் அறிகின்றோம்.

கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்களின் மதப்பிரசார, கல்வி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் 1840 களின் ஆரம்பத்தில் நல்லூரை மையமாக வைத்து இந்துமத இயக்கம் ஒன்று உருவாகியது. மதத்தையும், மொழியையும் ஒன்றிணைத்துச் செல்லும் தேசியப் பண்பு கொண்ட அதே சமயம் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஓர் இயக்கமாகவும் காணப்பட்டது. இது நல்லூரை இந்து சமய விழிப்புணர்ச்சியின் கேந்திர ஸ்தானமாகவும் நாவலரை இவ்வியக்கத்தின் நாயகனாகவும் விளங்க வழிவகுத்தது. திண்ணைப் பாடசாலையில் இந்து மரபிலும், மெதடிஸ்ற் மத்திய கல்லூரியில் நவீன ஆங்கில மரபிலும் கல்வி பெற்ற நாவலர் பின்னதிலே ஆசிரியராகக் கடமையாற்றினார். பத்து வருடங்களுக்கு மேலாகக் கிறிஸ்தவ மிஷனரிமாருடன் பழகிக் கிறித்தவ மதம், நிறுவன அமைப்பு முறை, இயங்கு முறை, பிரசார நடவடிக்கைகள் பற்றி நன்கறிந்த நாவலர் அதே உத்திகளைக் கொண்டு இந்துமத வளர்ச்சிக்கும், கிறிஸ்தவமத எதிர்ப்புக்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இந்துசமயச் சூழலில் கல்வி போதிக்கப்படவேண்டும் என்ற இயக்கம் 1842 இல் ஆரம்பமானதெனலாம். இந்த ஆண்டிலே வைத்திலிங்கச் செட்டியார் முத்துவேலுச் செட்டியார், சிறாப்பர் குருநாதமுதலியார், இரகுநாத முதலியார் போன்ற உயர் குழாத்தினர் ஒன்றுகூடிக் கிறிஸ்தவ சமயப்பிரசாரத்தைத் தடுக்கவும், இந்து சமயப் பிரசாரம் செய்யவும் பாடசாலை ஒன்றினை நிறுவினர். 1848 இல் ஆறுமுக நாவலர் அவர்களால் நல்லூரின் ஒரு பகுதியாக விளங்கிய வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற கல்விச்சாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்துமத வளர்ச்சிக்கு அடிப்படையானது அவர்களிடையே கல்வி வளர்ச்சியை ஏற்படுத்துவதே என்பதனை மிஷனரிமாருடன் கொண்ட தொடர்பினால் நன்குணர்ந்துகொண்ட நாவலர், இம் முயற்சியில் தீவிரமாக ஈடுபடலானர். அதனைத் தொடர்ந்து வடபகுதியில் பெரும்பாலான கிராமங்களில் இத்தகைய பாடசாலைகள் நிறுவப்பட்டன. சுதேச மொழிக் கல்வியில் மட்டுமல்ல ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்தவராகவும் நாவலர் விளங்கியமையால் 1872 இல் வண்ணார் பண்ணையிலே இந்துச் சூழலில் ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பதற்காகச் சைவாங்கில வித்தியாசாலை அவரால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பணமுடையாலும், அரச அங்கீகாரம் கிடைக்காமையினாலும் 1876 இல் இப் பாடசாலை மூடப்பட்டது. என்றாலும் அவரது கனவு பின்னர் ( 1890 ) தோன்றிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்மூலம் நிறைவெய்தலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் தமிழ் மாணவர்கள் இந்து மதத்தின் தத்துவங்களையும், கோட்பாடுகளையும் இலகுவான முறையிலே விளங்கிக் கொள்ளும் வகையிலும் அம்மதத்தில் வழக்கில் காணப்படும் மூடநம்பிக்கைகள், நடைமுறைகள் என்பனவற்றை நீக்கிச் சீர்திருத்தம் செய்யும் வகையிலும் கிறிஸ்தவப் போதகர்கள் பின்பற்றிய யுத்திகளைப் பயன்படுத்தலானார். இத்தன்மை கொண்டனவாக அவரது சமயப் பிரசங்கங்கள் அமைந்தன. 1847 ஆண்டு நாவலரால் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் ஆரம்பமாகிப் பின்னர் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்ற சமயப் பிரசங்கங்கள், புராண படலங்கள் இந்து சமய தத்துவத்தை இலகுவான முறையிலே தமிழ் மக்களிடையே விளக்கின. அவரால் வண்ணார் பண்ணையிலும், சிதம்பரத்திலும் அமைக்கப்பட்ட இரண்டு அச்சியந்திரசாலைகள் இந்துமதத்திற்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பல பிரசுரங்களை வெளியிட்டுப் பெருந் தொண்டாற்றின. வண்ணார்பண்ணையில் 1848இல் அமைக்கப்பட்ட அச்சியந்திரசாலை கிறிஸ்தவ மதப்பிரசாரத்திற்கு எதிராகப் பல பிரசுரங்களை வெளியிட்டு இந்துக்களின் சமய உணர்வை வளர்ச்சிப் படுத்தியது. நல்லூரில் பிறந்து வளர்ந்த நாவலர் தன் சமயப் பிரசங்கங்களை பழமை மிக்க நல்லூர் கந்த சுவாமி கோவிலில் ஆரம்பிக்காது வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலிலே ஆரம்பித்திருந்தார். நல்லூர்க்கந்த சுவாமி கோவில் ஆகமமுறையில் அமைக்கப் படவில்லை என்ற அவரது குற்றச் சாட்டும், கோவில் நிர்வாகத்துடன் அவர் கொண்ட முரண்பாடுகளும் வண்ணார்பண்ணைக்கு அவரது நடவடிக்கைகள் மாற உதவியிருந்தன. அதேமயம் இப்பிரதேசம் வெஸ்லியன் மிஷனரிமாரால் ஒரு கிறிஸ்தவ மதம் பரப்பும் பகுதியாக தெரியப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையும் இன்னொரு காரணமாக அமைந்தது. இவ்வகையில் வெஸ்லியன் மிஷனரியால் இங்கு கில்னர்பாடசாலையும், பெண்களுக்கான இன்னோர் பாடசாலையும் அமைக்கப்பட்டிருந்தன. பேர்சிவெல் பாதிரியாருடன் நெருங்கிய வகையிலே பழகிய நாவலர் கிறிஸ்தவ மிஷனரிமாரின் பலத்தையும் பலவீனத்தையும் நன்கறிந்தவராக, அதற்கேற்ற வகையில் தன் பிரசார யுக்திகளையும், களத்தையும் அமைத்துக் கொண்டார். நல்லூரை மையமாக வைத்து வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவ மத எதிர்ப்பியக்கத்தினால் தான் நல்லூர், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, கல்வியங்காடு, நாயன்மார்கட்டு ஆகிய ஊர்கள் தம்பழைய மத அடையாளத்தை இழக்காது விளங்குகின்றன. கிறிஸ்தவ மத எதிர்ப்பிரசாரங்களை முன்னின்று நடத்திய பிரதேசங்களாக நல்லூர், வண்ணார்பண்ணை என்பவற்றுடன் சுன்னாகம், மாதகல் என்பனவும் விளங்கின. இவ்விடங்களிலிருந்து சிலரைத் தெரிவு செய்து இவ்வெதிர்ப்பிரசாரத்தை நடத்தியதாகவும், கிறிஸ்தவ மதகண்டனம், கும்மி மூலமாகச் கிறிஸ்துமார்க்க தூஷண பாஷணங்களை இந்துக்கள் வெளியிட்டதாகவும் அறிகின்றோம். இவ்வகையில் நல்லூர் கிறிஸ்தவ மதப்பரப்பலுக்கு எதிராகவும், அவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கு ஒரு பதிலீடாகவும் தலைமைத்துவம் கொடுக்க முற்பட்டிருந்தது.

நாவலர் தலைமைத்துவம் கொடுத்த இந்து மறுமலர்ச்சி இயக்கம் அடிப்படையிலே சில குறைபாடுகளைக் கொண்டிருந்தது. முக்கியமாக அது உயர் சாதியினரது இயக்கமாகவே செயற்பட்டது. கிறிஸ்தவ மிஷனரி மார்களிடம் காணப்பட்ட தாராள சிந்தை, சாதிவேறுபாடற்ற நோக்கு, தமிழர் அனைவரையும் சமமாக மதித்தல் போன்ற பண்புகள் பெருமளவு அற்ற ஓர் இயக்கமாகவே இது காணப்பட்டது, அத்துடன் தாபன அமைப்பு எதனையும் இவ்வியக்கம் பெற்றிருக்கவில்லை. சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் பின்னால் இருந்ததைப் போன்ற வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்பொன்று தமிழர்களிடையே காணப்படவில்லை. இக்காரணங்களினால் சிங்கள, பௌத்த, மறுமலர்ச்சி இயக்கம் வகித்ததைப் போன்ற ஒரு பங்கினை இவ்வியக்கம் இலங்கைத் தமிழர் சமுதாயம் பொறுத்து வகிக்க முடியாது போயிற்று. பெருமளவிற்கு இது ஒரு தனி மனித இயக்கமாகவே செயற்பட்டதெனலாம். இப்பின்னணியில்தான் தமிழ்தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.வை. தாமோதரம்பிள்ளை பின்வருமாறு பாடியிருத்தல் வேண்டும்.

' நல்லைநகராறு முக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே – எல்ல
வரும்
ஏத்து புராணாகமங்கள் எங்கே ப்ரசங்க
மெங்கே
ஆத்தனறிவெங்கே அறை !

நாவலர் 1879 இல் மறைந்த பின்னர் இவ்வியக்கம் தளர்வடையலாயிற்று. கிறிஸ்தவ மதப் பிரசாரம் வலுப்பெறலாயிற்று. ஆனால் இக்காலப் பகுதியில் இந்துசமய வளர்ச்சிக்கான திட்டங்கள் நவீன மயப்படுத்தப்பட்டன. முன்னைய காலப்பகுதியைப் போலன்றி இக்கால இயக்கத்தை வழிநடத்தியோர் ஆங்கிலக் கல்வியின் முழுப்பயனையும் பெற்ற, உயர்பதவிகளில் அமர்ந்திருந்தவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டம் பிரம்மசமாஷம், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோரது நடவடிக்கைகள், இந்திய தேசிய காங்கிரசின் செயற்பாடுகள் பற்றி நன்கு அறிந்தவர்களாகவும், சிலவற்றுடன் தொடர்பு கொண்டவர்களாகவும் காணப்பட்டனர். நாவலர் மறைவின் பின் கிறிஸ்தவமதப்பிரசாரம்பலம்பெறுவதனைத் தடுக்கும் நோக்குடன் நாவலரது உறவினரும், மாணவர்களும் ஒன்றுகூடிச் சைவப் பிரகாச சமாஸம் தாபித்து 'உதயபானு' எனும் இந்துப் பத்திரிகையை வெளியிட்டனர். மீண்டும் நல்லூர் பிரதேசமே இந் நடவடிக்கைகளுக்குக் களமாக இருப்பதனை அவதானிக்கலாம். இதே காலத்தில் பௌத்தர்களிடையே செல்வாக்கு பெற்று வந்த பௌத்த பிரம்மஞான சங்கம் போன்ற ஒன்றின் அவசியம் இந்துக்களினாலே உணரப்பட்டது. இப்பின்னணியில் 1888 இல் சைவ பரிபாலன சபை தாபிக்கப்பட்டு நாவலர் விட்டுச்சென்ற பணிகளை மீள எடுத்துச் செல்லலாயிற்று. ஈழத்து இந்துமத வரலாற்றில் இச்சபையின் தோற்றம் முக்கியத்துவம் வாய்ந்தது. அது இந்துசாதனம் என்ற பத்திரிகையை வெளியிட்டு இந்துமத வளர்ச்சிக்கும், சீர்திருத்தத்திற்கும் பாடுபட்டது.

நல்லூர் பிரதேசம் தமிழகத்துடனான உறவுகள் பொறுத்து இக் காலப்பகுதியிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. இத்தொடர்பு இந்து மதம், தமிழ் மொழி என்பவற்றுடன் நெருங்கிய வகையிலே இணைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்து அரசர் காலத்திலிருந்தே இவ்வகைத் தொடர்புகள் இப் பிரதேசங்களுக்கிடையில் வலுப்பெற்று வந்திருப்பதனைக் காணமுடிகின்றது. அத்தகைய தொடர்பின் விளைவாக நல்லூரில் தமிழ் அறிஞர் பலர் தோற்றம் பெற்றும், தமிழகத்திலிருந்து வந்து தங்கியும், தமிழுக்கும், இந்து மதத்திற்கும் தொண்டாற்றி இருப்பதனை அறியலாம். திருவண்ணாமலையாதீன கூழங்கைத் தம்பிரான், கொச்சிக் கணேசையர், செந்தில்நாதையர், ஞானப்பிரகாச தேசிகர், நெல்லைநாத முதலியார், சேனாதிராய முதலியார், வில்லவராயர், ஆராய்ச்சிக் கந்தர், ஆறுமுகநாவலர் என்போர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கோர் ஆவர். கூழங்கைத் தம்பிரான் பறங்கிக்காரரால் அழித்தொழிக்கப்பட்ட சைவப் பரம்பரையை மீண்டும் யாழ்ப்பாணத்திலே தழைக்க வைத்தவராகக் குறிப்பிடப்படுகின்றார். இவர் நல்லைக் கந்தன்மேல், ' நல்லைக்கலி வெண்பா ' என்ற பிரபந்தத்தைப் பாடியுள்ளார். செந்தமிழறிவு குன்றிய காலத்தில் சேனாதிராய முதலியார் நல்லூரில் அலுவலகம் அமைத்துத் தமிழ் மொழியை வளம்படுத்தியவராகக் கொள்ளப்படுகின்றார். இவர் நல்லை முருகன் மீது நல்லைக் குறிஞ்சி, ஊஞ்சல் முதலிய பிரபந்தங்களைப் பாடியதாக அறிகின்றோம். இவர் பன்மொழிப் புலவராக விளங்கியதுடன் அரசாங்கத்தில் உயர்பதவி வகித்தவராகவும் விளங்கினார்.

நல்லூர் பிரதேசம் பழமைமிக்க பல இந்துக் கோவில்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கோவில்களில் பூஜை போன்ற நித்திய கருமங்களை நிறைவேற்றத் தமிழகத்திலிருந்து பிராமணர்கள் வந்து தங்கியுள்ளனர். அத்துடன் கோவில் கட்டிடம், சிற்பம் மற்றும் பிறவேலைகள் தொடர்பாகவும் தமிழகத்துக் கலைஞர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அவர்கள் மூலமான தொடர்பும் ஏற்பட்டுள்ளது. அத்தகைய கோவில்களாக நல்லூர்க் கந்தசுவாமி கோவில், வீரமாகாளி யம்மன் கோவில், சட்டநாதர் கோவில், கைலாய நாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோவில், நல்லூர் சிவன் கோவில், திருநெல்வேலிச் சிவன்கோவில் காளி கோவில்கள், வண்ணைச்சிவன்கோ வில், கதிர்வேலாயுதசுவாமி கோவில், கன் னாதிட்டி காளி கோவில் என்பவனவற் றைக் குறிப்பிடலாம், இங்கு இறுதியாகக் குறிப்பிட்ட கோயில் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலைக் கட்டத் தமிழகத்திலி ருந்து வந்த சிற்பிகளின் வழிபாட்டிற்காக அவர்களால் அமைக்கப்பட்டதாக அறியப் படுகின்றது. இக்கோவில்களின் மூலவிக்கிர கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பெயர்களுக் கும், தமிழகத்திலுள்ள கோயில்களின் மூல விக்கிரகங்களுக்கும் இடையில் பெயர் ஒற் மைகள் காணப்படுகின்றன. இப்பெயர் ஒற் றுமை தமிழகக் கோவில்களுக்கும், அப்பிர தேசங்களுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் முன்னர் காணப்பட்ட நெருங் கிய தொடர்பினை எடுத்துக் காட்டுகின் றன. இதற்குச் சிறந்த உதாரணம் வண் ணார்பண்ணைச் சிவன்கோவிலாகும். அவ் வாறே தமிழகத்திலிருந்து பிராமணர்வந்து பூஜை செய்ததன் விளைவாக வெயிலு கந்த பிள்ளையார் கோவில் அர்ச்சகரை 'திருவாடானையர்' என்று அரவது சொந்த ஊர்ப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டி ருத்தலை உதாரணத்திற்கு காட்டலாம்.

யாழ்ப்பாணத்துக்கும் தமிழகத்துக்கு மிடையில் ஏற்பட்ட இக் கலாசாரத் தொடர்பை விட வர்த்தக நடவடிக்கை கள் பொறுத்தும் உறவுகள் ஏற்பட்டிருந் தன. ஒல்லாந்தர் காலத்தில் அவர்கள் மேற் கொண்ட கடல்கடந்த வர்த்தக நடவடிக்கைகளின் ஒரு தொடர்ச்சியாகவே இவ்வுறவு அமைந்ததெனலாம். யாழ்ப் பாணப் பிரதேசம் தமிழகத்திலிருந்து மிகக் குறுகிய கடற்பரப்பினால் பிரிக்கப்பட்டி ருந்தமை நீண்ட காலமாகவே இத்தகைய உறவுகள் ஏற்ற, இறக்கங்களுடன் இடம் பெற்று வந்திருப்பதற்கு வாய்ப்பாக அமைந் தது. இப்பின்னணியில் தான் ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதியில் சிறியளவில் ஆரம்ப மாகிய நாட்டுக் கோட்டைச் செட்டிமார் களின் வர்த்தக நடவடிக்கைகள் பிரித்தானி யர் காலத்தில் பெருமளவில் இடம் பெறு கின்றன. தமிழகத்தில் மட்டுமல்ல மலாயா சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா போன்ற கடல் கடந்த நாடுகளிலும் தம் வர்த்தக நடவடிக்கைகளே மேற் கொண் டிருந்ததுடன், அந்நாடுகளில் சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டவர்களாகவும் இச் செட் டியார் சமூகம் விளங்குகின்றது. 1800 இலிருந்து யாழ்ப்பாணத்திலே பெருமளவி லான வர்த்தகம் நாட்டுக்கோட்டைச் செட் டிமாரால் நடத்தப்பட்டதாக அறிகின் றோம். முக்கியமாக இவர்கள் நெல் வாணி பத்தில் ஈடுபட்டிருந்தனர். நல்லூரிலே தற் போது காணப்படும் செட்டித் தெருவிலே இவர்களது கிட்டங்கிகளும், இருப்பிடங்க ளும் பெருமளவு இருந்ததாகத் தகவல் பெறுகிறோம். கொழும்புத்துறையில் கப் பல்களிலிருந்து இறக்கப்பட்ட பொருட்கள் இங்கே இருப்பில் வைக்கப்பட்டன. வைத் திலிங்கச் செட்டியார், முத்துவேலுச் செட் டியார் போன்றோரின் பெருமளவு நிதியுத வியுடன் வண்ணைச் சிவன் கோவில் கட்டி முடிக்கப்பட்டது. நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் திருவிழா உபயகாரர்களாக இவர்கள் விளங்கினர். முருக பக்தர்களான இச்செட்டியார் வண்ணார்பண்ணையிலே தம் வழிபாட்டிற்காகக் கதிர் வேலாயுத சுவாமி கோயிலையும் கட்டுவித்துப் பராம ரித்து வந்தனர்.

நாவலரது இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்திற்கும், கிறிஸ்தவ மத எதிர்ப்பிர சாரத்திற்கும் பெரிதும் பொருளுதவி செய் தவர்களாகச் செட்டியார் சமூகம் காணப் பட்டது. நாவலர் சைவப் பிரகாச வித்தி யாசாலை அமைப்பதற்கு வேண்டிய நிலம் வழங்கியவர் இச் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகச் செட்டியார் அவர்களே. நாவலரின் சமயப் பிரசங்கங்களையும், புரா ணப்படலங்களையும் ஊக்குவித்துப் பொரு ளுதவி செய்தமை மட்டுமல்ல தமிழகத்தில் அவரது நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்த வர்களாகவும் இவர்களே காணப்பட்டனர். ஈழத்தில் அப்போதிருந்த இந்து சமூகத்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிடையே பொருளாதார வசதி படைத்த வர்களாக விளங்கியவர்களும் இவர்களே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி யிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத் திலும், ஏனைய இந்துக்களுடைய பொருளா தார நிலை விருத்தியடையும் வரை இந்துக் கைங்கரியங்களுக்குச் செட்டி நகரத்தார் பெரும் பணவுதவி செய்திருந்தமை மறக்கப் பட முடியாததாகும். இருபதாம் நூற் றாண்டின் ஆரம்பத்தின் பின்பாக மலாயப் பணம் இந்தக் கைங்கரியங்களுக்குப் பயன் படுத்தப்படுவதனை நாம் காணலாம். இவ் வகையில் நல்லூர் களம் அமைத்துக் கொடுத்த நாவலரின் சமய, சமூகப் பணி களுக்குச் செட்டிநாட்டவரின் பங்களிப்புப் பாராட்டற்குரியதாகும்.

யாழ்ப்பாண நகரிலும், நல்லூரிலும் கிறிஸ்தவ மிஷனரிமார் மேற்கொண்ட மத, கல்வி நடவடிக்கைகள் இந்துக்களில் உயர் குழாத்தினரை மிஷனரிமார் கைக்கொண்ட அதே வழிமுறைகளைப் பின்பற்றித் தம் மத, கல்வி நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு வழிவகுத்துக் கொடுத்தது. யாழ்ப் பாண நகரம் கிறிஸ்தவ மதத்தினையும், மேலைத்தேயப் பண்பாட்டம்சங்களையும் பெருமளவுபேணி நிற்க, நல்லூர்ப் பிரதே சம் பெருமளவுக்கு இந்து, தமிழ்ப் பண் பாட்டம்சங்களைப் பேணிநின்றதெனலாம். இவ்வகையில் அயலிலே இருந்த இரு பகுதி களும் தத்தம் அடையாளத்தைப் பேணும் தன்மைகொண்டனவாக இப்பிரதேசத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள் அமைந்திருந் தன. நல்லூரிலே முதன்முதலாக 1826 இல் அச்சியந்திரசாலை ஒன்று தாபிக்கப்பட்ட தையும், அது அவர்களது மதப் பிரசாரம், கல்வி நடவடிக்கைகளுக்குப் பெருமளவு உதவியிருந்ததையும் கண்ட நாவலர் தாமும் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச அச்சியந்திர சாலையை அமைத்துக்கொண்டார். 1822 இல் நல்லூர் ஆங்கிலப்பாடசாலை மிஷன ரிமாரினால் தாபிக்கப்பட்டமை வண்ணார் பண்ணையில் அத்தகைய ஒரு பாடசாலை தாபிக்கப்படுவதற்கு நாவலருக்கும் இந்துக் களுக்கும் சிந்தனையையும், உத்வேகத்தை யும் கொடுத்திருத்தல் வேண்டும். தமிழிந்து மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடசாலைகள் நிறுவியதனையும், பின்னாளில் பெண்கள் கல்விக்கு முக்கியத்துவமளித்துப் பாடசா லைகள் நிறுவப்பட்டமையும் மிஷனரிமாரின் நடவடிக்கைகளின் எதிர்விளைவாக ஏற் பட்ட அபிவிருத்திகளாகும். யாழ்ப்பாணத் தில் இடம்பெற்ற மிஷனரிமாரின் நடவடிக் கைகள் தமிழிந்து மக்களைப் பொறுத்துத் தங்கள் அடையாளங்களைப் பேணும்வகை யில் ஒருவித பொறுப்புணர்வை (Response) உருவாக்கி வளர்த்துவிட்டதெனக் கூறலாம். இப் பொறுப்புணர்வின் மையமாக நல்லூர் விளங்கியதெனலாம். இப் பின்னணியில் தான் இந்துக்கள் தங்களால் இயன்றவகை யில் கல்வி, மத நிறுவனங்களைப் போட்டி மனப்பான்மை அடிப்படையில் உருவாக்கி வளர்த்துக்கொண்டனர், இப் போட்டி நிலை கிறிஸ்தவ மதத்தைத் தழுவுதல்மூலம் பொருளாதார, சமூக ஆதாயங்களைப் பெறும் நிலைமை தளர்வடைய வலுவிழக் கலாயிற்று.

பிரித்தானியர் கால நல்லூர் பாரம் பரியக் கைவினைப் பொருட்களின் உற்பத்தி பொறுத்து நாட்டில் சிறப்பிடம் பெற்றிருந் தது. அத்தகைய ஒரு தொழிலாக நெசவுத் தொழில் விளங்கியிருந்தது. வண்ணார்பண் ணையில் சீனியர் வீதியில் வசித்துவந்த சீனியர் சமூகத்தவர் மிகத்தரமான துணி களை உற்பத்தி செய்தவர்களாகவும், அழ கான கோலங்களை அவற்றில் இடுபவர்க ளாகவும், சிங்களப் பெண்களால் அவை மிகவும் விரும்பி அணியப்பட்டன என்றும் அறிகிறோம். தமிழ்ப் பெண்கள் விரும்பி யணியும் நேர்த்தியான சேலைகளை நெய் தவர்களாகவும் இவர்கள் விளங்கினர். இவர்களது உற்பத்திப் பொருட்கள் அகில இலங்கைக் கண்காட்சியில் முதற் பரிசினைக் கூடப் பெற்றிருந்தன. இதனை விடச் சாய மிடுதல், பித்தளையிலான வேலைகள், பொற் தொழில், வண்டிகட்டுதல், கூடை நெசவு போன்ற கைவினைத் தொழில்களும் நல்லூரிலே சிறப்பிடம் பெற்றிருந்தன. இங்கு நெய்யப்பட்ட கோவில் தேவைகளுக் கான பித்தளையிலான பாத்திரங்கள் தென்னிந்தியாவிற்குக் கொண்டு செல்லப் பட்டதிலிருந்து அவற்றின் தரத்தைக் கணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடலாம். நேர்த்தியான பொன்னாலான ஆபரணங்களைச் செய்தமைக்காகவும், சிறந்த சவாரி வண்டிகளைச் செய்தமைக்காகவும் அகில இலங்கை ரீதியான பொருட் காட்சியில் பரிசுகளை இப்பிரதேசம் பெற்றுள்ளது. இலங்கையில் கூடைபின்னலில் தலைசிறந்த களுத்துறைக் கூடைகளிலும் பார்க்க உயர்ந்த தரத்திலான கூடைகளாக வண்ணார்பண்ணையில் பின்னப்பட்ட கூடைகள் கருதப்பட்டன. இவ்வாறு பாரம்பரியக் கைவினைப் பொருட்கள் உற்பத்தி பொறுத்து இப்பிரதேசம் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தது.

வட இலங்கையில் தோன்றி வளர்ச்சி பெற்ற தனித்தமிழ் இராச்சியத்தின் தலைநகர் என்ற வரலாற்று உண்மையை நினைவு கூறும் வகையில் நல்லூர் விளங்கியது. பிரித்தானியர் காலத்தில் கிறிஸ்தவ மதப் பரம்பலை எதிர்த்துச் செயற்பட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமைத் தானமாகவும் இப்பிரதேசம் அமைந்திருந்தது. அத்துடன் தமிழ்மொழியும், இந்து மதமும் தழைத்தோங்கப் பாடுபட்ட பல தமிழறிஞர்களைக் கொண்டிலங்கிய இடமாகவும், கோவில்கள் பலவற்றின் மூலம் இந்துப் பண்பாட்டையும், தமிழர் நாகரிகத்தையும் எடுத்துக் காட்டும் கலாசாரக் கேந்திரமாகவும் நல்லூர் விளங்கியுள்ளது. இப்பிரதேசம் தமிழிந்து மாணவர்களின் கல்விவளர்ச்சிக்குத் தொண்டாற்றிய தன்மையினாலும், சிறந்த கைப்பணி வேலைகளின் மையமாகவும், குறிப்பிடத்தக்க அளவிலான வர்த்தக நடவடிக்கைகளின் நிலையமாகவும் சிறப்பினைப் பெற்றுள்ளது. இப்பின்னணியில் இலங்கைவாழ் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார வாழ்வின் தலைமைத் தானமாக நல்லூர் பிரதேசம் இயங்கி வந்துள்ளமையை இக்குறிப்பிட்ட காலப் பகுதியில் கண்டுகொள்ளலாம். □

## உசாத்துணை நூல்கள்


1. அருணைமநாயகம், க., "பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சி", *திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர்*, கொழும்பு. 1976.

2. Chelliah, J. V., *A Century of English Education,* American Ceylon Mission Press, Tellipalai, 1922.

3. Indrapala, K., 'The City of Jaffna - A brief History' in *The Jaffna Municipal - Council Silver Jubilee Souvenir, 1949-1974,* Jaffna, 1974.

4. ஜெபநேசன், எஸ்., *அமெரிக்கன் மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்,* யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை, 1983.

5. Jayasuriya, J. E., *Education in Ceylon Before and After Independence,* Colombo, 1969.

6. கைலாசபதி, க., (பதிப்பாசிரியர்) *நாவலர் நூற்றாண்டு விழா மலர், 1979,* ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, கொழும்பு 1979.

7. குலரத்தினம், க. சி., *நல்லூரும் நாற்றிசைக் கோவில்களும்,* கட்டுரைத் தொகுப்புக்கள், (விரைவில் அச்சில்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மாணிக்கவாசகர், கா., 'யாழ். நகரின் கல்விக் கருவூலம் — வேம்படி ஒரு நூற்றாண்டு வரலாறு' *The Torch Bearer 1988, 150th Anniversary*, Vembadi Girls High School Jaffna. 1989

9. Martyn, John, H.. *Notes on Jaffna*, American Ceylon Mission Press, Tellipalai. 1923.

10. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாணம், 1963.

11. சத்தியசீலன், ச., யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து மலேஷியாவுக்கு 1940 வரை நடைபெற்ற குடிபெயர்வு – சில அம்சங்கள். வரலாற்று முதுகலை மாணிப் பட்டத்திற்கான தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரை. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், 1980. (பதிப்பிக்கப்படாதது).

12. திருவருள், இந்துசமயச் சஞ்சிகை மலர் 1, இதழ் 4; மலர் 2, இதழ் 7, 8, 9, யாழ்ப்பாணம், 1981, 1982.

13. வேலுப்பிள்ளை, சி. டி., அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம், தெல்லிப் பழை, 1922.

14. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாண வைபவ கௌமுதி, சென்னை? 1918.

15. ஆறுமுகம், வ., 'இலங்கையிற் சைவக் கல்வியின் எழுச்சி', திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர், கொழும்பு, 1976.

16. திரு. க. சி. குலரத்தினம் அவர்களுக்கு கட்டுரை ஆசிரியர் கட்டுரைக்கு வேண்டிய உபயோகமான தகவல்களைத் தந்துதவியமைக்காக நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் நன்னீர் வளம்: ஒரு நோக்கு

— செ. பாலச்சந்திரன் —

நாம் வாழுகின்ற நிலத்தில் காணப்படும் நீர் பேணப்படும்போதுதான் அது நமக்குச் சொந்தமாக இருக்கும். இலங்கையின் வரண்ட வலயத்தில் பலநதிகள் இருக்கின்றன. அந்த நதிகளில் காணப்படும் நீரைப் பேண அக்கால மன்னர்கள் நதிகளுக்குக் குறுக்காக அணைகளைக் கட்டிக் குளங்களை உருவாக்கினார்கள். நீர் பேணப்பட்டது. நிலம் சொந்தமாகியது. பின்பு நாடு சுதந்திரம் பெற்றபின் படிப்படியாக நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஆட்சியாளர் பல அணைகளைப் புதுப்பித்தும், புதியவற்றைக் கட்டியும், ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கியும் பேணிப் பாவிக்க ஆரம்பித்தனர். ஆனால் யாழ்ப்பாணக் குடாநாடு மேற்கூறப்பட்டது போன்று நீர்த் தேக்கங்களைக் கொண்டிருக்கவும் இல்லை. பின்பு அப்படியான நீர்த் தேக்கங்கள் உருவாக்கப்படவும் இல்லை. ஆயினும் 07 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். கிறிஸ்துவுக்கு முற்பட்டசில நூற்றாண்டுகளில் இருந்து இங்கு மக்கள் வாழத் தொடங்கியிருக்கிறார்கள். இதற்கு அடிப்படையாக இருந்தது நதியோ, குளமோ அல்ல; தரைக்கீழ் நீர்தான், வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பாரிய பரப்பு இருந்தும் குடாநாட்டில் மக்கள் அதிகமாகவும், செறிவாகவும் வாழக் காரணம் இந்த நீர்தான். இந்த நீர் சில இடங்களில் உப்புத் தன்மையைக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமை ஊடுபுகவிடும் இயல்பினாலும், இடத்துக்குரிய தன்மையினாலும், இங்குள்ள கூடிய நீர்ப் பாவனையாலும் தோன்றுகின்றது. மக்களின் தொடர்ச்சியான நீர்ப் பாவனையால் நன்னீர் மட்டம் குறைய உப்புநீர் அங்கு உட்செல்லுகின்றது. சில இடங்களில் எதுவித நோக்கம் இல்லாமல் நீர் கடலை அடைகின்றது. இன்னும் சில இடங்களில் உப்புநீர் நன்னீருடன் கலந்து விடுகின்றது. பரவலாக நன்னீர், தேவைக்கு மேலதிகமாகப் பாவனையாகின்றது. இவை போன்ற செயல்களினால் எமது தரைக்கீழ் நீர் வளம் தொடர்ந்தும் எமது பரம்பரையினருக்கு ஈடுகொடுக்குமா? என்பது இப்போது பரவலாக எழுப்பப்படும் கேள்வி. இதற்கு நாம் இந்த வளத்தைப் பேணிப் பாவித்தால் ஈடுகொடுக்கலாம் என விடையளிக்கலாம்,

## யாழ்ப்பாணக் குடாநாட்டின் தோற்றம்

இன்றைய இலங்கையின் முழு பரப்பும் ஒரேயடியாகத் தோற்றம்பெறவில்லை. ஒரு காலத்தில் இலங்கை என்ற தனிப்பரப்பு இருக்கவில்லை. இந்தியக் குடாநாட்டுடன் சேர்ந்தே காணப்பட்டது. புவிச்சரித வரலாற்றில் புவியின் மேற்பரப்பு பங்கியா (Pangaea) என்ற கண்டத்தைக் கொண்டிருந்தது. பின்பு இது பிளவுபட்டு கோண்ட்வானாக் கண்டமும், லோரேசியாக் கண்டமும், ரெதீஸ் கடல் பரப்பும் தோற்றம் பெற்றன. இந்தியக் குட' நாடு, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, அன்ராட்டிக்கா, லத்தீன் அமெரிக்கா, (தென் அமெரிக்கா) ஆகியன ஒன்று சேர்ந்து கோண்ட்வானாக் கண்டமாக இருந்தது. இன்றைய தென் ஆபிரிக்காவுக்குச் சற்று தெற்கில் இதன் தென் எல்லை அமைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தது. இக் கண்டத்துக்கு வடக்கில் லோரேசியாக் கண்டம் அமைந்திருந்தது. இன்றைய ஆசியா, ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகியன அதனுள் அமைந்திருந்தன. பின்பு இக் கண்டங்கள் படிப்படியாகப் பெயர்ச்சிக்கு உட்பட்டன. இதனால் இன்றைய கண்டங்களும், கடல்களும் உருவாகின. கோண்ட் வானாக்கண்டத்தில் இருந்து இன்றைய தென் கண்டங்கள் பெயர்ந்தபோது இந்தியக் குடாநாடு வடக்கு, வடகிழக்கு நோக்கிப் பெயர்ந்து இன்றைய அமைப்பைப் பெற்றது. இன்றிலிருந்து 165 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய ரேயஷிக் (Triassic) காலத்தில் இப்பெயர்வு படிப்படியாக நிகழ்ந்தது. பின்பு வடமேற்கு இலங்கை தவிர்ந்த இலங்கையின் நிலம் 135 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய யூரஸிக் (Jurassic) காலத்திலும், 75 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய கிறிற்றேசியஸ் (Cretaceaus) காலத்திலும் படிப்படியாக, இந்தியக் குடாநாட்டின் தென்கிழக்குப் பகுதியில் இருந்து பெயர்ந்தது. பின்பு இந்தப் பெயர்ச்சிக்குட்பட்ட பாகத்துக்கும், இந்தியக் குடாநாட்டுக்கும் இடையில் காணப்பட்ட பகுதியில் அடையல்கள் படிவு செய்யபட்டன. கடலுக்குரிய படிவுகளும் படிவு செய்யப்பட்டன. ஏறக்குறைய 50 மில்லியன் வருடங்களாக இத்தகைய படிவு செய்யப்பட்டது. இன்றிலிருந்து 12 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய மயோசீன் (Miocene) காலத்தின் பிற்பகுதியில் இலங்கையின் வடமேற்குப் பகுதி கடல் நிலப்பரப்பில் இருந்து படிப்படியாக மேலுயர்த்தப்பட்டது. இந்த வடமேற்குப் பகுதியைப் புத்தளத்தில் இருந்து கிளிநொச்சியூடாக முல்லைத்தீவு வரை ஒரு வளைகோடு இட்டால் அதற்கு வடக்காக உள்ள பிரதேசம் எனக் கொள்ளலாம். கடலில் படிவு செய்யப்பட்டு உருமாற்றம் பெற்ற பின் உயர்த்தலின்போது முறிவுக்கு உட்பட்ட பாறையாகச் சுண்ணாம்புக் கற்பாறை அமைந்தது. இப்பாறையமைப்பு உடைவுகளையும், முறிவுகளையும் கொண்டதாகும். படிப்படியாக இவற்றினூடாக மழைநீர் உட்சென்று இவற்றை நிரப்பின. நன்னீர் கூடக்கொண்ட பகுதிகள் நன்னீர்த்தாழிகளாக அமைந்தன. ஏனையவை உப்புத் தன்மைச் செறிவின் வெவ்வேறு அளவினைக் கொண்ட தாழிகளாக அமைந்தன.

## தரைக்கீழ்நீர் வளம்

இத்தகைய தாழிகளைப் பின்வருமாறு கூறலாம்.

1. யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தரைக்கீழ் நீர்ப் பகுதி
2. பரந்தன் - முல்லைத்தீவு ,,
3. முழங்காவில் ,,
4. மன்னார்-முருங்கன் ,,
5. கொண்டச்சி ,,
6. வனைத்தைவில்லு ,,
7. மதுரங்குளி ,,

இப் பகுதிகள் செறிவான நன்னீர்ப் பகுதிகளாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டை எடுத்துக்கொண்டால் வலிகாமம், தென்மாராட்சி பகுதிகள் செறிவான நீர்ப் பகுதிகளாகும். இவை பரந்த சிறப்பான ஊடுபுகும் இயல்புடைய பகுதிகளாகும். வடமராட்சி ஊடறுக்கப்பட்ட, இடைக்கிடை உப்புநீர்கொண்ட தொடர்ச்சியற்ற ஊடுபுகவிடும் பகுதிகளைக் கொண்டது. தொண்டமானாற்றில் இருந்து சுண்டிக்குளம்வரை இத்தகைய நிலை உண்டு, இவை இடைமாறி உருவான பாறை (Intergranular rock) யமைப்பைக் கொண்டவை. யாழ்ப்பாணக் கடனீரேரிக்கரையோரங்கள், தென்மராட்சியின் கிழக்குக்கரையோரம், அதன் வடக்கு, மேற்கு கரையோரங்கள், வலிகாமத்தைச் சுற்றியுள்ள கரையோரங்கள், யாழ்ப்பாண நகரை உள்ளிட்ட கரையோரம், தீவுகள் அனைத்தும் இடைக்கிடை உப்புநீர்கொண்ட, தொடர்ச்சியற்ற ஊடுபுகவிடும் இயல்புகொண்ட வலயங்கள் ஆகும். இவை பிளவு அல்லது உடைவுப் பாறையமைப்பைக் (Fissured rock) கொண்டவை ஆகும்.

தரைக்கீழ் நீர் உருவாக்கத்தை பின்வரும்சமன்பாட்டால் விளக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$UW = R - E - ET - SS - SF - HU$

UW — தரைக்கீழ் நீர்
R – மழைவீழ்ச்சி
E — ஆவியாதல்
ET — ஆவியுயிர்ப்பு
SS — மேற்பரப்பு நீர் நிலைகளின் சேமிப்பு
SF — மேற்பரப்பு நீர் வெளியேற்றம்
HU — மக்கட் பாவனை

## தரைக்கீழ் நீர் அமைப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக் கீழ்நீர் அமைப்பினை ஒரு பக்கப் பார்வைப் படமாகப் பார்த்தால் பின்வரும் நிலை தென்படும். (விளக்கப்படம் 01)

a — சிகப்பு மண்
b — சுண்ணாம்புப் பாறை
e — அடிமட்டப்பாறை
MSL — கடல் மட்டம்
GWL — தரைக்கீழ்நீர் மட்டம்
FWZ — நன்னீர் வலயம்
BWZ — சவர்நீர் வலயம்

1. வற்றும் கிணறு
2. புத்தூர்க் கிணறு
3. சாதாரண கிணறு
4. கீரிமலை ஊற்று
5. கரைச்சல் பள்ளம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப் படும் சுண்ணாம்புக் கல்லும், மணலும் நீர் உட்புகுந்து தங்கியிருக்கக் காரணமாகிறது. இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக ளின்படி இந்தச் சுண்ணக்கல் தடிப்பு 270' அடியாக இருக்கிறது. சுண்ணாம்புக்கல் மேலுயர்த்துகையின்போது படி மூட்டுக்க ளைக் கொண்டிருந்தது. இவற்றினூடாகப் பின்பு $CO_2$ கரைசலினால் பல உடைவுக ளையும், குகைகளையும், நீர்கொள்ளும் படுக் கைகளையும் கொண்டுள்ளதாக மாறியது. பாறை, மணல் ஆகியவற்றின் இடையில் நீரின் ஊடுவடியும் அளவு வேறுபடும். இதனை அட்டவணை 1 எடுத்துக் காட்டுகிறது.

அட்டவணை 1

நீரின் ஊடுவடிதல் (நுண்டுளைமை)

| | |
|---|---|
| மணல் | 50 — 60 % |
| களிமண் | 45 — 55 % |
| வண்டல் மண் | 40 — 50 % |
| சீராள மணல் | 30 — 40 % |
| பரல் | 30 — 40 % |
| பரலும் மணலும் | 20 — 35 % |
| மணற்கல் | 10 — 20 % |
| சுண்ணாம்புப் பாறை | 1 — 10 % |

சுண்ணாம்புப் பாறை நீரினை உட்புக விடுதலை மிகக் குறைவாகக்கொண்டுள்ள போதும் அது கொண்டுள்ள கரைசற் தன் மையின் காரணமாக அதிக நீரை உள்விடு கின்றது. தொடர்ச்சியான கரைசல் காரண மாகப் பலவகையான நிலவுருவங்கள் இப் பாறையின் உட்பகுதிகளில் காணப்படுகின் றன. மேலும் தொடர்ச்சியான கரைசல் பாறையினை உடைத்து குளங்களை உரு வாக்கின எனப் பேராசிரியர் குலரத்தினம் கூறியுள்ளார். அவருடைய கருத்துப்படி இக் குளங்கள் மேலதிக மழைநீரைத் தரையின் கீழ் கொண்டுசெல்லும் துவாரங்கள் ஆகும். மாரிகாலத்தில் நிரம்பி, கோடை காலத்தில் வற்றுவது இவற்றின் இயல்பு. இதேபோல் மணல் மிக வேகமாக நீரை உட்புகவிடும் இயல்பினது. இதனால் குடாநாட்டு மணல் பிரதேசங்கள் சிறந்த தரைக்கீழ் நீர்வளப் பகுதிகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. செம்மண்கொண்ட வலிகாமப் பகுதியும் நீரை உட்புகவிடும் இயல்பை சிறப்பாக உடையது. இப்பகுதி செழிப்பான உட்புக விடும் இயல்புடைய நன்னீர்வளம்கொண்ட பகுதியாகும்.

சுண்ணாம்புக்கல் அமைப்பினை நோக் கும்போது யாழ்ப்பாணக் குடா நாட்டில் தரைக்கீழ் நீர்வில்லை அதன் கீழ் உப்பு நீரைக் கொண்டுள்ளது, அது நிலைமாறும் வலயமாக இருக்கின்றது. (விளக்கப் படம் 01). யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்த வில்லை பெரிதாகவும், ஏனைய தீவுகளில் சிறியதாகவும் இருக்கின்றது. இட உயரத் துக்கு ஏற்ப தரைக்கீழ் நீர்மட்டம் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும். இதனால் சில கிணறுகள் ஆழமாக வும், சில கிணறுகள் கோடையில் நீர் வற்றியும் இருக்கும். நன்றாகச் சுண்ணாம்புக் கல் கரைந்த இடங்கள் நிரந்தர நீர் கொண்டதாக இருக்கும். அவற்றுட் சில வற்றை அட்டவணை 02 காட்டுகிறது.

அட்டவணை 2

*நிரந்தர நீர் கொண்ட குளங்கள்*

1. நிலாவரையில் உள்ள புத்தூர்க்கிணறு
2. குரும்பசிட்டியில் உள்ள வற்றாக்கிணறு
3. பொக்கணை (ஊரெழு) வற்றாக்கிணறு
4. மானிப்பாய் இடிகுண்டுக் கிணறு
5. நல்லூரில் உள்ள ஜமுனாரி
6. பொந்துக் கிணறு - தொண்டமானாறு
7. வியாவக்குளம் புன்னாலைக்கட்டுவன்
8. கீவன்காமம் - சங்குவேலி
9. பொக்கனை ஏழாலை பெரியதம்பிரான்
10. ஊரிக்காட்டுக் கிணறு
11. நாவற்குளக் கிணறு
12. சிறுவிழான் கிணறு
13, வேம்பிராய் - சாவகச்சேரி
14. மாயக்கைக் குளம் - பருத்தித்துறை
15. சின்னக்கண்டான் - வல்லை
16. மாயக்கை
17. கீலன்

## *தரைக்கீழ் நீரின் சேமிப்பும் வளமும்*

பெறப்படும் மழையில் குறிப்பிடத் தக்க பங்கு கடலையடைகின்றது. ஆராய்ச்சி செய்யப்பட்ட ஆண்டின்படி ஆண்டுக்கு 50 000 ஏக்கர் அடி நீர் இவ்வாறு செல்லுகின்றது. மழையின் இன்னொரு பங்கு தரைக்கீழ் நீராகச் செல்லுகின்றது. நிலத்தின் ஊடுபுகவிடும் இயல்புக்கு (Percolation of rainfall) ஏற்ப இது நிகழும். பொதுவாக மழைவீழ்ச்சிக்கு ஏற்ப தரைக்கீழ் நீர் மட்டமும் வேறுபடும். மேலும் மனித பாவனையால் நீர் வெளியேற்றத்தின் போதும் இம் மட்டம் வேறுபடும். 1965, 66, 67, 68 ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட ஆய்வின்போது அவதானிக்கப்பட்டதன்படி சாதாரண ஒரு வருடத்தில் (1966) மழை மூலம் 90,000 ஏக்கர் அடி நீர் தரைக்கீழ் நீராகச் செல்லுகின்றது. இந்த ஆண்டில் கடலுக்கு 50,000 ஏக்கர் அடி சென்றுள்ளது. இந்த அளவுகளைச் சராசரியாகக் கொள்ளலாம். மழைவீழ்ச்சி குறையும்போது இந்நிலை குறையலாம். உதாரணமாக 1965 இல் 50,000 ஏக்கர் அடி நீர் மழையாகப் பெறப்பட்டது. இதில் கடலுக்கு10,000 ஏக்கர் அடி சென்றது. 1967 ஆம் ஆண்டு அதிக மழைவீழ்ச்சி பெறப்பட்டது. இந்த ஆண்டு 177,000 ஏக்கர் அடி மழையாகப் பெறப்பட்டது. இதில் 137,000 ஏக்கர் அடி நீர் தரைக்கீழ் நீராக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக வீட்டுத் தேவைக்காக 17,000 ஏக்கர் அடியாகவும், விவசாயத் தேவைக்காக 28,000 ஏக்கர் அடியாகவும் தரைக்கீழ்நீர் வெளியேற்றப்படுகிறது. சில சமயங்களில் தரைக்கீழ் நீர்கொள்ளும் அளவுக்கு மேல் சேமிப்பாக மாறினால் நிலநீர் ஊற்றுகளாகக் கடலினுள் வெளியேற்றப்படுகிறது.

பாவனை காரணமாகக் குறிப்பிடத்தக்க அளவு நீர் வெளியேற்றப்படுகிறது. முன் கூறியவாறு விவசாயப்பாவனை, வீட்டுப்பாவனை என இரண்டு வகையாக நோக்கினாலும் நாகரீகப் பாவனையாலும் நீர் வெளியேற்றப்படுகிறது. குடா நாட்டில் மின்சக்திப் பாவனை பரவலாக்கப்பட்ட 1970, 1980 களில் இப் பாவனைகள் மிக அதிகரித்துக் காணப்பட்டது. 1967, 68 களில் நடைபெற்ற ஆராய்ச்சியின் போது பின்வரும் நிலைகள் பெறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | நன்னீர் வளம் | பாவனை |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்திய பகுதி (வலிகாமம்) | 62400 ஏக் அடி | 10,000 ஏக் அடி |
| 2. | கிழக்குக் குடாநாடு | 70000 ஏக் அடி | 600 ஏக் அடி |
| 3. | தீவுப் பகுதி | 12000 ஏக் அடி | 3300 ஏக் அடி |

கிழக்குக் குடாநாடு தவிர ஏனையவற்றைப் பார்க்கும்போது ஒரு ஏக்கருக்கு $\frac{1}{6}$ தொடக்கம் $\frac{1}{4}$ வரையான ஏக்கர் நீர் வெளியேற்றப்படுகின்றது (Draw off) எனக் கொள்ளலாம். கடந்த தசாப்தத்தில் கிழக்குக் குடாநாட்டில் தென்மராட்சியிலும், மத்திய குடாநாட்டிலும் (வலிகாமம்) பாவனைக்கு எடுக்கப்பட்ட நீர் மேற்குறிப்பிட்ட அளவிலும் இரண்டு மடங்கு ஆக இருக்கவேண்டும். இதனால் நன்னீர் மட்டம் கீழிறங்குகிறது. இது உவர்நீர் உள் வருகைக்குக் காரணமாகின்றது. குறிப்பாக வரண்ட பருவத்தில் மட்டம் குறைய உவர், நீர் வேகமாக உள்வருகின்றது. உவர்நீர்ப் பகுதிகளில் அதாவது 12450 ஏக்கர் பரப்பில் 6350 ஏக்கர் அடி வெளியேற்றப்படுகின்றது. அதாவது ஒரு ஏக்கருக்கு $\frac{1}{2}$ ஏக்கர் அடி நீர் வெளியேற்றப்படுகின்றது. இவ்வாறு பார்க்கின்றபோது 1960 களின் பிற்பகுதி ஆராய்வின்படி வருடத்துக்கு விவசாயக் கிணறு ஒன்றில் இருந்து 1.5 ஏக்கர் அடி நீரும், வீட்டுக் கிணறு ஒன்றில் இருந்து 0.3 ஏக்கர் அடி நீரும் வெளியேற்றப்பட்டிருக்கிறது. இந்நிலைமை 1980களில் இரண்டு மடங்கு ஆகிவிட்டது.

## வளமும் மீள் நிரம்பலும் பாவனையும் (Recharge and Draw off)

நீர்ப் பாவனையால் தரைக்கீழ் நீர்மட்டம் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக மீள் நிரம்பல் அற்ற வரண்ட மாதங்களில் பாவனை மட்டுப்படுத்தப்படவேண்டும். படத்தில் காட்டப்பட்டுள்ளதன்படி மீள் நிரம்பலையும், பாவனையையும் பார்க்கலாம். எமக்குக் கிடைக்கின்ற மழையில் ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் 75% மேல் பெறப்படுகின்றது. இக் காலம்தான் மீள் நிரம்பலுக்குரிய காலமாகும். மழை குறைவான வருடத்தில் குறைவாகவும், மழை கூடிய வருடத்தில் அதிகளவும் மீள் நிரம்பலுக்குப் பயன்படும். உதாரணமாக மழை குறைந்த வருடமான 1966ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தரைக்கீழ் நீர் இருப்பு 7.27 10⁴.4 ஏக்கர் அடியாக இருந்தது. இதே ஆண்டில் ஒக்டோபர் மாதம் 12" மும் நவம்பர் மாதம் 6" மும் டிசம்பரில் 6" மும் மழையாகப் பெறப்பட்டது. இதே சமயம் மழை கூடிய 1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தரைக்கீழ் நீர் இருப்பு ஏக்கர் அடி (177000 ஏக்கர் அடி) 17.7 $10^4$ ஆக அமைந்தது. இந்த ஆண்டு ஒக்டோபர் 4" மும், நவம்பர் 24" மும், டிசம்பர் 23" மும் மழையால் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 3

| | ஒக்டோ | நவம்பர் | டிசம்பர் | |
|---|---|---|---|---|
| 1966 | 12" | 6" | 6" | $7.27 \times 10^4$ ஏக், அடி |
| 1967 | 4" | 24" | 23" | $17.7 \times 10^4$ ஏக், அடி |
| 1968 | 4" | 10" | 6" | $7.75 \times 10^4$ ஏக், அடி |
| 1969 | 18" | 15" | 21" | $12.58 \times 10^4$ ஏக், அடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்னீர் வளம்

நன்னீர் வளம் என்பது நீர் கொண்டுள்ள உவர்த்தன்மையின் விகிதத்தில் தங்கியுள்ளது. கடந்த தசாப்தங்களில் நீர்வளச்சபையினால் (Water Resource Board) ஒவ்வொரு மாதமும் தெரிவுசெய்யப்பட்ட கிணறுகளில் இருந்து நீர்மாதிரிகள் பெறப்பட்டுப்பரிசோதனை செய்யப்பட்டு எவ்வெவ் இடங்கள் எத்தகைய நீரினைக் கொண்டுள்ளன என பாகுபடுத்தப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி ஆறுமுகம், பாலேந்திரன், சிறிமானே என்பவர்களாலும் சில குறிப்பிட்ட ஆண்டுகளில் ஆராயப்பட்டுள்ளது. பொதுவாக 1 மில்லியனுக்கு எத்தனை அலகுகள் குளோரைட் காணப்படுகின்றதோ அதற்கேற்ற விதத்தில் உவர்த்தன்மை வேறுபடும். (Chloride Ions in parts per million)

உவர்த்தன்மையை பின்வருமாறு கூறலாம்

| | |
|---|---|
| நன்னீர் | 150 ppm மனிதபாவனைக்கு உகந்தது. |
| சாதாரண நீர் | 150-500 ppm மனித பாவனைக்கு உகந்தது. |
| சவர் நீர் | 500-1000 ppm |
| உவர் நீர் | 1000 ppm |
| கடல் நீர் | 20,000 ppm |

விளக்கப்படம் - 2 யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்த உவர்த்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. பின்வரும் விதத்தில் 5 பகுதிகளாக நோக்கலாம்.

| | | |
|---|---|---|
| அ. | நன்னீர்ப் பகுதிகள் | 500 ppm |
| ஆ. | நடுத்தர உவர்த்தன்மை பகுதிகள் | 500-1000 ppm |
| இ. | நடுத்தர உவர்த்தன்மை பகுதிகள் நீர் வெளியேற்றத்துடன் உவர்த்தன்மை அதிகரிக்கும் பகுதிகள் | 1000-1500 ppm |
| ஈ. | வரண்ட பருவத்தில் உவர்த்தன்மை கொண்ட பகுதிகள் | 1500-2000ppm |
| உ. | உவர்நீர்ப் பகுதிகள் | 2000 |

அட்டவணை: 4

| | 1965/67 | 1966/66 | 1965/66/67 |
|---|---|---|---|
| நன்னீர்ப் பகுதி | 128100 | 142780 | 145000 |
| நடுத்தர உவர்த்தன்மைப் பகுதி | 64200 | 64000 | 60350 |
| வரண்டபருவ உவர்ப்பகுதி | 46480 | 43800 | 47800 |
| உவர்நீர்ப் பகுதி | 17290 | 11000 | 12450 (ஏக்கர் பரப்பு) |

இதன்படி யாழ்ப்பாணக் குடாநாட்டில் சராசரியாக 145,000 ஏக்கர் பரப்பு நன்னீரைக் கொண்டுள்ளது. குடாநாட்டின் மொத்தப் பரப்பான 260,000 ஏக்கரில் 56% நன்னீர்ப் பரப்பாக அமைந்தமை எமது அதிஷ்டம் என்றே கொள்ள வேண்டும்.

பருவ ரீதியாகவும் உவர்த்தன்மை வேறுபடும். 1981ஆம் ஆண்டின் மாரிப்பருவ மாதமான டிசம்பர், வரண்ட பருவமாதமான யூன் இரண்டையும் ஒப்பிட்டால் பின்வரும் நிலை காணப்படுகிறது. மாரியில் மேற்பரப்பு உவர்த்தன்மை அதிகரிப்புக்குக் காரணம் மேற்பரப்பு கொண்டுள்ள உவர் அல்லது சவர்த்தன்மையாகும்.

| | | டிசம்பர் | யூன் |
|---|---|---|---|
| நன்னீர் | 500 | 130723 | 125719 |
| நடுத்தரநீர் | 500-1000 | 18406 | 32169 |
| நடுத்தர உவர்த்தன்மை | 1000-1500 | 7930 | 6610 |
| வரண்டஉவர்/உவர் நீர் | 1500 | 383300 | 41861 (ஏக்கர் பரப்பு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரைக்கீழ்நீர்ப் பாவனை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 84,000 கிணறுகள் இருக்கின்றன. இதில் 66,000 வீட்டுத் தேவைக்காகவும், 18,000 பயிர்ச் செய்கைக்காகவும் பயன்படுகின்றன. உரும்பிராய், ஊரெழு, மல்லாகம், உடுவில் பகுதிகளில் ஒவ்வொரு 100 ஏக்கருக்கும் இத்தொகை 152, 129 உள்ளது. இப்பகுதிகள் தான் கூடிய நீர்ப் பாவனைப் பகுதிகளாகும். தரைக்கீழ்நீர் சேமிப்பு 1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத் தரவின்படி 17.7 $10^4$ ஏக்கர் அடியாக உள்ளது. இதில் 28 000 ஏக்கர் அடி நீர் வருடத்துக்கு பயிர்ச்செய்கைக்குத் தேவைப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு கிணற்றில் இருந்தும் வருடத்துக்கு 1½ ஏக்கர் அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்தப் பரப்பில் 60% வாழுமிடத்தையும், வீட்டுத் தோட்டங்களையும் கொண்டது. 13% (34,000 ஏக்கர்கள்) பழவகை, உபஉணவு பயிரிடும் பரப்பாகும். நெற்பயிர் (32,000 ஏக்கர்) 12½% உள்ளடக்குகின்றது. கடனீரேரி 10%, மிகுதி 4½% பயன்படுத்தப்படாத நிலமாக உள்ளது.

## நீர் சேமிப்பு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர் கிடைக்கும் முறை, அதனுடைய வளம், அதனில் நன்னீர் வளம், அதன் பாவனை ஆகியன இதுகாறும் விளக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றைப் பேணி அதற்கு உயிர் நாடியான சேமிப்பும், பாதுகாப்பும் நாம் மேற்கொள்ளக்கூடிய முதலாவது நடவடிக்கையாகும். குறிப்பாக மாணவர்களுக்கு இது பற்றிப் புகட்டவேண்டியது நமது கடமையாகும். ஆசிரியர்களுக்குத் தெரிந்தாலே மாணவர்களுக்குப் புகட்ட முடியும். அரசாங்கத்தினால் வெளியிடப்படும் சூழற்கல்வியில் யாழ்ப்பாணக் குடாநாடு பற்றியோ, சுண்ணாம்புக்கற்பகுதி பற்றியோ, தரைக்கீழ்நீர் பற்றியோ அரிதாகத்தான் காணப்படுகிறது.

பெறப்படும் மழைநீரை அதாவது மூன்று மாதங்களில் பெறப்படும் மழைநீரை அந்தந்த மாதங்களிலேயே சேமிக்க வேண்டும். இதனை இரண்டு வழிகளில் செய்யலாம். ஒன்று கோடை காலத்தில் செய்வது. மற்றது மாரிகாலத்தில் செய்வது. முன்கூறியது போன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை கோடையில் வற்றிக் காணப்படும்.

அட்டவணை: 5

### முக்கிய குளங்கள்

| | | | |
|---|---|---|---|
| வடமராட்சி தெற்கு, மேற்கு | 4 | பச்சிலைப்பள்ளி – 1 | 33 |
| வலிகாமம் | 1 | வடமராட்சி தெற்கு | 32 |
| யாழ்ப்பாண நகரம் | 10 | பச்சிலைப்பள்ளி – 2 | 17 |
| வலிகாமம் மேற்கு | 1 | தென்மராட்சி | 293 – 1075 ஏக்கர் அடி |
| வலிகாமம் வடக்கு | 21 | தீவுப்பகுதி தெற்கு | 31 |
| வடமராட்சி கிழக்கு | 25 | தீவுப்பகுதி வடக்கு | 37 |
| வடமராட்சி | 4 | நெடுந்தீவு | 34 |

இக்குளங்கள் ஏறக்குறைய 2500 ஏக்கர் அடி நீரை தேக்கவல்லவை. இக்குளங்களைத் கோடையில் துப்பரவுசெய்ய வேண்டும். குளங்களின் அடியில்படிந்து கிடக்கும் வண்டல்களை (Desilting) துப்பரவு செய்ய வேண்டும். நீரின் உட்புகவிடும் துவாரங்களைச்செவ்வனே இயங்கச்செய்யவேண்டும். முன்பு கிராமங்களில் பசளையின் பொருட்டு இதனைச் செய்தனர். ஆனால் இப்போது அந்த முறைமை இல்லை. ஆயினும் ஊற்று நிறுவனத்தினர் கடந்த சில ஆண்டுகளாக இதனைச் செய்து வருகின்றனர். ஊற்று நிறுவனம் 1986 இல் 34, 1987 இல் 02 1988 இல் 17, 1991 இல் 50 குளங்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பரவு செய்துள்ளனர் என்பது குறிப்பி டத்தக்கது.

ஊற்று நிறுவனத்தினரால் 31 குளங்க ளும், உவர் நீர்த்தடுப்பு அணைகளான அராலி, சிலிந்து, தனங்களப்பு, அரியாலை ஆகியனவும், 32 வாய்க்கால்களும், வழுக்கை ஆற்றுப்பகுதி, உசன்பகுதி ஆகியனவும் துப் பரவு செய்யப்பட்டுத் திருத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இதனை அனைவரும் பின்பற்ற வேண்டும். சிரமதான மூலமும் செய்யலாம். பாடசாலைகள், சமூக நிறுவ னங்கள் மூலமும் செய்யலாம்.

குளங்களை நோக்கிப் பல வாய்க்கால் கள் இருக்கின்றன. சிலசமயம் கோடைப் பருவத்தில் பாதைகளாகவும் பாவிக்கப்படு கின்றன. இந்த வாய்க்கால்களையும் துப் பரவு செய்து மழைநீர் இலகுவில் குளங் களை அடையச்செய்ய வேண்டும். குளங் களைச் சுற்றி அணைகட்டுதல் முன்பு நடந்து வந்தது, முன்பு இயங்கிய கிராமச் சங்கங்கள் இதனை நடத்தின. இப்போது அவை இல்லை. இதையும் பழையபடி ஆரம்பிக்க வேண்டியுள்ளது, முன்பு சில ஆழமற்ற குளங்களில் மண், மக்கி போன்ற வற்றை எடுத்துச் சிலதேவைகளுக்குப் பாவித் தனர். பின்பு அது தடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே குளங்கள் ஓரளவு ஆழமாக்கப்பட வும் வேண்டும். இவ்வாறு குளங்களை அண்டிய இந்த அபிவிருத்திகள் கோடைப் பருவத்தில் செய்யவேண்டியது அவசிய மாகின்றது. இதேபோன்று கிணறுகளையும் துப்பரவு செய்யலாம்.

வயல் நிலங்களில் வரம்பு கட்டுதல் முன்பு வழமையான நடைமுறை. அதனை யும் நடைமுறைப்படுத்த வேண்டும். அது மட்டுமன்றிக் கடற்கரையின் பரந்த வெளி களில் கடல்நீர் உள் நோக்கி வராமலும், மழைநீர் வெளிச் செல்லாமலும் அணைகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். இவ்வாறான சில அணைகள் ஏற்கனவே உள்ளன.

அட்டவணை; 6

### வடிகால், வெள்ளத்தடுப்பு, உப்புநீர்த்தடுப்பு அணைகள்
### *Drainage, Flood, Protection and Salt Water Exclusion Schemes*

| | | கெக்டேயர்கள் | | | கெக்டேயர்கள் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | தொண்டைமானாறு | 259 | 10. | மண்கும்பான் | 243 | |
| 2. | காலி குளம் | 121 | 11. | அல்லைப்பிட்டி | 10 | |
| 3. | மெலிஞ்சிமுனை | 121 | 12. | மண்டைதீவு | 162 | |
| 4. | முதலிக்குளி | 91 | 13. | மடத்துவெளி | 81 | |
| 5. | குறுக்குக்கடல் | 122 | 14. | தேவணிபுலம் | 121 | நெடுந்தீவு |
| 6. | அராலி | 810 | 15. | உப்புக்குளி | 91 | நெடுந்தீவு |
| 7. | அரியாலை | 130 | 16. | சோழரோடை | 132 | நெடுந்தீவு |
| 8. | சரவணை | 162 | 17. | காளி ஆறு | 16 | நெடுந்தீவு |
| 9. | நாரந்தனை | 101 | 18. | மணியன் வாய்க்கால் | 101 | நெடுந்தீவு |

மேற்கூறியவற்றைக் கோடைப் பருவத் தில் செய்திருந்தால் மாரிப் பருவத்தில் பெறப்படும் மழைநீர் தேக்கப்படும். அல்லா விடில் வீணே கடலை அடைந்து விடும். அதிக மழைபெறும்போது தரைக்கீழ் நீரின் மீள் நிரம்பல் அதிகமாக இருக்கும். எனவே அதிக மழைபெறும் காலத்தில் வெள்ள அபாயம் என்று கூறி வெள்ளத்தைக் கட லுக்கு விடலாகாது. இயன்றளவு குளங்க ளிலும், வயல் வளவுகளிலும் நீரைத் தேக்க வேண்டும். இவ்வாறு தேக்கும்போது தரைக்கீழ்நீர் மட்டம் அதிகரிப்பது மட்டு மல்லாமல் உப்புநீர் பகுதிகள் நன்னீர் பகுதி களாக மாறக்கூடிய வாய்ப்பும் உண்டு. எமது பிரதேசத்தில் 2, 3 நாட்களுக்கு மேல் வெள்ளம் உயர்ந்த பகுதிகளில் தங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது இல்லை. இதனால் வெள்ள அபாயம் என்பது இல்லை. எந்தக்குளத்தையும் மூடுவது என்ற எண்ணம் கூடாது. கிராம, நகர அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு குளங்களை மூடினால், அவற்றின் வாய்க்கால்களை மூடினால் நமது மூலவளத்தை நாமே அழிப்பது என்று பொருள்படும். எமது மேற்பரப்பு நீரில் ஆவியாக்க ஆவியுயிர்ப்பாக 78% செல்கின்றது. ஆகவே நீரை தரைக்கீழ் நீராக மாற்ற ஆகவேண்டியவற்றைச் செய்யவேண்டும். குடாநாட்டு நீர் வில்லைகள் கடனீரேரிகளால் ஊடறுக்கப்படுகின்றன. மத்திய குடாநாட்டு நீர் வில்லை பெரிது. பரப்புக் கூடியது. ஆழமும் கூடியது. இங்குதான் புத்தூர்க் கிணறு உண்டு. பளைப்பிரதேச வில்லை சிறியது. தீவுகளின் வில்லைகள் மிகச்சிறியன. ஆகவே இங்கு கூடிய நீரை உட்புகுத்த வேண்டிய நிலைமை உண்டு. சிலவேளை ஆகக் கூடிய ளவு நீர் தரைக்கீழ் நீராக மாற்றப்பட்டால் நிலத்தின் கீழ் உள்ள ஊற்றுக்களால் நீர் கடலையடைகின்றது. இதனைக் கொங்கிறீற்தடைகள் போட்டுத்தடுக்கவேண்டும் என அறிஞர்கள் கூறுகின்றனர். அதேபோன்று குடாநாட்டில் காணப்படும் கடனீரேரிகளை நன்னீர் ஏரிகளாக மாற்றுவதும் ஒரு திட்டம். ஆனையிறவுக் கடனீரேரி, தொண்டமானாறு போல ஏனையவற்றிலும் இதனால் கூடியளவு நீர் தேக்கப்படக்கூடிய வாய்ப்பு உண்டு. ஆனால்உயிர்ச் சூழலை இச்செயல் பாதிக்கலாம். நீரேந்து பரப்புகளையண்டித் தாவரங்களை வளர்த்தல், படர்த்தாவரங்களைப் பயிர்செய்தல் என்பன ஆவியாக்கத்தினையும், ஆவியுயிர்ப்பினையும் தடை செய்யும்.

## நீர்ப் பாவனையும் பேணுகையும்

எமது கூடிய நீர்ப்பாவனைதான் நீர் பேணுகையைப் பற்றிச் சிந்திக்க வைத்துள்ளது. இலங்கைக்கு இந்தியாவில் இருந்து குடியேற்றம் ஏற்பட்டதாகக் கூறுவர். இது கடல் மூலமும், தரை மூலமும் நடந்திருக்கலாம். வரலாற்று ஆசிரியர்களின் படி (Ragupathy, 1987) இராமர் அணை ஊடாகக்கிறிஸ்து சகாப்த கால ஆரம்பத்துக்கு முன்னும், பின்னும் இலங்கைக்கு மக்கள் குடியேறியுள்ளனர். இவ்வாறு வந்தவர்களில் முதலாவது தொகுதி தெற்கு நோக்கிப் போக இரண்டாவது தொகுதி வடக்கு நோக்கி வந்தது. இவர்களையும் தெற்கு நோக்கிப் போகாமல் தடுத்தது இங்கு காணப்பட்ட தரைக்கீழ் நீராகும். மீண்டும் பல கட்டங்களிலும் இந்த குடிப்பரம்பல் நிகழ்ந்தபோதும் நன்னீரை இலகுவாகப் பெறக்கூடிய இடங்களில் குறிப்பாக ஆனைக்கோட்டை, மண்கும்பான், கௌதாரிமுனை, நாகர்கோவில் போன்ற இடங்களில் தான் மக்கள் வாழத் தலைப்பட்டனர் எனப்படுகிறது. இன்று 7 லட்சம் மக்கள் வாழ்கின்ற யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல தேவைக்காக நன்னீர் பயன்படுத்தப்படுகின்றது. முன்கூறியது போன்று வாழ்விடத்தேவை, விவசாயத் தேவை, சுகாதாரத் தேவை, கைத்தொழில் தேவை, நாகரீகத்தேவை எனப் பெருகியவண்ணம் சென்றுவிட்டன. இதனால் நன்னீர்மட்டம் மிக வேகமாகக் குன்றுதலும், நன்னீர் உப்பு நீராக மாற்றமடைதலும் அனுபவரீதியாக அறிந்த உண்மை. எனவே நாம் அதிக நீரை வெளியேற்றுதலைக் கட்டுப்படுத்த வேண்டும்.

முன்கூறியதுபோன்று மேற்குறிப்பிட்ட தேவைகளுக்காக சராசரி 50,000 ஏக்கர் அடிநீர் பயன்படுத்தப்படுகின்றது. இத்தொகை தரைக்கீழ் நீர் இருப்பில் ஏறக்குறைய ½ என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இது தொடர்ந்துவரும் மழைக்காலத்தில் ஈடு செய்யப்படவேண்டும். வருடத்தில் சாதாரணமாக 90,000 ஏக்கர் அடி தரைக்கீழ்நீராக மாற்றமுறுகின்றது. தொடர்ந்துவரும் மழைக்காலம் வரட்சியானதாக அமைந்துவிட்டால் பாவனைக்குட்பட்ட நீர் ஈடுசெய்ய முடியாமல் போய் விடும். முன்பு தரைக்கீழ் நீர் மட்டம் உயர்ந்து இருந்தபோது எவ்வாறு நீர் ஊற்றுகளாக நீர் வெளியில் பாய்ந்ததோ அதே போன்று கடல்நீர் உள்நோக்கிவரும். அது மட்டுமன்றி நன்னீர் வில்லைகளின் ஓரங்கள் படிப்படியாக உப்புநீராக மாற்றமடையும். எடுத்துக்காட்டாக 1965 இல் மழை குறைந்தபோது 10,000 ஏக்கர் அடி நீர் தான் தரைக்கீழ்நீராக மாற்றம்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணையில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வலிகாமம் உள்ளடங்கிய பிரதேசம் சராசரி 10,000 ஏக்கர் அடி நீரைப்பாவிக்கிறது. அதற்கு அடுத்ததாகத் தீவுப்பகுதிகள் முன்கூறியது போன்று 3300 ஏக்கர் அடி நீரைப் பாவிக்கிறது. ஒரு ஏக்கருக்கு $\frac{1}{6} - \frac{1}{4}$ ஏக்கர் நீர் வெளியேற்றப்படுகிறது. கிழக்குக் குடாநாட்டின் பாவனை குறைவு. இதற்கு இப்பகுதிக் குடித் தொகையும் காரணமாகின்றது. ஆகவே நீர்ப்பாவனையைப் பொதுமக்கள் குறைக்க வேண்டும். பெற்றோர்களுக்கு மாணவர்கள் கூடிய நீர்ப்பாவனையால் வருகின்ற பெரும் அபாயத்தைச் சுட்டிக் காட்டவேண்டும். நீர்வளம் குன்றிய நாடுகளில் நீருக்குப் பணம் அறவிடப்படுகிறது. கொழும்பு மாநகரத்திலும் அறவிடப்படுகிறது. இதேபோன்று அளவுக்குஅதிகமாக நீர் பாவனைசெய்பவர்களிடம் இருந்தும், மழையற்ற மாதங்களில் நீர்ப்பாசனம் மூலம் பயிர்செய்பவர்களிடம் இருந்தும் ஒருவகை வரியை அறவிட்டால் கூடியநீர் பாவனையைக் குறைக்கலாம். வரண்ட மாதங்களில் நீர் இறைப்பைப் பெருமளவு தடைசெய்ய வேண்டும். வீட்டுக்கு வீடு மின்சக்தியில் இயங்கும் இயந்திரங்களைப் பூட்டியபின் நீர்ப்பாவனை கூடியுள்ளது எனலாம். இதுவும் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

குழாய் மூலமான நீர் விநியோகத்தினாலும் நீர் வீணடிக்கப்படலாம். எந்த நேரமும் நீரைச் செலவழிப்பதுடன், நீர்ச் சேமிப்பையும் தொடர்ச்சியான விநியோகம் குறைக்கின்றது. நன்னீர் வில்லை குறைந்த தடிப்புக்கொண்ட தீவுப்பகுதிகளின் குழாய் நீர் விநியோகம் மிக விரைவான உப்புநீர் மாற்றத்தைக் கொண்டுவரும். தரைக்கீழ் நீர் பாவனையைக் குறைத்து மழைநீர் பாவனையை அதிகரிக்க வேண்டும். வீடுகளின் கூரைச்சாய்வு நீரைச் சேகரிக்கத்தொட்டியைக் கட்டி நீரைப் பாவிக்கும் வழக்கம் உண்டு. இது புங்குடுதீவில் உண்டு. ஏனையோரும் அதனைப் பின்பற்றலாம். அரசாங்க ஆஸ்பத்திரியில் இவ்வாறு கூரையில் பெறப்படும் நீரைப் பெரும் தொட்டிகளில் சேகரித்துப் பின்பு சுத்திகரித்துப் பாவிப்பது வழக்கம். உதாரணம் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி. ஆகவே தரைக்கீழ்நீரைச் சேமிக்க நாம் பல வழிகளில் முயற்சி செய்ய வேண்டும்.

## நீர் அசுத்தமடைதல்

நீர் அசுத்தமாகுதல் நிலப்பயன்பாடு ரீதியாக மாறுபடுவது. நெருக்கமாக மக்கள் வாழும் இடங்களிலும், விவசாயப்பிரதேசங்களிலும் நீர் மாசடைகிறது. இதில் முன்நிற்பது யாழ்ப்பாண மாநகரப்பகுதி. அதிலும் குறிப்பாக ஆஸ்பத்திரி, மத்திய வர்த்தக மையம். விவசாயப் பிரதேசங்களிலும் (Chloride concentration) குளோரைட் அளவு அதிகமாவதுடன் அது தரைக்கீழ் நீரின் ஆழப்பகுதிக்குள் செல்லுகின்றது. இது ஒரு லீற்றருக்கு 400 மில்லி கிராம் இலிருந்து 900 மில்லி கிராம் வரை வேறுபடுகிறது. இதனால் நன்னீர் மேற்படை கூடிய உப்பு நீராக மாற்றமடைய வழியேற்படுகிறது. கூடியநீர் இறைப்புக் காரணமாக வரண்ட மாதங்களில் உவர்த் தன்மையை யாழ்ப்பாணக் குடாநாட்டின் 23% மான பரப்பு கொண்டிருக்கும். டிசம்பரில் இது 10% மாகக் குறையும். ஆயினும் 23% பரப்பு நடுத்தரமான உப்பு நீரையே கொண்டுள்ளது என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கூடிய மக்கள் தொகை ச. கி. மீற்றருக்கு 430 மேல் காணப்படுகின்றது. மொத்தப் பரப்பில் 60% இல் மக்களும் வீட்டுத் தோட்டங்களும் 13% இல் உபஉணவுப் பயிர்களும், 12½% இல் நெற்பயிரும் உண்டு. விவசாயப் பிரதேசங்கள் செயற்கை உரப் பாவிப்பு காரணமாகவும், கிருமிநாசினி காரணமாகவும் நீர் நஞ்சாவதைக் கொண்டிருக்கின்றன. வழமையாக நீர் கொண்டிருக்க வேண்டிய நைட்ரேட்டின் அளவு லீற்றருக்கு 100% - 150% (WHO) ஆகும். இங்கு விவசாயக் கிணறுகளில் 50% மானவை லீற்றருக்கு 45 - 150 மி. கிறாம் கொண்டுள்ளன. வீட்டுக் கிணறுகள் 45 - 250 மி. கிறாம் வரை கொண்டுள்ளன. செம்மண் பகுதிகளில் கூடுதலான நைட்ரேட் அளவு உண்டு. சராசரியாகப் பார்க்கும்போது 1980 களில் 130 - 150 மில்லி கிறாம் உண்டு. சில உரவகைகளில் இதன் அளவு பின்வருமாறு வேறுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூரியா 40%

டி. டி. எம் 39%

அம்மோனியம் சல்பேட் 21%

இவை மண்ணின் ஊடாக நிலநீருடன் கலக்கின்றன. நீர்வளச்சபையின்படி கிணற்றுக்கும், மலசலகூடத்துக்கும் உள்ள தூரமும் நைட்ரேட்டின் தன்மையைத் தீர்மானிக்கிறது. இது பின்வருமாறு வேறுபடும்.

| இடைத்தூரம் | லீற்றர்/நைட்ரேட் மில்லி கிறாம் | |
|---|---|---|
| 9.5 மீ | 36 | ,, |
| 14.8 மீ | 25 | ,, |
| 16.5 மீ | 15. 2 | ,, |

எனவே மலசலகூடம் கிணற்றுக்குச்சேய்மையில் இருக்கவேண்டும். யாழ்ப்பாண நகரப் பகுதிகளிலும், ஏனைய சிறு நகரப் பகுதிகளிலும் நைட்ரேட் உருவாக்கம், பக்டீரியா கிருமி கிணற்றுக்குள் செல்வது நிகழ்கின்றது. இதற்குப் புனருத்தாரண அமைப்பாகச் செயற்படவேண்டிய தேவை உண்டு. கைத்தொழில் ரீதியான மாசுபடல் மட்டுமல்ல நீர்வளப் பாதிப்பும் காங்கேசன்துறை சீமெந்து ஆலையால் ஏற்படுகின்றது. மிக்க வளம் மிக்க நீர் கொண்ட பகுதியின் சுண்ணாம்புக்கல் பெருமளவுக்கு எடுக்கப் பெற்றால் மேற்படை பாதிக்கப்பட்டுத் தரைக்கீழ்நீர்மட்டம் பாதிக்கப்படும்.

இவை தவிர சமூக ரீதியாக மக்கள் நீரை அசுத்தமாக்குகின்றனர்.

1. வாய்க்கால்களில் குப்பை கூளங்களைக் கொட்டுதல். நச்சுப் பொருட்களை வீசுதல்.
2. பாவனையற்ற கிணறுகளுக்குள்ளும் இவ்வாறு தேவையற்ற பொருட்களை வீசுதல்.
3. குளங்கள் போன்ற நீரேந்து பிரதேசங்களை வேறுவிதமாக அசுத்தப்படுத்தல்.
4. நீர் தாங்கும் படுக்கையான மணல் பகுதிகளை அகற்றுதல்.
5. நீரைப் பாதுகாக்கும் தாவரப்பரம்பலை அழித்தல்.
6. தேவைக்கு அதிகமாகக் கிருமிநாசினிகள், உரமாக்கிகளைப் பாவித்தல்.
7. கிணற்றுச் சுற்றாடலை அசுத்தமாக்கி பக்டீரியா கிருமி வாளி மூலம் கிணற்றினுட் செல்ல வைத்தல்.
8. உயிர்ச்சூழலியலை நிர்மூலமாக்குதல்.
9. கடற்கரையோரங்களில் மண் அகற்றுதல்.
10. திருட்டுத்தனமாக வயல்நீரை வெட்டுதல், கடலுக்கு விடுதல் போன்றன. □

## உசாத்துணை நூல்கள்


1. Balendran. V. S., C. H J. Sirimanne and Arumugam. M (1963). *Ground Water in Jaffna*. Water Resources Board, Colombo.
2. Cooray. P. G. (1967) *An Introduction of Geology of Ceylon.*
3. Katz. M. B. (1978) "Sri Lanka in Gondwana Land and the evolution of the Indian Ocean", *Geological Magazine* Vol. 115, No. 4.
4. *National Atlas of Sri Lanka* (1988), Survey Department, Sri Lanka.
5. Ragupathy. P. (1987), *Early Settlements in Jaffna, An Archaeological Survey*. Madras, India.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CINTANAI

Vol. V March, Ju'y 1993 No. I, II


1. The Vanni Chieftaincies of Adankkapparru — 1
   S. Pathmanathan
2. Sankara's View of the World — 13
   N. Gnanakumaran
3. The factors that determine Mortality trends in the Jaffna District and their consequences — 28
   K. Kugabalan
4. Export - oriented Industrialisation in Sri - Lanka - Achievements, Shortcomings and Challenges — 50
   K. Kandiah
5. Rural Poverty Alleviation - The World Bank Approach — 67
   S. Ambikadevy
6. The need for Science Education in Sri Lanka and its present position — 82
   S. Arulanantham
7. The Past Tense in Jaffna Spoken Tamil — 91
   R. Kailainathan
8 Nallur during the British Period - A Retrospect — 95
   S. Sathiaseelan
9. Fresh Water Resources of the Jaffna Peninsula - An Analysis — 105
   S Balachandran


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனை வருடச் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா | 300/- |
| இந்தியா | இந்திய ரூபா | 300/- |
| பிறநாடுகள் | | £ 14 US $ 20 |

ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆசிரியர், சிந்தனை, வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கொடுப்பனவுகள் சிந்தனை நிர்வாக ஆசிரியருக்கு இலங்கையில் காசுக்கட்டளை, காசோலை, தபாற்கட்டளை மூலமும் பிற நாடுகளிலிருந்து வங்கிக்கட்டளையின் மூலமும் அனுப்பப்படல் வேண்டும்.

மாற்றிதழாகச் சிந்தனையைப் பெறவிரும்பும் நூலகங்கள், நிறுவனங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: நூலகர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை.

கட்டுரைகளில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்குக் கட்டுரையாசிரியர்களே பொறுப்பாவர். அவை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீடத்தினதோ, சிந்தனை ஆசிரியர் குழுவினதோ கருத்துக்களாக அமையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org